Sangathamil
# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 125 | சர்வதேச மின் செய்தித்தாள் | யூலை 15 2026




**இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்கிறது...**

**STRUCTURAL GENOCIDE AGAINST THAMILS CONTINUES IN SRILANKA**

## 43 ஆம் ஆண்டு படுகொலை நினைவுகளுடன்...

## BLACK JULY

ஈழத்தமிழர்
EELAM THAMILS

இன அழிப்பு GENOCIDE 1983

# கறுப்பு யூலை

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298 647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல்
மற்றும் இலவச ஆலோசனைகளும்
வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
282 Consumer Road, Unit 10
North York, ON M2J 1P8
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட
என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com
Please call & book an appointment before visiting.. I will provide the adress after booking.....

JaaVis TECHNOLOGY
WEBSITE DEVELOPMENT SERVICES
OUR SERVICES
- WEBSITE DESIGNING
- MOBILE APP DEVELOPMENT
- TROUBLESHOOTING & MAINTENANCE
- DIGITAL MARKETING
- WEB ANALYZING AND REPORTING
Build Your Future with Us
CONTACT US
+1 (516) 693-4346

RIGHT AT HOME REALTY INC. RealtorGroup
JEY RASATHURAI
MBA, BBA (Hons)
REALTOR & MORTGAGE BROKER
MORTGAGE ALLIANCE
- Mortgage, Line of Credit, Refinance, Renewal
- Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
- Solutions for Power of Sale Issues
- Buying & Selling & Lease Commercial & Residential Properties
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
" NO PROMISES BUT SOLUTIONS"

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203




"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர் அறிவிப்புக்கு எமது https://Thuyarpakirvu.com இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

தொடர்புகளுக்கு
437 345 4203
thuyarariviththal@gmail.com
Thuyarpakirvu.com

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

வரலாறு என்பது மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீகச் சத்தி அல்ல, அது மனிதனின் தலைவிதியை நிர்ணயித்து விடும் சூத்திரப்பொருளும் அல்ல, வரலாறு என்பது மனித செயற்பாட்டுச் சத்தியின் ஒரு வெளிப்பாடு, மனிதனே வரலாற்றைப் படைக்கிறான். மனிதனே தனது தலைவிதியையும் நிர்ணயிக்கிறான்.







## சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.com**




அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# லெப். நித்தி/புகழேந்தி




30.05.1992 காலை வழமைபோல் அகலவான் மீதிலிருந்து கதிரவன் பூமியில் ஆட்சியை ஆரம்பிக்கிறான். வீசும் தென்றல் காற்றும் வெடிகளாலும், குண்டுகளாலும் அனலாக வீசியது. அதுவும், வழமை போலவே பட்சிகள் கூடுகளையும், குஞ்சுகளையும் விட்டுத் திணறி ஓடின. எமது மண்ணில் வாழ்ந்தமையால் சுதந்திரமும் நிம்மதியும் அவைகளுக்கும் இல்லை. ஆனால் வழமைக்கு மாறாக இன்னொன்று நண்பன் நித்தியுடன் நான் சந்தித்துப்பேசிய இறுதி வார்த்தைகளை நினைவுட் புகுத்துகிறது.

இறுதியாக 29.05.1992 அன்று மாலை ஆவரங்காலில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் இருவரும் சந்தித்தோம். பல விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடினோம். உனது புதிய பெயர் புகழேந்தி எனக் கூறினாய். நீ நாளை கூறிவிட்டு "இந்த அடிபாட்டில் நான் மண்டையைப் போட்டா என்னைப் பற்றி நீ எழுது" என்று வாய்ப்பேச்சாய் சொன்னாய் அது நிஜமாகி விட்டதடா!

தெல்லிப்பழையில் எதிரியின் கால் பதிந்துள்ளதா நிலைமை எவ்வாறு இருக்கின்றது என அறிவதற்காகத் தொலைத்தொடர்பு அறைக்குச் செல்கிறேன். அங்கு வானலையில் மிதந்து வந்த சோகக் காற்று நித்தியின் நிரந்தரப் பிரிவைத் தெரிவித்துவிட்டுத் தன்வழியே பயணம் தொடர்ந்தது.

"சோகக் காற்றே ஒருகணம் நில் நித்தி சென்ற பாதையைச் சொல் அவன் வீரவரலாற்றை ஒருமுறை பகிர்ந்துவிடு".

நித்தி கட்டையான உருண்டையான, இறுக்கமான உடலமைப்பைக் கொண்ட இளம்புலி. இவன் முகத்தை வர்ணிப்பதை விட இதயநாதத்தில் இசைந்து இருக்கும் பாட்டுவரி பொருந்தமாக இருக்குமென நினைக்கிறேன்.


"பால்மணம் மாறாத பிஞ்சுகள்
பிரபாகரன் வளர்க்கின்ற குஞ்சுகள்"

இளமை பொழியும் உடலமைப்பும் எதையும் இலகுவில் புரிந்து கொள்ளும் மதி நுட்பமும் கொண்டவன்.

கல்வி கற்கும் காலத்தில், விளையாட்டுத் துறையில் இவனது முத்திரை ஆழமாகப் பதிந்தமையால் பாடசாலையில் சகலருக்கும் இவன் அறிமுகமாகி இருந்தான்.

குடும்ப நிலைமையால் இவனது கல்வி தொடர வாய்ப்பின்றிப் போனது. சிறுவயதிலேயே தந்தையை இழந்த இவன் கல்வியை நிறுத்தி வியாபாரத்தில் இறங்கினான்.

இவ் வேளையில் 1990 இல் மீண்டும் ஈழயுத்தம் ஆரம்பமானது. எங்கும் குண்டுமழை, செல், எத்திசையிலும் அவல ஓலம். இடம்பெயர்வு விடுதலை வேண்டி இளம் வேங்கைகள் நித்தமும் களப்பலியாகினர்.



தாயக விடுதலையே தமிழரின் விடிவு என உணர்ந்து கொண்ட "சம்புநாதன்" நித்தியாகத் தன்னை மாற்றி போரிலே பதுயுகம் படைக்கும் புலிகளின் கடின உழைப்பில் பங்குகொண்டான்.

கோட்டையில் பதுங்கு குழி அமைத்தல், பண்ணை பாலத்துப் பக்கம் ரயர்ப்பொயினன்ற் அமைத்தல், இரவோடு இரவாக அமைக்கும் காவலரண்கள். காலைபொழியும் குண்டுமழையால் சிதைவுறும். ஆனாலும் அவை மறுநாள் இரவு இவனதும் இவனது தோழர்களினதும் பங்களிப்பால் புத்துயிர் பெற்றுப் புது பொலிவுடன் காணப்படும். நித்தமும் குண்டு மழை இந்நிலை கோட்டையில் கொடி ஏறும்வரை நீடித்தது.

இவ்வேலையில் ஈடுபடும் வேளையில் எதிரியின் குண்டு இவன் கைச் சதைக்குட் குடிபுகுந்தது. எடுப்பதற்கு வசதியில்லை. சில நாட்களின் பின் காயம் மாற மீண்டும் கோட்டைக் காவலரண்களில் மோட்டார் அணியுடன் இணைந்து இவனது செயற்பாடு எதிரியின் நடமாட்டத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இறுதியில் 26.09.1990 அன்று கோட்டையில் கொடி பறந்தது.

முதன் முதலில் இவனை நான் பயிற்சி முகாமில் சந்தித்தேன். மிகவும் கலகலப்பாக சக தோழர்களுடன் பழகும் இயல்பினன். பயிற்சிக்காக அணிபிரிக்கும் போது இவனது அணியில் நானும் ஒருவனானேன். பயிற்சியின் போது இவன் ஓட்டத்தில் தன் திறமையைக் காட்டினான். ஓய்வு நேரங்களில் யாழ். கோட்டையின் நிகழ்வுகளை மற்றைய போராளிகளுடன் சுவைபடப் பகிர்ந்து கொள்வான். பயிற்சியின் போது ஒரு நாள் "களத்தில் காத்தான்" சிந்து நடைக் கூத்து நடந்தது. இவன் அதை மிகவும் உன்னிப்பாகப் பார்த்து விட்டு மறுநாள் மாலை பயிற்சி முடியும் நாள் வரை வசனங்களை மாற்றி மாற்றி ஓய்வாக இருக்கும் போது பாடி ஆடி மகிழ்விப்பான். இன்று அந்த பாடல்களைக் கேட்கும் போது நித்தியின் உருவமும் ஆட்டமும் தான் என் மனத்திரையில் நிழலாகும்.

ஒரு நாள் காலை அனுமதி இன்றி மரத்தில் ஏறி இளநீர் பீடுங்கி விட்டான். இதனைக் கண்ட பயிற்சி ஆசிரியர் இவனையும் இவனுடன் கூடச் சென்ற இளங்குமரன் குழுவிற்குப் பொறுப்பாக இருந்த என்னையும் அழைத்து ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு இளநீர், தேய்காய் தரப்பட்டு அன்றைய பயிற்சியை எடுக்கும்படி விடப்பட்டோம். இதற்காக நாம் வெட்கப்பட்டோம். இவனோ மாறாக எதுவும் நடவாதது போல் பகிடி விட்டுக் கொண்டு திரிந்தான். ஆனால் தனது தவறை மனதார உணர்ந்து பின் கவலைப்படுவான். இவ்வாறான குறும்புத் தனங்களுக்குத் தனிப்பட்டியலே இவனுக்குண்டு.

பயிற்சி நிறைவு நாள் அன்று பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தோம். அதுதான் நாம் இறுதியாக ஒன்றாக மகிழ்ந்தநாள். ஒருமுறை அந்த நாளின் சுவையான செயலை வர்ணிக்க நித்தி இல் லையே.

மறுநாள் பூரண ஓய்வு. மாலை சகலரும் ஒன்று கூடினோம். நாளை தைப்பொங்கல் அன்று விளையாட்டுப் போட்டி வைப்பது பற்றி பயிற்சி ஆசிரியரின் குரல் மட்டும் ஒலித்தது. அதனைத் தொடர்ந்து சகலரும் சம்மதம் தெரிவித்தார்கள். இவ்விளையாட்டுப் போட்டியில் மரதன் ஓட்டத்தில் முதலாவது பெயர் நித்தி. அவனுடன் ஐவர் ஓடினார்கள். அதில் தன் முத்திரையைப்

பதித்தான். அதே போல் சில்லாலையில் அவனது பெயரைக் கேட்டால் மரதன் ஓட்டக்காரன் என்று கூறும் அளவுக்கு ஊரிலும் சாதனை நிலை நாட்டியுள்ளான்.

பயிற்சி முடிந்ததும் “பிரிவு” என்ற கொடிய நிகழ்வு எமக்கு புதிய ஒன்றல்ல. அதனைக் கண்டு அஞ்சி ஓடுபவரும் நாமல்ல. சில பிரிவுகள் குறுகியவை. சில நிரந்தரமானவை. இதனால் நாம் எமது இலட்சியத்தை வீச்சாக்கி விடுதலையை வென்றெடுக்கும் பாதையில் எமது துப்பாக்கி கனல்கக்கும் இலட்சியம் ஈடேறும். நாளைய எமது சுதந்திர விடியலில் எல்லோரும் சங்கமிப்போம்.

நீண்ட இடைவேளைக்குப் பின்னர் 17.03.1991 அன்று நித்தியைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. சிலாவத்துறைக்குச் செல்லும் புலிவீரர்களுள் மிடுக்காக, ஆயுத பாணியாக மனச்சந்தோசத்துடன் செல்வது தெளிவாகத் தெரிந்தது. அவன் அருகில் சென்று மனத்திரையிலுள்ள சந்தோசமான பல விடயங்களை இருவரும் பகிர்ந்து கொண்டோம். விடைபெறும் வேளையில் மனச்சஞ்சலம் மீண்டும் கதைக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது தான்.

சிலாவத்துறையில் இருந்து வந்ததும் 01.04.1991 அன்று காரைநகர் தாக்குதலுக்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்காகச் சென்ற குழுக்களில் நித்தியும் ஒருவன். காரைநகர் தாக்குதலில் முன்னேறிய படையுடனான தாக்குதலை மிகத்திறம்படச் செய்தான்.

அங்கு நிற்கும் போது “அண்ணை கோட்டையில்பட்ட காயத்தினால் கை சரியான வேதனையாக இருக்கு, கையினுள் இருக்கும் ரவுண்சை எடுத்தா சுகமாய் இருக்கும். என்றாலும் இந்த அடிபாட்டை முடித்துவிட்டுச் செய்வம்” என்றான். அத்தாக்குதல் முடிந்த பின்னர் கையில் இருந்த ரவுண்சு எடுக்கப்பட்டதும் வைத்தியர் அவனைப் பார்த்து மூன்று மாதக் கட்டாய ஓய்வு எடுக்கும்படி கூறினார் அவ்வார்த்தை செவிடன் காதில் ஊதிய சங்காகப் பயனற்றுப் போனது. காரணம் “ஓய்வு” என்ற பதத்தை புலிவீரர்களால் ஜீரணிக்க முடியாது. அதற்கு நித்தி விதிவிலக்கில்லை.

18. 04. 1991 அன்று மன்னார் பரப்புக்கடந்தானில் பெரியளவில் ஓர் இராணுவ நடவடிக்கை இடம் பெற்றது. இந்நடவடிக்கையை முறியடிப்பதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து சென்ற படையணியில் நித்தியும் அடங்கியிருந் தான். இவனுடன் நான் பண்டிவிரிச்சானில் வைத்துக் கதைத்த போது சிலாவத்துறை அனுபவங்களைக் கூறினான். பரப்புக்கடந்தானிலிருந்து எதிரி புறங்காட்ட, இவனது பங்களிப்புச் சிறந்த முறையில் இருந்தது.




பகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தான். அவ்வேளையில் நான் காயப்பட்டுச் சிகிச்சைக்காகச் சென்றிருந்தேன். காயத்தின் வேதனையை இவனது சந்திப்பு நீக்கியது. இவனது பராமரிப்பைப் பார்த்த வைத்தியர்கள் பாராட்டிச் செல்வதோடு அவன் மேலும் வளர்ச்சியடைய ஆவன செய்தார்கள்.

மருத்துவப் பிரிவில் நின்ற தாக இவனுக்கு இவ்விடம் உகந்த இருக்கவில்லை. தளபதியிடம் யுத்தமுனைக்குச் செல்லும் அனுமதியைப் பெற்றான். இவனைத்தளபதி நன்கு அறிந்திருந்தமையால் கனரக ஆயுதங்களைக் கையாளும் பயிற்சிக்காக அனுப்பப்பட்டான். பயிற்சி முடி வில் ஜீ. பி. எம். ஜீ. உடன் களம் புகுந்தான். ஆனையிறவு முகாம் தக்கவைத்த முயற்சி முடியும் தறுவாயில் வடக்கு கிழக்குப் பாலமாக அமையும் மணலாற்று




10.07.1991 அன்று பெரியளவில் ஆனையிறவுப் படைத்தளம் தாக்குதலில் இவன் ‘பசிலன்’ அணியில் இருந்தான். எதிரியின் நிலைகளை அவதானித்துத் தாக்கினான். இதனால் முகாம் பெரும் சேதமடைந்தது. பசிலன் அணியின் தேவை குறைய இவன் மருத்துவப்பிரிவுக்கு அனுப்பப்பட்டான். மருத்துவப் பிரிவு என்பது இலகுவானது அல்ல. ஒரு புலிவீரனை உரு வாக்குவதைவிட புலி வீரனைக் காப்பாற்றுவது புனிதபணி. இவன் ஒரு

மாவட்டத்தைக்கைப்பற்றும் நோக்குடன் “மின்னல்” என்ற பெயரிட்டு பெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். எமது போராளிகள் எதிர்த்தாக்குதல்களை நடாத்தினார்கள். அதில் பங்குபற்றுவ தற்காகச் சென்ற படையணியில் நித்தியும் ஒருவன். உணவு, நீர் பெரும் பிரச்சினையாக இருந்தும் இவன் மற்றைய போராளிகளுடன் சேர்ந்து எதிரியின் ஆக்கிரமிப்பைத் துப்பாக்கி முனையில் சந்தித்தான். எதிரியின் “இராட்சதப் பறவைகள்” குண்டு மழை பொழிந்தன.

எறிகணைகள் கூவின, காடு தீப்பற்றி எரிந்தது. எதிரிகள் கவச வாகனங்களின் உதவியுடன் முன்னேறிக் கொண்டிருந்த போது எமது படையணியின் அதிரடித்தாக்குதலினால் நிலை குலைந்து பின்வாங்கிச் சென்றனர். இத்தாக்குதலில் நித்தியின் பங்கு வியக்கத்தக்க வகையில் இருந்தது.

பலாலி முகாமைச்சுற்றியுள்ள மினி முகாம்கள், காவலரண்களை அழிக்கும் போது முழங்கும் ஜீ.பி. எம். ஜீ. இவனுடையதாகத்தான் இருக்கும். பல எதிரிகளை அழித்துத் தன் திறமையைத் தொடர்ந்து காட்டினான்.

தெல்லிப்பழையில் எமது பகுதியை நோக்கிச் சரமாரியாகக் குண்டுமழை, செல்கள் குடிமனைகளை நோக்கி ஏவப்பட்டன. அன்று காலை விடிந்தது. ரவைகள் எமது காவலரண்களை நோக்கிப் பாயப் போர் மூண்டது. எதிரி எம்மண்ணில் குண்டுபட்டு மண்டியிட பெரும் படை, கனரச வாகனத்தின் உதவியுடன் எம்படை முன்னேறியது. மனோபலத்துடன் எதிர் கொண்டது. அதில் நித்தியும் ஒருவன். இவன் துப்பாக்கி எதிரியின் வரவைத் தடுத்து நிறுத்துவதில் பெரும் பங்கு வகித்துக் கொண்டிருந்தது.

இவ் வேளையில் எமது போராளி ஒருவன் குண்டுபட்டு முனகும் சத்தம் கேட்கிறது. நித்தி தனது ஆயுதத்தைப் பாதுகாப்பாக அனுப்பி விட்டு அத்திசையை நோக்கி ஓடுகிறான். சகபோராளிகள் தடுக்க சகோதர பாசம் முன்னே அழைத்துச் செல்கிறது. ஒருவனைத்தூக்க அவன் என்னை விடு, அவனைத் தூக்கிச் செல் என்று காட்ட அவன் காட்டிய திசையை நோக்கி ஊர்ந்து செல்கிறான். அவ்விடம் எதிரியின் எல்லை. ஒருவாறாகச் சென்று தூக்கிவரும் போது என்னை விடு எனக் கூறியவன் நிரந்தரமாக விடைபெற்றிருந்தான். இருவரையும் தூக்கி எம் பக்கம் வரும் வேளையில் எதிரி இனம் கண்டுகொண்டான். சரமாரியாக அத்திசையை நோக்கி ரவை பாய்கிறது. நித்தி நிலை எடுத்து இருந்து விட்டு ரவையின் ஓய்வின் பின் மீண்டும் தூக்கி வர முயலும்போது ரவை நித்தியின் உடலைப் பதம் பார்த்தது . எந்த மண்ணை நேசித்தானோ அந்தத் தாயக பூமி அவனை நிரந்தரமாக ஏற்றுக்கொண்டது.

நீண்டவரிசையில் அடுக்கிய பேழையில் உன்புகழ்உடல் நிம்மதியாக நிரந்தரமாகத் தூங்கிக் கொண்டிருந்தது. வழமையாகத் தூங்கும்போது சொல்லும் வார்த்தையை மட்டும் இன்று நீ சொல்லவில்லை.

பயிற்சி முடிந்து இரவு தூங்கப் போகும் போது நித்தியின் குரல் ஒலிக்கும். நான் நித்திரையானால் எழுப்புவது கஸ்ட்டம். “அலட்” அடிச்சா சுருட்டிப்பி ரட்டி எழுப்பிப்போடுங்கோ” ஆனால் இன்று.. மாவீரர் வரிசையில் துயில் கொள்ளும் உன்னை நமது வெற்றி தட்டியெழுப்பும்.

கு. துசியந்தன்.

- களத்தில் 27.07.1993

**நாம், எமது தாயக மண்ணை எமது உயிரிலும் மேலாக நேசிக்கிறோம். எமது தாயக தேசம் எமது இனத்தின் உயிருக்கு நேரானது. அந்த மண்ணைப் பாதுகாப்பது எமது இனத்தின் ஆன்மாவைப் பாதுகாப்பதற்கு நிகரானது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழீழச் செய்திகள்



# மட்டு. மயிலத்தமடு மாதவணையில் கத்திகளுடன் அத்து மீறிச்சென்று பண்ணையாளர்களுக்கு மிரட்டல்

01.07.2026

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசமான பொலன்னறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர்கள் சட்டத்திற்கு புறம்பான வகையில் அத்துமீறி காடுகளை வெட்டி குடிசைகளை அமைத்து வருகின்றனர்.

இது தொடர்பாக பண்ணையாளர்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத சூழ்நிலையில் நிலைமை மோசமடைந்துள்ளது என சிவில் செயற்பாட்டாளர் சிவயோகநாதன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

பண்ணையாளர்களின் இருப்பிடங்களுக்கு கத்திகளுடன் சென்ற சில சிங்களவர்கள் பண்ணையாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு மிரட்டியுள்ளனர். இதனால் செய்வதறியாது அச்சமான சூழ்நிலையில் மயிலத்தமடு மாதவணை பண்ணையாளர்களது நிலமை மோசமடைந்துள்ளது.

கடந்த 1020 ஆவது நாளாக தொடர்ந்து தமது மேய்ச்சல் தரைக்காக அறவழி போராட்டத்தினை நடாத்தி வரும் சூழலில் இதுபோன்ற துன்பகரமான விடயங்கள் பண்ணையாளர்கள் மத்தியில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுபோன்ற செயற்பாடுகள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக நடைபெற்றதன் காரணத்தினால் பண்ணையாளர்கள் சார்பில் வழக்குகள் போடப்பட்டு குடியேற்றவாசிகளை வெளியேற்று மாறு நீதிமன்றம் மூலம் உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டன.

ஆனாலும் அவர்களில் சிலர் வெளியேற்றாமல் நீதிமன்ற உத்தரவை மீறி குடியிருந்த நிலையில், அப்பகுதிகளில் நடைபெறும் சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகளை கண்காணிப்பதற் கென்று பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது.

ஆனால் பண்ணையாளர்கள் செல்லும்போது ஒவ்வொருவராக ஆள் அடையாள பரிசோதனை செய்யும் பொலிசார் மேற்படி அத்துமீறி பிரவேசிக்கும் சிங்களவர்கள் தொடர்பில் எவ்வித தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை என பண்ணையாளர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கின்றனர்.





சென்றவாரம் வாரமும் இதேபோல் சில சிங்களவர்களுடன் கால்நடை பண்ணையாளர்கள் இருப்பிடங்களுக்குச் சென்ற பொலிசார் அந்த இடத்திலிருந்து பண்ணையாளர்கள் வெளியேற வேண்டும் என்ற அழுத்தத்தினை பிரயோகித் திருந்தனர்.

பண்ணையாளர்கள் மற்றும் அவர்களது கால்நடைகளுக்கு பாதுகாப்பு என்ற காரணத்திற்காகத் தான் மேற்படி பொலிஸ் சோதனைச் சாவடி கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்று பொலிசாரின் கண்காணிப்பிற்கு மத்தியில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சிங்களவர்கள் காடுகளை அழித்து புற்தரைகளைச் சேதப்படுத்தி தீவைத்து அழித்து நாசமாக்கி சுற்றுப்புற சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தி குடிசைகளை அமைத்து வருகின்றனர்.

இவை எல்லாம் அரச திணைக்களங்களான மாகாவலி திணைக்களம், வன இலாக திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் மற்றும் பல திணைக்களங்கள் அதிகாரிகள் இருந்தும் இதை ஏன் தடுக்க முடியவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# சோமரத்ன ராஜபக்ஷ வெளியிடும் தகவல்கள் பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும்!

## இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

01.07.2026

செம்மணி மனிதப் புதைக்குழி மற்றும் ஏனைய மனிதப் புதைகுழிகள் குறித்து மரண தண்டனை கைதியான சோமரத்ன ராஜபக்ஷ குறிப்பிடும் விடயங்களை ஆராய்ந்தால் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள், உயர் அதிகாரிகளை கைது செய்ய நேரிடும் என்ற அச்சத்தில் அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுக்காமல் வெளிப்படுத்தல்களை பொருட்படுத்தாமல் இருக்கிறது என்பது தெளிவாக விளங்குகிறது என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின் மரண தண்டனை கைதியான சோமரத்ன ராஜபக்ஷ தன்னை சுயாதீன சாட்சியாளராக விடுவிக்கும் பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு என்று குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பில் கேசரிக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணம் - சிந்துப்பாத்தி இந்து மயானம் என்பது தமிழ் மக்களின் எலும்புகள் விதைக்கப்பட்டுள்ள, இனப்படுகொலையின் வாயிலாகவே இன்று உலகுக்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே இந்த பகுதியில் பெருமளவிலான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்கள் என்பதை மரண தண்டனை கைதியான சோமரத்ன ராஜபக்ஷ கைது செய்யப்பட்ட காலப்பகுதியில் குறிப்பிட்டிருந்தார்.

மரண தண்டனை கைதியான சோமரத்ன ராஜபக்ஷ, செம்மணிச் சந்தியில் உள்ள கோயிலுக்கு முன்புறத்திலும், நல்லூருக்குச் செல்லும் பாதையிலும் மனித உடல்கள் புதைக்கப்பட்டதாகவும், இராணுவத்தால் அவர்கள் கொலை செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆகவே இது மறைக்கப்படக்கூடியதொரு விடயமல்ல.

உண்மையும், நேர்மையுமான வகையில் இந்த விடயம் ஆராயப்பட வேண்டும். சோமரத்ன குறிப்பிட்டதற்கமைய செம்மணி பகுதியில் இருந்து இதுவரை 400க்கும் அதிகமான மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அதனைக் காட்டிலும் மேலும் 200க்கும் அதிகமான எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்படும் சூழல் காணப்படுகின்றன.

கொப்பேகடுவ இராணுவத்தளபதியாக இருந்த காலத்தில் வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்த இளைஞர்கள் அழைத்துவரப்பட்டு மண்டைத்தீவு தோமையார் தேலாலயத்துக்கு முன்பாக இருந்த கிணற்றிலும், மண்டைத்தீவு செம்பாட்டித் தோட்ட கிணற்றிலும் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார்கள். அவர்களின் தாய், தந்தையர் மற்றும் சகோதரர்கள் இன்னும் வாழ்கிறார்கள். ஆகவே அந்த புதைகுழிகளும் அகழப்பட வேண்டும்.

கொக்குத்தொடுவாய் பகுதியில் மிக மோசமான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். வாய்கள் பிளந்தவாறு, எலும்புகள் முறிக்கப்பட்ட நிலையில் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது மிகவும் பயங்கரமானதொரு செயற்பாடு.



உலகில் மனித குலத்துக்கு எதிராக நிகழ்ந்த மோசமான மனிதப்படுகொலை இதுவாகும். இந்த எலும்புக்கூடுகளும், அதனுடனான உண்மையும் உலகுக்கு காட்சிப்படுத்தப்பட வேண்டும். காலவோட்டத்தில் உண்மைகள் மறைக்கப்படக்கூடாது. யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டு, அழிக்கப்பட்டது. அந்த சம்பவத்தின் உண்மை அவ்வாறே மூடி மறைக்கப்பட்டு, புதிய நூலகம் அமைக்கப்பட்டது. ஆனால் உண்மை இறுதி வரையில் வெளிப்படுத்தப்படவில்லை. இது நாம் விட்ட தவறாகும். ஆகவே, செம்மணியில் மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும். எதிர்கால தலைமுறையினர் உண்மையை தெரிந்துக்கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் 20ஆம் நூற்றாண்டின் இறுதியில், 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்த மிக மோசமான, ஆசியாவில் நிகழ்ந்த மனிதப் பேரவலத்தின் அடையாளத்தையே செம்மணி மனித எலும்புகூடுகள் பறைசாற்றுகின்றன.

சோமரத்ன ராஜபக்ஷ குறிப்பிடும் விடயங்களை ஆராய்ந்தால் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள், உயர் அதிகாரிகளை கைது செய்ய நேரிடும் என்ற அச்சத்தில் அரசாங்கம் இவற்றை பொருட்படுத்தாமல் இருக்கிறது என்பது தெளிவாக விளங்குகிறது.

கால ஓட்டத்துக்கமைய உண்மையை மறைக்க இடமளிக்க முடியாது. சோமரத்ன குறிப்பிட்ட விடயங்கள் பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம் என்றார்.

www.sangathamil.com



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# ‘பலாலி மீள்குடியேற்ற அமைப்பு’ உதயம்

02.07.2026



யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பகுதியில் சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தங்களது பூர்வீகக் காணிகளை மீட்டெடுப்பதற்காக, அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து “பலாலி மீள்குடியேற்ற அமைப்பு“ என்ற பெயரில் புதியதொரு அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பின் பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

”வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறி, கடந்த 36 வருடங்களாக பலாலி, மயிலிட்டி, கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான் போன்ற பிரதேச மக்களின் குடியிருப்பு மற்றும் விவசாயக் காணிகளை இராணுவம் தன்வசம் வைத்துள்ளது.

இக்காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, கடந்த காலங்களில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித சாதகமான பலனும் கிடைக்கவில்லை.

எனவே, இந்த நில உரிமைப் போராட்டங்களை இன்னும் திட்டமிட்ட வடிவில் நலிவடையாது தொடர்ச்சியாகக் கொண்டு செல்வதற்கும், எமது சொந்த நிலங்களை முழுமையாக மீட்டெடுப்பதற்கும் ஏதுவாகவே “பலாலி மீள்குடியேற்ற அமைப்பு” தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் எமது நில மீட்புக்கான அனைத்துச் செயற்றிட்டங்களும், போராட்டங்களும் இந்த அமைப்பின் ஊடாகவே முறைப்படி முன்னெடுக்கப்படும்.” – என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# “என் மனைவிக்கு நடந்தது வேறு யாருக்கும் நடக்கக்கூடாது” நீதி கோரி இளம் தாயின் கணவர் உருக்கம்

02.07.2026

“எனக்கு நேர்ந்த இந்தத் துயரம் இனி வேறு எந்தவொரு குடம்பத்திற்கும் நடந்துவிடக் கூடாது. எனது மனைவியின் இழப்பிற்குச் சம்பந்தப்பட்ட அனைவரும் பதில் சொல்லியே ஆக வேண்டும்” தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கவும், ஒரிஜினல் மருத்துவ ஆவணங்களை மீட்டுத் தரவும் ஜனாதிபதி மற்றும் நீதித்துறை அதிகாரிகள் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மரணமடைந்த இளம் தாயின் கணவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் டெங்கு நோயினால் இளந்தாய் ஒருவர் பிள்ளையினை பிரசவித்த பின்னர் உயிரிழந்ததாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இது தொடர்பில் உயிரிழந்த குடும்பத்தினர் மட்டு. ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பினை நடாத்தினார்கள். இதன் போது கருத்து தெரிவித்த குறித்த இளம்பெண்ணின் கணவர் பல்வேறு கருத்துகளை தெரிவித்தார்.

“தனது மனைவியின் பிரசவத்தின் போது நேர்ந்த மரணத்திற்கு மருத்துவர்களின் அலட்சியமே காரணம் என மட்டக்களப்பு ஊடக மையத்தில் கண்ணீருடன் கணவர் ஒருவர் பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

உயிரிழந்த ஜெயப்பிரியா என்ற பெண்ணின் கணவர் மதுர அந்தகன், தனது மனைவிக்கு நேர்ந்த மருத்துவத் தவறுகள் மற்றும் மருத்துவமனை நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மையற்ற போக்கு குறித்து ஊடகங்கள் வாயிலாக நீதி கோரியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்குக் காய்ச்சல் ஏற்பட்ட முதல் நாளே, தனியார் துறையில் தங்களைக் கவனித்து வந்த மகப்பேற்று மருத்துவரான டாக்டர் சரவணனைத் தொடர்புகொண்டு ஆலோசனை பெற்றுள்ளனர். அவரது அறிவுறுத்தலின்படி மட்டக்களப்பிலுள்ள கோப் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, அது ‘சாதாரண காய்ச்சல்’ என்று கூறி இரண்டு மருந்துகள் மட்டுமே வழங்கப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளார்.

ஆனால், அன்றிரவு காய்ச்சல் தீவிரமடைந்ததை அடுத்து, மருத்துவரின் அறிவுறுத்தலின்படி அரசு மருத்துவமனையின் 7-ஆம் வார்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கும் பலமுறை இரத்தப் பரிசோதனைகள் செய்யப்பட்டும், அது ‘சாதாரண காய்ச்சல்’ என்றே மருத்துவர்களால் தொடர்ந்து கூறப்பட் டுள்ளது.

காய்ச்சல் தீவிரமடைந்த நிலையில், பெண்ணின் குடும்பத்தின ருக்கு எவ்வித அறிவித்தலும் இன்றி அவர் அவசர சிகிச்சைப் பிரிவுக்குமாற்றப்பட்டுள்ளார். அங்கு ‘டெங்கு அன்டிஜன்’ பரி சோதனை செய்வதற்கான வசதிகள் அல்லது இயந்திரங்கள் இல்லை எனக் கூறி, வெளி ஆய் வகத்தில் பரிசோதனை செய்யு மாறு மருத்துவர்கள் கேட்டுள்ளனர்.




இதனையடுத்து, கணவர் சொந்த முயற்சியில் இரத்த மாதிரியை எடுத்துச் சென்று தனியார் ஆய்வகத்தில் பரிசோதித்ததில், அவ ருக்கு டெங்கு பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ரிப்போர்ட்டைப் பார்த்த பின்னரே, அது டெங்கு காய்ச்சல் என் பதை மருத்துவமனை நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது.

பிரசவ வலி ஏற்பட்டதைத் தொடர்ந்து, “சாதாரண முறையிலேயே பிரசவம் நடக்கும்” என மருத்துவர்கள் உறுதியளித்தவாறே பிரசவமும் நடந்துள்ளது. குழந்தையைப் பெற்றெடுத்த பின்னர், 21-ஆம் திகதி மாலை வரை ஜெயப்பிரியா தனது குடும்பத்தினருடன் நலமாகப் பேசியுள்ளார்.

ஆனால், அன்றிரவு திடீரென அவருக்குக் கடுமையான இரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளது. குடும்பத்தினரிடம் எவ்வித அனுமதியோ, ஒப்புதல் கையெழுத்தோ பெறாமல் நள்ளிரவில் மருத்துவர்களால் அவசர அவசரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மறுநாள் காலையில் குடும்பத்தினர் பார்க்கச் சென்றபோதே இந்த விபரம் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறுவை சிகிச்சைக்குப் பின் பெண்ணின் நுரையீரல் மற்றும் சிறுநீரகங்கள் செயலிழக்கத் தொடங்கியுள்ளன. தொடர்ந்து மயக்க நிலையிலேயே வைக்கப்பட்டிருந்த ஜெயப்பிரியா, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

“எனது மனைவியின் பிரசவத்தின் போது அங்கிருப்பேன் என்று உறுதியளித்த டாக்டர் சரவணன், பிரசவத்தின் போது அங்கு இல்லை” என்றும், “கர்ப்ப காலத்தின் 10 மாதங்களில் 12 முதல் 13 முறை தனியார் முறையில் ஸ்கேன் செய்த அறிக்கைகள், சிகிச்சைக் குறிப்புகள் மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் முக்கிய ஆவணமான ‘ஏ-கார்ட்’ போன்ற எதனையும் மருத்துவமனை நிர்வாகம் எங்களிடம் ஒப்படைக்க மறுத்து மறைத்து வருகிறது” என்றும் கணவர் குற்றம் சாட்டியுள்ளார்.

“எனக்கு நேர்ந்த இந்தத் துயரம் இனி வேறு எந்தவொரு குடம்பத்திற்கும் நடந்துவிடக் கூடாது. எனது மனைவியின் இழப்பிற்குச் சம்பந்தப்பட்ட அனைவரும் பதில் சொல்லியே ஆக வேண்டும்” எனக் கண்ணீருடன் குறிப்பிட்ட அவர், தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கவும், ஒரிஜினல் மருத்துவ ஆவணங்களை மீட்டுத் தரவும் ஜனாதிபதி மற்றும் நீதித்துறை அதிகாரிகள் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**எமது மக்களின் உறுதிப்பாட்டை உடைத்து விடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, எமது எதிரியான சிங்கள அரசு இன்று எம்மக்கள் மீது எண்ணற்ற கொடுமைகளைப் புரிந்து வருகிறது. பெரும் அநீதிகளை இழைத்து வருகிறது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# வவுனியா மாதர்பணிக்க மகிழங்குளத்தில் தனிநபரால் அழிக்கப்பட்டுள்ள அடர்ந்த காடு: வனவளத் திணைக்கள அதிகாரிகளும் உடந்தை!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன்

02.07.2026

வவுனியா ஓமந்தை - பாலமோட்டை வீதியில் அமைந்துள்ள மாதர்பணிக்க மகிழங்குளம் பகுதியில் இதுவரையில் 80 ஏக்கர்களுக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்ட அடர்ந்த காடு தனிநபர் ஒருவரால் சட்டவிரோதமான முறையில் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. அரச காணிகளைக் கூறு போட்டு விற்கும் நோக்கில் இடம் பெறும் இந்த வனக் கொள்ளைக்கு வனவளத் திணைக்கள அதிகாரிகளும் துணை போகின்றனர். இது வெறுமனே மரங்களின் அழிவுகள் மட்டுமல்ல வவுனியாவின் குடிநீர் ஆதாரம் மற்றும் யானைகளின் வாழ்விடத்தைச் சிதைக்கும் கொடூரமும் ஆகும். இதன் பாரதூரமான விளைவுகளைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் உடனடியாக இதனைத்







தடுத்து நிறுத்த வேண்டுமெனத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் புதன்கிழமை (01.07.2026) இரவு அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வறண்ட வலயமான வவுனியா மாவட்டத்தின் விவசாயமும், குடிநீரும் முற்றிலும் பருவகால மழையையும், அம்மழை நீரைச் சேகரிக்கும் குளங்களையும், நிலத்தடி நீரையும் நம்பியே உள்ளன. மாதர்பணிக்க மகிழங்குளம் போன்ற காட்டுப் பகுதிகள்தான் இயற்கை நீரேந்துப் பகுதிகளாகச் செயற்பட்டு நிலத்தடி நீர்மட்டத்தைப் பேணுகின்றன. தற்போது இப் பகுதியில் 80 ஏக்கர்களுக்கும் மேலாகக் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதால் ஓமந்தை, பாலமோட்டை மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வரும் காலங்களில் மிக மோசமான குடிநீர்ப் பற்றாக்குறை மற்றும் வறட்சி ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

வன்னி மாவட்டத்தின் உலர்வலயக் காடுகள் அரிய வகை மரங்களினதும் வனவிலங்குகளினதும் இயற்கை வாழ்விடமாக உள்ளன. வவுனியாவில் காடுகள் அழிக்கப்படுவதால் அண்மைக் காலமாக வவுனியா - ஹொரவப் பொத்தானை வீதி மற்றும் ஓமந்தைப் பகுதிகளில் மனித - யானை மோதல்கள் பன்மடங்கு அதிகரித்துள்ளன. காடுகளை இழந்து உணவுக்கும் நீருக்கும் தவிக்கும் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து மக்களின் பயிர்களைச் சேதப்படுத்துவதோடு உயிர்களையும் பலியெடுத்து வருகின்றன. இப்போது இந்த 80 ஏக்கர்களையும் தாண்டி நிகழும் காடழிப்பு அந்தப் பகுதி மக்களின் உயிருக்கும், பயிர்ச் செய்கைக்கும் மென்மேலும் ஆபத்தை விளைவிப்பதாகவே அமைந்துள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் சமீபத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் தேசிய சுற்றுச்சூழல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. காடழிப்பு மற்றம் சுற்றுச்சூழல் பாதிப்புக்களை ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான தண்டனைகளை இந்த அரசு கொண்டுவந்துள்ள சூழலில் அதற்குச் சவால் விடுவது போல் வவுனியாவில் காடழிப்புத் தடையின்றி அரங்கேறி வருகிறது. சுற்றுச்சூழல் திருத்தச் சட்டத்தின் விதிகளுக்கு அமைய காடழிப்பை மேற்கொண்டு வருபவர் மீதும் அதற்குத் துணையாக உள்ள வனவளத் திணைக்கள அதிகாரிகள் மீதும் உடனடியாகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் அத்துமீறிய உப்பளம் நிர்மாணம்: தற்போதைய நிலை குறித்து விளக்கம் கோரி ரவிகரன் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருக்குக் கடிதம்

03.07.2026

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கொக்குத்தொடுவாய் பகுதியில் அத்துமீறிய முறையில் அமைக்கப்பட்டு வரும் உப்பளத்தை தடுத்துநிறுத்துவது தொடர்பில் மாவட்டச் செயலாளரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் குறித்த பகுதியில் மக்களுக்குச் சொந்தமான காணிகளை எல்லைப்படுத்துவது தொடர்பான தற்போதைய நிலை குறித்தும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருக்கு 2026.06.29 அன்று கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அக்கடிதத்திலேயே பாராளுமன்ற உறுப்பினரால் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

அந்த வகையில் கொக்குத்தொடுவாய் பகுதியில் அத்துமீறி உப்பளம் அமைப்பதைத் தடுத்தல் மற்றும் மக்களுக்குச் சொந்தமான காணிகளை எல்லைப்படுத்தல் தொடர்பாக தற்போதைய நிலை குறித்து வினவல் எனத் தலைப்பிடப்பட்டுள்ள குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கடந்த மார்ச் 12 அன்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் கௌரவ விவசாய, கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் அவர்களின் தலைமையில் விசேட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், கொக்குத்தொடுவாய் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத உப்பள நிருமாணம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், இப்பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காணும் பொறுப்பு முல்லைத்தீவு மாவட்ட நிருவாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அத்துமீறலுக்கு உள்ளாகும் காணிகள் அப்பகுதி மக்களுக்குச் சொந்தமானவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக, நில அளவை திணைக்களத்தின் மூலம் எல்லைகளை அடையாளப்படுத்துமாறு கடந்த மார்ச் 30 அன்று மாவட்டச் செயலாளருக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், இந்த விடயம் ஏப்ரல் 08 அன்று மேலதிக நடவடிக்கைக்காகக் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளருக்குப் பாரப்படுத்தப்பட்ட போதிலும், இதுவரை அது குறித்து எவ்வித அடுத்தகட்ட நிருவாக நடவடிக்கைகளோ அல்லது முன்னேற்ற அறிக்கைகளோ சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது.



அப்பகுதி மக்களின் பூர்வீகக் காணிகளைப் பாதுகாக்கும் பொருட்டு, அத்துமீறி மேற்கொள்ளப்பட்டு வரும் உப்பள நிருமாணப் பணிகளை உடனடியாக நிறுத்துவதற்கு மாவட்ட நிருவாகத்தினால் எடுக்கப்பட்ட நிருவாக நடவடிக்கைகள் என்ன என்பது குறித்தும், பொதுமக்களுக்குச் சொந்தமான காணி எல்லைகளை முறைப்படி நில அளவை செய்து அடையாளப்படுத்தும் பணிகளின் தற்போதைய நிலைப்பாடு என்ன என்பது குறித்தும் இக்கடிதத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வாழ்வாதாரத்தையும் நில உரிமைகளையும் பாதுகாப்பதற்கு மாவட்ட நிருவாகத்தின் நேரடித் தலையீடு இன்றியமையாதது என்பதால், இது தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் குறித்த விரிவான விளக்க அறிக்கையொன்றை விரைவாக வழங்குமாறு மாவட்டச் செயலாளரிடம் இக்கடிதம் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# யாழ். வலிகாமம் வடக்கில் 11ஆவது வாரமாகப் போராட்டம்!

03.07.2026

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு மயிலிட்டி பகுதி மக்கள், தங்களது காணிகளை விடுவிக்கக் கோரி இன்று (03.07. 2026) மீண்டும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.






யுத்தம் காரணமாக 36 ஆண்டுகளுக்கு முன்னர் வலிகாமம் வடக்கு மயிலிட்டி பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் காணிகள் சிறீலங்கா இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், 36 ஆண்டுகள் கடந்தும் அவை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கப்படவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

அதனால், தங்களது சொந்தக் காணிகளை உடனடியாக விடுவித்து உரிமையாளர்களிடம் கையளிக்குமாறு வலியுறுத்தி இந்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணி விடுவிப்பை வலியுறுத்தி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் போராட்டம் இன்று 11வது வாரத்தை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளி. பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இராணுவத்திற்கு காணியில்லை!

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர். சுப்பிரமணியம் சுரேன்

04.07.2026

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி. பிரதேசத்தில் இராணுவ தேவைக்கு பொது மக்களுக்கு சொந்தமான எந்த காணிகளும் சுவிகரிக்க அனுமதிக்க போவதில்லை என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர், சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்

இக் கூட்டத்தின் போது பச்சிலைப்பள்ளி முகாவில் கிராம அலுவலர் பிரிவில் உள்ள 25.73 ஏக்கர் தனியார் காணியினை 4வது மின் மற்றும் இயந்திரப் பொறியியல் படையணிக்காக சுவிகரிப்பதற்காகவும் இயக்கச்சி எரிபொருள் நிலையத்துக்கு அருகில் உள்ள 12 ஏக்கர் தனியார் காணியினை 5 th Engineer Service Regiment இராணுவ முகாம் அமைந்துள்ள குறித்த காணியினை சுவிரிப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன




இந்த கோரிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்த பச்சிலை பள்ளி பிரதேச சபையின் தவிசாளர், சுப்பிரமணியம் சுரேன் இராணுவ தேவைக்காக இந்த காணிகளை சுவிகரிக்க முடியாது இது முழுக்க முழுக்க பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் குறிப்பாக எரிபொருள் நிலையத்துக்கு பக்கத்தில் உள்ள காணி உரிமையாளர் வெளிநாட்டில் இருப்பதனால் தற்போதைய சூழ்நிலையில் நாட்டுக்கு திரும்ப முடியாத சூழ்நிலையில் உள்ளார்.

ஏற்கனவே இந்த இரு காணிகளும் நில அளவை செய்ய முயற்சித்த போதும் மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டன.

இந்த காணிகளை இராணுவ தேவைகளுக்கு வழங்க முடியாது அந்த காணி உரிமையாளர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து இருக்கிறார்கள் எனவே அந்த காணிகளை உரியவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்

# 43 ஆம் ஆண்டு ‘கறுப்பு யூலை’ படுகொலை நினைவு மாதம்




பொதுவாக ‘கறுப்பு யூலை’ படுகொலை என நினைவுகூரப்படுவது, இலங்கையில் 1983 ஆம் ஆண்டு யூலை 23 முதல் யூலை 30 வரை, சிறீலங்கா அரசின் ஆதரவுடன் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடூரமான தமிழினப் படுகொலையாகும்.

செயல்பாட்டாளர்கள் மற்றும் சுயேச்சையான கண்காணிப்பாளர்களால், வெறும் 10 நாட்களில் 3, 000 முதல் 5,638 வரையிலான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் தமிழர்களின் வரலாற்றுத் தடையங்கள் பல பகுதிகள் அழிக்கப்பட்டன. 150,000 - க்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்களின் வீடுகளை விட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

மேலும், வன்முறைக் கும்பல்களால் தமிழர்களுக்குச் சொந்தமான 18,000 - க்கும் மேற்பட்ட வீடுகளும், 5,000 கடைகளும் எரித்து சாம்பலாக்கப்பட்டன. குறைந்தபட்சம் 500 தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், பல குடும்பங்கள் உயிரோடு எரிக்கப்பட்டன. இவை அனைத்தும் சிங்கள பௌத்த அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற சிங்களக் கும்பல்களால் அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்வு, தமிழர்களின் வரலாற்றில் மிக முக்கிய முதலாவது பெரிய வெளியேற்றத்தைத் தூண்டியது; இதன் விளைவாக 500,000-க்கும் அதிகமான மக்கள் இலங்கைத் தீவை விட்டு வெளியேறினர்.

www.thuyarpakirvu.com

# மன்னார் படகுத்துறையில் கடற்படையின் ஆக்கிரமிப்பிலுள்ள மீனவ வாடிகளை விடுவியுங்கள்

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

04.07.2026

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர்பிரிவில், இலுப்பைக்கடவை, படகுத்துறைப் பகுதியில் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்குரிய கடலுணவுகளைக் கொள்வனவுசெய்யும் வாடிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.



இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது வலியுறுத்தலையடுத்து, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குறித்த வாடி-களை விடுவிப்பதுதொடர்பில் கடற்படையினருக்கு கடிதமொன்றை அனுப்பிவைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் - மாந்தை மேற்கு, பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று சனிக்கிழமை 03 இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

படகுத்துறைப் பகுதி மீனவர்களின் கோரிக்கைக்கு அமைவாக கடந்த மாதம் 18 ஆம் திகதி அன்று அப்பகுதிக்கு நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், கடலுணவுக் கொள்வனவாளர்கள் மற்றும் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது தமது கடலுணவுக் கொள்வனவனவு வாடிகளை கடற்படையினர் ஆக்கிரமித்துள்ளதாகவும், அந்த வாடிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் மீனவர்கள் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த வாடிகளின் விடுவிப்புத் தொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமென இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனாலும் மீனவர்களிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்தொடர்ச்சியாக படகுத்துறையில் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குறித்த வாடிகளை விடுவிப்பது தொடர்பான விடயத்தை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்ட நிகழ்ச்சிநிரலில் சேர்க்குமாறு கடந்த 2026.06.25ஆம் திகதியன்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் மாந்தை மேற்கு பிரதேச செயலாளருக்கும் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தவகையில் குறித்த விடயம் நேற்றையதினம் இடம்பெற்ற மாந்தை மேற்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குறித்த மீனவ வாடிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் வலியுறுத்தப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பாக படகுத்துறைப்பகுதியில் கடந்த 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடலுணவுகளைக் கொள்வனவு செய்வதற்கென வாடிகள் அமைக்கப்பட்டு, கடலுணவுக் கொள்வனவுச் செயற்பாடுகள் மிகச்சிறப்பாக இடம்பெற்றுவந்துள்ளன.

இத்தகையசூழலில் கடந்த யுத்த சூழல் காரணமாக அந்தப் பகுதிகளிலிருந்த மக்கள் இடப்பெயர்வைச் சந்திக்கவேண்டிய



நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதி மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோது, குறித்த கடலுணவுக் கொள்வனவு வாடிகள் அமைந்திருந்த பகுதி கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த கடலுணவுக் கொள்வனவு வாடிகளையும் கடற்படையினர் பயன்படுத்திவந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த கடலுணவு கொள்வனவு வாடிகளை விடுவிக்குமாறு, குறித்த வாடிகளின் உரிமையாளர்களால் தொடர்ச்சியாக உரியதரப்பினரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவந்தபோதும், அந்தவாடிகளை விடுவிப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் இவ்வாறு கடற்படையினால் கடலுணவுக் கொள்வனவு வாடிகள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதால் கடற்தொழிலாளர்களிடமிருந்து கடலுணவுகளைக் கொள்வனவுசெய்வதில் கடலுணவுக் கொள்வனவாளர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர்.

எனவே கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அந்த கடலுணவுக் கொள்வனவு வாடிகளை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது வலியுறுத்தினார்.

இந்நிலையில் குறித்த கடலுணவு கொள்வனவு வாடிகளை விடுவிப்பது தொடர்பில் கடற்படையினருக்கு கடிதமொன்றினை அனுப்பிவைப்பதென இதன்போது தீர்மானிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்காப் படையினரிடம் சரண்டைந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி மட்டக்களப்பில் போராட்டம்

04.07.2026

சிறீலங்கா இராணுவத்தினரிடம் சரணடைந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது எனக்கோரியும், விரைவாக உண்மையை வெளிப்படுத்தவும் சர்வதேச விசாரணையை நடத்தக்கோரியும், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் மந்தகதி செயற்பாட்டை கண்டித்தும் இன்று 04.05 2026 சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று மட்டக்களப்பில் நடைபெற்றது.





















www.vanikam.ca

# 12ஆவது நாளாகத் தொடரும் முல்லைத்தீவு கேப்பாபிலவு பூர்வீக மக்களின் தார்மீக நிலமீட்புப் போராட்டம்

05.07.2026



சிறீலங்கா இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி கேப்பாபுலவு மக்கள் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை (05) 12வது நாளை எட்டிய நிலையில், இராணுவ பிரதான வாயிலுக்கு முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக் கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செய லாளர் பிரிவிற்குட்பட்ட கேப்பாபுலவு பகுதியில், தமது பூர்வீகக் காணிகளை மீளப் பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்தி மக்கள் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இதுவரை உரிய தீர்வு எட்டப்படாத காரணத் தால், இன்று (05) ஞாயிற்றுக்கிழமை காலை கேப்பாபுலவு இரா ணுவ பிரதான வாயிலுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு பேரணியாக சென்று தொடர் போராட்டம் மேற்கொள்ளும் பந்தலுக்கு முன்பாக நிறைவு பெற்றிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளதுடன் மக்களின் பயன்பாட்டிற்காக இருந்த பாடசாலை, ஆலயம், தேவாலயம் மற்றும் பொதுமண்டபம் ஆகியவற்றையும் இராணுவம் தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை உடனடியாக விடுவித்து, இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்களது சொந்த கிராமங்களில் மீள்குடியேற வழிவகுக்குமாறு அரசாங்கத்திடமும் ஆளநரிட மும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். பல ஆண்டுகளாக பல்வேறு அரசுகளிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதி லும், தங்களது காணிகள் இன்னும் முழுமையாக விடுவிக் கப்படவில்லை என அவர்கள் கவலை வெளியிட்டனர். தங் களது காணிகளும் பொதுச் சொத்துகளும் முழுமையாக மீள வழங்கப்படும் வரை போராட்டம் தொடரும் என தெரிவித்தனர்.

குறித்த போராட்டத்தின் போது எமது நிலம் எமது உரிமை, நிலப் பறிப்பு என்பது அப்பட்டமான மனித உரிமை மீறல், இராணுவ நிலைகளினை அரச காணிகளினுள் உடனடியாக நகர்த் துங்கள், இராணுவமே வெளியேறு, எமது நிலம் எமக்கு வேண்டும் , எமது வாழ்வாதாரம் எமக்கு வேண்டும், மூதா தையர் பூமி எமக்கு வேண்டும் போன்ற பல்வேறு வாசகங் களடங்கிய பதாதைகளை தாங்கியவாறும் கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் வி.மணிவண்ணன், மக்கள் போராட்ட முன்னணி உறுப்பினர் (அரகல) ராஜ்குமார் ரஜீவ்காந், அரசியல் செயற் பாட்டாளர் எஸ்.தவபாலன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் ஞா.யூட்சன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் க.விஜிந்தன், முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சம்மேளன பிரதிநிதி நே.சங்கீதன், முன் னாள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், கேப்பாபுலவு மக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கேப்பாப்புலவில் 55 குடும்பங்களுக்கு சொந்தமான 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக் காணிகள் நீண்டகாலமாக இராணுவ ஆக் கிரமிப்பின் கீழ் இருக்கின்றது. குறித்த காணிகளை உடனடி யாக உரிய மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக் கையை வலியுறுத்தியே பாதிக்கப்பட்ட மக்கள் இந்த தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது.














# யாழ். பலாலியில் தமது பூர்வீக காணிகளை சிறீலங்கா இராணுவம் விடுவிக்க வலியுறுத்திப் போராட்டம்

05.07.2026

யாழ். பலாலியில் கடந்த 36 ஆண்டுகளாக மக்களது காணி-களை ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ள சிறீலங்கா ஆக்கிர மிப்பு இராணுவம் வெளியேற வேண்டும்.



காணிகள் அனைத்தும் மக்களிடம் கையளிக்கப்படல்



வேண்டும். எனக்கோரி இன்று 05.07.2026 ஞாயிற்றுக் கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இடம்பெற்று வருகின்றது.

இன்று கடும் வெய்யிலுக்கு மத்தியிலும் மக்கள் தமது பூர்வீக நிலம் விடுவிக்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்பினர்.





**கப்டன் மில்லருடன் "கரும்புலிகள்" சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத – எண்ணிப் பார்க்கவும் முடியாத – தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# கரும்புலிகள் நாளில் கரும்புலிகளான கப்டன் மில்லர் மற்றும் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி ஆகியோரின் பெற்றோர் மதிப்பளிக்கப்பட்டனர்

05.07.2026

கரும்புலிகள் நாளான இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை கரும்புலிகளான கப்டன் மில்லர் மற்றும் கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி ஆகியோரின் பெற்றோருக்கு மதிப்பளிக்கப் பட்டனர்.

தமிழர் விடுதலைப் விடுதலைப் போராட்ட வரலாற்றில் தங்கள் இன்னுயிர்களை ஈகம் செய்த கரும்புலி கப்டன் மில்லர் அவர்களின் தாயார் மற்றும் கடற்கரும்புலி கப்டன் அங்கயற் கண்ணி அவர்களின் தாயார் ஆகியோரை கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஜீவனால் பொன்னாடை போத்தி மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்

1987 ஆம் ஆண்டு யூலை மாதம் ஐந்தாம் திகதி நெல்லியடி பகுதியில் உள்ள சிறீலங்கா இராணுவ முகாம் மீது கரும்புலி தாக்குதலை கப்டன் மில்லர் மேற்கொண்டார்.

காங்கோசன்துறை கடற்பரப்பில் தரித்து நின்ற சிறீலங்காக் கடற்படைக் கப்பல் மீது தாக்குதல் கடற்கரும்புலி அங்கயற்



கண்ணி 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி



தாக்குதலை மேற்கொண்டார்.

# யாழ். வடமராச்சி மருதங்கேணியில் 28 ஏக்கர் காணியை சுவீகரிக்க நடடிவக்கை


05.07.2026

யாழ்ப்பாணம் , வடமராட்சி கிழக்கு , மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 11.2657 ஹெக்டயர் காணி யைகாணி சுவீகரிக்க நில அளவை திணைக்களத்தால் நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அது குறித்து நிலஅளவை திணைக்களம் விடுத்துள்ள விசேட அறிவிப்பில்,

மருதங்கேணி பிரதேச செயலாளரின் 21-05-2026 திகதியிடப் பட்ட நிலஅளவை கோரிக்கை இலக்கம் VE/SR/2026/27 இற்கும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரின் வர்த்தகமாணி குறிப்பு இல. 4-3/4/2012/D/351 இற்கும் அமைவாக மருதங் கேணி (ஜே/428) கிராம அலுவலர் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் "தேவதுரவு" என்று அழைக்கப்படும் 11.2657 ஹெக்டயர் விஸ்தீரணம் உடைய காணியினை ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருப்பதால் சுவட்டு வரைபடம் Ya/VDE/2016/36 இற்கு அமைவாக காணிசுவீகரிப்பு பிரிவு 5 அடிப்படையில் 2026-07-09 இருந்து தொடர்ந்து தினமும் (வேலைநாட்களில்) காலை 9 மணியில் இருந்து மாலை வரை நிலஅளவை செய்யப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

உரிமை கோரும் வேறு யாராவது இருப்பின் காணி தொடர்பான ஆவணங்களுடன் குறிப்பிட்ட நாளில் வருகைதந்து எல் லைகளை காண்பித்து நிலஅளவைக்கு ஒத்துழைப்பு வழங்கு மாறுகேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் - என்றுள்ளது.


VE/SR/2026/27
4-3/4/2012/D/351
Ya/VDE/2016/36
2026-07-09
K.Thevaruban
Government Surveyor
Survey Department

# திருகோணமலை கிண்ணியாவில் மயானப் பகுதியில் கழிவுகள் கொட்டுவதற்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

07.07.2026

கிண்ணியா நகர சபை குட்பட்ட சின்னத் தோட்டப் பிரதேச மக் களின் இந்து மயானப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத்தருமாறு வலியுறுத்தி, செவ்வாய்க்கிழமை (07) கவனஈர்ப்பு ஆர்ப் பாட்டம் இடம்பெற்றது.

கடந்த 2007ஆம் ஆண்டு முதல் கிண்ணியா நகர சபையினால் சின்னத் தோட்டம் பகுதியில் பயன்படுத்தப்பட்டு வரும் கழிவு முகாமைத்துவத் தளத்தை உடனடியாக அவ்விடத்திலிருந்து அகற்ற வேண்டும் எனவும், குப்பைகளைக் கொட்டுவதற்கு மாற்று இடமொன்றை ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக இங்கு கழிவுகள் கொட்டப்படுவதனால், ஆலங் கேணி, சின்னத் தோட்டம், பாரதிபுரம், கடலூர் மற்றும் இடிமன் ஆகிய கிராம மக்கள் பயன்படுத்தும் பிரதான இந்து மயானம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் சுட்டிக்காட் டுகின்றனர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கருத்துத் தெரிவிக் கையில்,

இங்கு கொட்டப்படும் கழிவுகளால் கடும் துர்நாற்றம் வீசுவ துடன், குப்பைகள் நாலாபுறமும் விசிறி அடிக்கப்படுகின்றன. மேலும், பறவைகள் இக்கழிவுகளை குடியிருப்புப் பகுதிகளுக் குள் கொண்டு வந்து போடுவதால் சுற்றுப்புறச் சூழல் வெகு வாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, குப்பைகளால் கவரப்படும் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், இறந்த வர்களின் சடலங்களை நிம்மதியாக அடக்கம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டிலிருந்து இதற்கான கோரிக்கைகளை முன வைத்து வருகின்றோம், ஆனால் இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை" என்றனர்







## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.thuyarpakirvu.com

# சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாளை முன்னிட்டு யாழில் நீதிகோரி சர்வதேச மாநாடு

07.07.2026

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாளை முன்னிட்டு, எதிர்வரும் ஆவணி மாதம் 30ஆம் திகதி வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஒன்றிணைந்து யாழ்ப்பாணத்தில் சர்வதேச மாநாடு ஒன்றினை நடத்தவுள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கப் பிரதிநிதிகள் அறிவிப்பினை விடுத்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகப் பகுதிகளிலும், தமிழர் என்கிற அடையாளத்தோடு இலங்கைத் தீவின் அனைத்துப் பாகங்களிலும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் அரச படைகளாலும், துணை ஆயுதக் குழுக்களாலும் கடத்தப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பின்னரும், இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட பின்னரும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இந்தத் துயரம் தோய்ந்த வரலாறு 1948ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பிக்கிறது. கணக்கற்ற தமிழ் இளைஞர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதையோ, அதற்கான பொறுப்புக்கூறலையோ வெளிப்படுத்தாத இலங்கை அரசு, பல தசாப்தங்களாக மௌனம் சாதித்து வருகிறது. விசாரணை என்கிற பெயரில், 'திருடனே குற்றவாளி யைத் தேடும் படலத்தை' அரசு அரங்கேற்றி வருகின்றது. நீதி கோரும் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டு வரும் இத்தகைய வேலைத்திட்டங்கள் குறித்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் பலத்த எதிர்ப்பையும் அதிருப்தியையும் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றோம்.




தற்போது ஆட்சிபீடத்திலிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ஏனைய அரசுகளைவிட மிகத் தந்திரோபாயமாக எமது விடயத்தைக் கையாள்வதை அவதானிக்கிறோம். 'தெற்கில் சிங்கள இளைஞர்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் வடக்கு, கிழக்கில் தமிழ் இளைஞர்களும் காணாமல் ஆக்கப் பட்டுள்ளனர் எனவே தெற்கோடு கைகோர்த்து இந்தப் பிரச் சினைக்குத் தீர்வு காண்போம்' என்று அவர்கள் கூறுகின்றனர். அடிப்படையில் அறமற்ற இந்த வாதம், எமது கண்ணீரை விலை பேசுகிறது. எமது பிள்ளைகளைப் பறிகொடுத்துவிட்டு, நாம் நட்டஈட்டையோ அல்லது அரச வேலைவாய்ப்புகளையோ பெற்றுக்கொண்டு, மரணச் சான்றிதழில் கையெழுத்திடத் தயாரில்லை. ஆனால் தெற்கு அதனை எப்போதோ செய்து விட்டது. நாம் எமது பிள்ளைகள் எங்கே என்றுதான் கேட்கி றோம் அதற்கான நீதியைத்தான் கோருகின்றோம்.

நீதி கோரி நீண்ட காலமாக நாம் நடத்தி வரும் போராட்டம் காரணமாக, இதுவரை 400க்கும் மேற்பட்ட தாய், தந்தையர் நீதி கிடைக்காமலேயே உயிரிழந்துவிட்டனர். அவர்களின் இறப்பின் பின்னர், காணாமல் ஆக்கப்பட்டவரைத் தேடும் வீச்சும் அருகி வருகிறது. இவ்வாறானதொரு நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கை அரசின் பொறிமுறைகளை நிராகரித்து, சர்வதேச நீதியைக் கோரும் நிகழ்வாக இவ்வருட சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை அனுஸ்டிக்கவுள்ளதாக ஏற்பாட்டு குழு அறிவித்துள்ளது.

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்; முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் விசாரணை முன்னெடுக்கவும்!

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

08.07.2026

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்தக்கூடாதென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சோமரத்ன ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொண்டதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியுள்ள சூழலில், அவரிடம் விசாரணைகளை முன்னெடுக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.



நாடாளுமன்றில் இன்று புதன்கிழமை (8) உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினரால் மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விடம் விசாரணை நடாத்தப்பட வேண்டும்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்தக்கூடாதென அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தன்னிடம் கேட்டுக்கொண்டதான தகவல்களை சோமரத்ன ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார்.

அப்போதைய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேவினால் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் மூலம் கடிதம் ஒன்று தமக்கு அனுப்பி வைத்திருந்ததாகவும், அந்தக் கடிதத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே அனுப்பி வைத்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனிதப் புதைகுழி தொடர்பில் எதனையும் கூற வேண்டாம் எனவும், பொதுமன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே சோமரத்ன ராஜபக்ஷ வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடமும் விசாரணைகள் நடத்தப்படவேண்டும்



என்றுதான் செம்மணியோடு சார்ந்த மக்கள் எல்லோரும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

செம்மணி மனிதப் புதைகுழியுடன் தொடர்புடைய அனைத்துக் குற்றவாளிகளும் கைதுசெய்யப்படவேண்டும். அவர்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என இந்த உயரிய சபையின் ஊடாகக் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# வடமராட்சி கிழக்கில் சிறீலங்கா இராணுவத் தேவைக்காக காணி சுவீகரிப்புக்கு எதிராக போராட்டம் – 09.07.2026










**www.thuyarpakirvu.com**

# திருகோணமலை சம்பூர் படுகொலையின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல்

08.07.2026

சம்பூர் படுகொலைச் சம்பவத்தின் 36வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சம்பூர் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக செவ்வாய்கிழமை (07) மாலை மிகவும் உணர்வுபூர்வமான முறையில் நினைவுகூரப்பட்டது.



சம்பூரில் 1990ஆம் ஆண்டு யூலை மாதம் 07ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 57பேர் உட்பட அதனை அண்மித்த காலப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டு உயிர் நீத்த நூற்றுக்கும் அதிகமான பொது மக்களுக்குமான நினைவு வணக்க நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது படுகொலை செய்யப்பட்டு உயிர் நீத்த உறவுகளுக்கு மலர்தூவி, விளக்கேற்றி வணக்கம் செலுத்தப்பட்டது. இந்த சம்பூர் படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.



1990ஆம் ஆண்டு யூலை 7ஆம் திகதி இடம்பெற்ற இந்த கொடூரமான சம்பவத்தின்போது சீருடை அணிந்த ஆயுதம் தாங்கிய படைகள், பிற்பகல் 2.00 மணியளவில் சம்பூரில் அமைந்த குடியிருப்புகளை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதன்போது மக்கள் தங்கள் பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்களுடன் சாக்கரவட்டவன் காட்டு பகுதிகளுக்கு பாதுகாப்பாக தஞ்சம் அடைந்தனர். பின்னர், ஊருக்குள் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டதும், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் ஆலயங்களில் தஞ்சம் புகுந்தனர். ஆனால் காட்டுக்குள் பதுங்கியிருந்த ஆண்களை பாதுகாப்புப் படைகள் வெட்டியும், சுட்டும், எரித்தும் படுகொலை செய்தனர் எனவும் இந்தக் கூட்டுப் படுகொலையின் 35 ஆண்டுகள் கடந்தும், சம்பூர் மக்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை.

யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் ஆகின்ற நிலையிலும், சிறீலங்காவின் எந்தவொரு அரசும் இதுவரை உரிய நீதிச் செயல்முறைகளை மேற்கொள்ளவில்லை. இந்நாளில், தற்போதைய அரசு, சம்பூர் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகளுக்கான நீதியை உறுதி செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் பங்கு கொண்டிருந்தவர்கள் வலியுறுத்தினார்கள்.

கடந்த யுத்த காலத்தில் சம்பூர் கிராமத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் அதிகமானவர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

அன்று கடற்கரைச்சேனை, சம்பூர், சூடைக்குடாவரை படுகொலை செய்யப்பட்டவர்கள். படுகொலையான மக்களின் விபரம் சில:



1. புண்ணியமூர்த்தி செல்லக்குட்டி (அதிபர்)
2. இராசேந்திரம் பத்மநாதன் (உயர்தர மாணவன்)
3. பொன்னம்பலம் சச்சிதானந்தகுரு (தரம் 7 மாணவன்)
4. மயில்வாகனம் பிரேமானந்தராஜா (உயர்தர மாணவன்)
5 கோணலிங்கம் சோமேஸ்வரன் (தரம் 7 மாணவன்)
6. கனகசிங்கம் நித்தியசீலன் (தரம் 7 மாணவன்)
7. ச.கனகசிங்கம்
8. கனகசூரியம் சண்முகராஜா (தரம் 10 மாணவன்)
9.ஒப்பிலாமணி இந்திரன்
10. முத்துக்குமார் விஜயகுமார் (தரம் 10 மாணவன்)
11. முத்துக்குமார் விஜயகாந்தன
12. வைரமுத்து வெற்றிவேல்
13. சங்கரலிங்கம் உதயநாதன்

14. தங்கராசா தில்லைநாயகம் (பப்பாசி)
15. பேச்சுமுத்து அருமைப்பிள்ளை (பொலிஸ் உத்தியோகத்தர்)
16. கணபதி கான சரஸ்வதி (கணபதி ஆசிரியரின் மனைவி)
17. க.பேச்சிமுத்து (பரியாரியார்)
18. இ.சொக்கன்



19. இ.ஜெகதீஸ்வரன்
20. காளிகோவில் பூசகர் (மட்டக்களப்பு)
21. இராசேந்திரம் (கூனித்தீவு தலைவர்)
22. இராசேந்திரம் வாமதேவன் (தரம் 10 மாணவன்)
23. சுப்பிரமணியம் விநாயகநேசன்
24. வைரமுத்து சுப்பிரமணியம்
25. கணபதிப்பிள்ளை செல்வராசா (பொலிஸ் உத்தியோகத்தர்)
26. வேலுப்பிள்ளை வைரமுத்து (கடற்கரைச்சேனை)
27. லி. பரணிதரன்
28. வைரமுத்து அழகம்மா
29. பொன்னுத்துரை அரசரெத்தினம்
30. பொன்னுத்துரை கதிர்காமத்தம்பி
31. முருகேசபிள்ளை கணேசலிங்கம்
32. பியதாச சோமதாஸ்
33. பியதாச கருணதாஸ்
34. அல்லிராசா (சூடைக்குடா)
35. அல்லிராசா மகன் 1
36. அல்லிராசா மகன் 2
37. வீ.அரசமணி
38. இ.ரவிநேசன்
39. இ.சிவநேசன்
40. சி.சிங்கராசா
41. சி.கோணலிங்கம்
42. சி.கவிரூபன்
43. கோ நவரெத்தினம்
44. ந.அருணாச்சலம்
45. க.யோகநாதன்
46. சித்திரவேல் குணராசா
47. சித்திரவேல் மாணிக்கராசா
48 தாமோதிரம்பிள்ளை சிவகுமார்
49. இ.நிர்மலநாதன்
50. வீரசிங்கம் யோகாம்பிகை
51. வீரசிங்கம் ஜீவசாந்தி
52.ச. உதயமோகன்
53. ச. ரவி
54.மு. விஜயநந்தன்
55. வீ. அரசமணி
56. ந. பவானந்தம்

# யாழ். மயிலிட்டி மக்களின் பூர்வீக நிலங்களை உடன் விடுவிக்குமாறு கோரி நீதி கிடைக்கும் வரை தொடர் போராட்டம் முன்னெடுப்பு

10.07.2026

யாழ்.மயிலிட்டி மக்களின் பூர்வீக நிலங்களை உடனடியாக விடுவிக்கக் கோரி இன்று 10.07.2026 ( வெள்ளிக்கிழமை) மக்கள் போராட்டம் இடம்பெற்றது.





விமான நிலைய விரிவாக்கத்திற்காகவும் இராணுவத் தேவைகளுக்காகவும் சுவீகரிக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வாதாரக் காணிகள் உடனடியாக மக்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியே குறித்த போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. தமிழ்த் தேசியமக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் இப்போராட்டத்தில் மக்களுடன் இணைந்து தங்களது வலுவான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

நீதி கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும்! என் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.





# யாழ். நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான சிறீலங்கா விமானப்படையின் தாக்குதலின் 31ஆம் ஆண்டு நினைவேந்தல்

09.07.2026

150க்கும் மேற்பட்டோரின் உயிர்களை காவுகொண்ட நவாலி தேவாலயத் தாக்குதலின் 30 ஆம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.




1995ஆம் ஆண்டு யூலை 9ஆம் திகதி யாழ்ப்பாணம் நவாலி பேதுருவானவர் தேவாலயம் (சென். பீற்றர்ஸ்) மீது சிறீலங்கா விமானப் படையினரால் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் 150இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப் பட்டதோடு, 150 பேருக்கு மேல் படுகாயமடைந்திருந்தனர்.

இந்த சம்பவம் இடம்பெற்று இன்று (வியாழக்கிழமை) 31 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. ஆனாலும் அன்றைய கோரத் தாக்குதலின் வலியிலிருந்து மக்கள் இன்னும் மீளவில்லை.

அத்தோடு, பாதிக்கப்பட்ட மக்களில் பலர் தற்போதும் நிர்க்கதி யற்ற நிலையில் சொல்லொணாத் துயரத்துடனேயே வாழ்கின் றனரென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்த சம்பவம் தொடர்பாக விரிவாக நோக்கினால், குறித்த காலப்பகுதியில், வலிகாமம் பகுதியில் சிறீலங்கா அரசினரால் முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நாளில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

பலாலியில் இருந்தும் அளவெட்டியில் இருந்தும் எறிகணைத் தாக்குதல்களையும் குண்டுத்தாக்குதல்களையும் மக்கள் குடி யிருப்புகளை நோக்கி மேற்கொண்டிருந்தனர்.

இதன்காரணமாக பொதுமக்கள் கையில் அகப்பட்ட பொருட்க ளுடன் வெளியேறிக்கொண்டிருந்தனர்.

அப்போதுதான் இந்த கொடூரச் சம்பவம் அரங்கேறியிருந்தது. 1995ஆம் ஆண்டு யூலை 9ஆம் திகதி இதேபோலதொரு நாளிலேயே குடாநாட்டின் பல்வேறு வீதிகளினூடாக அகதிக ளாக வெளியேறிய மக்கள் நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயத்திலும் நவாலி சின்னக்கதிர்காமம் முருகன் கோயிலிலும் தாகம் தீர்ப் பதற்காக அமர்ந்து களைப்பாறினர்.

அவ்வேளையில், யாழ். நகரப் பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்துகொண்டிருந்த புக்காரா விமானம் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மேற்படி இரு ஆலயங்கள் மீதும் வீசியது. இரண்டு ஆலயங்களும் மாலை 5.45 மணியளவில் இடம் பெற்ற தாக்குதலில் பலத்த சேதமடைந்தன.



இத்தாக்குதலில் ஆலயங்களில் தஞ்சமடைந்திருந்த குழந் தைகள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட 150 பேர் அந்த இடத் திலேயே கொல்லப்பட்டனர். அத்தோடு அவயங்களை இழந்தும் உறவுகளை இழந்தும் 150இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப் பட்டனர்.



இந்த சம்பவம் இடம்பெற்று இன்றுடன் 31 வருடங்கள் நிறை வடைந்துள்ளன. ஆனால் எம் மக்களின் மனங்களில் நீங் காதுள்ள ரணங்களுக்கு இதுவரையில் மருந்தில்லை.



# முல்லை. புதுக்குடியிருப்பில் உயிரிழந்த வர்த்தகர்களுக்கான நினைவேந்தல்

10.07.2026

கடந்த காலங்களில் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்துக்குட்பட்ட பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு உயிரிழந்த வர்த் தகர்களை நினைவுகூர்ந்து புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை (10) காலை நினைவு வணக்க நிகழ்வு நடைபெற்றது.





புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத் தலைவர் செல்லையா மோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சி.குகநேசன், வர்த்தகர்களின் குடும்பத்தினர், வர்த்தக சங்க பிரதிநிதிகள், வர்த்தகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் என பலரும் கலந்துகொண்டு மலர் வணக்கம் செலுத்தியிருந்தனர்.

இதேவேளை இந்த நினைவேந்தலில் கலந்துகொள்வதற்காக புதுக்குடியிருப்பு வர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை மூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரேயொரு பாதையைத்தான் இன்று தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கிறது. எனவே, இந்த விடுதலைப் பாதையிற் சென்று, சுதந்திரத் தமிழீழத் தனியரசை நிறுவுவதென இன்றைய நாளில் நாம் தீர்க்கமாக முடிவு செய்திருக்கிறோம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# சிறைச்சாலையில் ஆனந்த சுதாகரனின் உயிருக்கு ஆபத்து

## குரலற்றவர்களின் குரல் அமைப்பின ஒருங்கிணைப்பாளர் முரகையா கோமகன்

12.07.2026

தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரின் உயிருக்கு சிறைச்சாலையில் அச்சுறுத்தல் நிலவுவதாக தெரிவித்த குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் , சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என கோரியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

சிறைச்சாலைகளில் ஏற்பட்ட அசாதாரண சூழல் ஏனைய சிறைச்சாலைகளுக்கும் பரவும் துர்ப்பாக்கிய நிலையொன்று ஏற்பட்டிருக்கின்றது.

அந்த வகையில், நீர்கொழும்பு சிறைச்சாலையிலே அசாதாரண சூழலை தொடர்ந்து மகசின் சிறைச்சாலையில் பதற்றமான சூழல் நிலவுவதாக நாங்கள் அறிந்திருக்கிறோம்.

அதனால், தமிழரசியல் கைதிகளுடைய குடும்பத்தினர், சிறைகளில் இருக்கின்றதங்களின் உறவுகளை எண்ணி, மிகவும் துயரத்தோடு பரிதாபகரமான நிலையில் காணப்படுகின்றனர்..

தமிழ் அரசியல் கைதிகள் 31 வருடங்களாக சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக, மகசின் சிறைச்சாலையிலே நாலு தமிழ் அரசியல் கைதிகளும், வெலிக்கடை சிறைச்சாலையிலே மூன்று பேரும், கண்டி போகம்பரையிலே இரண்டு பேரும், அம்பாந்தோட்டை தங்காலை பகுதியில் உள்ள சிறைச்சாலையில் ஒருவருமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மகசின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் நால்வர் 31 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றார்கள். ஏற்கனவே அவர்கள் நோய்வாய்ப்பட்ட நிலையிலேயே காணப்படுபவர்கள். இவ்வாறான பாதுகாப்பற்ற சூழல் வந்து, அவர்களுடைய உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

எனவே, தமிழ் அரசியல் கைதிகளுடைய பாதுகாப்பை இந்த அரசு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதே நேரத்திலே, ஆனந்த சுதாகரனுடைய உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், அவருக்கு பாதுகாப்பு இல்லை என்பது தொடர்பாக ஆனந்த சுதாகரன் உடைய தாயார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் சிறைச்சாலையின் தலைமை அலுவலகத்திற்கு சென்று முறைப்பாடு செய்திருந்தார்.

ஆனந்த சுதாகரன் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சூழலிலே, அவர் திடீரென்று கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கு கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு முன்னர் மாற்றப்பட்டிருந்தார். ஆனால், அங்கே அவருக்குரிய பாதுகாப்பு இல்லாத ஒரு சூழல் அங்கே நிலவுவதாக தொடர்ச்சியாக அவருடைய தாயார் எங்களுக்கும் முறைப்பாடு செய்திருந்தார். .

எனவே தற்போது ஏற்பட்டுள்ள இந்த அசாதாரண சூழலாலே, தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஒரு உயிர் அச்சுறுத்தல் ஒன்று ஏற் பட்டிருக்கிறது.

எனவே, இந்த விடயத்தை கருத்திலே கொண்டு, தமிழ் அரசியல் கைதிகளுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவர்களை விரைவாக விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

அதேபோல, சிறைச்சாலையிலே ஏற்பட்ட அசாதாரண சூழல் சம்பந்தமாக அங்கிருந்து மாற்றப்பட்ட கைதிகள் ஏனைய சிறைச்சாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு, சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதாகவும் அறிகிறோம்.

அதனை உடனடியாக சிறைச்சாலை நிர்வாகம் தலையிட்டு நிறுத்த வேண்டும். கடந்த காலங்ககளில், தமிழ் அரசியல் கைதிகளுக்கு அவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டன.

கடந்த காலத்திலே வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால், அங்கிருந்த முழு கைதிகளும் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்கள்.

அதிலே குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகளான, டில்ருக்சன் மற்றும் நிமலரூபன் ஆகிய இருவரையும் சிறைச்சாலை அதிகாரிகளாலே அடித்துச் சாகடிக்கப்பட்டிருந்தார்கள். எனவே, இதே போல் ஒரு சூழல் இப்போது ஏனைய கைதிகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

சிறைச்சாலையில் “கைதிகளும் மனிதர்களே” என்ற ஒரு வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சிறைக்குள்ளே அவர்கள் மனிதர்களாகக அவர்களைக் கையாள்வதே இல்லை.

எனவே, கைதிகள் விடயத்திலே இந்த அரசாங்கமும் கடந்த அரசாங்கம் போன்றே, பாராமுகமாக செயற்படுகிறது.

நாங்கள் தமிழ் அரசியல் கைதிகளுடைய விடுதலைக்காகச் செயற்படுபவர்களாக இருந்தாலும், நாங்கள் மனிதத்தை நேசிக்கிறோம்.




எனவே, இந்தச் சிறைச்சாலைகளுக்குள்ளே நாலு சுவர்களுக்குள்ளே எந்தக் கைதியாக இருந்தாலும், துன்புறுத்தப்படுவதையோ அல்லது உயிரை அச்சுறுத்தல் ஏற்படுத்துவதையோ நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை, விரும்புவதுமில்லை.

ஆகவே, “கைதிகளும் மனிதர்கள்” என்ற அந்த வாசகம் செயல் வடிவில் கொண்டுவர இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறைச்சாலையில் ஏற்பட்ட உயிரிழப்புக்களை, வழமை போல விசாரணைகளை நடத்தி மூடி மறைக்காமல், கலவரங்கள் ஏற்பட்டு, அதிலே கைதிகள் இறந்ததாகக் கணக்குக் காட்டாமல், உண்மையான, விரிவான விசாரணைகளை நடத்தி பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதே நேரத்திலே, நீண்ட காலமாக கொடிய துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற எங்களுடைய தமிழ் அரசியல் கைதிகளை விடுபடுவதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த அரசாங்கம் வந்த பின்னர் எந்தவொரு அரசியல் கைதிகளும் இதுவரைக்கும் விடுதலை செய்யப்படவில்லை. விடுதலை செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் கூட இதுவரைக்கும் நடக்கவில்லை.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு நிரந்தரத் தீர்வாக அவர்களுக்கு விடுதலை எனும் செய்தி விரைவாக எங்களுடைய காதுகளுக்குக் கேட்கச் செய்ய வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். பலாலி நில மீட்புப் போராட்டம் 36 ஆண்டுகால இடப்பெயர்வுக்கு நீதி கேட்டுத் தொடரும் மக்கள் போராட்டம்

17.07.2026

“எங்களுக்கென்றொரு நிலம் இருந்தது, எங்களுக்கென்றொரு வீடு இருந்தது... அத்தனையும் எங்களிடமிருந்து பறிக்கப்பட்டது, நாங்கள் நிலமற்றவர்களாக அலைகின்றோம்”

என்ற பேராளாத வலியைச் சுமந்து, 36 ஆண்டுகளைக் கடந்து நிற்கும் எமது மக்கள், தங்களின் சொந்த நில உரிமைக்காகத் தொடர்ந்து வீதியில் இறங்கிப் போராடி வருகிறார்கள்.

எமது நிலம் எப்போது நமக்குக் கிடைக்கும்? சொந்த மண்ணில் வாழும் உரிமை கிடைக்கும் வரை இந்த மக்கள் குரல் ஓயாது!














**மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்து கொள்ளவார்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# யாழ். வலிகாமம் வடக்கில் விவசாயத்தில் ஈடுபடும் சிறீலங்கா இராணுவத்தினர் மரக்கறிகளை சத்தைப்படுத்தி வருகின்றனர்!

13.07.2026

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக சிறீலங்கா இராணுவத்தினரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் இராணுவத் தினர் மரக்கறிகளை யாழ்ப்பாணத்தில் சந்தைப் படுத்தி வருகின்றனர்.



இந்நிலையில் கடந்த வாரம் நாடாளுமன்றில் உரையாற்றி பாது காப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் வலி.வடக்கில் இராணுவத் தினரால் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் 1661 ஏக்கர் காணி இராணுவத்தினருக்கு தேவை எனவும், அவற்றுக்கான இழப்பீட்டை காணி உரிமையாளர் களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், வலி. வடக்கில் இராணுவத்தினர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவது, தமது சுய தேவைக்கு எனவும் தெரிவித்திருந்தார்.

பிரதி அமைச்சரின் இக் கூற்றினை முற்றாக நிராகரித்த வலி. வடக்கு மக்கள், தாம் தமது சொந்த இடங்களில் இருந்து விரட் டப்பட்டு, 36 வருடங்கள் கடந்த நிலையிலும், எமது காணி-களை பாதுகாப்பு காரணம் என கூறி அடாத்தாக கையகப்படுத்தி, அவற்றில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

நாம் எமது காணிகளை இழந்து வாழ்வாதாரங்களை இழந்து நிர்க்கதியாக நிற்கும் போது, எமது காணிகளில் விவசாயம் செய்யும் இராணுவத்தினர் விவசாய உற்பத்தி பொருட்களை பெருமளவில் விற்று இலாபம் ஈட்டுகின்றனர்.

இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடானது, உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரங்களையும் பாதிக்கின்றது.

வலி.வடக்கில் இராணுவத்தினரின் விவசாய பண்ணைகளில் உற்பத்தியாகும், விவசாய உற்பத்தி பொருட்களை பலாலி வீதி யில் உரும்பிராய் பகுதியில் உள்ள தனியார் பல்பொருள் அங் காடியின் மரக்கறி கொள்வனவு நிலையத்தில் இராணுவத்தினர் பெருமளவில் விற்பனை செய்து வருகின்றனர்.



இதற்கான ஆதாரமாக தம்மிடம் காணொளி பதிவுகள் உள்ள தாக கூறி அவற்றை ஊடகங்களுக்கு அனுப்பியுள்ளனர்.

மக்களின் காணி மக்களுக்கே என கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் , கடந்த ஆட்சியாளர்கள் போன்று பொய்யுரைத்து மக்களை ஏமாற்றாது காணிகளை மக்களிடம் மீள கையளிக்க வேண்டும் என கோரியுள்ளனர்.

# எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் 'நீதியின் ஓலம் –2' சர்வதேச விசாரணை கோரி போராட்டம்

11.06.2026

தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரும் 'நீதியின் ஓலம் 2 ' எனும் கவனயீர்ப்பு போராட்டம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதிவரை முன்னெடுக்கப்படவுள் ளதாக தாயகச் செயலணி அறிவித்துள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் இன்றைய நாள் திங்கட்கிழமை நடை பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழினப்படுகொலைக்கு சர்வதேச நீதி கோரி கடந்த ஆண்டு நீதியின் ஓலம் முன்னெடுக்கப்படது. இதன் தொடர்ச்சியாக, எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி தொடங்கி 17ஆம் திகதி வரை தொடர்ந்து நான்கு நாட்கள் 'நீதியின் ஓலம் 2' எனும் போராட்டத்தின் வாயிலாக, தமிழினப்படுகொலைக்கு சர்வதேச நீதி கோரும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படும்.

இறுதி நாளான 17ஆம் திகதி மாபெரும் பேரணியும் நடை பெறவுள்ளது.

ஆரம்ப நாளான 14ஆம் திகதி மாலை 4 மணிக்கு செம்மணி யில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ச்சியாக நான்கு நாட்கள் நடைபெற்று, இறுதி நாளான 17ஆம் திகதி தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து மக்கள் திரண்டு வருகை தந்து மாபெரும் பேரணி யாழ் நகரில் இடம் பெறும்.




இந்தப் போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு தர வேண்டும் என தாயக செயலணியினர் தெரிவித்துள்ளனர்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.thuyarpakirvu.com**

**www.sangathamil.com**

# திருகோணமலையில் தொண்டர் அடிப்படையில் கடமையாற்றி வரும் சுகாதாரப் பணியாளர்கள் போராட்டம்

13.07.2026

நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை மற்றும் அதனோடு இணைந்த நடைமுறைகளில், தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகக் கூறி, திருகோணமலை மாவட்டத்தின் அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் பொது மருத்துவ அதிகாரி அலுவலகங்களில், 2019ஆம் ஆண்டு முதல் தொண்டர் அடிப்படையில் கடமையாற்றி வரும் சுகாதார பணியாளர்கள், இன்று (13) உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.







போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதாரப் பணியாளர் ஒருவர் கூறுகையில்,

“180 சுகாதாரப் பணியாளர்கள், கொடுப்பனவுகள் எதுவும் இன்றி மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றி வருகின்றோம்.

எமக்கு நிரந்தர நியமனத்தின்போது முன்னுரிமை வழங்கப்படும் என்று நாம் தொண்டர் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டபோது கூறப்பட்டது. இதனை நம்பி 7 ஆண்டுகளாக தொடர்ச்சியாக பணியாற்றுகின்றோம்.

பிரதேச மருத்துவ மாதுக்களுடன் இணைந்து கர்ப்பிணித் தாய்மாருக்கான அனைத்து சேவைகளையும் கிராமங்களுக்கு கால்நடையாக சென்று வழங்கி வருகின்றோம்.

எங்களுக்கும் குடும்பங்கள் உள்ளன. தேவைகள் உள்ளன. ஆனால், வருமானம் இல்லை. ஒரே ஒரு நம்பிக்கை இருந்தது. நிரந்தர நியமனம் கிடைக்கும் என்று. அதுவும் தற்போது எமக்கு கிடைக்காது போல் உள்ளது. எனவே எமக்கு நீதி கிடைக்க வேண்டும்” என்று கூறினார்.

இதேவேளை இதைப் பற்றி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திசாநாயக்காவிடம் கேட்கப்பட்டபோது அவர் கூறுகையில்,

“தற்போது சுகாதாரப் பணியாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை மத்திய சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நியமனம் வழங்கப்படவுள்ளது. இந்த நியமனத்தை வழங்குவது மத்திய அரசாங்கமே. மாகாண சபைக்கு இந்த நியமனத்தை வழங்கும் அதிகாரம் இல்லை. எனவே நடந்து முடிந்த நேர்முகப்பரீட்சை மற்றும் வழங்கப்படவுள்ள நியமனம் என்பவை குறித்து எம்மால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது” என்று கூறினார்.

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி நாளை (15.07.2026) மீண்டும் ஆரம்பம்

14.07.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 32 நாட்கள் அகழ்வு பணிகள் இடம் பெற்றுள்ள நிலையில், கடந்த 23ஆம் திகதியுடன் அகழ்வு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, நாளை(15.07.2026) முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வு பணிகள் கடந்த ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகி முதலாம் கட்ட அகழ்வு பணிகள் 09 நாட்கள் நடைபெற்றதில், 19 மனித என்புகூடுகள் மீட்கப்பட்டன.

அதனை அடுத்து இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் கடந்த ஆண்டு யூன் மாதம் 26ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி வரையிலான 45 நாட்கள் நடைபெற்ற போது, முதலாம் கட்டத்தில் அகழ்ந்து எடுக்கப்பட்ட 19 எழும்புக் கூடுகள் உட்பட 240 எழும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டன.

இந்நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக 56 நாட்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு மே மாதம் 09ஆம் திகதி வரையிலான 12 நாட்கள் இடம்பெற்ற அகழ்வு பணிகளில் 21 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட நிலையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.





மீண்டும், மூன்றாம் கட்டத்தின் இரண்டாம் பகுதி அகழ்வு பணிகள் கடந்த யூன் மாதம் 1ஆம் திகதி ஆரம்பமாகி யூன் 23ஆம் திகதி வரையிலான 22 நாட்கள் நடைபெற்ற நிலையில், பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் முதலாம் , இரண்டாம் கட்டங்கள் மற்றும் மூன்றாம் கட்டத்தில் 32 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளில் 412 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 409 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக – எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக – எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டன.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

www.sangathamil.com



# கனடியச் செய்திகள்

## "நாம் அனைவரும் கனடியார்களாக இருக்கும்போது கனடா வளர்கிறது"

### கனடியப் பிரதமர் மார்க் கார்ணி

01.07.2026

நாட்டின் ஒற்றுமை, இரக்கம் மற்றும் வலிமை குறித்து கனடா பிரதமர் மார்க் கார்ணி (Mark Carney) தனது வருடாந்த "கனடா நாள் யூலை 01" உரையில், உரையாற்றியுள்ளார்.



நாட்டின் இறையாண்மைக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சவால்கள் எழுந்துள்ள நிலையில் அவரது இந்த உரை வெளியாகியுள்ளது.

சுமார் இரண்டரை நிமிடங்கள் நீடித்த இந்த உரையில், கனடாவின் நிலப்பரப்பு மற்றும் மக்களின் அழகு மற்றும் பன்முகத் தன்மையை கார்ணி பாராட்டியுள்ளார்.

கடந்த 1867 ஆம் ஆண்டில், நான்கு காலனிகள் இணைந்து ஒரே நாடாக மாறியபோது, தனித்தனியாக இருப்பதை விட ஒன்றாக இணைந்து "ஒரு பெரிய மற்றும் சிறந்த நாட்டை உருவாக்க முடியும்" என்று அவர்கள் நம்பியதை அவர் சுட்டிக் காட்டினார்.



தேசிய இரயில்வே மற்றும் "டிரான்ஸ் கனடா நெடுஞ் சாலை" போன்ற கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளை இணைக்க உதவிய நாட்டின் முக்கிய உள் கட்டமைப் - புகளை கார்ணி தனது உரையில் எடுத்துரைத்தார்.

"கனடியர்கள் ஒரு வலுவான, மிகவும் ஒன்றுபட்ட நாட்டை வெறும் கற்பனை மட்டும் செய்யவில்லை; நமது கருவிகளைக் கையில் எடுத்து, அப்படிப்பட்ட ஒரு நாட்டை நாமே உருவாக்கியுள்ளோம்" என்று அவர் கூறினார்.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள "தீர்க்கமான தருணம்" மற்றும் "நம்மைப் பிரிக்க நினைக்கும் சக்திகள்" குறித்துப் பேச கார்ணி தயங்கவில்லை. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விடுத்து வரும் நாடு இணைப்புக் கொள்கை அச்சுறுத்தல்கள் மற்றும் இந்த இலையுதிர்காலத்தில் கனடாவிலிருந்து பிரிவது குறித்த பொது வாக்கெடுப்பிற்கு ஆல்பெர்ட்டா மக்கள் தயாராகி வரும் நிலையில் நாட்டின் ஒற்றுமைக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் ஆகியவற்றை வைத்தே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் எனக் கருதப்படுகிறது.

அதே நேரத்தில், கியூபெக் மாகாணத்திலும் பிரிவினை குறித்த கேள்விகள் இன்னும் எழுப்பப்பட்டு வருகின்றன. எனினும், கனடாவின் விழுமியங்களையும் வலிமையையும் கார்ணி வலியுறுத்தினார்.

# 43 Years, Black July

# Genocide Remembrance Month




**What is commonly remembered as the 'Black July' massacre is a horrific Thamil genocide carried out against Thamils with the support of the Sri Lankan government from July 23 to July 30, 1983, in Sri Lanka.**

**Activists and independent monitors estimate that between 3,000 and 5,638 Thamil people were killed in just 10 days. During this period, historical landmarks and traces of Tamils were destroyed across many areas. More than 150,000 Tamils were forcibly displaced from their homes.**

**Furthermore, more than 18,000 houses and 5,000 shops belonging to Thamils were burned to ashes by violent mobs. At least 500 Thamil women were subjected to sexual assault, and several families were burned alive. All of these actions were orchestrated by Sinhalese mobs backed by the Sinhala-Buddhist government**

**This event triggered the first major, historic mass exodus of Thamils; as a result, more than 500,000 people fled the island of Sri Lanka**



**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# தமிழ் நாட்டுச் செய்திகள்



## தமிழ் நாடு முதலமைச்சருடன் தமிழத் தேசியப் பேரவை சந்திப்பு

03.07.2026

இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசமான ஈழத்தமிழ்த் தேச மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அரசியல் கூட்டமைப்பான தமிழ்த் தேசியப் பேரவையினர், இன்று சென்னையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலகத்தில் சந் தித்து விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளார்கள்.

ஈழத்தமிழர்களின் அரசியல் மற்றும் வாழ்வாதார உரிமைகள் அடங்கிய விரிவான எழுத்துமூலக் கோரிக்கை கடிதமும் இதன்போது முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்:

ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை ஒழிக்கப்பட்டு, தமிழர் தேசத்தின் இறைமையை அங்கீ கரிக்கும் சமஷ்டி (Federal) அடிப்படையிலான அரசியல் தீர்வின் அவசியம்.

ஈழத்தமிழர் இனவழிப்புக்கு சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியதன் முக் கியத்துவம்.

இந்திய-ஈழத் தமிழ்க் கடற்தொழிலாளர்களின் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணும் நடவடிக்கைகள்.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப் பட்டன.

சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியப் பேரவையின் பிரதிநிதிகள் குழு:

தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் பின்வரும் 7 பேர் கொண்ட உயர் மட்டப் பிரதிநிதிக் குழு இச்சந்திப்பில் பங்கேற்றுள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் - தலைவர், தமிழ்த் தேசியப் பேரவை; நாடாளுமன்ற உறுப்பினர். செல்வராசா கஜேந்திரன் - பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர். பொன்னுத்துரை ஐங்கர நேசன் - தலைவர், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம். கே. வி. தவராசா - தலைவர், ஜனநாயகத் தமிழர் கட்சி ஜனாதிபதி சட்டத்தரணி. தருமலிங்கம் சுரேஷ் - தேசிய அமைப்பாளர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. கனகரட்ணம் சுகாஷ் - உத்தியோகபூர்வ பேச்சாளர், சிரேஷ்ட சட்டத்தரணி. நடராஜர் காண்டீபன் - கொள்கைப் பரப்புச் செயலாளர், சிரேஷ்ட சட்டத் தரணி.




## தமிழ் நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருடன் ஈழத் தமிழ் அரசியல் தலைவர்கள் சந்திப்பு

04.07.2026

இன்று (04.07.2026) காலை 10.00 மணியளவில், தமிழ்நாடு சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் அவரது அலுவலகத்தில் ஈழத் தமிழ் அரசியல் தலைவர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இச்சந்திப்பில், நேற்று தமிழ்நாடு முதலமைச்சருடன் நடை பெற்ற சந்திப்பில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் மீண்டும் விரி வாக ஆராயப்பட்டன.

குறிப்பாக, கடந்த 18 டிசம்பர் 2025 அன்று அப்போதைய தமிழ் நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னர், எமது கோரிக்கைகளின் அடிப்படையில் அவர் 11 பிப்ரவரி 2026 அன்று இந்தியப் பிரதமருக்கு ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பாக எழுதிய கடிதம் நினைவூட்டப்பட்டது.

அந்தக் கடிதத்தில் முன்வைக்கப்பட்ட நிலைப்பாடுகளைத் தொடர்ந்து உறுதியுடன் வலியுறுத்துவதுடன், இலங்கையில் ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதற்காக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒருங்கிணைத்து இந்திய மத்திய அரசுக்கு தேவையான அரசியல் அழுத்தங்களை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை, ஈழத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு நிலையான தீர்வாக, தமிழர்களின் தேசம், தனித்துவமான மக்கள் என்ற அங்கீகாரமும், அவர்களின் சுயநிர்ணய உரிமை யும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையில், கூட்டாட்சிக் கட்டமைப் பிலான (சமஷ்டி) அரசியல் தீர்வை ஏற்படுத்த இந்தியா உறுதியான அரசியல் முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப் படுகொலை தொடர்பில் சர்வதேச, சுயாதீன மற்றும் நம்பகமான விசாரணையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் ஈழத் தமிழ் மீனவர் களுக்கும் இடையில் எல்லைத் தாண்டிய மீன்பிடி நடவடிக் கைகள் காரணமாக நீண்டகாலமாக நிலவி வரும் முரண் பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், ஆக்கபூர்வ மான நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண் டும் என வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பாக, கடந்த டிசம்பர் மாதம் அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போது, இரு தரப்பு மீனவர் பிரதிநிதிகளையும் நேரடி யாகச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு, நிலை யான தீர்வை உருவாக்குவதற்கான முயற்சிகளை முன்னெடுப் பதாக அவரால் தெரிவிக்கப்பட விடயமும் நினைவூட்டப்பட்டது.

மீனவர் பிரச்சினையை தீர்க்கும் வகையில் தொடர்ந்து செயற் பாடுகள் முன்னெடுக்கப்படல்வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதேவேளை, தமிழ்நாட்டில் அகதிகளாக வாழ்ந்து வரும் ஈழத் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைகளுக்குத், அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் மனிதாபிமானத் தேவைகளுக்கும் ஏற்ப



விரைவான மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், ஈழத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை, அர சியல் தீர்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு பிரதிநிதித்துவக் குழுவை அமைத்து, அதன் ஊடாக ஈழத் தமிழர் அரசியல் விவகாரங்களை மையப்படுத்திய அனைத்துக் கட்சி மாநாட்டை நடத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டது. ஈழத் தமிழர் உரிமைப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சி களும் ஒருமித்த நிலைப்பாட்டுடன் செயற்படுவதற்கான நட வடிக்கைகளை முன்னெடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

RECOGNISE LIBERATION TIGERS OF

THAMIL EELAM

AS A LIBERATION ORGANISATION


www.sangathamil.com




# உக்ரைனில் உள்ள கோஸ்டியாண்டினிவ்காவைத் தங்கள் படைகள் கைப்பற்றியதாக ரஷ்யா தெரிவிப்பு

04.07.2026

கிழக்கு உக்ரைனில் உள்ள கோஸ்டியாண்டினிவ்காவைத் தங்கள் படைகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டதாக ரஷ்ய இராணுவம் வெள்ளிக்கிழமை அன்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினிடம் தெரிவித்தது. டொனெட்ஸ்க் பிராந்தியம் வழியாக முன்னேறி வரும் மாஸ்கோ, நீண்ட காலமாக கைப்பற்ற முயன்று வந்த ஒரு முக்கிய பகுதி இதுவாகும்.



கட்டளை மையத்திற்குச் சென்று உயர் தளபதிகளிடமிருந்து அறிக்கை பெறும் காணொளிகளில் காட்டப்பட்ட புதின், அந் நகரம் கைப்பற்றப்பட்டதை ஒரு முக்கியமான மூலோபாய சாதனை எனப் பாராட்டினார்.

முக்கியமாக ரஷ்யாவின் எண்ணெய் தொழில்துறையை இலக் காகக் கொண்ட, உக்ரைனின் தீவிரப்படுத்தப்பட்ட தொலை தூரத் தாக்குதல்களுக்குப் பதிலளிக்கும் விதமாக, ரஷ்யப் படைகள் பாதுகாப்பு மண்டலங்களின் அளவை அதிகரிக்க வேண்டியிருந்தது என்றும் அவர் கூறினார்.

கோஸ்டியாந்தினிவ்காவைக் கைப்பற்றியதாக ரஷ்யா கூறிய கூற்று குறித்து உக்ரைன் எந்தக் கருத்தையும் தெரிவிக்க வில்லை.

தற்போது ஐந்தாம் ஆண்டில் இருக்கும் போரின் செயல்பாடு குறித்த தனது அறிக்கையில், ரஷ்யாவின் பொதுப் படைத் தலைவர் ஜெனரல் வலேரி கெராசிமோவ், அந்நகரம் கைப் பற்றப்பட்டதை அறிவித்தார்.

தனது போர் முன்னெடுப்பின் முக்கிய நோக்கமாக ரஷ்யா தன் கட்டுப்பாட்டைப் பெறுவதாக உறுதியளித்துள்ள பரந்த டான்பாஸ் பிராந்தியத்தின் ஒரு பகுதியான டொனெட்ஸ்க் பிராந்தியம் முழுவதையும் விடுவிப்பதற்காக தெற்குப் படைக் குழு தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கெராசிமோவ் கூறினார்.

ஸ்லோவியான்ஸ்க்-கிரமடோர்ஸ்க்-கோஸ்டியாண்டினிவ்கா பலப்படுத்தப்பட்ட பகுதிக்குள், எதிரியின் முக்கிய பாதுகாப்பு மையங்களில் ஒன்றான கோஸ்டியாண்டினிவ்கா நகரை, அந்தக் குழுவின் துருப்புக்கள் விடுவித்துள்ளன என்று கெராசி மோவ் கூறினார்.

உக்ரைனின் பிராந்தியப் பாதுகாப்பில் முக்கிய அரண்களின் வலையமைப்பாகக் கருதப்படும் பல நகரங்களில் ஒன்றான கோஸ்டியாண்டிநிவ்காவின் சில பகுதிகள் தங்கள் படைகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக ரஷ்ய இராணுவம் சில காலமாகத் தெரிவித்து வருகிறது.

அந்நகரம் ஒரு முக்கியமான மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதாக புதின் விவரித்தார்.

இந்த நகரம் டான்பாஸின் ஒரு முக்கிய போக்குவரத்து மற்றும் பெரிய தொழில்துறை மையம் என்பது நம் அனைவருக்கும் தெரியும், என்று புதின் கூறினார்.

# உயிரிழந்த ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனிக்கு பல்லாயிரக்கணக்கானோர் இறுதி வணக்கம்

04.07.2026

ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனிக் கான பல நாள் இறுதி மரியாதை நிழக்வுகள் ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமையன்று இமாம் கொமேனி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் உடற்பேளைகள் பார்வைக்கு வைக் கப்பட்டபோது அவரது இறுதி வணக்கம் செலுத்துவதற்காக பெரிய மசூதியின் முன் திடலில் திரண்டனர்.

கமெனியைக் குறிக்கும் ஒரு காலி நாற்காலி ஈரானியக் கொடிக ளால் சூழப்பட்டு மையத்தில் நின்றிருந்தது. மேலும் அவரது கருப்புத் தலைப்பாகை அவரது உடற்பேளைக்கு மேல் வைக் கப்பட்டிருந்தது.

கிட்டத்தட்ட 37 ஆண்டுகளாக ஈரானை வழிநடத்திய அந்தத் தலைவர், பிப்ரவரி 28 அன்று அவரது தெஹ்ரான் வளாகத்தின் மீது இசுரவேலிய வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டதில், தனது குடும்ப உறவினர்களுடன் கொல்லப்பட்டார்.

அவருடைய மகன் மொஜ்தபா கமெனி வாரிசாக அறிவிக்கப் பட்டார். ஆனால் அமொரிக்கா இசுரவேல் - ஈரான் போர் தொடங் கிய முதல் அவர் பொதுவெளியில் காணப்படவில்லை. அவரைக் கொன்றுவிடுவதாக இசுரவேல் விடுத்த அச்சுறுத்தல்கள் கார ணமாக, அவர் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வது சாத்திய மில்லை எனக் கருதப்படுகிறது.

தாக்குதல்களில் கொல்லப்பட்ட மொஜ்தபாவின் மறைந்த மனைவி மற்றும் மேலும் இரண்டு குடும்ப உறுப்பினர்களின் உடற்பேளைகளும், அவரது தந்தையின் உடற்பேளையுடன் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.









RECOGNISE LIBERATION TIGERS OF
THAMIL EELAM
AS A LIBERATION ORGANISATION
www.sangathamil.com

# ஹெய்ட்டி அமைதிப்படையில் சிறீலங்கா இராணுவ அதிகாரிகளா?

## சர்வதேச மன்னிப்புச்சபை

04.07.2026

ஹெய்ட்டிக்கு அனுப்பிவைப்பதற்கான தகுதிவாய்ந்த நபர்களைத் தேர்ந்தெடுக்கும் மதிப்பீட்டு செயன்முறை எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது? மீறல்கள் இடம்பெறாதவண்ணம் எத்தகைய முன்கூட்டிய பாதுகாப்புச் செயன்முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன? எனக் கேள்வி எழுப்பியுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான மீறல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் சிறீலங்கா இராணுவ அதிகாரிகள் எவரும் தகுதி மதிப்பீட்டு செயன்முறையில் பங்கேற்பதிலிருந்து விலக்கிவைக்கப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளது.



சர்வதேச குண்டர் ஒழிப்புப் படையின் ஓரங்கமாக சிறீலங்காவின் பொலிஸ் மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த 1000 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஹெய்ட்டிக்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், இது குறித்து ஐக்கிய நாடுகள் சபைக்கான சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி ரென்சோ போமி கூறியிருப்பதாவது:

கடந்த காலங்களில் ஹெய்ட்டிக்கு அனுப்பிவைக்கப்பட்ட சிறீலங்காப் பணியாளர்களால் சிறுவர்கள் பலர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாக முன்வைக்கப்படும், இன்னமும் தீர்வு காணப்படாத குற்றச்சாட்டுக்கள் நீடிக்கின்றன.

அவ்வாறிருக்கையில் தற்போது மீண்டும் ஹெய்ட்டிக்கு அனுப்பிவைப்பதற்கான தகுதிவாய்ந்த நபர்களைத் தேர்ந்தெடுக்கும்



மதிப்பீட்டு செயன்முறை எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது? மீறல்கள் இடம்பெறாதவண்ணம் எத்தகைய முன்கூட்டிய பாதுகாப்புச் செயன்முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன? சிறீலங்கா உள்ளடங்கலாக ஹெய்ட்டிக்கு அனுப்பப்படும் சகல படையினருக்கும் எதிராக எதிர்வருங்காலங்களில் புதிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் பட்சத்தில், அவற்றைக் கையாள்வதற்கு நிறுவப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் வழிமுறைகள் என்ன? என்பது பற்றி சிறீலங்கா அதிகாரிகள், சர்வதேச குண்டர் ஒழிப்புப் படைக்குத் தலைமை தாங்குவோர், பங்காண்மை நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை என்பன வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவேண்டும்.

அதேவேளை போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான மீறல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் சிறீலங்காவின் இராணுவ அதிகாரிகள் எவரும் தகுதி மதிப்பீட்டு செயன்முறையில் பங்கேற்பதிலிருந்து விலக்கிவைக்கப்படவேண்டும்.

ஹெய்ட்டியிலும், ஏனைய பகுதிகளிலும் அமைதிப்படையினருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பாலியல் அத்துமீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இன்னமும் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாமல் இருப்பது பெரிதும் கவலையளிக்கிறது. மிக ஆழமாக வேரூன்றியிருக்கும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கினால் ஏற்படும் பாதிப்புகளுக்கான விலையை நலிவுற்ற சூழலில் வாழும் மக்களே செலுத்தவேண்டியுள்ளது.

சிறீலங்கா பொலிஸ் மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த 1,132 பணியாளர்களைக்கொண்ட ஒரு குழுவை உடனடியாக ஹெய்ட்டிக்கு அனுப்பிவைப்பதற்கு சிறீலங்கா தயாராகி வருகிறது. இது இற்றை வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரம் பெற்ற சர்வதேச படையொன்றுக்காக அனுப்பிவைக்கப்படும் மிகப்பெரும் எண்ணிக்கையிலான பணியாளர்களைக்கொண்ட ஒரு படைப்பிரிவாகும்.

2004 - 2007 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக அமைதிப்படையில் அங்கம் வகித்த 100 க்கும் மேற்பட்டவர்கள் மீண்டும் சிறீலங்காவுக்குத் திருப்பியனுப்பப்பட்டனர். இருப்பினும் தற்போதுவரை வெளிப்படையாக உள்ள தகவல்களின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு ஹெட்டியில் பதிவான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல்கள் தொடர்பில் சிறீலங்காவைச் சேர்ந்த எந்தவொரு இராணுவ வீரரும் குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவில்லை.

இலங்கை தொடர்பில் 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம், உள்நாட்டு ஆயுதமோதலின்போது பாதுகாப்புப்படையினரால் ஆண், பெண் இருபாலாருக்கும் எதிராகப் பாலியல் அத்துமீறல்கள் நிகழ்த்தப்பட்டமைக்கான நம்பகரமான ஆதாரங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது.

எனினும் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் இவ்வாண்டு வெளியிடப்பட்ட அறிக்கை மோதல்களின்போது இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கு அவசியமான நடைமுறைகள் சிறீலங்காவில் இல்லை என்பதையே காண்பிக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தாய்லாந்தில் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட அரிய வகைத் தங்க மோதிரம் கண்டுபிடிப்பு

08.07.2026

தாய்லாந்தின் பெட்சாபுரி மாகாணத்தில் நடைபெற்ற அகழாய்வில், 2,000 ஆண்டுகள் பழமையான 'தமிழி' எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட அரிய வகைத் தங்க முத்திரை மோதிரம் கண்டெடுக்கப் பட்டுள்ளது.



இது கிறிஸ்துவுக்குப் பின் இராஜேந்திர சோழனின் கடற்படைப் படையெடுப்புகளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் தமிழர்கள் மிக நெருங்கிய வணிக மற்றும் கலாச்சாரத் தொடர்பைக் கொண்டிருந்தனர் என்பதற்கான உறுதியான வரலாற்றுச் சான்றாக உருவெடுத்துள்ளது.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கிற்கு தென்மேற்கே சுமார் 130 கிலோமீற்றர் தொலைவில் உள்ள 'டான் யாய் தாங்' என்ற கிராமத்தில் உள்ள நெல் வயல் ஒன்றில், உள்ளூர் மக்கள் சில மாதங்களுக்கு முன்பு பழமையான வெண்கல முரசுகளின் துண்டுகளைக் கண்டெடுத்தனர்.

இதைத் தொடர்ந்து, தாய்லாந்து அரசின் தொல்லியல் துறையான 'Fine Arts Department' கடந்த பெப்ரவரி மாதம் முதல் அங்கு தீவிர அகழாய்வை மேற்கொண்டு வருகிறது.

இந்த அகழாய்வு தளம் வரலாற்றுக்கு முந்தைய இரும்புக்காலத்தைச் (Iron Age - சுமார் 1,500 முதல் 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்டது) சேர்ந்தது எனத் கணிக்கப்பட்டுள்ளது. இங்கு இது வரை 8 மனித எலும்புக்கூடுகள், தங்க-வெண்கல ஆபரணங்கள் மற்றும் மண்பாண்டங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

அங்குள்ள 4ஆம் எண் எலும்புக்கூட்டின் அருகில் இரண்டு தங்க மோதிரங்கள் கிடைத்தன. அதில் ஒன்று சாதாரண தங்க வளையம், மற்றொன்றில் பழங்கால இந்திய எழுத்து வடிவமான பிராமி (தமிழி) எழுத்துக்கள் தலைகீழாக செதுக்கப்பட்டிருந்தன.

இந்த எழுத்துக்களை சிங்கப்பூர் 'சார்' குழுவின் கல்வெட்டு ஆய்வாளர் ரஞ்சித் குமார் மற்றும் தாய்லாந்து தொல்லியலாளர்கள் ஆய்வு செய்ததில், அது 'புசரகிதாஸ' எனப் பொறிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறிந்துள்ளனர். இதற்கு "பூச நட்சத்திரத்தால் பாதுகாக்கப்பட்டவர்" என்று பொருளாகும்.

தமிழறிஞர்களின் கூற்றுப்படி, இந்த மோதிரத்தை மெழுகிலோ அல்லது களிமண்ணிலோ அச்சடிப்பதற்காகத் தலைகீழாகப் பொறிக்கப்பட்டுள்ள அந்தத் தமிழ்ப் பெயர் 'அளரி வைரதன்' என்பதைக் குறிக்கிறது. 'அளரி' என்பது வளமான மருத நிலத்தைக் குறிக்கும் தூய தமிழ்ச் சொல் என்று தொல்லியல் அறிஞர் சாந்தலிங்கம் தெரிவித்துள்ளார்.



தாய்லாந்து தொல்லியல் துறையின் முதற்கட்ட கணிக்கின்படி, இந்த மோதிரம் பண்டைய இந்தியாவின் வணிகர் குலத்தைச் சேர்ந்த ஒரு பெரும் வணிகருடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஏற்கனவே தாய்லாந்தின் கிராபி மற்றும் சூம்போன் ஆகிய கடலோரப் பகுதிகளில் இது போன்ற தமிழ் பிராமி எழுத்துக்கள் கொண்ட பானை ஓடுகளும், சீல்களும் கிடைத்துள்ள நிலையில், இந்த புதிய தங்க மோதிரக் கண்டுபிடிப்பு பண்டைய கடல் வழி வணிகப் பாதையில் தமிழர்களின் ஆதிக்கத்தை மீண்டும் உலகிற்கு நிரூபித்துள்ளது.

தற்போது கண்டெடுக்கப்பட்ட ஆபரணங்கள் அனைத்தும் தாய்லாந்து ராட்சபுரி மாகாணத்தில் உள்ள 'ப்ரா நகோன் கிரி' தேசிய அருங்காட்சியகத்திற்குப் பாதுகாப்பு மற்றும் கூடுதல் ஆய்வுகளுக்காக மாற்றப்பட்டுள்ளன.



**முக்கிய அறிவித்தல்**

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.com**




சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# மக்கள் சமூகம் விழிப்படையும் போது விடுதலை சாத்தியமாகிறது

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் மாபெரும் விடுதலைச் சக்தியாக எமது இயக்கம் வளர்ச்சி கண்டிருக்கிறது. ஆயுதப் போராட்ட களத்திலும் எமது விடுதலை வீரர்களே முன்னணிப்படையாக விளங்குகின்றனர். அரசியல் இலட்சியத்திலும் எமது இயக்கமே தெளிவுடனும் உறுதியுடனும் செயற்படுகிறது. வெகுசன அரங்கிலும் மிகப் பிரபல்யம் பெற்று மக்களின் நல்லாதரவு பெற்றிருப்பதும் எமது விடுதலை இயக்கமே. எமது இயக்கத்தின் இந்த மகத்தான வளர்ச்சிகண்டு பொறாமையும் எரிச்சலும் கொண்ட தீய சக்திகள் எமது இயக்கத்திற்கு மாசு கற்பிக்கும் வகையில் மிகவும் கீழ்த்தரமான, விசமத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. மக்களிடமிருந்து எம்மை அந்நியமாக்கும் நோக்குடன் எமக்கு எதிராக மிகவும் அபாண்டமான பொய்ப் பிரச்சாரத்தை இவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். மக்களின் விடுதலை என்ற இலட்சியத்திற்காக இவர்கள் இயங்கவில்லை. எமது விடுதலை இயக்கத்தை அழித்துவிடும் ஒரே நோக்கத்திற்காகவே இந்த சக்திகள் செயற்படுகின்றன. இவர்களின் சூத்திரதார நட வடிக்கைகளிலும், பொய்ப் பிரச்சாரங்களிலும் ஏமாந்து போகாது விழிப்புடன் இருக்க வேண்டுமென மக்களை நாம் கேட்டுக் கொள்கிறோம்.

ஒடுக்கப்படும் மக்கள் சமூகம் விழிப்படைந்து, புரட்சிகரப் பிரக்ஞைபெற்று, தேசியப் போராட்டத்தில் முழுமையாகப் பங்கு கொள்ளும் பொழுதே விடுதலை சாத்தியமாகிறது. மக்கள் மத்தியில் விரக்தியும் சோர்வும், குழப்பமும், நம்பிக்கையின்மையும் தோன்றும் பொழுது ஒரு தேசத்தின் போராட்ட சக்தி வலுவிழக்கின்றது. இந்த அரசியல் உண்மையை விடுதலைக்கு விரோதமான சக்திகள் நன்கறிவர். ஆகவேதான் மக்களின் நம்பிக்கையைத் தளர்த்தி, விடுதலைப் பற்றை மழுங்கடித்து, உறுதிப்பாட்டை உடைத்து, உண்மையான விடுதலை இயக்கத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்த இந்த சதிகார சக்திகள் செயற்படுகின்றன.

*(தேசியத் தலைவரின் "எனது மக்களின் விடுதலைக்காக"... கருத்துத் தொகுப்பு நூலிலிருந்து)*



Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும் பொன் நகை மிளிரும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6




TRANSITIONAL GOVERNMENT OF TAMILEELAM
தியாக தீபம்
லெப். கேணல் திலீபன்
அவர்களின் நினைவாக
நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின்
ஏற்பாட்டில்
11 வது ஆண்டு
கோடை கால
விளையாட்டு விழா
2026
இம் முறை:
02.08.2026
SPORTS CATEGORIES
FOOTBALL
VOLLEYBALL
SOFTBALL CRICKET
NETBALL
KIDS GAMES
CARROM
TRADITIONAL GAMES
SAVE THE DATE!
Let's compete, unite, and achieve!
07577996966 / 07950499567 / 07578086782 / 07771648257




K
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
பிறந்தநாள்
பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal
Non- Bridal
Saree Pleating &
Draping
Hair Flowers &
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu



# திருவிழா முடிந்த மூன்றாம் நாள்

ஆரவாரமும்
அரோகராச் சத்தமும்
கூவியழைத்த வியாபாரக் குரல்களும்
ஓய்ந்துபோக
வேலவன் வீதி வெறிச்சோடிக் கிடக்கிறது.
சனநரல் வடிந்த நல்லூர்த தெருக்களில்
மீண்டும் சுகம்வரத் தொடங்கிவிட்டது.
காற்றில் எழுவதும், குந்துவதுமாக
கடலை சுற்றிய கடதாசிகள் சில.
ஒருவரற்று உறைந்திருக்கும் வீதிகள்
எத்தனை அழகு.
இன்னும் அகற்றப்படாமல்
"இங்கே துப்புங்கள்" வாளிகள்.
மனிதவெட்கையற்ற வெளிகளே
ரம்யமானவை.
எவரும் வரமாட்டார்களா என்னிடம் என்பதாய்
தேர்முட்டிப்படிகள் பெருமூச்செறிகின்றன.
தினமும் வெளிவீதியுலாவிய அசதியில்
வள்ளி வலிதாளாமல் பள்ளியறையில்.
தந்தையைக் காணாதிருந்த தவிப்படங்க
தெய்வானை இந்திரலோகம் போய்விட்டாள்.
முரகன் இன்னும் விளையாட்டுப் பிள்ளைதான்
மயிலேறிப் போனான் காலையில்
கோயில் திரும்பவில்லை இன்னும்.
ஆலயக் கதவில் பூட்டு.
குருக்கள் வீட்டில் அன்ரான திருப்பப்படுகிறது
பொதிகைக்காக.
மேற்கு வீதியில் முத்துவிநாயகரும்
ஈசானமூலையில் மனோன்மணியம்மனும் தான் பாவம்
இனி எவர் வந்து தேடுவர் இவர்களை.
பாதாளக்கிணற்றில் சாகஜம் புரிந்தோர்
பலகைகளைக் கழற்றிக்கொண்டு
போயிருப்பார் வல்லிபுரக் கோயிலுக்கு.
பாம்புக்காரன் எங்கு போயிருப்பான்?
திருவிழா என்றாலே களியாட்டம் என்றாயிற்று
எல்லோரும் ஊமையாரகி
உண்டியலிலேயே கவனமாயிருக்கின்றனர்.
பிரசங்கக்காரர்களுக்கு பொன்னாடை கிடைத்திருக்கும்
தடவியபடியிருப்பார் சந்தோஷத்தில்.
பூனூல் மார்பில் துலங்க
ஒரு பிராமணன் கொத்துரொட்டி கொத்தினானே
அவன் புரட்சிக்காரன்.
தலைவணங்கலாம் அந்தத் தகுதிக்கு.
உடல் வருத்தி உழைத்த பணம் நிலைக்கும்.
பூஜை செய்வதிலும்  இது பெரிய தொழில்.
திலீபனின் நினைவுத்தூபியிருந்த இடத்தில்
சிதிலமாகிய கற்கள் மீதாயினும்
யாரேனும் பூக்கள் வைத்திருப்பார்களா?
இடித்தவனை விடுங்கள்
தூபித்துண்டங்கள் மீது எறியிருந்தவர்களை
என்ன செய்யலாம்?
இம்முறை நல்லபடியாக நடந்து முந்ததாம்
நல்லூர்த் திருவிழா.
கிழடொன்று கூறிச் சென்றதைக் கேட்க
சிரிப்பு வந்தது.

*புதுவை இரத்தினதுரை*
*ஆடி - ஆவணி 2002 வெளிச்சம்*




# கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான கரும்புலித் தாக்குதல்

## 24.07.2001

கட்டுநாயக்கா விமானப் படைத்தளத் தாக்குதல் ஜூலை 24, 2001 அன்று விடுதலைப்புலிகளின் 14 கரும்புலி மறவர்களால் நடத்தப்பட்ட இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான தாக்குதல் ஆகும்.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்திற்கு அருகிலேயே பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தாக்குதல் நடத்தப்படுவதற்கு ஒரு நாள் முன்னர் சிங்கள இசையைக் கேட்டுக் கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் விமான நிலையத்தின் அருகிலிருந்த பூங்காவில் இருந்தனர் என்றும் அவர்கள் மீது ஏற்பட்ட சந்தேகத்தினால் விமான நிலையத்திற்கு அருகில் வசித்தவர்கள் விமான நிலைய தகவல்கள் அளித்தும் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பின்னர் அங்கு அதிகாரிகள் வந்து பார்க்கும் பொழுது பூங்காவில் எவரும் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### தாக்குதலின் பின்னணி

இத்தாக்குதலினை வடிவமைத்தவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகியோர்.

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீதான கரும்புலித் தாக்குதலை தலைமையேற்று நடத்தியவர் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் தளபதி கேணல் சாள்ஸ் அவர்கள்.

2001 யூலை 23 திங்கட்கிழமை மாலை 8.30 14 கரும்புலிகள் உறுப்பினர்கள் ராஜா பெர்னாண்டோ விளையாட்டு மைதானத்தில் கூடினர்.

2001 யூலை 23 திங்கட்கிழமை மாலை 9:45 மணியிலிருந்து 11:15 அப்பகுதியில் மின்சார சேவை தடைப்பட்டது.

2001 யூலை 24 செவ்வாய்க்கிழமை அதிகாலை 3:30 மணியளவில் தாக்குதல் தொடங்கப்பட்டது.

2001 யூலை 24 செவ்வாய்க்கிழமை படைத்தளத்தில் இருந்த 21 படை விமானங்கள் மற்றும் பயணிகள் விமானங்கள் அழிக்கப்பட்டன.

2001 யூலை 24 செவ்வாய்க்கிழமை காலை



8.30 மணிவரை தாக்குதல் நீடிக்கப்பட்டது.

தாக்குதலினால் ஏற்படுத்தப்பட்ட இழப்புகள் இலங்கை அரசின் கூற்றுப்படி அழிக்கப்பட்ட விமானங்கள் 14 என்று கூறப்பட்டது.


விடுதலைப்புலிகளின் அதிகாரப் பூர்வப் பத்திரிக்கையான ஈழநாதத்தின் கூற்றுப்படி அழிக்கப்பட்ட விமானங்கள் எண்ணிக்கை 28 ஆக வெளியிடப்பட்டது.

லானது இலங்கையின் பொருளாதாரத்தில் வரலாறு காணாத மாற்றத்தை ஏற்படுத்தியது.

இத்தாக்குதலின் மூலம் சுமார் 375 மில்லியன் அமெரிக்க டாலர்களிற்கும் அதிகமான சொத்துக்கள் அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலில் சில மறைமுகக் கரும்புலிகள் வெற்றிக்கு வித்திட்டு காற்றில் கலந்தனர்.

எம் மக்கள் மீது குண்டு வீசிய குண்டுப் பறவை






கள் அவற்றின் இருப்பிடம் தேடிச்சென்று தீயில் கருக்கி தாய்மண்ணின் விடியலுக்காய் உறங்கும் தேசப்புயல்கள்.

தேசப்புயல்களுக்கு எம் சிரம் தாழ்ந்த வீர வணக்கம்.

இவ் காணொளியில் கட்டுநாயக்க சண்டைக் களமும் தமிழ் மக்கள் மீதான குண்டுவீச்சு அவலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலை புலிகளின் பயணத்தில், வெற்றி மகுடம் சூட்டிய நாள். ஆம். கட்டுநாயகா வான்படை தளத்தை தகர்த்த நாள்!

1983 ஆம் ஆண்டு யூலை மாதம், தமிழர்களின் வாழ்வில் மறக்க முடியாத, இன்னல்கள், கொடிய துயரங்கள் நிறைந்த மாதம்.

கொடுங்கோலன் சிங்களவனால்,ஒரு மிகப் பெரிய யுத்தத்தை, தமிழர்களின் வாழ்வில் திணித்த நாள்.

ஆயிரக்கணக்கான தமிழர்களை, சிங்களன் கொன்றொழித்த நாள். இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள், வீடுகளற்ற அகதிகளாக நடுத்தெருவில் நின்ற நாள். பல்லாயிரகணக்கான

### ஈழநாதத்தின் வெளியீடு ( 2001 நாளிதழ் )

*முற்றிலுமாக அழிக்கப்பட்டவை*

இரண்டு எ (A) - 340 - 300 பயணிகள் விமானங்கள், ஒரு எ (A) - 330 -200 பயணிகள் விமானம், நான்கு கிபிர் போர் விமானங்கள், மூன்று கெ (K)-8 பயிற்சி விமானங்கள், இரண்டு எம்.ஜ.ஜி (MIG)- 27 ஜெட் போர் விமானங்கள், இரண்டு பெல் (Bell) 412 உலங்கு வானூர்தி, இரண்டு வி.வி.ஐ.பி (VVIP) 412 உலங்கு வானூர்தி, இரண்டு எம்.ஜ (MI) -17 உலங்கு வானூர்தி, மூன்று K-8

*சேதப்படுத்தப்பட்டவை*

இரண்டு - (A)-320 பயணிகள் விமானங்கள், ஒரு - (A)-340 பயணிகள் விமானம், ஒரு அண்டொனோவ் (Antonov) போக்குவரத்து விமானம், ஒரு எம்.ஜ (MI) -24 உலங்கு வானூர்தி, ஒரு பெல் (Bell) 412 உலங்கு வானூர்தி, நான்கு கிபிர் போர் விமானங்கள்.

விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட இத்தாக்குத





தமிழர்களின் வீடுகளையும், உடமைகளை யும், அவர்களின் வியாபார ஸ்தலங்களையும் அடித்து நொறுக்கிய நாள்.

தமிழர்களுக்கு பெருமளவில் பொருட்சேதமும், உயிர் சேதமும் நிகழ்ந்த இந்த மாதத்தை தான், கறுப்பு யூலை என்று நினைவு படுத்தி, புலம் பெயர் மக்கள் வாழும்,அனைத்து தேசங் களிலும் ஆண்டு தோறும் அஞ்சலி செலுத் துவது வழக்கம்.

புலம் பெயர் தமிழன் ஒவ்வொருவனும்,யூலை மாதத்தின் கடைசி நாட்களை தன் வாழ்நாளில் மறக்க இயலாத அளவுக்கு கொடுமையான சம்பவங்கள் நிகழ்ந்த காலம் இது.

பதினான்கு கரும்புலிகள் யூலை மாதம் 24 ஆம் தேதி அதிகாலை மூன்றரை மணிக்கு, கட்டுநாயகா வான்படை தளத்துக்குள் நுழைந் தார்கள்.

இருபத்தாறு விமானங்களை தகர்த்தார்கள். அதில் பண்டார நாயகா விமான நிலையத்தில் நின்ற, நான்கு பயணிகள் இல்லாத விமானம் உட்பட. அதிகாலை மூன்றரை மணிக்கு ஆரம்பித்த யுத்தம்,காலை எட்டரை மணிக்கு முடிவுக்கு வந்தது.

வெறும் ஐந்து மணி நேரத்தில்,எதிரியின் இருபத்தாறு போர் விமானங்களை தகர்த்த எம் கரும்புலிகள், வீரச்சாவைத் தழுவினார்கள். இந்த யுத்தத்தை திட்டமிட்டு, முன்னின்று மாவீரன் தளபதி சார்லஸ்.

ஏன் செய்யவில்லை? காரணம் தலைமை அப்படி. நம் எதிரி சிங்கள அரசும், இராணு வமும் தானே ஒழிய, சாதாரண சிங்கள மக்கள் அல்ல. அவர்கள் நம் இலக்கு அல்ல என்று பல முறை அழுத்தம் திருத்தமாக பதிவு செய்தவன் எங்கள் தலைவன் பிரபகாரன்.

அந்த அளவுக்கு கட்டுப்பாடுகளோடு, படை நடத்தியன் எங்கள் தலைவன் பிராபாகரன். முப்பதாண்டு கால ஆயுத போரில், விடுதலைப் புலிகள் ஒரு சிங்களத்தியை, கையைப் பிடித்து இழுத்தார்கள், பாலியல் ரீதியாக துன்புறுத் தினார்கள் என்று எவனாவது குற்றம் சொல்ல முடியுமா?

ஏன் என் எதிரி சிங்களன் அப்படி ஒரு குற்ற சாட்டை சொல்ல முடியுமா? முடியாது. காரணம் அந்த அளவுக்கு ஒழுக்கமான





தலைமை, தலைவனின் வழியில் கட்டு கோப்பான போராளிகள்.

எங்கள் போராட்டங்களில் வேண்டுமானால், பின்னடைவு ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் எங்கள் போராட்ட வழியில் நேர்மையும், நியாயமும் இருந்தது. எதிரியை தாக்குவதில் கூட ஒரு கட்டுப்பாடு இருந்தது.

இனி சிங்களனோடு பேசுவதில் எந்த பிர யோஜனமும் கிடையாது. சிங்களனுக்கு புரிந்த மொழி, திருப்பி அடிப்பது தான். பொருளா தாரத்தில் அவனை சிதைப்பது தான் என்று முடிவு கட்டிய,தமிழீழ விடுதலைப் புலிகள், கறுப்பு யூலைக்கு பதிலடியாக, ஒரு மாபெரும் யுத்தத்தை,

இழப்பை சிங்களனுக்கு தரவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இருந்தார்கள்.

ஆம் அந்த தாக்குதலுக்காக 2001 ஆண்டு யூலை 24 ஆம் நாள் என்று,தேதி குறிக்கப் பட்டது. கட்டுநாயகா வான்படை தளத்தை தகர்ப்பது என்று முடிவெடுத்தார்கள் விடு தலைப்புலிகள்.

இந்த தாக்குதலால் சிங்களருக்கு ஏற்பட்ட இழப்போ முன்னூற்று ஐம்பது மில்லியன் அமெரிக்க டாலர்கள். அது மட்டுமா, பாதுகாப் பில்லை என்று கருதி, சிங்களனின் சுற்றுலா வணிகம் அடியோடு சிதைந்து போனது. விமான நிலையம் மூடப்பட்டது. கடும் பொருளாதார வீழ்ச்சியை சிங்களவன் சந்தித் தான்.

துன்பத்தை தந்தவனுக்கே, அந்த துன்பத்தை திருப்பி கொடுத்தார்கள் எம் மாவீர கண் மணிகள்.

கொழும்பு விமான படை





தளத்தில் புகுந்து இருபத்தாறு விமானங்களை தாக்க தெரிந்த விடுதலை புலிகளுக்கு, சிங்களனில் ஒரு ஆயிரம் பேரை கொல்வது என்பது கடினமான விடயமா?

வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த விடுதலைப் புலிகள், எதிரியை அவன் கோட்டைக்குள் ளேயே புகுந்து தாக்கி, தங்கள் வீரத்தை நிலைநாட்ட வேண்டும் என்று முடிவெடுத்து, இலங்கையின் இதயமான கொழும்புக்கு உள் ளேயே ஊடுருவினார்கள்.

சாவை துச்சமென மதித்து தான், கரும் புலிகளாக களத்தில் நிற்கிறார்கள். அப்படி துணிந்த பிறகு சிங்களனில் ஒரு ஆயிரம் பேரை கொன்றிருக்க முடியாதா?

உலக விடுதலை போராட்ட வீரர்களில், விடுதலைப் புலிகளை போல வீரம் செறிந்த போராளிகளும் இல்லை. பிரபாகரனை போன்ற மாவீரன் எவனும் இல்லை என்று மார் தட்டி சொல்வோம்.

கட்டுநாயக்கா வான்படை தாக்குதலில், வீரச் சாவை தழுவிய எம் கரும்புலி வீர மறவர்களுக்கும், கறுப்பு யூலையில், சிங்களவனால் கொடூரமாக கொன்றொழிக்கப்பட்ட, எம் உடன் பிறப்புகள் அத்தனை பேருக்கும் எங்கள் வணக்கங்கள்!





















www.sangathamil.com




## தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# யூலை 1983 ஆம் ஆண்டு இனவழிப்பு




1983ம் ஆண்டு மே மாதம் பதினெட்டாம் திகதி வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது. யாழ்ப்பாணம் மாநகரசபை, வல்வெட்டித் துறை நகர சபை, பருத்தித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை ஆகிய நான்கு உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் போட்டியிட்டார்கள். இந்த உள்ளூராட்சிச் சபைத் தோர்தலைப் புறக்கணிக்கும் படி தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டனர். அவர்களுடைய புறக்கணிப்பு மிகத்தீவிரமாக இடம் பெற்றது. மறுபக்கத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய தலைவர்களும் தீவிரமாகத் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார்கள். தேர்தற் புறக்கணிப்பு 98விகிதம் வெற்றி பெற்றது. இதைத்தெடர்ந்து அப்போதைய ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுடைய அரசாங்கம் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்ட தலைமைத்துவ மாற்றத்தால் அதிர்ச்சியடைந்தது. தமிழ் பேசும் மக்கள் நாடாளுமன்ற மிதவாத அரசியற் தலைமையை நிராகரித்து தமிழ் தேசிய வாதத்தை முழுமையாக நேசிக்கின்ற ஓர் தலைமைத்துவத்தை தெரிந்தெடுத்தமை சிங்கள ஆட்சியாளர்களுக்கு அதிர்ச்சி வைத்தியமாகவே இருந்தது. இதனால் ஜே.ஆர். ஜெயவர்த்தனா கறுப்புக் குடைகளைக் கண்டு மிரளும் கட்டாக்காலி மாடுகளைப் போல மிரண்டார். தனது படைகளைக் கட்டவிழ்த்துவிட அவர்கள் கந்தர்மடம் பகுதிகளில் வீடுகளை எரித்தனர். பொதுமக்கள் தாக்கபட்டார்கள் அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. யாழ்ப்பாணத்தில் ஓர் பதட்டமான சூழ்நிலை உருவாகியது. இந்தச் சம்பவங்கள் விரிவுபெற்று வவுனியாவிற்கும் பரவியது. அங்கும் கடைகள் எரிக்கப்பட்டன. இது பின்னர் திருகோணமலைக்கும் பரவியது. 1983 யூன் மாதம் முழுவதும் ஒவ்வொரு நாளும் திருமலையில் எங்கோ ஒரு தமிழ்க்கிராமத்தில் தமிழ் மகன் சிங்களவரால் வெட்டிப்படுகொலை செய்யப்படுகின்ற நிகழ்ச்சி மிகவும் சர்வசாதாரணமாக நிகழ்ந்துகொண்டிருந்தது.

இந்நிலையில் திருகோணமலைப் படுகொலைக்கு எதிராக 1983ஆம் ஆண்டு யூலை மாதம் 01ஆம் திகதி தமிழீழ விடுதலை அணி, யாழப்பாணப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட ஆறு அமைப்புக்களால் கடையடைப்பு முழு அளவில் நடத்தப்பட்டன. இந்தக் கடையடைப்பு நடைபெற்ற தினத்தன்று மாலை இரண்டு மணியளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த யாழ்தேவி தொடருந்து கோண்டாவிலில் வைத்து சில தீவிரப் போக்குடைய இளைஞர்களால் தீ மூட்டி எரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்தக் கதவடைப்பை ஒழுங்குபடுத்திய வைத்திய கலாநிதி எஸ்.ஏ.தர்மலிங்கம் அவர்களும் சுதந்திரன் நாளேட்டின் ஆசிரியர் கோவை மகேசன் அவர்களும் யாழ்ப்பாணம் காவற்றுறையினராற் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள் இருவரும் வெலிக்கடைச்சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டார்கள்.

இதனால் யாழ்ப்பாணத்தில் பதட்டம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சுதந்திரன் தமிழ் நாளேடும் மற்றும் சற்றடே றிவியூ ஆங்கில நாளேடும் இலங்கை அரசினால் தடைசெய்யப்பட்டன. அந்த அச்சகங்கள் சீல் வைத்துப் பூட்டப்பட்டன. அதே ஆண்டு யூலை மாதம் இருபத்து மூன்றாம் திகதி திருநெல்வேலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றின்போது பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதை ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடைய அரசாங்கம் இலத்திரனியல் ஊடகங்களுக்கு ஊடாக தீவிரமாகப் பரப்புரை செய்தது. தமிழ்ப் புலிகள் பதின்மூன்று சிங்கள பௌத்த இராணுவத்தினரை யாழ்ப்பாணத்தில் கொன்றுவிட்டார்கள் என ஜே.ஆர் இனவாதப் பரப்புரையினைத் தூண்டிவிட்டார். இறந்த இராணுவத்தினரது உடல்களை யாழ்ப்பாணத் திலேயே அடக்கம் செய்துவிட இராணுவத்தினர் விரும்பியபோதும் அப்போதைய வர்த்தக அமைச்சர் அத்துலத் முதலியும் ஜே.ஆரும் அந்தப் பதின்மூன்று இராணுவத் தினரதும் உடல்களை கொழும்புக்கு எடுத்து வந்து சிங்கள மக்கள் மத்தியில் காட்சிப் படுத்திய பின்னர் பொறளை கனத்தை மயானத்தில் அடக்கம் செய்ய விரும்பினார்கள். இறந்த பதின்மூன்று இராணுவ சிப்பாய்களையும் கனத்தையில் அடக்கம் செய்யப்படும் என்று ஜே.ஆர் அரசு மிகப்பெரும் அளவில் விளம்பரப்படுத்தியதால் கனத்தையில் பல ஆயிரக்கணக்கான சிங்கள இனவாதிகள் குழுமினார்கள்.

இருபத்துநான்காம் திகதி மாலையே பொறளையில் இருந்த சைவ உணவகம் ஒன்று தாக்கப்பட்டது. அன்று இரவு இக்கலவரம் மருதானை, கொட்டாஞ்சேனை, வத்தளை, நீர்கொழும்பு எனப் பரவியது. மறுநாள் யூலை இருபத்தைந்தாம் திகதி இச் சம்பவம் மேலும் விசாலிப்படைந்தது. கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, கொம்பனித்தெரு, வெள்ளவத்தை, தெகிவளை, மொறட்டுவ, பாணந்துறை என கொழும்பின் தமிழர்கள் வாழும் எல்லாப் பகுதிகளுக்கும் காட்டுத்தீ போல் பரவியது. இதனால் இரண்டு நாட்களில் கொழும்பில் வாழ்ந்த பல இலட்சக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இதனால் பம்பலப்பிட்டி சென்.பீற்றர்ஸ் கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி எனப் பல பாடசாலைகளில் இலட்சக் கணக்கான தமிழர்களுக்காக அகதி முகாம்கள் திறக்கப்பட்டன. வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள். இக்கால கட்டத்தில் வெலிக்கடையில் ரெலோ இயக்கத்தின் மிக முக்கியமான தலைவர்களான குட்டிமணி, தங்கத்துரை, தேவன், ஜெகன் மற்றும் வவுனியா காந்திய இயக்கத்தைச் சேர்ந்த வைத்தியர் இராஜசுந்தரம் போன்றவர்களும் இங்கு சிறைவைக்கப்பட்டிருந்தனர். குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கின்போது ஆற்றிய உரை நாளேடுகளில் பிரசுரிக்கப்பட்டபோது, அது ஜனாதிபதி ஜே.ஆர், அத்துலத்முதலி, காமினி திஸாநாயக்கா, சிறில் மத்தியூ போன்ற அமைச்சர்களுக்குப் பெரும் ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் கிளறியது.

இதனால் சிறைச்சாலையில் வைத்து இவர்களது உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் திட்டமும் போடப்பட்டது. இதற்கென கொலை, கொள்ளை போன்ற குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட கொலைகாரப் படை ஒன்று தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. இந்தக் கொலைகாரப் படைக்குத் தாய்லாந்து விமானத்தைக் கடத்திச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சேபால ஏக்கநாயக்கா தலைமை தாங்கினார். யூலை மாதம் இருபத்தைந்தாம் திகதி காலை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு காமினி திசநாயக்காவும், அத்துலத்முதலியும் சென்று தமிழ்ச் சிறைக்கைதிகளைக் கொல்லுமாறு பச்சைக் கொடி காட்டிவிட்டுச் சென்றார்கள்.

அன்று மாலையே குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட முப்பத்தைந்து தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டனர். அவர்களைக் காப்பாற்றவோ, கொலை வெறியர்களான சிங்களக் கைதிகளைத் தடுக்கவோ சிறைச்சாலை நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. இதன் விளைவாக யூலை மாதம் இருபத்தேழாம் திகதி மேலும் பதினேழு சிறைக் கைதிகள் கொல்லப்பட்டனர். மொத்தமாக இரு தினங்களிலும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த ஐம்பத்திரண்டு சிறைக்கைதிகள் அநியாய மாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

இதற்கு முன்பாக யூலை மாதம் இருபத்து நான்காம் திகதி திருநெல்வேலி, கந்தர்மடம் போன்ற இடங்களில் ஐம்பத்தொரு அப்பாவிப்



பொதுமக்கள் சிங்கள இராணுவத்தாற் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களில் கல்விமான் கலா.பரமேஸ்வரன், அவரது மாமனார் சரவணமுத்து ஆகியோரும் உள்ளடங்குவர். இதைவிட நாடுபூராகவும் வெடித்த இச் சம்பவத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் வெட்டியும், சுட்டும் படுகொலை செய்யப்பட்டார்கள். பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் காடையார்களுடைய தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்தார்கள். தமிழ் மக்களுக்குச் சொந்தமான வீடுகள், கடைகள், கட்டடங்கள், வணிக நிலையங்கள் திரைப்பட அரங்குகள் தரைமட்டமாக்கப்பட்டன. தமிழர்



சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

கொழும்பில் பிரபல தொழிலதிபர் வை.ஏ.எஸ். ஞானம், மகாராஜா நிறுவனம், கே.குணரட்ணம் எனப் பல நிறுவனங்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகின. ரேப்பியா என்ற நிறுவனம் இச் சம்பவத்தில் சுமார் பத்தாயிரம்



கோடி ரூபாவிற்கு மேல் தமிழர்களுடைய சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டதென மதிப்பீடு செய்தது. இந்தச் சம்பவத்தின் போது ஜே.ஆர் ஜெயவர்த்தனா எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1983ஆம் ஆண்டு யூலை மாதம் இருபத்தேழாம் திகதி ரூபவாகினி தொலைக்காட்சியில் தோன்றிய ஜே.ஆர் பாதிக்கபட்ட தமிழ் மக்களுக்கு எந்த வித அனுதாபமும் தெரிவிக்காமல் கடந்த சில நாட்களாக நடைபெற்ற அசம்பாவிதங்கள் சிங்கள மக்களது இயல்பான மன உணர்வுகள் எனக் கருத்து வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து யூலை மாதம் இருபத்தொன்பதாம் திகதி ஒரு வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகள் கொழும்புக்கு வந்துவிட்டார்கள் என்ற வதந்தி பரப்பப்பட்டது. அன்றைய தினம் மேலும் பல தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். கல்விமான் அருமைநாயகம் என்பவர் நுகேகொடையில் தனது வீட்டைப் பார்க்கப் போனபோது வெட்டிக்கொல்லப்பட்டார். கொழும்புப் புறக்கோட்டை காஸ்வேக்ஸ் ஸ்தாபனத்தில் வேலை செய்த தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புத் தேடி அந்நிறுவனத்தின் கூரைமீது இருந்தபோது அவ்வழியாக வந்த விமானப்படையினால் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள்.

இச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைக் காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்காத ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுடைய அரசு 1983 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நான்காம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர் போராட்டத்தை நசுக்குவதற்காக 1978ஆம்











ஆண்டின் அரசியல் யாப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இதன்படி தனிநாடு கேட்டுப் போராடுதல், அதற்கு ஊக்கமளித்தல், உதவி செய்தல் என்பன போன்ற விடயங்கள் பாரதூரமான தண்டனைக்குரிய குற்றங்களாக அறிவிக்கப்பட்டன.




நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# யாழ் திருநெல்வேலி படுகொலை 24, 25 யூலை 1983

திருநெல்வேலி யாழ் மாவட்டத்தின் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவினுள் உள்ளடங்கும் பகுதியாகும். யாழ் நகரப் பகுதியிலிருந்து பலாலி வீதியூடாக வடக்குப்புறமாக ஏறக்குறைய மூன்று மைல் தூரத்தில் உள்ளது. இப்பிரதேசத்தில் யாழ் பல்கலைக்கழகம், யாழ் உயர்தொழிநுட்பக் கல்லூரி போன்ற உயர் கல்வி நிறுவனங்களும் அரச அலுவலகங்களும் அமைந்துள்ளன. 1983ஆம் ஆண்டு யூலை மாதம் 23 திகதி இரவு 11:45 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினரின் வாகனம் பலாலி வீதியில், பரமேசுவராச் சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தபாற்பெட்டிச் திருநெல்வேலிப் பகுதி, பலாலி வீதி, சிவன் அம்மன் கிராமங்களைச் சேர்ந்த மக்களின் வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் இப்பகுதியைச் சேர்ந்த ஐம்பத்தொன்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர். பல வீடுகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இராமசாமி நாகராஜா - தொழிலாளி
02. நாகலிங்கம் சிவலிங்கம், - வேலை மேற்பார்வையாளர்
03. கனகரத்தினம் கிருஸ்ணானந்தம் - வியாபாரம்
04. கந்தையா சண்முகநாதன் -
05. பாலச்சந்திரன் அஜித் - சிறுவன்
06. பிலிப் அலோசியஸ் யோகராசா சந்திரசேகரம - வியாபாரம்
07. தங்கராஜா கஜேந்திரன் - மாணவன்
08. பொன்னையா பரராஜசிங்கம் - ஆசிரியர்
09. செல்வகாந்தினி - சிறுமி
10. சுப்பிரமணியம் பரமேஸ்வரன் - பிராந்திய முகாமையாளர்
11. சின்னத்தம்பி சரவணமுத்து - இளைப்பாறிய ஆசிரியர்
12. சின்னையா சதானந்தன் - கடிகாரம் திருத்துநர்
13. சீவரத்தினம் தவேந்திரன் - மாணவன
14. சண்முகநாதன் சத்தியதேவன் - விற்பனையாளர்



நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பெருவெளி அகதிமுகாம் படுகொலை 15 யூலை 1986



திருகோணமலை கொட்டியாபுரத்திலிருந்து மட்டு நகர் நெடுஞ்சாலையில் ஏழு கி.மீ தொலைவில் மல்லிகைத்தீவுச் சந்தியுள்ளது சந்தியின் வலப்புறமாக ஒரு கி.மீ தூரத்தில் பெருவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை உள்ளது. இக்கிராமம் மல்லிகைத்தீவு கிராம சபை எல்லைக்குட்பட்ட தமிழ் மக்கள் அதிகளவு வாழும் பிரதேசமாகும்.

1985ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இந்தப் பாடசாலை தமிழ் மக்களின் அகதி முகாமாக இயங்கிவந்தது. கிராமசபை இயங்கி வந்த காலங்களில் மல்லிகைத்தீவு கிராமசபை பெரும்பான்மையான தமிழ்க் கிராமங்களையும், சில சிங்களக் கிராமங்களையும் உள்ளடக்கியிருந்தது. அவற்றில் தெகிவத்தை, நீலாப்பொல போன்ற சிங்களக் கிராமங்களில் இருந்த மக்களில் பலர் ஊர்காவற்படைக்கு இணைக்கப்பட்டு பணிக்கமர்த்தப்பட்டனர். இவர்கள் சிறீலங்கா இராணுவத்தினருடன் இணைந்து தமிழ் மக்கள் அழிப்பில் ஈடுபட்டனர். ஊர்காவற்படையில் அந்தந்தக் கிராமத்தவர்கள் பணியாற்றினார்கள். இவர்கள் ஆரம்பகாலங்களிலிருந்தே தமிழ் மக்களோடு ஒன்றாகப் பழகியிருந்தமையால் கிராமத்தவர்கள் சம்பந்தமாக பூரணமாக அறிந்திருந்தனர்.

15.07.1986 அன்று தெகிவத்தை, நீலாப்பொல கிராமத்திலிருந்த ஊர்காவற்படையினருடன் இராணுவத்தினர், பொலீசாரும் இணைந்து நள்ளிரவுவேளை பெருவெளி அகதிகள் முகாமைச் சுற்றியிருந்த பகுதிகளில் மறைந்திருந்தனர். முகாமைச் சூழவிருந்த பெருவெளி மணல்வெளிக் குடியிருப்புகள், இரணுவத்தினரால் முற்றாக அழிக்கப்பட்டிருந்ததால், இரவு நேரங்களில் மக்கள் நடமாடுவதில்லை, இதனால் இரவு வந்த இராணுவத்தினரின் நடமாட்டம் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. பொழுது புலர்ந்து வந்து கொண்டிருந்த வேளையில் முகாமிற்குள் புகுந்த இராணுவத்தினர் சுடத்தொடங்கினர்கள். அத்தோடு தத்தமது இருப்பிடங்களுக்குக் காலையில் திரும்பிய மக்கள் மீதும் ஒளிந்திருந்த இராணுவத்தினரும் காவற்றுறையினரும் சுட்டார்கள். திகைப்படைந்த மக்கள் நாலாதிசையும் பாய்ந்து ஓடத்தொடங்கினர். பயந்தேடிய மக்களை மறைந்து நின்ற படையினர் சுட்டுக்கொன்றனர். அவ்வாறிருந்தும் பெருமளவு மக்கள் ஓடித் தப்பிக்கொண்டனர்.

குழந்தைகள், பெண்கள், மாணவர்கள் உட்பட மொத்தமாக நாற்பத்தெட்டுப் பேர் உயிரிழந்தார்கள். இருபது பேருக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். பல பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டனர்.

இந்தப் படுகொலைச் சம்பவம் நண்பகல் ஒரு மணிவரை நீடித்தது. அதன் பிறகு சம்பவ இடத்திற்கு வந்த நலன்விரும்பிகளும் தொண்டர் நிறுவனங்களும் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அப்போதிருந்த மூதூர் பிரசைகள் குழுத்தலைவர் அமரர் மு.கனகசபையும் வேறு சிலரும் அவ்விடத்திற்கு விஜயம் செய்து படுகொலை செய்யப்பட்டவர்களின் உடல்களை மூதூர் அரசினர் வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு சென்று மறுநாள் பெருவெளி சேமக்காலையில் அடக்கம் செய்தனர்.

முருகப்பன் தங்கராஜா (பெருவெளி வட்டவிதானையார்) இது பற்றி கூறுகையில்,

“1986ஆம் ஆண்டு பெருவெளியில் அகதி முகாம் ஒன்று இருந்தது. இராணுவத்திற்குப் பயந்த மக்கள் அனைவரும் அங்கு தங்கியிருந்தார்கள். 15.07.1986 அன்றிரவு விடியற் காலை 3.00 மணியளவில் அந்த இடத்தை இரவோடு இரவாக வந்த இராணுவத்தினர் சுற்றிவளைத்தார்கள். விடிந்தவுடன் கண்ணிற்பட்ட அனைவரையும் சுட்டுக்கொன்று பல அட்டகாசங்களைச் செய்தனர். நன்கு விடிந்தவுடன் முகாம்களுக்குள் புகுந்து குடிசைகள் அனைத்திற்கும் நெருப்பு வைத்துவிட்டு அந்த வீடுகள் பத்தி எரிந்துகொண்டிருக்கும் பொழுது பொது மக்களைப் பிடித்துச் சுட்ட பின்னர் காலிலும் தலையிலும் பிடித்து எரியும் நெருப்புக்கு மேல் தூக்கி வீசினர்.

உயிரோடு இருந்தவர்களைக் கூட எரியும் நெருப்பிற்குள் தூக்கிப் போட்டார்கள். இப்படியாகக் காணும் இடமெல்லாம் எரிந்து கொண்டிருந்தது. அந்த நேரம் வெடிச்சத்தத்திற்குப் பயந்து இரண்டு மூன்று குடும்பங்கள் சேர்ந்து சில வீடுகளிற் கூடியிருந்தார்கள். அப்படியிருந்தவர்களில் ஆண்களை எல்லாம் பிடித்து அங்கிருந்தோர்க்கு முன்னாலேயே வைத்து சுட்டும் வெட்டியும் கிணற்றுக்குள் போட்டார்கள். அப்படிச் சுடப்பட்டு இறந்தவர்களின் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட சடலங்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டுபோய் முகங்களிற்கு அசிட் ஊற்றி யாரென அடையாளங் காண முடியாதளவிற்கு அவர்களுடைய முகாம்களுக்குக் கொண்டுபோய் வைத்திருந்து விட்டு மூன்று நாட்களிற்குப் பின்னர் அச்சடலங்களை உறவினர்களுக்குக் கொடுத்திருந்தார்கள். அந்தவேளை இங்கு சுட்டுக் கொல்லப்பட்டவர்களது சடலங்களைக் கிணறுகள், மதகுகள் போன்ற இடங்களிளெல்லாம் ஆங்காங்கே இராணுவத்தினர் போட்டிருந்தார்கள். எத்தனை மக்கள் இறந்தார்கள் என்பதுகூட சரிவரத் தெரியவில்லை. அந்தளவிற்கு காணுமிடமெல்லாம் சடலமாக இருந்தது.

இவற்றுள் வேறு ஊர்களிலிருந்து தொழிலிற்காக வந்தவர்களும் இறந்திருந்தர்கள். வழமையாக இராணுவத்தினர் வரும்போது வரும் திசையிலிருந்தே வெடிச்சத்தம் கேட்கும். அந்த நேரம் நாங்கள் எல்லோரும் ஓடிச்சென்று காடுகளுக்குள் ஒளிந்து கொள்வோம். ஆனால் அன்றைய தினம் வழமைக்கு மாறாக நடந்ததால்தான் பல மக்கள் அகப்பட்டுக்கொண்டார்கள். இராணுவத்தினர் சென்ற பின்னர் ஊருக்குள் சென்று பார்த்த போது யார் யாரைச் சுட்டிருக்கிறார்கள், எந்தெந்தக் கிணற்றில் சடலம் இருந்தது எனத் தெரிந்தது. அகதி முகாமில் இருந்தவர்களைத் தான் நிறையக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். சுடப்பட்டவர்களைத் தவிர உயிருடன் பிடித்துச் சென்றவர்களை பின்னர் முழுமையாக மனிதர்கள் மாதிரி விடவில்லை. கைகளைக் கால்களை வெட்டி நடமாட முடியாதளவிற்கு கொடுமைப் படுத்தி விட்டிருந்தார்கள்.

அந்தநேரத்திலும் ஊருக்குள் நிற்கப் பயம். திரும்பவும் இராணுவம் வரலாம் என்ற அச்சம் இருந்தது. தனித் தனிக் கிடங்குகள் வெட்டி சடலங்களைப் போட முடியவில்லை. சடலங்கள் கூட பார்க்கமுடியாதளவு அழுகிய நிலையில் இருந்ததால் பெரிய கிடங்கு ஒன்று வெட்டி அத்தனை சடலங்களையும் ஒருமித்துப் போட்டு மூடினோம். இந்த நிலையிலும் கிராமத்தை விட்டு யாரும் வெளியேற முடியாத நிலையிருந்தது. இராணுவத்தினர் கண்டால் உடனே சுட்டுவிடுவார்கள் என்ற பயம் இருந்தது. நாங்கள் யாராவது வீட்டை விட்டு வெளிக்கிட்டால் திரும்ப வந்தால்தான் வந்திருக்கிறார்கள் என்று தெரியும். இல்லாதுபோனால் எந்த முகாமில் பிடித்து வைத்திருக்கிறார்கள், எங்காவது வைத்து சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்களா என்று எதுவும் தெரியாத நிலை இருந்தது.

இந்த முகாமிற்கு நடந்த கொடுமையைப் போல் நான் எங்கும் பார்த்ததில்லை. இதை நேரடியாகப் பார்த்தவர்களிற் சிலர் பைத்தியமாகக் கூட இருக்கிறார்கள் நாற்பத்தெட்டுப் பேர் வரை கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை விட உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக இருக்கிறார்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மூதூர் பெரியவெளி படுகொலை 16.07.1986

திருகோணமலை கொட்டியாபுரத்திலிருந்து மட்டு நகர் நெடுஞ் சாலையில் ஏழு கி.மீ தொலைவில் மல்லிகைத்தீவுச் சந்தி யுள்ளது சந்தியின் வலப்புறமாக ஒரு கி.மீ தூரத்தில் பெருவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை உள்ளது. இக்கிராமம் மல்லிகைத்தீவு கிராம சபை எல்லைக்குட்பட்ட தமிழ் மக்கள் அதிகளவு வாழும் பிரதேசமாகும்.




1985ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இந்தப் பாடசாலை தமிழ் மக்களின் அகதி முகாமாக இயங்கிவந்தது. கிராமசபை இயங்கி வந்த காலங்களில் மல்லிகைத்தீவு கிராமசபை பெரும்பான்மை யான தமிழ்க் கிராமங்களையும், சில சிங்களக் கிராமங்களை யும் உள்ளடக்கியிருந்தது. அவற்றில் தெகிவத்தை, நீலாப்பொல போன்ற சிங்களக் கிராமங்களில் இருந்த மக்களில் பலர் ஊர் காவற்படைக்கு இணைக்கப்பட்டு பணிக்கமர்த்தப்பட்டனர். இவர்கள் சிறீலங்கா இராணுவத்தினருடன் இணைந்து தமிழ் மக்கள் அழிப்பில் ஈடுபட்டனர். ஊர்காவற் படையில் அந்தந்தக் கிராமத்தவர்கள் பணியாற்றினார்கள். இவர்கள் ஆரம்பகாலங் களிலிருந்தே தமிழ் மக்களோடு ஒன்றாகப் பழகியிருந்தமை யால் கிராமத்தவர்கள் சம்பந்தமாக பூரணமாக அறிந்திருந் தனர்.

16.07.1986 அன்று தெகிவத்தை, நீலாப்பொல கிராமத்தி லிருந்த ஊர்காவற்படையினருடன் இராணுவத்தினர், பொலீ சாரும் இணைந்து நள்ளிரவுவேளை பெருவெளி அகதிகள் முகாமைச் சுற்றியிருந்த பகுதிகளில் மறைந்திருந்தனர். முகா மைச் சூழவிருந்த பெருவெளி மணல்வெளிக் குடியிருப்புகள், இராணுவத்தினரால் முற்றாக அழிக்கப்பட்டிருந்ததால், இரவு நேரங்களில் மக்கள் நடமாடுவதில்லை, இதனால் இரவு வந்த இராணுவத்தினரின் நடமாட்டம் எவருக்கும் தெரிந்திருக்க வில்லை. பொழுது புலர்ந்து வந்து கொண்டிருந்த வேளையில் முகாமிற்குள் புகுந்த இராணுவத்தினர் சுடத்தொடங்கினர்கள். அத்தோடு தத்தமது இருப்பிடங்களுக்குக் காலையில் திரும்பிய மக்கள் மீதும் ஒளிந்திருந்த இராணுவத்தினரும் காவற்றுறை யினரும் சுட்டார்கள். திகைப்படைந்த மக்கள் நாலாதிசையும் பாய்ந்து ஓடத்தொடங்கினர். பயந்தேடிய மக்களை மறைந்து நின்ற படையினர் சுட்டுக்கொன்றனர். அவ்வாறிருந்தும் பெரு மளவு மக்கள் ஓடித் தப்பிக்கொண்டனர்.

குழந்தைகள், பெண்கள், மாணவர்கள் உட்பட மொத்தமாக நாற்பத்தெட்டுப் பேர் உயிரிழந்தார்கள். இருபது பேருக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். பல பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டனர்.

இந்தப் படுகொலைச் சம்பவம் நண்பகல் ஒரு மணிவரை நீடித்தது. அதன் பிறகு சம்பவ இடத்திற்கு வந்த நலன்விரும் பிகளும் தொண்டர் நிறுவனங்களும் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டனர். அப்போதிருந்த மூதூர் பிரசைகள் குழுத்தலைவர் அமரர் மு.கனகசபையும் வேறு சிலரும் அவ் விடத்திற்கு விஜயம் செய்து படுகொலை செய்யப்பட்டவர்களின் உடல்களை மூதூர் அரசினர் வைத்தியசாலைக்கு பிரேத பரி சோதனைக்காகக் கொண்டு சென்று மறுநாள் பெருவெளி சேமக்காலையில் அடக்கம் செய்தனர்.

முருகப்பபன் தங்கராஜா (பெருவெளி வட்டவிதானையார்) இது பற்றி கூறுகையில்,

“1986ஆம் ஆண்டு பெருவெளியில் அகதி முகாம் ஒன்று இருந்தது. இராணுவத்திற்குப் பயந்த மக்கள் அனைவரும் அங்கு தங்கியிருந்தார்கள். 15.07.1986 அன்றிரவு விடியற் காலை 3.00 மணியளவில் அந்த இடத்தை இரவோடு இரவாக வந்த இராணுவத்தினர் சுற்றிவளைத்தார்கள். விடிந்தவுடன் கண்ணிற்பட்ட அனைவரையும் சுட்டுக்கொன்று பல அட்ட காசங்களைச் செய்தனர். நன்கு விடிந்தவுடன் முகாம்களுக்குள் புகுந்து குடிசைகள் அனைத்திற்கும் நெருப்பு வைத்துவிட்டு அந்த வீடுகள் பத்தி எரிந்துகொண்டிருக்கும் பொழுது பொது மக்களைப் பிடித்துச் சுட்ட பின்னர் காலிலும் தலையிலும் பிடித்து எரியும் நெருப்புக்கு மேல் தூக்கி வீசினர்.

உயிரோடு இருந்தவர்களைக் கூட எரியும் நெருப்பிற்குள் தூக்கிப் போட்டார்கள். இப்படியாகக் காணும் இடமெல்லாம் எரிந்து கொண்டிருந்தது. அந்த நேரம் வெடிச்சத்தத்திற்குப் பயந்து இரண்டு மூன்று குடும்பங்கள் சேர்ந்து சில வீடுகளிற் கூடி யிருந்தார்கள். அப்படியிருந்தவர்களில் ஆண்களை எல்லாம் பிடித்து அங்கிருந்தோர்க்கு முன்னாலேயே வைத்து சுட்டும் வெட்டியும் கிணற்றுக்குள் போட்டார்கள். அப்படிச் சுடப்பட்டு இறந்தவர்களின் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட சடலங்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டுபோய் முகங்களிற்கு அசிட் ஊற்றி யாரென அடையாளங் காண முடியா தளவிற்கு அவர்களுடைய முகாம்களுக்குக் கொண்டுபோய் வைத்திருந்து விட்டு மூன்று நாட்களிற்குப் பின்னர் அச்சட லங்களை உறவினர்களுக்குக் கொடுத்திருந்தார்கள். அந்த வேளை இங்கு சுட்டுக் கொல்லப்பட்டவர்களது சடலங்களைக் கிணறுகள், மதகுகள் போன்ற இடங்களிளெல்லாம் ஆங் காங்கே இராணுவத்தினர் போடடிருந்தார்கள். எத்தனை மக்கள் இறந்தார்கள் என்பதுகூட சரிவரத் தெரியவில்லை. அந் தளவிற்கு காணுமிடமெல்லாம் சடலமாக இருந்தது.

இவற்றுள் வேறு ஊர்களிலிருந்து தொழிலிற்காக வந்தவர்களும் இறந்திருந்தர்கள். வழமையாக இராணுவத்தினர் வரும்போது வரும் திசையிலிருந்தே வெடிச்சத்தம் கேட்கும். அந்த நேரம் நாங்கள் எல்லோரும் ஓடிச்சென்று காடுகளுக்குள் ஒளிந்து கொள்வோம். ஆனால் அன்றைய தினம் வழமைக்கு மாறாக நடந்ததால்தான் பல மக்கள் அகப்பட்டுக்கொண்டார்கள். இரா ணுவத்தினர் சென்ற பின்னர் ஊருக்குள் சென்று பார்த்த போது யார் யாரைச் சுட்டிருக்கிறார்கள், எந்தெந்தக் கிணற்றில் சடலம் இருந்தது எனத் தெரிந்தது. அகதி முகாமில் இருந்தவர்களைத் தான் நிறையக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். சுடப்பட்டவர் களைத் தவிர உயிருடன் பிடித்துச் சென்றவர்களை பின்னர் முழுமையாக மனிதர்கள் மாதிரி விடவில்லை. கைகளைக் கால்களை வெட்டி நடமாட முடியாதளவிற்கு கொடுமைப் படுத்தி விட்டிருந்தார்கள்.

அந்தநேரத்திலும் ஊருக்குள் நிற்கப் பயம். திரும்பவும் இராணுவம் வரலாம் என்ற அச்சம் இருந்தது. தனித் தனிக் கிடங்குகள் வெட்டி சடலங்களைப் போட முடியவில்லை. சடலங் கள் கூட பார்க்கமுடியாதளவு அழுகிய நிலையில் இருந்ததால் பெரிய கிடங்கு ஒன்று வெட்டி அத்தனை சடலங்களையும் ஒருமித்துப் போட்டு மூடினோம். இந்த நிலையிலும் கிராமத்தை விட்டு யாரும் வெளியேற முடியாத நிலையிருந்தது. இராணுவத் தினர் கண்டால் உடனே சுட்டுவிடுவார்கள் என்ற பயம் இருந் தது. நாங்கள் யாராவது வீட்டை விட்டு வெளிக்கிட்டால் திரும்ப வந்தால்தான் வந்திருக்கிறார்கள் என்று தெரியும். இல்லாது போனால் எந்த முகாமில் பிடித்து வைத்திருக்கிறார்கள், எங் காவது வைத்து சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்களா என்று எதுவும் தெரியாத நிலை இருந்தது.


இந்த முகாமிற்கு நடந்த கொடுமையைப் போல் நான் எங்கும் பார்த்ததில்லை. இதை நேரடியாகப் பார்த்தவர்களிற் சிலர் பைத்தியமாகக் கூட இருக்கிறார்கள் நாற்பத்தெட்டுப் பேர் வரை கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை விட உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக இருக்கிறார்கள்.

இதில் படுகொலை செய்யப்பட்டவர்களில் 17 பேரின் சடலங்கள் கட்டைபறிச்சான் புளு இராணுவ முகாமில் வைத்து பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

**படுகொலை செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம்**

01. இராசையா செல்லத்துரை - பாரதிபுரம்
02. ஆரியத்தம்பி சிவசுப்ரமணியம் - பாரதிபுரம்
03. சித்திராவி கனகய்யா - பாரதிபுரம்
04. முத்துக்குமார் சிவநாயகமூர்த்தி - பாரதிபுரம்
05. இராசையா குமாரதுரை - பாரதிபுரம்
06. வேலுப்பிள்ளை ஆறுமுகம் - மல்லிகைத்தீவு
07. கோணாமலை இராசநாயகம் - மல்லிகைத்தீவு
08. கதிரவேல் நாகேந்திரம் - மல்லிகைத்தீவு
09. கோணாமலை வீரக்குட்டி - மல்லிகைத்தீவு
10. கதிர்காமத்தம்பி வைரக்குட்டி - மல்லிகைத்தீவு
11. வெற்றிவேல் குணசிங்கம் - மல்லிகைத்தீவு
12. சித்திரவேல் குணசிங்கம் - மல்லிகைத்தீவு
13. சித்திரவேல் ஜெகன் - மல்லிகைத்தீவு
14. சித்திரவேல் பத்தக்குட்டி - மல்லிகைத்தீவு
15. ஆலப்பிள்ளை - மல்லிகைத்தீவு
16. செல்லையா சுந்தரலிங்கம் - மல்லிகைத்தீவு
17. பொன்னையா - மல்லிகைத்தீவு
18. மாரிமுத்து சிறிகந்தராசா - மல்லிகைத்தீவு
19. வைரமுத்து வைரக்கட்டயன் - மல்லிகைத்தீவு
20. மாரிமுத்து யோகராசா - மல்லிகைத்தீவு
21. சி. மகேந்திரன் - மணற்சேனை
22. வீரக்குட்டி மயில்வாகனம் - மணற்சேனை
23. செல்லையா சித்திரவேல் - மணற்சேனை
24. வடிவேல் நவரெட்ணராசா - மணற்சேனை
25. இராசகுலம் - மணற்சேனை
26. வைரமுத்து குணசேகரம் - மணற்சேனை
27. அழகுதுரை சத்தியசீலன் - மணற்சேனை
28. செல்லத்தம்பி தர்மராசா - மணற்சேனை
29. கந்தவனம் கமலம் - மணற்சேனை
30. சிவசுப்ரமணியம் யோகதாஸ் - மணற்சேனை
31. பத்தக்குட்டி கனகநாயகம் - மணற்சேனை
32. மகேந்திரன் - மணற்சேனை
33. சின்னத்துரை குணநாயகம் - பெரியவெளி
34. கந்தையா தங்கராசா - பெரியவெளி
35. காளிக்குட்டி அருளம்பலம் - பெரியவெளி
36. பசுபதி மோகனதாஸ் - பெரியவெளி
37. சேதுநாதன் கோணாமலை - பெரியவெளி
38. தம்பிமுத்து தங்கராசா - பெரியவெளி
39. தியாகராசா வடிவேல் - பெரியவெளி
40. நாகராசா சரஸ்வதி - பெரியவெளி
41. பத்தக்குட்டி மகாலிங்கம் - பெரியவெளி
42. பத்தக்குட்டி யோகராசா - பெரியவெளி
43. பிரான்சிஸ் மார்டின் - இருதயபுரம்
44. அரசரெட்டினம் ஆலப்பிள்ளை - புன்னையடி, ஈச்சிலம்பற்று.





# தண்டுவான் படுகொலை 17 யூலை 1986

முல்லைத்தீவு - வவுனியா பிரதான வீதியில் நெடுங்கேணியிலிருந்து முல்லைத்தீவு நோக்கி ஏறத்தாழ நான்கு கி.மீ. தொலைவிலுளள் கிராமமே தண்டுவான் கிராமமாகும். இக்கிராம் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ளது. தண்டுவான் கிராமத்தின் பிரதான வருமானம் விவசாயம் மூலமே பெறப்படுகிறது. இக்கிராமத்திலுள்ள மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நெடுங்கேணிக்கே செல்ல வேண்டியிருந்தது.

17.07.1986 ஆம் ஆண்டு வழமைபோல முல்லைத்தீவிலிருந்து நெடுங்கேணி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் மக்கள் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பல்வேறு தேவைகளுக்காகச் சென்றுகொண்டிருந்தனர். அன்றையதினம் நெடுங்கேணிப் பிரதேசமானது சிறீலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதிகளில் ஒருவரான ஜெனரல் கொப்பேக்கடுவ தலைமையில் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. அதற்கு சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தியும் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தது. அதேவேளை பேருந்தில் சென்ற தண்டுவான் மக்கள் தமது இடங்களில் இறங்கியபின் நெடுங்கேணிக்குப்போக முடியாத நிலையில், ஓட்டுநர் பேருந்தைத் திருப்பி முல்லைத்தீவு நோக்கி ஓட்டிச் சென்றபோதுபேருந்தைப் பின்தொடர்ந்து சென்ற உலங்குவானூர்தி துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டதுடன், கிட்டத்தட்டதண்டுவான் பாடசாலையிலிருந்து முல்லைத்தீவு நோக்கி ஒரு கி.மீ. தூரத்தில் வைத்து பேருந்து மீது றொக்கற்தாக்குதலை மேற்கொண்டது. இத் தாக்குதலில் பேருந்து ஓட்டுநர் உட்பட பதி னேழு பேர் உயிரிழந்தனர். பதின்மூன்று பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சேகு அப்துல்காதர் - விவசாயம் - 55
02. நாகமணி தட்சணாமூர்த்தி - அரச ஊழியர் - 30
03. சுப்பிரமணியம் சபாரத்தினம் - 28
04. சிவலிங்கம் விவேகானந்தம் - 17
05. குமாரசாமி வேலாயுதம்பிள்ளை - 22
06. முத்துக்குமார் கணேஸ்வரி - 35

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# சித்தாண்டி படுகொலை 20, 27 யூலை 1990

மட்டக்களப்பு நகரத்திலிருந்து வடக்குத் திசையாக பதின்மூன்று மைல் தொலைவில் சித்தாண்டிக் கிராமம் அமைந்துள்ளது. இந்து மதத்தவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க முருகன் ஆலயம் அமைந்த இக்கிராமம் வளங்கள் நிறைந்ததும், மக்கள் செறிந்து வாழும் ஓர் இடமாகவும் உள்ளது. இங்கு வாழும் மக்களின் பிரதான பொருளாதாரம் விவசாயம் ஆகும்.

இக்கிராமத்தினை 1990.07.20 அன்று இராணுவத்தினர் முற்றுகையிட்டு, மக்கள் அனைவரையும் முருகன் ஆலயத்தினுள் அழைத்துச் சென்றனர். அவர்களில் எண்பது பொதுமக்களின் கண்கள், கைகள் என்பனவற்றைக் கட்டி எல்லைக் கிராமத்திற்கு கூட்டிச் சென்று படுகொலை செய்தனர்.

அதே மாதம் மீண்டும் இருபத்தேழாம் திகதி இப்பகுதியில் ஐம்பத்தேழு இளைஞர்களை சுற்றிவளைத்துக் கைதுசெய்து கண்களைக் கட்டி எல்லைப்புறக் கிராமத்திற்கு அழைத்துச் சென்று சுட்டுக் குழிகளிற் போட்டு எரித்தனர். 28.01.1987 அன்று இராணுவத்தினரால் கொக்கட்டிச்சோலையில் நடத்தப்பட்ட படுகொலைகள் போன்றே 1990 ஆகஸ்ட் 20, 27ஆம் திகதிகளில் சித்தாண்டியூரிலும் மேற்கொள்ளப்பட்டது.



இரு தினங்கள் இராணுவத்தினரின் தாக்குதலில் சித்தாண்டியில் மட்டும் நூற்றுமுப்பத்தேழு மக்கள் உயிரிழந்தார்கள். தொடர்ந்தும் பல மாதங்களாக இராணுவத்தினர் சித்தாண்டிப் பிரதேசத்தினைச் சுற்றிவளைப்பதும், கைதுசெய்து மக்களைப் படுகொலை செய்வது தொடர்ந்தது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)





**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**

# பரந்தன் சந்தி படுகொலை 24 யூலை 1990

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் A-9 வீதியை உள்ளடக்கி அமைந்திருப்பதால் பரந்தன் நகரம் முதன்மையான நகரமாக விளங்குகின்றது. மேலும் இங்கு இரசாயணத் தொழிற்சாலை அமைந்திருந்ததும் இப்பகுதி முக்கியத்துவம் பெற்றிருந்தமைக்கு முக்கிய காரணமாகும். இங்கு வாழும் மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும்.

இப்பிரதேசமானது 1980களிலிருந்து பல்வேறு இராணுவ நடவடிக்கைகளால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக இருக்கின்றது. இந்த வகையில் 24.07.1990 அன்று ஆனையிறவு சுட்டதீவு என்னுமிடத்தில் உலங்கு வானூர்தி மூலம் இராணுவத் தளபதி கொப் பேக்கடுவ தலைமையில் தரையிறக்கப்பட்ட சிறீலங்காப் படையினர் பரந்தன் பகுதியால் முன்னேறி வந்துகொண்டிருந்தவேளை, பரந்தன் சந்தியை அண்டிய பிரதேசத்தில் வீடுகளிலிருந்த பொதுமக்களைத் தாக்கினார்கள். வீடுகளிலிருந்த மக்களைச் சுட்டு வீடுகளுடன் சேர்த்து எரித்தனர். இச்சம்பவத்தில் பதின்நான்கிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர்.

இராணுவம் முன்னேறி வந்ததால் இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களிற்குச் சென்றனர். அங்கு தமது உறவுகளைக் காணாது தவித்தனர். மீண்டும் தமது சொந்த இடத்திற்கு திரும்பி வந்தபோது வீடுகளினுள் இரத்தக்கறைகள் காணப்பட்டதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். நெல்லு மூட்டைகள் அடுக்கி வைக்கும் கொட்டிலினுள் சடலங்கள் போட்டு எரிக்கப்பட்ட நிலையிலும் அரைகுறையாக எரிந்த நிலையிலும் காணப்பட்டன. அரைகுறையாகக் காணப்பட்ட சடலங்களை உறவினர்கள் எடுத்து அடக்கம் செய்தனர்.

இச்சம்ப்பவத்தை நேரில் பார்த்ததுடன் கணவரையிழந்த்த மங்களேஸ்வரி தெரிவிக்கையில்,

“காலை 5.30 மணியளவில் ஆனையிறவிலிருந்து வந்த இராணுவத்தினரால் வீடுகளில் உள்ளவர்களையும் வயல்களில் வேலை செய்தவர்களையும் சுட்டும் எரித்தும் வந்தனர். இதில் எனது உறவினர் ஒருவர் பலியானார். இச்சம்பவத்தை என் கண்ணால் கண்டேன்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. கந்தசாமி அழகரட்ணம் - கமம் - 24
02. கணேசபிள்ளை லிங்கேஸ்வரன் - கமம் - 20
03. பூபாலசிங்கம் கொடியரசன் - கமம் - 25
04. தங்கராசா ரவிச்சந்திரன் - கமம் - 21
05. அன்ரனி சகாதேவன் (ரகு) - கமம் - 20
06. பொன்னுத்துரை புண்ணியமூர்த்தி - தச்சுத்தெழில் - 22
07. செல்லத்துரை விக்னேஸ்வரன் - கமம் - 21
08. செலடன்ஸ்பெக் பிறிங்கேஸ்பெக் - தச்சுத் தொழில் - 19
09. சிவராசா சதீஸ்குமார் - 19
10. சங்கரப்பிள்ளை சிவகுருநாதன் - மாணவன் - 18
11. சவரிமுத்து ரஞ்சன் - கமம் - 22
12. சற்குணநாதன் ரஞ்சிதகுமார் - வியாபாரம் - 22

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பொத்துவில் படுகொலை 30 யூலை 1990



1990ஆம் ஆண்டில் மீண்டும் யுத்தம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து இலங்கையில் கிழக்குப் பகுதியில் இராணுவத்தினராலும் சிங்கள முசுலிம் குழுக்களாலும், ஊர்காவற் படையினராலும் நீண்டகாலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர்.

15.06.1990அன்று பொத்துவில் கிராமத்தில் இராணுவத்தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து மேற்கொண்ட தாக்குதல்களின் காரணமாக பாதுகாப்புத் தேடிய மக்கள் இடம்பெயர்ந்து கோமாரி அகதி முகாமில் தஞ்சமடைந்தனர்.

இராணுவத்தினரதும் அரச அதிகாரிகளினதும் வேண்டுகோளையும் வாக்குறுதிகளையும் நம்பி 30.07.1990அன்று பொத்துவில் கிராமத்திற்கு மீண்டும் திரும்பி வந்து பார்தத்போது வீடுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டிருந்ததுடன், வீடுகள் எரித்து அழிக்கப்பட்டிருந்தன. இதனால் மக்கள் தமது வீடுகளை விட்டுப் பொத்துவில் மெதடிஸ்த மகா வித்தியாலயத்தில் மீண்டும் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.

பொத்துவில் மெதடிஸ்த மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த மக்களில் இளைஞர்கள், யுவதிகள் தமது குடும்பத்தினைக் காப்பாற்றுவதற்காக வேலைக்குச் சென்றார்கள். இவர்களில் நூற்றுமுப்பத்திரண்டு பேர் இராணுவத்தினராலும் முசுலிம் குழுக்களாலும் கைதுசெய்யப்பட்டு பொத்துவில் காவற்றுறை நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு இவர்களில் சிலர் சிலராகத் தெரிந்தெடுத்து காவற்றுறை நிலையத்திலிருந்த வெட்டவெளியில் கை கால்களைக் கட்டி உயிருடன் போட்டு எரித்தார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலர் தப்பித்துக் கொள்ள எஞ்சியோரை 02.08.1990 அன்று பொழுது விடிவதற்கு முன்னர் ரயரில் உயிருடன் போட்டு எரித்தார்கள். இவ்வாறு இராணுவத்தினராலும் முசுலிம் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் நூற்று இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 மூத்ததம்பி இராசநாயகம் - 33
02 இளையதம்பி கிருபாகரன் - தொழிலாளி - 39
03 இளையதம்பி கருணாகரன் - 23
04 இராஜதுரை கமலநாதன் - குழந்தை - 3
05 இராமலிங்கம் ஈஸ்வரன் - 23
06 சத்தியநாதன் பத்மநாதன் - 32
07 நாகமணி குணசீலன் - 25
08 நாமணி சிந்தாத்துரை - கடற்றொழில் - 45
09 நடராசா சவுந்தரராசா - 19
10 நல்லதம்பி பாக்கியராசா - 23
11 சன்னாசி சுப்பிரமணியம் - 34
12 கனகசபை நவராஜா - 26
13 கனகசபை கிருபைராசா - தொழிலாளி - 30
14 கனகசபை தவராசா - தொழிலாளி - 26
15 கனகரத்தினம் சின்னராசா - 52
16 கனகரட்ணம் சின்னராசா - 27
17 கந்தையா நல்லதம்பி - 33
18 கந்தையா கணேஸ் - மாணவன் - 16
19 கந்தையா தருமரத்தினம் - 32
20 கந்தையா சிவகுமார் - 27
21 கந்தையா சிவகுமரன் - 22
22 கந்தையாப்பிள்ளை சிவசுப்ரமணியம் - 26
23 கந்தையாப்பிள்ளை சிவசுந்தரன் - 26
24 கந்தன் நவரட்ணம் - 21
25 கந்தப்பன் ஆனந்தன் - தொழிலாளி - 26
26 காத்தமுத்து சுனில் - தொழிலாளி - 35
27 காளிக்குட்டி அமிர்தலிங்கம் - 27
28 கணேசபிள்ளை சந்திரன் - 36
29 கிருஸ்ணன் அழகையா - தொழிலாளி - 24
30 கண்ணாச்சி சுப்பிரமணியம் - 34
31 கணபதி பத்மநாதன் - தொழிலாளி - 25
32 கணபதிப்பிள்ளை தருமரட்ணம் - தொழிலாளி - 51
33 கணபதிப்பிள்ளை யோகநாதன் - தொழிலாளி - 20
34 கணபதிப்பிள்ளை செல்வரட்ணம் - தொழிலாளி - 35
35 கணபதிபிள்ளை தெய்வேந்திரன் - 23
36 பக்கிரி சிற்றம்பலம் - 30
37 பாலன் ஜெயானந்தம் - தொழிலாளி - 25
38 பத்மநாதன் விக்னேஸ்வரன் - தொழிலாளி - 14
39 பத்மநாதன் ரவீந்திரன் - தொழிலாளி - 40
40 ஐயப்பன் செல்வராசா - தொழிலாளி - 41
41 தர்மலிங்கம் பாஸ்கரன் - 13
42 தம்பியர் தேவசுந்தரம் - பாதுகாவலர் - 70
43 தம்பிப்பிள்ளை பூபாலப்பிள்ளை - தொழிலாளி - 32
44 தம்பிமுத்து கிருஸ்ணபிள்ளை - 52
45 தம்பிராசா இராசகுமார் - தொழிலாளி - 18
46 தம்பிராசா மனோகர் - தொழிலாளி - 38
47 தம்பிராசா தேவசுந்தரம் - தொழிலாளி - 65
48 திசாநாயக்க ஒபேசேகர் - தொழிலாளி - 42
49 திசாநாயக்கா சபேசர் - மாணவன் - 19
50 திலகரட்ணம் பாரதி - தொழிலாளி - 24
51 திலகரட்ணம் லலித் - தொழிலாளி - 23
52 தங்கராசா மகேந்திரன் - தொழிலாளி - 17
53 தருமலிங்கம் இராசேந்திரன் - 26
54 தருமலிங்கம் கணேசமூர்த்தி - தொழிலாளி - 23
55 தருமலிங்கம் முத்துலிங்கம் - தொழிலாளி - 24
56 தருமலிங்கம் சந்திரன் - 21
57 தருமலிங்கம் சாந்தலிங்கம் - 23
58 மாரிமுத்து மகேந்திரன் - 18
59 மாணிக்கம் பரமசிவன் - 31
60 மாணிக்கம் தம்பிராசா - தொழிலாளி - 26
61 மாணிக்கம் செல்வராசா - தொழிலாளி - 27
62 மாணிக்கம் ரவிச்சந்திரன் - தொழிலாளி - 32
63 முத்தையா சத்தியநாதன் - 18
64 அந்தோனிபிள்ளை மகேந்திரகுமார் - 16
65 அழகையா சியாம்சேகர் - தொழிலாளி - 36
66 அருளம்பலம் வாசு - 19
67 ஆறுமுகம் இராசரட்ணம் - தொழிலாளி - 20
68 ஆறுமுகம் கணேசமூர்த்தி - மாணவன் - 19
69 ஜோசப் சிறிராமு - தொழிலாளி - 32
70 கோபால் ரமேஸ் - 20
71 கோபாலகிருஸ்ணன் பத்மநாதன் - தொழிலாளி - 26
72 கெங்காதரன் ஜெயக்குமார் - தொழிலாளி - 22
73 பொன்னன் மோசன் - தொழிலாளி - 25
74 சோமலிங்கம் விஸ்வலிங்கம் - தொழிலாளி - 42
75 செல்வராசா சுவேந்திரன் - தொழிலாளி - 20
76 செல்லத்துரை கந்தசாமி - 35
77 செல்லத்துரை சந்திரன் - 20
78 செல்லமுத்து சுப்பிரமணியம் - தொழிலாளி - 18
79 வேலாயுதம் கருணாநிதி - தொழிலாளி - 32
80 ஞானச்செல்வம் உதயகுமார் - தொழிலாளி - 18
81 சந்திரப்பிள்ளை வினாயகமூர்த்தி - தொழிலாளி - 20
82 சுந்தரராகன் தருமலிங்கம் - 21
83 சுப்பிரமணியம் இராசு - 20
84 சுப்பையா கதிர்காமநாதன் - 22
85 சுப்பையா அர்சுனன் - 26
86 சுப்பையா ஆறுமுகம் - தொழிலாளி - 39
87 சபாபதி மகேந்திரன் - வியாபாரி - 26
88 சாந்தி சற்குணம் - 40
89 சத்தியநாதன் யோகநாதன் - தொழிலாளி - 26
90 சதாசிவம் வேலுப்பிள்ளை - தொழிலாளி - 50
91 சதாசிவம் சிவலிங்கம் - தொழிலாளி - 45
92 சின்னப்பிள்ளை விஜயகுமார் - 20
93 சின்னத்துரை பத்மநாதன் - 26
94 சின்னத்துரை யோகராசா - 29
95 சின்னத்தம்பி நடராசா - 34
96 சின்னத்தம்பி சுந்தரம் - தொழிலாளி - 30
97 சின்னத்தம்பி சபானந்தம் - தொழிலாளி - 28
98 சின்னராசா தெய்வேந்திரன் - 23
99 சீனித்தம்பி கந்தசாமி - 45
100 சீனித்தம்பி சுப்பிரமணியம் - தொழிலாளி - 26
101 வடிவேல் முத்துகுமார் - தொழிலாளி - 17
102 வடிவேல் அழகநாயகம் - தொழிலாளி - 30
103 வடிவேல் தெய்வநாயகம் - தொழிலாளி - 17
104 வடிவேல் சந்திரசேகரராகன் தொழிலாளி 42
105 வண்ணமணி மணிவண்ணன் - 20
106 வீரன் இராசையா - 35
107 வீரன் புஸ்பராசா - 32
108 வீரன் செல்வராசா - 29
109 ரட் ணம் ஜெயசீலன் - 24
110 லலித் துரைராசா - தொழிலாளி - 49

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மல்லாவி படுகொலை 24 யூலை 1996




முல்லைத்தீவு மாவட்டத்தில் யாழ்-கண்டி வீதிக்கு மேற்கே மாங்குளச் சந்தியிலிருந்து கிட்டத்தட்ட பதினைந்து கி.மீ. தூரத்தில் மல்லாவி அமைந்துள்ளது. 1996ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போரினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து மல்லாவிப் பிரதேசத்தில் மல்லாவிச் சந்தியைச் சுற்றி மக்கள் செறிவாக வாழ்ந்தார்கள்.

24.07.1996 அன்று மு.ப 11:15 மணியளவில் மல்லாவிப் பகுதியில் விமானப் படையின் கிபிர் விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் பத்துப் பொதுமக்கள் உடல்சிதறி உயிரிழந்தனர். பதினைந்து பேர் காயமடைந்தனர்.

24.07.1997 விமானத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட பா.சுகந்த்தினி கருத்து தெரிவிக்கையில்,
"சம்பவ தினமன்று எனது அப்பா கடைக்குச் செல்லும்போது சிறீலங்கா விமானம் குண்டு போட்டதில் அவருக்குக்கால் இல்லாமற் போனது. அதிலிருந்து மிகவும் கஸ்ரப்பட்டு வாழ்கிறோம். இந்தச் சம்பவத்தில் ஒன்பது பேர் இறந்தும் பலர் காயங்களுக்கு உள்ளாகியும் இருந்தார்கள். நாங்கள் ஒன்பது சகோதரர்கள். இந்நிலையில் கண்ணேலாத நிலையிலும் எனது அம்மாதான் எம்மை வளர்த்து வருகிறார். எங்களைப் போல் நிறையப்பிள்ளைகள் சிறீலங்கா இராணுவத்தினராற் பாதிக்கப் பட்டு கஸ்ரப்பட்டு படிக்கவே வசதி இல்லாத நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அந்தநிலையிற் தான் நாங்களும் இருக்கிறோம்."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சிவலிங்கம் சிந்துஜா - குழந்தை - 02
02. இராமு பாக்கியநாதன் - விவசாயம் - 21
03. தியாகராஜா பிரேமதாஸ் - விவசாயம் - 28
04. கதிரவேலு ஜனகராஜ் - விவசாயம் - 21
05. விசுவலிங்கம் செல்லம்மா - வீட்டுப்பணி - 64
06. சின்னப்பொடி கதிரவேல் - தொழிலாளி - 59
07. சுப்பிரமணியம் மணிவேல் - தொழிலாளி - 20
08. சிவலிங்கம் சந்தியா - குழந்தை - 2
09. சவரிமுத்து பாலகுமார் - விவசாயம் - 56

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இளையதம்பி வரப்பிரகாசம் - 75
02. இராசையா கார்த்திகேயன் - 63
03. கந்தையா வேலாயுதம் - 62
04. கறுத்தான் வேலாயுதம் - 45
05. பாலகுமார் ஜசிந்தா - 26
06. பாலராசா -
07. தியாகராசா நிரோசன் - 11
08. தேசிங்கு கருணாநிதி - 40
09. சுந்தரலிங்கம் றசிதா - 22
10. சி.கணபதிப்பிள்ளை - 50
11. சின்னப்பு சுந்தரம் - 72
12. சின்னத்துரை நியூமன் - 20
13. சின்னத்துரை சசீந்திரா - 20
14. சின்னையா சிவநேசன் - 21
15. சிவபாதம் சுகன்ஜா - 22

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# அக்கராயன் அரசினர் வைத்தியசாலை எறிகணை வீச்சு – 15 யூலை 1997

கிளிநொச்சி மாவட்டத்தின் தென்மேற்கே கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் காட்டுவளம் நிறைந்த ஒரு கிராமமாக அக்கராயன் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயமும் கூலித் தொழிலும் உள்ளது. இங்குவாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வைத்தியசாலை, பாடசாலை, சந்தை, வழிபாட்டுத்தலங்கள், கடைகள், மற்றும் சேவை நிலையங்கள் போன்றன அமைந்துள்ளன.




ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கிளிநொச்சி நோக்கி "சத்ஜெய" இராணுவ நடவடிக்கை படையினரால் மேற்கொள்ளப் பட்டது. இதனால் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயரத் தொடங்கினார்கள். இவ் இராணுவ நடவடிக்கையினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையும் தன்னுடைய சேவையைத் தொடரமுடியாத நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் தற்காலிகமாக இயங்கத் தொடங்கியது.

கிளிநொச்சி நோக்கி முன்னேறிய படையினர் மக்களின் வாழ்விடங்கள், வழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றின்மீது விமானத் தாக்குதல்களையும், எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். கிளிநொச்சியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினரால் 15.07.1997அன்று இரவு 7.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட எறிகணைகள் அக்கராயன் வைத்தியசாலைப் பணியாளர் விடுதியின் மீதும் அதனையண்டிய பிரதேசத்திலும் வீழ்ந்து வெடித்தன. விடுதியினுள் செய்தி கேட்டுக்கொண்டிருந்த வைத்தியசாலையில் சுத்திகரிப்பாளராகக் கடமையாற்றும் கணபதியும் அவரது குடும்பத்தினரும் வைத்தியசாலை விடுதிமீது வீழ்ந்த எறிகணைத் தாக்குதலினால் உயிரிழந்தார்கள். இந்த எறிகணைத் தாக்குதலில் மூன்று பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழக்க, படுகாயமடைந்த இருவரில் ஒருவர் மல்லாவி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார். இவருடைய மகளான கமலவேணிக்கு கால் துண்டிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக வைத்தியசாலையில் கணபதி என்னும் பெயரில் மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. அந்தோணி இராமன் - சுகாதார ஊழியர் - 65
02. அந்தோணி கணபதி சுகாதார ஊழியர் - 47
03. கணபதி கேதாரகௌரி - கமம் - 38
04. கணபதி உமாசங்கர் - மாணவன் - 11

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)






# சிறீலங்கா அரச படையால் பொதுமகன் படுகொலை – 25.07.2008

பூநனகரி (பூனரின்) பிரிவின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அபிவிருத்தி அதிகாரியுமான 33 வயதான சந்தலிங்கம் விமலகுமார், ஒட்டிசுத்தானிலுள்ள கொக்காவில் பகுதியில் அவரது மோட்டார் சைக்கிளைக் குறிவைத்து நடத்தப்பட்ட கிளேமோர் தாக்குதலில் வெள்ளிக்கிழமை காலை கொல்லப்பட்டார். மாவட்ட செயலக அதிகாரிகளின் கூற்றுப்படி, திரு. விமலகுமார் அலுவல் பணி நிமித்தமாக வவுனியாவுக்குச் சென்று கொண்டிருந்தபோது தாக்கப்பட்டார்.



விமலகுமாரின் உடல் கிளிநொச்சி பொது மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டது.

மத்தன் என்றும் அறியப்படும் இவர், காலை 7:40 மணிக்கு சிறீலங்கா இராணுவத்தின் ஆழ்உடுருவும் பிரிவு (DPU) மூலம் தாக்கப்பட்டதாக தமிழீழ பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலமற்ற அரசாங்க அதிகாரிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அமைப்பின் தலைவராக விமலகுமார் இருந்தார்.

மன்னார் மாவட்டத்தின் இலங்கை இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்குப் பெருமளவில் வெளியேறி வரும் அகதிகளுக்கு மாவட்ட மற்றும் பிரதேச அளவிலான அனைத்து அதிகாரிகளும் சேவையாற்றிக் கொண்டிருந்த வேளையில், பொதுமக்களுக்கு உதவி செய்து கொண்டிருந்த ஒரு பிரதேச செயலாளர் அதிகாரி மீதான இந்தத் தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

கடந்த மாதம், முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் நாகலிங்கம் நந்தகுமார், தனது அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது இதேபோன்ற தாக்குதலில் கொல்லப்பட்டார்.














# இலங்கையின் மகாவம்ச வரலாறைப் புரட்டிப்போட்ட கந்தரோடைத் தொல்லியலும் ஆதி இரும்புக்கால அறிவியல் ஆய்வுகளும் பகுதி – 1

## பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரீகம்

**இலங்கையின் வரலாற்றாசிரியர்கள் மீளுரைத்த மகாவம்சம் கூறும் இலங்கை வரலாறு**

தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபு கொண்ட நாடு என்ற சிறப்பு இலங்கைக்கு உண்டு. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் பரவியபோது கூடவே வரலாற்றைப் பேணும் மரபும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. பௌத்த மதம் தொடர்பான செய்திகளைப் பௌத்த விகாரைகளில் இருந்து வாய்மொழிச் செய்திகளாகப் பேணிவந்த பௌத்த குருமார், அம்மதத்திற்குத் தொண்டாற்றிய மன்னர்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு, வரலாற்றுச் சம்பவங்களையும் பேணி வந்தனர். அவ்வாறு பேணப்பட்ட வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டே கி.பி. 4ஆம் நூற்றாண்டில் தீபவம்சம், கி.பி. 6ஆம் நூற்றாண்டில் மகாவம்சம், அதைத் தொடர்ந்து பல குருமார்களினால் கி.பி. 13ஆம் நூற்றாண்டிற்கும் - கி.பி. 19ஆம் நூற்றாண்டிற்கு மிடையே பல கட்டங்களில் எழுதப்பட்ட சூளவம்சம் ஆகிய பாளி இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இப்பாளி இலக்கியங்கள் பௌத்த மதத்தை, அதிலும் குறிப்பாக தேரவாத மதத்தின் தோற்றம், பரவல், வளர்ச்சி தொடர்பான வரலாற்றை முன்னிலைப் படுத்திக் கூறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டெழுந்தவை. ஆயினும் அவ்விலக்கியங்களே ஈழத்தின் ஆதிகால வரலாற்றை அறிய உதவும் முதன்மை நூல்களாகப் பார்க்கப் பட்டு வருகின்றன. அவற்றுள் இலங்கையின் பூர்வீக மக்கள், பண்பாட்டு உருவாக்கம் தொடர்பான வரலாற்றைக் கூறுவதில் மகாவம்சம் முக்கியமான மூலாதாரமாக எடுத்துக்கொள்ளப் படுகிறது.

இந்நாட்டின் பூர்வீக மக்களைப் பற்றிக் கூறும் மகாவம்சம், கி.மு. 5ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து வந்த விஜயன் தலைமையில் குடியேறிய அவனது 700 தோழர்களுடன் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக வரலாறும் தொடங்கியதாகக் கூறுகிறது (Mahavamsa Ch. vi-vii: 51-55). இவர்களது வருகைக்கு முன்னர் இந்த நாட்டில் வாழ்ந்த மக்களை இயக்கர், நாகர் என இந்நூலும், ஏனைய பாளி நூல்களும் குறிப்பிட்டாலும், இலங்கையின் மூத்த வரலாற்று அறிஞர்கள் அவர்களை மனிதப்பிறவிகள் அல்லாத 'அமானுஜர்கள்' என்றே விளக்கம் அளித்துள்ளனர் (Mendis, G.C. 1943:9; Paranavitana, S. 1961:181).

“The Yakshas and the Nagas mentioned in Buddhist works of this time do not refer to human beings” (Footnote 3) - G.C. Mendis. 1943, page 9.

“In the Mahāvamsa and the Manimēkalai, as indeed in the ancient Sanskrit and Pāli literature in general, the Nāgas are never represented as human beings, but as a class of superhuman beings who inhabited a subterranean world, whose normal form was that of serpents, but who could assume any form at will. Certain places in the world of men, such as Nāgadīpa and Kalyāni in Ceylon, are also mentioned as their abodes, but the fact that they were not regarded as human beings is proved by the statement in the Mahāvamsa that at the time of the Buddha’s visit to Nāgadīpa and other places in Ceylon, there were no human beings in Ceylon (Mahavamsa Ch. xv, verse. 164)” - Paranavitana, 1961: page 181.

இதன் மூலம் விஜயன் வழிவந்த சிங்கள மக்களே இலங்கையின் பூர்வீக மக்கள் என்றும், அவர்களுடனேயே இலங்கையின் மனித வரலாறும், நாகரிக வரலாறும் தொடங்குகிறது என்றும் கருத்தாக்கங்கள் இவர்களால் உருவாக்கப்பட்டுள்ளன.

### விஜயனின் வரலாறும் சிங்கள மக்களின் தோற்றமும்

அரசகுமாரன் விஜயனதும் அவனது 700 தோழர்களினதும் வரலாறு கி.பி. 4ஆம் - 6ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் எழுதப்பட்ட பாளி இலக்கியங்களில் இடம்பெறுகிறது. முதலில் தீபவம்சத்தில் சிறுகதையாக எழுதப்பட்ட இவ்வரலாறு (Dipavamsa - Law, B.C. 1957), பின்னர் மகாவம்சத்தில் விரிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது (Mahavamsa Ch. VI, VII - Geiger, W. 1950).

வட இந்தியாவில் வங்க நாட்டை (Bengal in East India) ஆட்சி செய்த அரசனுக்கும், கலிங்கத்தைச் சேர்ந்த (Orissa, also in East India) அரசிக்கும் அழகான மோகங்கொள்ளக்கூடிய ஒரு மகள் இருந்தாள். அவளது நடத்தையை பெற்றோர் கண்டித்ததை அடுத்து அவள் அவர்களது அரண்மனையை விட்டு வெளியேறி



கந்தரோடை அகழ்வில் கண்டெடுத்த கறுப்பு-சிவப்பு மட்பாண்டம்

Image Source - ப. புஷ்பரட்ணம்

வர்த்தகர்களின் ஒரு பயணக்குழுவைச் சேர்ந்துகொண்டாள். அவர்களுடன் மகத நாட்டுக்குச் செல்லும் காட்டுப்பாதையில் லாலா என்ற இடத்தில் ஒரு சிங்கம் (Sinha) அவளைக் கண்டு ஆசைகொண்டு அவளைத் தூக்கிக்கொண்டு தனது குகைக்கு எடுத்துச் சென்றது. அக்குகையில் அச்சிங்கம் அவளைக் கட்டுப் படுத்தி மனைவியாக்கி குடும்பம் நடத்தியது. அவளுக்கு சிஹபாகு என்ற மகனும் சிஹசீவலி என்ற மகளும் பிறந்தார்கள்.

சிஹபாகுவுக்கு 16 வயதானபோது தனது தாயையும், தங்கையையும் அழைத்துக்கொண்டு சிங்கத்தின் குகையிலிருந்து தப்பியோடினான். கோபங்கொண்ட சிங்கம் அருகிலிருந்த கிராமங்களை அழித்து நாசமாக்கியது. இதை அறிந்த இளைஞன் சிஹபாகு அச்சிங்கத்தைக் கொன்று நாலாயிரம் தங்கக் காசுகள் பரிசாகப் பெற்றான். தான் பிறந்த இடமான லாலாவுக்கு மீண்ட சிஹபாகு அங்கே சிஹபுர என்ற பெயரில் ஒரு நகரம் அமைத்து அதற்கு அரசனானான். தனது தங்கை சிஹசீவலியை மணந்து கொண்ட சிஹபாகுவிற்கு 32 மகன்கள் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவனான விஜயன் பட்டத்து இளவரசனானான்.



இளவரசன் விஜயன் தீய நடத்தை கொண்டவனாக இருந்தான். அவனது நண்பர்களும் சகிக்க முடியாத வன்முறைச் செயல்கள் கொண்டவர்களாக இருந்தார்கள். அரசன் சிஹபாகு விஜயனையும் அவனைப் பின்பற்றும் 700 தோழர்களையும் நாடுகடத்தி துரத்திவிட்டான். அவர்கள் லாலாவிலிருந்து கப்பல் எடுத்து தெற்கு நோக்கிப் பயணமானார்கள். வழியில் சுப்பாரகா என்ற துறையில் சில காலம் தங்கினார்கள். அங்கும் அவர்கள் மேற்கொண்ட துர்நடத்தை காரணமாக உயிருக்குப் பயந்து திரும்பவும் கப்பல் எடுத்துச் சென்றார்கள். இறுதியில் அவர்களது கப்பல் இலங்கையை புத்தபிரான் 'நிப்பான' அடைந்த நாளில் சென்றடைந்தது. அவர்கள் இலங்கையைச் சென்றடைந்த இடமான தம்பபண்ணியில் விஜயன் ஒரு நகரத்தை அமைத்தான்.

விஜயன் அங்கே சந்தித்த பழங்குடியினரான இயக்கர்களின் இளவரசி குவன்னாவை (குவேனி) திருமணம் செய்து கொண்டான். அவளது துணையோடு அங்கிருந்த இயக்க சமூகத்தை அடக்கியாள முடிந்தது. அவர்களுக்கு ஆணும் பெண்ணுமாக இரு பிள்ளைகள் பிறந்தார்கள். இயக்க மனைவியுடன் அரசனாக முடிசூட்ட முடியாது என்பதால் மதுரையிலிருந்து ஒரு பாண்டிய இளவரசியை வரவழைத்து, திருமணம் செய்து விஜயன் அரசனாக முடிசூடிக்கொண்டான். தனது 700 நண்பர்களுக்கும், பாண்டியக் கன்னியர்களை வரவழைத்து மணம் செய்வித்தான். விஜயனதும் அவனது நண்பர்களினதும் வம்சத்தினரே பிற்காலத்தில் சிங்கள மொழி பேசும் சிங்கள மக்களானார்கள்.

விஜயன் இலங்கைக்கு வந்த சமயம் இங்கிருந்த பூர்வீக மக்கள் பற்றி பாளி இலக்கியங்கள் கூறும் வரலாறுகள் புராணக் கதைகள் போன்று இருக்கின்றன. தீபவம்சம் தரும் தகவல்களின்படி (Dipavamsa Ch.1: 19-21, Law 1959), இலங்கைக்கு விஜயன் வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த குடிமக்கள் ஆவிகள் மற்றும் பேய்கள் ஆவர் (Spirits and Demons). மகாவம்சம் இங்கு வாழ்ந்த மக்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகள் கொண்டவர்கள் எனக் கூறுகிறது.

விஜயனும் அவனது தோழர்களும் பாண்டிய நாட்டிலிருந்து பெண்களைப் பெற்றுக்கொண்ட போதும் வட இந்திய சிங்கபுரத்துடன் நெருங்கிய உறவுகளைப் பேணி வந்தார்கள் என பாளி இலக்கியங்கள் உரைக்கின்றன. விஜயன் அரச வாரிசு எவரும் இல்லாமல் இறந்தபோது இலங்கையிலிருந்த வடஇந்தியக் குடியேற்றத்தார் விஜயனின் பிறந்த நகரான சிங்கபுரத்திற்கு தூதுவர்களை அனுப்பி, விஜயனின் மருமகனான பாண்டுகஅபயன் என்பவனை இலங்கையின் அடுத்த அரசனாக அழைத்து வந்தார்கள்.

பாளி இலக்கியங்கள் அடுத்துப் பரிந்துரைப்பது என்னவெனில் விஜயனின் அரசுக்குப் பின்னர் இத்தீவில் பல சிறிய சுதந்திர அரசுகள் இருந்ததாகவும், பாண்டுகஅபயன் அவற்றையெல்லாம் ஒன்றாக்கி அநுராதபுரக் குடியேற்றத்தை நாட்டின் தலைநகரமாக ஆக்கினான் என்பதாகும். பாண்டுகபாயன் அநுராதபுர நகரத்தைச் சுற்றிவரப் பாதுகாப்பு அரண்கள் அமைத்து, புதிய புறநகர் குடியிருப்புகளையும் ஏற்படுத்தினான். குளங்களை அமைத்து விவசாயத்தை வளர்த்தான். தனது மாமனை நகரக் காவலனாகவும், சண்டாளர்களை நகர சேவைகளைப் புரிபவர்களாகவும் ஆக்கினான்.

பாளி இலக்கியங்கள் கூறும் முக்கியமான தகவல், மூன்றாம் நூற் றாண்டில் பாண்டுகஅபயனின் பேரனான தேவநம்பிய தீசன் காலத்தில் மௌரிய சக்கரவர்த்தி அசோகனின் மகனான மகிந்தர் தலைமையில் பௌத்த சமயப் பரப்புரைக் குழு இந்த நாட்டை வந்தடைந்ததாகும்.

பாளி இலக்கியங்களான தீபவம்சம், மகாவம்சம் இரண்டிலும் கூறப்படும் இலங்கையில் ஆரியர்களின் இடப்பெயர்வும் குடியேற்றமும் அந்நூல்கள் எழுதப்படுவதற்கு ஆயிரம் ஆண்டுகள் முன்பாக நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. ஆயிரம்

RADIOCARBON DATES FROM KANTARODAI, SRI LANKA (CEYLON) 1977

| P. No. | Sample No. | Trench | Stratum | Pretreatment | 5568 Half-life B.P. 1950 | A.D/B.C. | 5730 Half-life A.D./B.C. | MASCA Corr[1] A.D./B.C. |
|---|---|---|---|---|---|---|---|---|
| P-2521 | 4 | A | IV | – | 2020 ± 50 | 70 B.C. | 140 ± 50 B.C. | 10- 100 ± 50 B.C. |
| P-2518 | 5 | A | IV | NaOH | 2290 ± 50 | 340 B.C. | 410 ± 50 B.C. | 420 ± 50 B.C. |
| P-2520 | 8 | A | V | – | 2180 ± 60 | 230 B.C. | 290 ± 60 B.C. | 270- 390 ± 60 B.C. |
| P-2524 | 9 | A | VI | – | 2340 ± 50 | 390 B.C. | 460 ± 30 B.C. | 440 ± 50 B.C. |
| P-2514 | 1 | B | V | – | 2250 ± 60 | 300 B.C. | 370 ± 60 B.C. | 410 ± 60 B.C. |
| P-2515 | 2 | B | VI | – | 2990 ± 60 | 1040 B.C. | 1130 ± 60 B.C. | 1290 ± 60 B.C. |
| P-2516 | 3 | B | VI | NaOH | 2070 ± 60 | 120 B.C. | 180 ± 60 B.C. | 130 ± 60 B.C. |
| P-2522 | 7 | B | VII | – | 2110 ± 60 | 150 B.C. | 220 ± 60 B.C. | 170- 200 ± 60 B.C. |
| P-2523 | 15 | B | VIII | – | 2060 ± 50 | 110 B.C. | 170 ± 60 B.C. | 120- 140 ± 60 B.C. |
| P-2525 | 16 | B | VIII | – | 2730 ± 220* | 780 B.C. | 870 ± 220 B.C. | 940- 980 ± 220 B.C. |
| P-2519 | 17 | B | IX | NaOH | 2290 ± 60 | 340 B.C. | 410 ± 60 B.C. | 420 ± 60 B.C. |
| P-2528 | 19 | B | XI | – | 2370 ± 60 | 420 B.C. | 500 ± 60 B.C. | 480 ± 60 B.C. |
| P-2526 | 18 | B | X | – | 2090 ± 50 | 140 B.C. | 200 ± 60 B.C. | 140- 190 ± 50 B.C. |
| P-2529 | 6 | X | III | – | 2350 ± 200* | 400 B.C. | 470 ± 210 B.C. | 440- 460 ± 210 B.C. |
| P-2517 | 12 | X | IV or V | NaOH | 2250 ± 50 | 300 B.C. | 370 ± 50 B.C. | 410 ± 50 B.C. |
| P-2527 | 11 | X | IV or V | Too Small | | | | |

* Large tolerance due to small sample size necessitating counting in small counter.
1 For explanation of MASCA corrections see *MASCA Newsletter*, 1973, Vol.9, No.1, p.1-20.

கந்தரோடையில் பென்சில்வேனிய பல்கலைக்கழகக் குழுவினர் மேற்கொண்ட விஞ்ஞானபூர்வ அகழ்வில் வெளிக்கொணர்ந்த தொல்பொருட்களின் கதிரியக்கக் கரிம தேதிக் கணிப்பு

Image Source - Bennet Bronson & Siran Deraniyagala


ஆண்டுக்காலமாக எவ்வாறு இந்த வரலாறு சேகரிக்கப்பட்டிருந்தது என்பது அந்நூல்களில் கூறப்பட வில்லை.

## விஜயன் கதையின் மூலம்

மகாவம்சம் கூறும் விஜயனின் கதை முதலில் நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தீபவம்சத்தில் கூறப்பட்ட கதையின் விரிவாக்கம் ஆகும். அக்கதை தீபவம்சத்தில் இவ்வாறு ஆரம்பிக்கிறது (Dīpavamsa Ch. IX: 1): "லங்கா தீவு சிங்கத்தை (sīha) ஆதாரமாகக் கொண்டு சீஹல என அழைக்கப்பட்டது. இத்தீவின் தோற்றம் பற்றிய கதையைக் கூறுகிறேன், கேளுங்கள்".

தீபவம்சம் கி.பி. நான்காம் நூற்றாண்டில் அநுராதபுர மகா விகாரையில் வாழ்ந்த பௌத்த குருமாரினால் எழுதப்பட்டது. இலங்கைத் தீவின் குடியேற்ற ஐதீகம் பற்றி கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆக்கப்பட்ட ஒரு கதை 'திவ்வியவதன' என்ற பௌத்த அவதான நூலில் இடம்பெறுகிறது. விஜயனின் கதை இதிலிருந்து மாற்றியமைக்கப்பட்டதாக ஒரு கருத்து உள்ளது.

திவ்வியவதன கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழியில் ஆக்கப்பட்ட ஆதிகால பௌத்த ஐதீகக் கதைகளைக் கொண்டது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு E.B. கொவெல், R.A. நீல் என்னும் இரு பல்கலைக்கழக ஆசிரியர்களால் எழுதப்பட்டு 1886ஆம் ஆண்டில் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தினரால் வெளியிடப்பட்டது. இந்த நூலின் 523-529ஆம் பக்கங்களில் இக்கதை கூறப்படுகிறது:





S.K. Sitrampalam (1980): The Megalithic Culture of Sri Lanka, Ph.D. dissertation (Unpublished), University of Poona.

ஜம்புதுவீபத்தைச் சேர்ந்த பெரிய வியாபாரியான சிம்ஹவின் மகனான சிம்ஹள என்பவன் இரத்தினங்களைத் தேடி இலங்கைக்கு தனது நண்பர்களுடன் வருகிறான். இலங்கைக்கு வந்த சிம்ஹளவும் அவனது நண்பர்களும் இங்கே வாழ்ந்த இராட்சதருடன் தங்கி வாழ்கிறார்கள். சில காலம் செல்ல, தமது கள்ளக்காதலிகளின் தூண்டுதலினால் இராட்சதர்களால் அவர்கள் சிறைப்படப் போவதை அறிந்ததும், சிம்ஹளவும் அவனது நண்பர்களும் பறக்கும் குதிரையொன்றின் உதவியுடன் இலங்கையிலிருந்து தப்பிச் செல்கின்றனர். நாளடைவில் சிம்ஹள தனது நாட்டின் அரசனாகிறான். தனது நாட்டிலிருந்து ஒரு பெரும் படையைச் சேர்த்துக்கொண்டு இலங்கைக்குப் படையெடுத்து வருகிறான். இங்கிருந்த இராட்சதரைத் துரத்திவிட்டு இலங்கையில் புதிய அரசை உருவாக்குகிறான். அன்றிலிருந்து இந்த நாடு சிம்ஹளத்வீப (Simhaladvipa) என அழைக்கப் படுகிறது (Divyavadāna 1886, XXXVI: p. 528).


இலங்கைத் தீவு பாளி மொழியில் சீஹல என அழைக்கப்பட்ட மைக்கு மற்றுமொரு விளக்கம் உள்ளதை சில ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இலங்கைத் தீவிற்கு 'ஹெலதிவ' (ஹெலதீவு) என்றொரு பெயர் உள்ளது. இது சிகிரியா எழுத்துப் பதிவுகளிலும் காணப்படுகிறது. இன்று இலங்கை 'ஸ்ரீலங்கா' என அழைக்கப்படுவதைப் போல முற்காலத்தில் 'ஸ்ரீஹெல' என அழைக்கப்பட்டது. பாளி மொழியில் அது 'சீஹெல' ஆயிற்று. அதைத்தொடர்ந்து இந்த நாடும் நாட்டு மக்களும் 'சிஹல' ஆனார்கள்.

'சிஹல' என்ற பதம் பதிவு செய்யப்பட்ட ஆதிப் பெயர் ஆந்திரப் பிர தேசத்திலிருந்த 'சிஹல விஹாரா' ஆகும். கி.பி. மூன்றாம் நூற் றாண்டில் இலங்கையிலிருந்து சென்ற பௌத்த குருமார்கள் அங்கே தங்கியிருந்ததனால் அப்பள்ளிக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. இந்த ஆரம்பத்தை உணராத பௌத்த குருமார்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டில் சீஹல என்ற பதம் சிங்கத்தைக் குறிப்பிடுவதாக எண்ணி, இலங்கையினதும் இலங்கை மக்களினதும் வரலாற்றிலும் எப்படியாவது சிங்கத்தைத் திணிக்க எண்ணி விஜயனின் கதையைச் சிருஷ்டித்தார்கள்.

இலங்கையின் பாளி நூல்களில் தமிழர், தமிழ் மன்னர்கள், அவர்களது மதங்கள் தொடர்பான வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஆயினும் இவர்களை இலங்கைக்குரிய மக்க ளாகக் குறிப்பிடாது அக்கரையில் இருந்து (தமிழகத்தில் இருந்து) வணிகராக, படையெடுப்பாளராக, ஆக்கிரமிப்பாளராக வந்து போன அந்நியர் எனக் குறிப்பிடுகின்றன. விஜயனும் அவனது 700 தோழர்களும் வடஇந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் குடியேறியதாகப் பாளி இலக்கியங்களால் கூறப்படுகின்றமை, சிங்கள மக்களின் மூதாதையினர் வடஇந்தியாவிலிருந்து வந்த வர்கள் என்பதற்கு அடிப்படை ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது. அதே பாளி இலக்கியங்களால் விஜயனுக்கும் அவனது 700 தோழர்களுக்குமான மணப்பெண்களும், 18 வகைத் தொழில் தெரிந்த 1000 குடும்பங்களும், தமிழ்நாட்டிலிருந்து (பாண்டிய நாட்டிலிருந்து) வந்து இலங்கையில் குடியேறியதாகக் கூறப்படுகின்றமை, விஜயன் காலத்திலேயே தமிழர்களின் மூதாதையினர் தமிழ்நாட்டிலிருந்து வந்ததற்கு ஆதாரமாகக் கொள்ளப்படவில்லை. இதனால் இலங்கை வரலாற்று நூல்களில் பாளி இலக்கியக் கருத்துகளே தற்காலம்வரை செல்வாக்குச் செலுத்தி வருகின்றன (புஷ்பரட்ணம், ப. 2017: 3-4).




பொ. இரகுபதி (1983): பெருங்கற்கால யாழ்ப்பாணம். பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை நினைவுப்பேருரை. மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை




Ponnampalam Ragupathy (1983): Early Settlements in Jaffna - an Archaeological Survey, Ph.D. dissertation, University of Jaffna,

1959ஆம் ஆண்டில் பேராசிரியர் பரணவிதான பதிப்பாசிரியராக இருந்து இலங்கைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட 'இலங்கை வரலாறு' (History of Ceylon, Vol. 1, Part 1) என்ற நூலில், 'வரலாற்றுக் காலத்தில் அண்டை நிலப்பகுதிகளிலிருந்து இத்தீவின் இறையாண்மைக்காக சிங்கள மக்களுடன் பல தடவைகள் போரிட்ட திராவிடர்கள், இத்தீவில் முதல் ஆரியக் குடியேற்றங்கள் ஏற்பட்டபோது இங்கே இருந்தார்கள் என்பதற்கு எதுவித மான ஆதாரமும் இல்லை' எனக் கூறியிருந்தார்.

இதே பேராசிரியர் பரணவிதான 1967ஆம் ஆண்டில் வெளியிட்ட 'சிங்ஹலயோ' (Sinhalayo) என்ற நூலில் பின்வருமாறு பதிவு செய்திருக்கிறார்: "பெருங்கற்கால மையங்களும், தாழிப் புதையல் கழனிகளும் திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளிலெல்லாம் காணப்படுகின்றன. அவர்களின் சாட்சிகளாக இருக்கும் ஈமச்சடங்கு வழக்கங்கள் ஆதிகால தமிழ் இலக்கியங்களிலே சுட்டிக்காட்டப்படுகின்றன. எனவே கற்பதுக்கைகளிலும், கல்லறைகளிலும், மற்றும் பெரிய தாழிக் குடங்களிலும் தங்களது இறந்தவர்களைப் புதைத்தவர்கள் இத்திராவிடர்கள் என உய்த்துணர்வது நியாயமானதே."

அக்காலத்தில் மேற்கூறிய கருத்தை பேராசிரியர் பரணவிதான பொதுப்படையாக திராவிட மக்கள் வாழும் பிரதேசங்களைக் குறித்துக் குறிப்பிட்டாரே ஒழிய, குறிப்பாக இலங்கைத் தமிழரை நோக்கி இது கூறப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

2005ஆம் ஆண்டில், 1980இல் முதலில் வெளிவந்த தனது 'ஸ்ரீலங்காவின் வரலாறு' (A History of Sri Lanka) என்ற நூலின் புதிய பதிப்பை வெளியிட்ட பேராசிரியர் கே.எம். டி. சில்வா, நூலின் 'காலனித்துவவாதிகளும் குடியேறிகளும்' என்ற முதல் பகுதியில் இந்தத் தீவில் இ.மு. 125,000 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதக் குடியிருப்புகள் ஏற்பட்டு, இ.மு. 34,000 ஆண்டுக் காலத்தில் இம்மனிதக் குடியேற்றங்களின் தெளிவான ஆதாரங்கள் காணப்பட்ட போதிலும், மகாவம்சம் கூறும் கி.மு. 5ஆம் நூற்றாண்டின் இந்தோ-ஆரிய காலனித்துவமே (Indo-Aryan Colonization) இந்நாட்டின் நாகரிகத்திற்கு வித்திட்ட முக்கியமான நிகழ்வு எனக் கூறியிருந்தார் (De Silva, K.M. 2005: 6-9).

நன்றி: சிவ. தியாகராஜா – எழுநா முகநூல்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203

# மருதங்கேணி; வரணி; செம்மணி; கதிர்காமம்: தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?

11.07.2026



சில நாட்களுக்கு முன் வடமாராட்சி மருதங்கேணிப் பகுதியில் படையினரின் முகாம் அமைந்திருக்கும் நிலப்பரப்பும் உட்பட மொத்தம் 25 ஏக்கர் காணியை படையினருக்கு விலைக்கு கொடுப்பதற்கு ஒரு புலம்பெயர்ந்த தமிழர் முயற்சித்தார். அதனைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் அந்த இடத்துக்குச் சென்று தடுத்தார்கள். படைத்தரப்பு ஏற்கனவே கிட்டத்தட்ட 20 ஏக்கர் நிலப்பரப்பை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகவும் அதையும் சேர்த்து மொத்தம் 25 ஏக்கர் நிலப்பரப்பு குறிப்பிட்ட புலம் பெயர்ந்த தமிழருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் உரிய தனிப்பட்ட சொத்து என்றும் கூறப்படுகிறது. அன்றைய சம்பவத்தில் நில அளவைத் திணைக் களம் தமக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில்தான் செயல்படலாம் என்று கூறியதையடுத்து காணியை விற்பதற்கான அன்றைய முயற்சிகள் அதோடு நிறுத்தப்பட்டன. இது முதலாவது சம்பவம்.

இரண்டாவது சம்பவம், கடந்த மாத இறுதியில் இடம் பெற்றது. அது தென்மராட்சியில். அங்கே வரணி மத்திய கல்லூரியில் விளையாட்டு மைதானத்துக்கான அரங்கு திறக்கப்பட்டது. அதற்கான நிதி உதவிகளை வழங்கியது புலம்பெயர்ந்து வாழும் வரணி அமைப்பாகும். அந்த அமைப்பினர் வழங்கிய நிதி உதவியை வைத்து சிறீலங்காப் படைத்தரப்பின் தொழில் நுட்ப பிரிவு அந்த அரங்கத்தை தன்னார்வமாக கட்டிக் கொடுத்திருக்கிறது. கட்டடத் திறப்பு விழா அன்று சிறீலங்காவின் படைத் தளபதி நாடாவை வெட்டி அரங்கத்தை திறந்து வைத்தார். நிதி உதவி செய்த லண்டன், வரணி அமைப்பின் பிரதிநிதியும் அருகே காணப்பட்டார்.

இது நடந்த சில நாட்களில் வரணியில் இருந்து கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ள செம்மணியில் தீப்பந்தங்களோடு மக்கள் போராடினார்கள். செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கேட்டு தீப்பந்தங்களை ஏந்தியபடி கண்டிவீதியின் ஓரமாக நின்று மக்கள் போராடினார்கள். எந்தப் படைத்தரப்பை அந்த மக்கள் குற்றம் சாட்டுகிறார்களோ, அதே படைத்தரப்பின் பிரதான தளபதி ஒரு பாடசாலையின் மைதான அரங்கத்தை திறந்து வைக்கிறார். 20 கிலோமீட்டர் தூரத்துக்குள் நடந்த இரண்டு சம்பவங்கள் இவை.

இவை தமிழ் மக்களின் தற்போதுள்ள அரசியல் நிலவரத்தின் குறிகாட்டிகள். தமிழ் மக்கள் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீட்பதற்காகப் போராடுகிறார்கள். உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை வேண்டாம் என்று கேட்டுப் போராடுகிறார்கள். ஆனால் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரே தமது காணிகளை படைத் தரப்புக்கு காசுக்கு விற்க முற்படுகிறார்கள். படைத்தளபதியைக் கூப்பிட்டு பாடசாலை மைதானத்தின் அரங்கத்தைத் திறக்கிறார்கள். இதில் புலம்பெயர்ந்த தமிழர்கள் சம்பந்தப்படுகிறார்கள்.

புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தில் ஒரு பகுதியினர் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசு தரப்போடு இணைந்து செயல்படுவது அல்லது அரச தரப்பை ஒரு பங்காளியாகக் கருதுவது என்பது கடந்த 17 ஆண்டுகளிலும் படிப்படியாக பலமடைந்து வரும் ஒரு போக்காகும். உதாரணமாக கடந்த டித்வா புயலின் போது கனடாவில் உள்ள சில அமைப்புகளும் தனி நபர்களும் நிதி சேகரித்து அரசாங்கத்திடம் நேரடியாக அதைக் கொடுத்தார்கள். அந்த நிதியை தமிழ்த் தரப்பு ஒன்றுக்கூடாக பாதிக்கப்பட்ட மக்களிடம் சேர்ப்பிக்க கூடாதா? என்று கேட்கப்பட்டபோது, ஒரு புலம் பெயர்ந்த தமிழ் அரசியல் செயற்பாட்டாளர் கேட்டார், "தாயகத்தில் அவ்வாறான அமைப்புகள் எவையாவது உண்டா? புலம் பெயர்ந்த தமிழர்களின் நிதியைக் கையாள்வதற்கு ஒரு மையத் திலிருந்து செயல் படுகின்ற பலமான கட்டமைப்பு எதுவும் உங் களிடம் உண்டா? என்ற பொருள்பட.

இக்கேள்வி எதை உணர்த்துகிறது என்றால், வெளி நிதியை பொறுப்பேற்கவோ அல்லது கையாளவோ தக்க தகைமை யோடு மையமான அமைப்புகள் எவையும் தாயகத்தில் இல்லை என்பதைத்தான். வெளியில் இருந்து வரக்கூடிய நிதி உத விகளை கையாள்வதற்கு மட்டுமல்ல, உள்நாட்டிலேயே நிர் ணயகரமான தருணங்களில் பொருத்தமான முடிவுகளை எடுத்து தமிழ் மக்களுக்கு வழி காட்டவல்ல அல்லது தமிழ் மக்களை சரியான பாதையில் செலுத்தவல்ல அமைப்புக்கள் அல்லது கட்சிகள் என்று கூறக்கூடிய கட்டமைப்புக்கள் தமிழ் மக்கள் மத்தியில் உண்டா?

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட மருதங்கேணி பிரதேசத்தில்தான் போதைப்பொருள் புனர்வாழ்வு மையத்துக்கு என்று அரசாங்கம் 10 ஏக்கர் காணியை வழங்கியது. அக்காணிக்குச் சுற்றுமதில் கட்டுவதற்கு நிதி உதவியை புலம் பெயர்ந்த தமிழர்கள்தான் வழங்கினர். எனவே தனது சொந்தக் காணியை படையினருக்கு விற்க விரும்பும் ஒரு புலம்பெயர்ந்த தமிழருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுத்து அந்தக் காணியை வாங்க புலம்பெயர்ந்த தமிழர்களால் முடியும். இந்த விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு தாயக நோக்கு நிலையில் இருந்து பொருத்தமான விதங்களில் வழிகாட்ட யாருண்டு?

அதாவது தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?

இவ்வாறான ஒரு தலைமைத்துவ வெற்றிடம் தமிழ்மக்கள் மத்தியில் நிலவுகிறது என்பதைத்தான் அண்மையில் சுப்பிரமணியம் என்ற பாதயாத்திரைக்குப் போன ஒரு நாயில் இருந்து தொடங்கி இப்பொழுதும் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சமூக ஊடக வலைத்தள வாதப் பிரதிவாதங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

சுப்பிரமணியம் பாதயாத்திரைக்கு போனதால் வைரலாகியது மட்டுமல்ல. அது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சமூக பொருளாதார அரசியல் மற்றும் சமய தலைமைத்துவ வெற்றிடத்தையும் உணர்த்தியது. தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் இப்பொழுதும் நீறு பூத்த நெருப்பாக உள்ளன என்பதனையும் அது உணர்த்தியது. சுப்பிரமணியன் கதிர்காமத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டது. ஆனால் அதைத் தொட்டுத் தொடங்கிய நோய்க்கூறான, விஷம்மிகுந்த விவாதப் பரப்பானது தொடர்ந்து திறக்கப்பட்டிருக்கிறது. சுப்பிரமணியம் ஒரு கடி நாயாகத் தெரியவில்லை. ஆனால் சுப்பிரமணியத்தை வைத்து மோதுபவர்கள் கடி நாய்களைப் போலவோ அல்லது வெறி நாய்களைப் போலவோ கடிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதைக் கட்டுப்படுத்த, அவர்களுக்கு சரியான வழியைக் காட்ட, இரண்டு மதப் பிரிவுகளையும் சேர்ந்து சமயப் பெரியார்கள் யாருமே முன்வரவில்லை. ஒரு வாயில்லா ஜீவனை வைத்துக் கொண்டு வாயுடைய, கூர்படைந்த மனித ஜீவன்கள் மிகக் கீழ்த்தரமாக மோதிக்கொள்கின்றன. அதைத் தடுத்து நிறுத்தவோ அவர்களுக்குச் சரியான வழியைக் காட்டவோ எந்த ஒரு சமயப் பெரியாரும் அல்லது சமூகப் பெரியாரும் முயற்சிக்கவில்லை. அரசியல்வாதிகளும் அந்தப் பக்கம் வரவில்லை.



குறிப்பாக, இதுபோன்ற விடயங்களில் தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து தலையிடக்கூடிய சமயப் பெரியார்களோ அரசியல் வாதிகளோ, வாய் திறக்கவில்லை. இது கடந்த 17 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் நிலவிவரும் அரசியல், சமூக, சமயத் தலைமைத்துவ வெற்றிடத்தைக் காட்டுகிறதா?

அதுமட்டுமல்ல சுப்பிரமணியன் தொடர்பாக கிடைக்கும் சில செய்திகளின்படி அந்த நாயை வைத்து அரசியல் செய்பவர்கள், ஆன்மீகம் செய்பவர்களில் ஒரு பகுதியினர் நேர்மையானவர்கள் இல்லை என்று கூறப்படுகிறது. சுப்ரமணியன் கதிர்காமத்தைச் சென்றடைவதற்கு முன்னரே அதனுடைய எஜமானர் என்று கூறி ஒரு பாத யாத்திரிகர் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாணமை போலீஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு செய்யச் சென்றிருக்கிறார். அந்த நாய் தன்னுடைய வளர்ப்பு நாய் என்றும் ஆனால் பாதயாத்திரைக்கு தலைமை தாங்கும் சாமியார் ஒருவர் அதனை தனது சம்பாத்தியத்துக்காக பயன்படுத்துகிறார் என்றும் அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றிருக்கிறார். போலீசார் அந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாமல் நாயை அவரே வைத்துக் கொள்ளுமாறு கூறியிருக்கிறார்கள். அதேசமயம் மேற்சொன்ன சாமியாரின் எதிரணியும் ஒரு முறைப்பாட்டு செய்வதற்கு பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருக்கிறது. அதற்குப் பதில் கூறிய போலீசார் நாயின் உரிமையாளர் என்று கூறியவர் அந்த நாயுடன் கதிர்காமத்தைச் சென்றடையவில்லை என்றால், நீங்கள் கதிர்காமம் போலீஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைச் செய்யுங்கள் என்று கூறியதாக ஒரு தகவல்.

எந்த நாயைத் திட்டமிட்டு வைரல் ஆக்கினார்களோ, அதே நாய்க்கு உரிமை கோரி போலீஸ் நிலையம்வரை போகும் ஒரு நிலை. இது தமிழ்த் தேசிய அரசியலின் குறியீடாகவும் தெரிகிறதா?

தமிழ் மக்கள் தங்கள் சொந்தப் பிரச்சினைகளில் தொடங்கி கட்சிப் பிரச்சினைகள்வரை போலீஸ் நிலையத்திற்குப் போகிறார்கள். நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். தமிழ்மக்கள் மத்தியில் உள்ள ஆகப்பெரிய கட்சிக்கு நீதிமன்றத்தில் வழக்குகள் உண்டு. நவீன யாழ்ப்பாணத்தைச் செதுக்கிய திருச்சபைகளில் முக்கியமானது ஆகிய தென்னிந்தியத் திருச்சபை பல ஆண்டுகளாக நீதிமன்றத்தில் வழக்காடிக் கொண்டிருக்கிறது. ஒரு தொகுதி இந்து ஆலயங்கள் நீதிமன்றத்தில் நிற்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 80 ஆலயங்கள் நீதிமன்றத்தில் நிற்கின்றன. தமிழ்ப் பகுதிகளில் உள்ள பாட சாலைகள் சிலவற்றின் பழைய மாணவர் சங்கங்கள் போலீஸ் நிலையங்களுக்குச் சென்றுள்ளன.

இவைகூடப் பரவாயில்லை, உள்நாட்டு நீதிப் பொறிமுறை வேண்டாம், பன்னாட்டு நீதிப்பொறிமுறை தான் வேண்டும், என்று தமது போராட்டங்களின்போது திரும்பத்திரும்பக் கூறி வருகின்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான உறவினர் களின் அமைப்புகள் தங்களுக்கு இடையே ஏற்பட்ட ஒரு முரண்பாடு காரணமாக சில ஆண்டுகளுக்கு முன் வவுனியா போலீஸ் நிலையத்துக்கு சென்றதை இங்கு ஞாபகப்படுத்த வேண்டும். அந்த அமைப்புகளைச் சேராத ஒரு முதிய பெண்-அவருக்கு 85வயது என்று சொன்னதாக ஒரு ஞாபகம்- அண் மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நீதி அமைச்சரைச் சந்தித்தபோது, தனது உரையில், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக போராடும் அமைப்புகளைச் சேர்ந்தவர் களைக் குறை கூறியிருந்தார். நீதி கேட்டுப் போராடும் முதிய அம்மாமார்களுக்கு இடையிலேயே முரண்பாடு. அது கைகலப் பாகி, காயப்பட்டு, போலீஸ் நிலையம் வரை போனது. இந்தப் பரம்பரை வருத்தத்தைத்தான் பாதயாத்திரைக்குப் போன சாமி யார்கள் என்று அழைக்கப்பட்ட சிலரும் பிரதிபலிக்கிறார்களா?

சுப்பிரமணியன் கதிர்காமத்துக்குப் போகும் பாதயாத்திரையை முன்னரை விட பிரபல்யப்படுத்தியிருக்கிறது. அதேசமயம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சமூக, சமய, அரசியல் தலைமைத்துவ வெற்றிடத்தையும் வெளிக்காட்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, தங்களுக்குள் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் சாமியார்களும் போலீஸ் நிலையத்திற்குப் போகும் சீரழிந்த போக்கை, அதுதான் தமிழ்த் தேசிய அரசியலின் பொதுப் போக்கை பிரதிபலித்திருக்கிறதா?

நன்றி: நிலாந்தன்




விதைகள்

1984 – திருக்கோணமலை கிராமம் ஒன்றில்…

மழைக் காலம் வானம் இருண்டிருந்தது கடலிற்குள் இருந்து வரும் காற்றை, கிராமமும், கிராமத்தில் எழுந்து நிற்கும் மரங் களும் தடுத்து விட்டாலும், அதில் எஞ்சி – கரைச்சிக்குள் புத்துணர்வு பெற்று வீசும் உப்புக்காற்றும், காட்டில் எழுந்து, குளத்து வயலில் குளிர்மை பெற்று வீசும் தென்றலும் நடு வயலிற்குள் நின்ற செல்வராசா அண்ணையைத் தடவிக் கொண்டிருந்தன,

அந்தச்சேத்தடிப்புத் தரைக்குள் செல்வராசா அண்ணையும், அவரின் பிள்ளைகள் போன்ற எருத்து மாடுகளும் கடுமையாக உழைத்துக்கொண்டிருந்தார்கள். கலப்பையின் முனையுடன் நாணயக் கயிறு களை பிடித்தபடியே கலப்பையை மாடுகளின் கால்களுக்குள் சென்றுவிடாமல் அசைத்துக் கொண்டிருந்தார் செய்வராசா அண்ணை மாட்டுழவு என்பதே கஸ்டமான வேலைதான்.

ஆனால் செல்வராச அண்ணைக்கு அது பிறவியிற் பழக்கம்.

ஒரு பெருமூச்சு விட்டபடியே, நெற்றியில் துளிர்த்த சின்ன வியர்வையை வழித்தபடி நிமிர்ந்து பார்த்தார் செல்வராசா அண்ணை.

தூரத்தில், காட்டிலிருந்து வெளிக்கிட்ட ஓர் மனித உருவம் வரம்பில் நடந்து வந்து கொண்டிருந்தது. மேகம் மறைத்திருந்த அந்த பகற் பொழுதில் அவனைத் தெளிவாகத் தெரியவில்லை. என்றாலும் தொடர்ந்து உழுவதற்கு செல்வராசருக்கு மனம் வரவில்லை. அவருக்குத் தெரியும் வருபவன் தன்னிடம்தான் வருவான் என்று. வருபவன் வரட்டும் என்று பார்த்துக் கொண் டிருந்தார் பச்சை பெனியனும், அழுக்குச் சாறமும் – கலைந்த தலையும் காட்டிலிருந்து வரும் அந்தப் போராளியை அடை யாளம் காட்டியது.

“வாடாப்பா நாதன், என்ன விசயம்” என்றார் செல்வராசர்.

“இங்கை வாங்கோ அண்ணை, என்னால சேத்துக்க இறங் கேலாது” என்றான், முகத்தைச் சுளித்த படியே நாதன்.

“சேறோடா. இந்தச் சேத்துக்கத் தான் உங்களுக்கு சோறு விளை யுது தெரியுமே” என்றபடியே வரம்பில் வந்த ஏறினார் செல்வ ராசர்.

“அண்ணை இண்டையோட சாப்பாட்டுச் சாமான் ஒண்டு மில்லை, விடிஞ்சாப் பட்டினிதான்” என்தான் நாதன், அவனது உருண்டைக் கண்களும் அந்தச் கதையை அப்படியே சொல் வியது.

“அப்ப, இப்ப நாங்கள் என்ன செய்யிறது” என்ற படியே மாடு – களைப் பார்த்து “இங்க வா” என்று அதட்டினார் செல்வராசா அண்ணை.

மாற வேணுமென்ற ஆசையிருந்தது. இல்லாட்டியும் என்ன, அவ கும் ஒரு போராளிதான்.

“இருட்டுறதுக் கிடையில ஊருக்கை போய் சாமானை ஏத்தியந்து தவக்களை அம்மான்ர இடத்தில போடுவம்” என்றான் நாதன். கலப்பையை கழட்டி, வயல் வரம்புடன் வைத்து விட்டு, மாடுகளை கொண்டு வீதிக்கு வந்தார் செல்வராசா அணணை.

அவரின் வண்டில் ஒரு மரத்தின் நிழலில் முகங் குத்திக் கிடந்தது.

OOO

செல்வராசர் எப்பவுமே இப்படித்தான், எங்க நின்றாலும், என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும், போராளிகளை கண்ட வுடன் அந்த வேலைகளை அப்படி, அப்படியே விட்டுவிடுவார். அவர்களின் தேவைகளை-வேலைகளை செய்த பின்புதான் சாப்பிடுவ தென்றாலும், அது அவரின் இயல்பாகப் போய்விட்டது. மண்ணையும் மண்ணிற்காக போராடுகின்ற போராளி களையும் மனதார நேசிக்கும் செல்வராசருக்கு நாற்பத்தேழு வயசிலும் தானும் ஓர் போராளியாக மாறவேணுமென்ற ஆசையிலிருந்தது. இல்லாட்டியும் என்ன, அவரும் ஒரு போராளிதான்.

மாட்டு வண்டிவில். சாமணன் மூடைகளும்… வாழைக்குலை களுமாக நிறைந்து போயிருந்தது. மூடைகளுக்கு மேலே உயரத்தில் தாதன் இருந்தான். இடைக்கிடை அவனது கை வாழைக்குலைக்கு கிட்டப் போய் வந்தது, செல்வராசா அண்ணை திரும்பிப்பார்க்கும் போதெல்லாம் வேறெங்கயோ மற்றும் படி ஒவ்லொரு வாழைப்பழமாக அவன் வாயிற்குள் போய்க் கொண்டிருந்தது.

“தம்பி. தாதன், உன்ர கறுப்புப் போகாதடாப்பா. ஆனா, ஒழுங்கா குளிச்சு, முழுகி வந்தா, உந்த முகத்தில் கிடக்கிற பருக்களாவது போகுமடா” என்றார் செல்வராசர்.

“அண்ணை, நான் ஒழுங்கா குளிக்கிறனான்” என்று பச்சைப் பொய்யை குரலை உயர்த்திக் கொண்டே சொன்னான் நாதன்.

செல்வராசா அண்ணை சாதுவாகச் சிரித்துக் கொண்டே, வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரின் கைகள் நாண யக் கயிற்றை சுண்டிக் கொண்டிருந்தது. கிராமத்துச் சனங்கள் சிகர் இவர்களைப் பார்த்தும் பாராதது போல ஏதோ வேலை களைச் செய்து கொண்டிருந்தார்கள்.

“போன முறை ஆமிக்காரன் வந்ததோடை காட்டுக்கை ஓடின சனம் இப்ப தான் திரும்ப வந்திருக்கு. ஆக்களில்லாம் ஊர்கூட காடு வத்திப் போச்சுது” என்று சலித்துக் கொண்டார் செல்வராசர்.

சாதுவாக இருட்டத் தொடங்கியது. செல்வராசரின் மனதில் சின்னதாக ஒரு அச்சம் தோன்றி மறைந்தது.

“இருட்டினால் சதுப்புக்குளால போகவும் ஏலாது, கரைச்சிக்க தண்ணியும் நிக்குது. அங்கால காட்டுக் குறையிக்கை உந்த அறுவாங்கள் வந்து படுக்கிறாங்களோ தெரியாது. வேகமாக போங்கோடா” என்று குனிந்து மாடுகளின் முதுகில் கைகளால் அடித்தார் செல்வராசர்.

“ஓமண்ணை உந்த மட்டக்களப்புப் பக்கத்தில, வயல்களுக்கை வச்சுத் தான் நிறையப்பேரைச் சுட்டுப் போட்டாங்களாம்” என் றான் அடைத்த குரலில் நாதன்.

“பாரடா தம்பி, வயலுக்கையும், போகேக்கையும், வரேக்கை யும், பஸ்சுக்கையும் மனுசர் எப்படி எல்லாம் சாகுறாங்கள். வீடு, வாசல், மனுசி, பிள்ளைகள் எல்லாம் இருந்தும் என்ன பலன், அங்கங்க போட்டு எரிச்சுப் போட்டுப் போறாங்கள். தமிழனா பிறந்தவனுக்கு இது வாழ்க்கையாய்ப்போயிட்டுது” என்று முணுமுணுத்தார் செல்வராசர்.




–விடுதலைப் புலிகள் – ஆடி 1991

“ஓமண்ணை, முத்துலில் கத்தாரையும் சிங்கக்குட்டி, நல்லதம்பி ஆக்களையும், இங்கை, சுட்டுப் போட்டு ஜீப்பில கட்டி இழுத் தவங்கள். பிறகு திருக்கோணமலை டவுனுக்கு கொண்டு போய் மனுசி பிள்ளைகளெல்லாம் கதறக், கதற கண்ணுக்கு முன்னுக் குப் போட்டு எரிக்கேலையே. எல்லாத்துக்கும் ஒரு முடிவு இருக்குது” என்றபடி மெளனமாகி விட்டான் நாதன். சதுப்பிற் குள்ளால் பாதை விலகாமல் வண்டிக் கரைச்சியை தாண்டியிருந்தது. வயல் வெளிகளிற்கிடையால் ஓடும் மணற் பாதையில் மாடுகள் இரண்டும் வேகமாக ஓடிக் கொண் டிருந்தது. மாட்டின் சலங்கை ஒலி அந்த மாலை நேரத்து அமைதிக்கு பயங்கலந்த இனிமையைக் கொடுத்துக் கொண் டிருந்தது.

தவக்களை அம்மானின் காவல் நிலையத்தில் வண்டில் போய் நின்றதும், போராளிகள் வேகவேகமாக சாமான்களை இறக் கினார்கள், செல்வராசா அண்ணையின் வயல் – பக்கத்தில், கூப்பிடு தூரம் தான். வண்டிலை ஓரமாக இழுத்துச்சென்றவர். மாடுகளை அவிழ்த்து தன்பாட்டுக்கு போகவிட்டார்.

“வயல் பக்கம் போகாம தண்ணியைக் குடிச்சுப் போட்டு, வாய்க்கால் கரையில் நில்லுங்கோ” என்ற படி வண்டிலைச் சாய்த்தார் செல்வராசர்.

“அண்ணை மாடுகளோடை வலும் வாரப்பாடு தான் என்றான்” ஒரு தோழன்.

“எடே, அதுகள் அஞ்சு வருசமா என்னோட நிக்குதுகள். என்ர பேச்சை மட்டுமல்ல என்ர உணர்வுகளையும் அதுகள் விளங் கிக் கொள்ளும் இவன் நாதனைக் கண்டா அவைக்கு வருற சந்தோசம் தெரியுமே ஆமிக்காரங்களைக் கண்டா மிரளுற மிரளலும், எங்கட பெடியங்களைக் கண்டா உரசலும், சேட்டை யும்… என்னைப் பொறுத்த வரை இதுகள் தான்ரா என்ர பிள்ளைகள்” செல்வராசர் மாடுகளைப் பார்க்கப்போய்த் கொண் டிருந்தார்.

ஒரு தோழன் சொன்னான். “செல்வராசாண்ணையின்ர மாடுகளுக்கிருக்கிற உணர்வு மனுசகுக்கிருந்தா நாளைக்கே தமிழீழம் கிடைச்சாலும் கிடைச்சுடும்” எல்லாப் போராளிகளும் வாய்விட்டுச் சிரித்தார்கள். அவர்களின் சிரிப்புடனேயே, சூரியன் வானில் எழ அன்றையபொழுது சாய்ந்தது.

OOO

வயல் வரம்பில் செல்வராசா அண்ணை நின்றார். வானம் களங்கமற்று இருந்தது, இளஞ்சூரியன் எழப்போவதை அறி வித்தான், மெல்லிய குளிர் காற்று செல்வராசா அண்ணையின் நெஞ்சில் மெதுவாக அடித்து நோகப்பண்ணிக் கொண்டிருந்தது. வயல் வரம்பில் நின்று, விளைந்த வயலைப் பார்த்துக் கொண்டிருந்தார் செல்வராசர். இப்பொழுது அவர் ஊருக்குள்

போவதையும் விட்டுவிட்டார். பக்கத்து ஊர்ப் பாலத்தடியில் இராணுவத்தினர் முகாமமைத்த பின் அவர் ஊருக்குள் போவதில்லை.

"இரண்டு பெடியளும் வளந்திட்டாங்கள் பெட்டை ஒன்றுநான். அவளும் வளந்திட்டாள். வர, வர வடிவாயும் வாறாள் அவளின்ர பிரச்சனையையும் முடிச்சிட்டா. எங்கயும், ஆறுதலாகச் சாயலாம் என செல்வராசரின் மனம் பாடியது. அந்த நேரம் நான் நாதனும், நடேசனும் வந்தனர். நடேசன் செய்வராசரின் மனைவியின் உறவு முறையால் அவருக்கு மச்சான் முறையா இருக்க வேண்டும்.


"செல்வராசா. அண்ணை. ஆளைப் பார்க்க பயங்கரவாதி மாதிரிக் கிடக்குது.

இண்டைக்கு ஊருக்கை வாங்கோ, நான் தாடி வழிச்சு விடுறன்" என சொல்லிக் கொண்டே நெற் கதிர் ஒன்றை உருவி வாயிற்குள் போட்டான் நாதன்.

செல்வராசர் மெதுவாகச் சிரித்தார். கிராமத்திற்கு போக அவருக்கும் மனமாகத் தான் இருந்தது. அந்த நேரம் தான் வீதியால் ஓடி வந்த இருவர். இராணுவத்தினர் மேல்க்காட்டுப் பக்கமாகப் போகிறார்கள் என சொல்லி விட்டுச் சென்றனர்.

"அண்ணை, அந்தப் பக்கமாகவும் எங்கட பெடியன் நிக்கிறாங்கள். அவங்களுக்குத் தெரியப்படுத்த வேணும்" என சொல்லிக் கொண்டே நாதனும், நடேசனும் ஓடி னார்கள்.

அவன் இந்தப் பக்கமா வரமாட்டான் என சொல்லிக் கொண்டே வரம்பில் நடந்தார் செல்வராசர். மாடுகளின் கட்டை அவிழ்த்தார்.





மாடுகள் மிரளத் தொடங்கின.

செல்வராசர் நிமிர்ந்து பார்த்தார்.....

வரிசை, வரிசையாக வயல் வெளி எங்கும் இராணுவத்தினர்.

செல்வராசர் வயலுக்குள் பாய்ந்தார் பற்றைக்குள் ஓடி விட்டால், அதற்கப்பால் மறைந்து கொண்டே ஓடிவிடலாம். அதே நேரம் இராணுவத்தினரின் துப்பாக்கி ரவைகள் ஏராளமாக செல்வராசாண்ணையைத் தேடிப் பறந்தன. செல்வராசர் பற்றைக்குள் பாய்ந்தார்.

வயல் வெளி எங்கும் வேலை செய்து கொண்டிருந்த தமிழர்களை தேடித் தேடி இராணுவத்தினரின் துப்பாக்கிகள் முழங்கிக் கொண்டிருந்தன. அந்த விளைந்த வயல் நிலங்கள் இரத்தத்தால் கறைபடித் தன.

ooo

இரண்டு நாட்கள் கழித்தன முருகேசன் வயம் வெளி பக்கமாக வந்தான். வயல்வெளியில் நடந்தகோரச் சம்பவத்தை அவனால் மறக்க முடியாமல் இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பு தான் இந்த வயல் வெளியில் மூன்று மனிதர்களை இழந்து அந்தக் கிராமம், தவித்தது வெள்ளையன் சிறி, தருமன் ஆகிய மூன்று இளைஞர்களும், இத்த வயல் வெளிக்குள் தான் உயிரற்ற சடலங்களாக......

முருகேசன் வரம்புகளில் மேலால் தொடர்ந்து நடத்தான்.

செல்வராசா அண்ணையின் வயல். வயலுக்குப் பின்னாலிருந்த பற்றை. பற்றைக்கு அருகில் செல்வராசா அண்ணையின் மாடுகள் இரண்டும் பிணைக்காமல் நின்றன.

"ஏன் இதுகள் அழுது கொண்டு நிக்குதுகள். ` பிணைக்கவுமில்லை, ஊரக கையும் வராமா?" என்று கேட்டுக் கொண்டே, மாடுகளின் கயிற்றை எடுத்து இழுத்தான் முருகேசன். மாடுகள் ஏக்கத்தோடு அந்தப் பத்தையைப் பார்த்தன. சாதுவான மணம் வீசியது. ரத்த வாடைதான்... முருகேசன் பற்றையின் விழிம்பிற்குச் சென்றான். காய்ந்து உலர்ந்து போய் மனித இரத்தம் ......... முருகேசனுக்கு பயமாக இருந்தது. பற்றையை விலக்கி விட்டுப் பார்த்தான். செல்வராசா அண்ணை....... திரும்பிப் பார்த்தான்.

எருதுகள் இரண்டும் தின்றன. அவனுக்கு விளங்கியது. செல்வராசா அண்ணையை பார்த்துக் கொண்டு அவர் வருவார் என்றுதான் இதுகளும் விலகாமல் நிக்குதுகள், அவரில் உயிரையே இந்த மாடுகள் வைச்சிட்டுதுகள், ஊரவர்கள் மள மளவென்று திரண்டனர்.

"டேய் விறகு தறி, அது எனிக் கொண்டு போகேலாது" என்றான் ஒருவன். இந்த மண்ணின்ர மரணங்கள் மாதிரித்தான், செல்வராசரும் அநாதைப் பிணமாக அங்கேயே எரியப்போகிறார். "மகன் நிக்கிறானோர்" என்றார் கிழவர் ஒருவர் "ஓமோம்."

"அவனைக் கொள்ளியை போடச் சொல்லுங்கோ" என்ற படியே விலகினார் கிழவர். மாடுகள் இரண்டும் தன்பாட்டிற்கு நடக்கத் தொடங்கின.

"அதுகளை கலவரப்படுத்தாம விடுங்கோ " என்றார் இழவர். மாடுகள் வயலுக்கை இறங்கி காட்டை நோக்கி நடக்கத் தொடங்கின. தூரத்தில், காட்டிலிருந்து வெளிப்பட்டு வரம்புகளில் நாதன் வந்து கொண்டிருந்தான்.

ooo

திருக்கோணமலையில் உள்ள தமிழ் கிராமம் ஒன்றில் நடந்த உண்மைச் சம்பவங்களை அடித்தளமாக கொண்ட சிறுகதை

**இப்போது நாங்கள் விழிப்புடன் செயற்படத் தவறினால், இத்தனை ஆண்டு காலமாக நாம் செய்த தியாகங்கள், நாம் புரிந்த சாதனைகள், நாம் அடைந்த வெற்றிகள், நாம் அனுபவித்த துன்ப – துயரங்கள், நாம் கொடுத்த உயிர் விலைகள், பொருள் இழப்புகள் எல்லாமே அர்த்தமற்றவைகளாகிப் போவதுடன், நாம் மீண்டும் அடிமை வாழ்வுக்கு தள்ளப்பட நேரும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

**www.sangathamil.com**

# ஈழத்து தாய்மார்களின் கண்ணீரும் காணாமல்போனோர் போரட்டமும்!

– சு. லோஜிதன் –



12.07.2026

*அறிமுகம்*

ஈழத்துத் தமிழ் மக்களின் நவீன வரலாறு என்பது இடப்பெயர்வுகள், இழப்புகள், மரணங்கள் ஆகியவற்றால் எழுதப்பட்ட ஒரு பெருந்துயர் காவியம். முப்பது ஆண்டுகால ஆயுதப் போராட்டம் மௌனித்து, 2009ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுக்கு வந்தபோது, அது தமிழ் மக்களுக்கு அமைதியையோ ஆறுதலையோ தரவில்லை. மாறாக, ஆறாத வடுக்களையும் தீராத தேடல்களையும் மட்டுமே பரிசாக அளித்தது. அந்தத் துயரங்களின் ஆகப்பெரிய சாட்சியாகவும், ஈழத்து மண்ணின் ஓயாத நீதிக்கான குரலாகவும் திகழ்வது தான் “காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினரின் போராட்டம்”.

தங்கள் கண்முன்னே இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட, கடத்தப்பட்ட மற்றும் யுத்தத்தின் இறுதி நாட்களில் சரணடைந்த தங்களின் பிள்ளைகளையும் கணவன்மாரையும் தேடி, ஈழத்து தாய்மார் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக வீதிகளில் நின்று போராடி வருகின்றனர். இந்தக் கட்டுரை, ஈழத்து தாய்மார்களின் கண்ணீரின் பின்னணியை யும், அவர்களின் ஓயாத நீதிக்கான போராட்டத்தையும், உலக அரங்கில் அதன் தாக்கத்தையும் விரிவாக ஆராய்கிறது.

*காணாமல் ஆக்கப்படுதல்: ஒரு வரலாற்றுப் பின்னணி*

இலங்கையில் தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்படுவது என்பது 2009இல் மட்டும் தொடங்கிய ஒன்றல்ல. அது 1980களின் தொடக்கத்திலிருந்தே அரசமைப்புகளாலும், துணை இராணுவக் குழுக்களாலும் ஒரு திட்டமிட்ட யுத்த உத்தியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. வெள்ளை வான் (White Van) கடத்தல்கள், சோதனைச் சாவடிகளில் கைது செய்யப்படுபவர்கள் மர்மமான முறையில் காணாமல் போதல் எனத் தொடர்ந்த இந்த அவலம், 2009 முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின்போது அதன் உச்சக் கட்டத்தை எட்டியது.

யுத்தத்தின் இறுதி நாட்களில், இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு உத்தரவாதத்தை நம்பி, ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தங்கள் பிள்ளைகளையும், கணவன்மாரையும் இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர். சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் நடந்த இந்தச் சரணடைதலுக்குப் பிறகு, அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதியர் மற்றும் குடும்பப் பொறுப்பாளர் என்ன ஆனார்கள் என்ற விபரம் இன்று வரை இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது.

*தாய்மாரின் கண்ணீரும் தொடர் போராட்டமும்*

ஈழத்துச் சமூக அமைப்பில் தாய்மார் என்பவர்கள் குடும்பத்தின் மையப்புள்ளியாகத் திகழ்பவர்கள். யுத்தத்தினால் கணவனை இழந்த நிலையிலும், வறுமையின் பிடியிலும் தங்கள் பிள்ளை - களை வளர்த்தெடுத்த தாய்மாருக்கு, பிள்ளைகளின் மறைவு என்பது தாங்க முடியாத பேரிடியாகும். “மரணமடைந்தார்” என்ற செய்தி தெரிந்தால் கூட, அதோடு கூட ஒருவாறு மனதைத் தேற்றிக்கொள்ளலாம். ஆனால், “உயிரோடு இருக்கிறாரா இல்லையா?” என்றே தெரியாமல் ஒவ்வொரு நொடியும் வாழும் வாழ்க்கை மரணத்தை விடக் கொடியது.

2017ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற வடக்கு-கிழக்கின் முக்கிய நகரங்களில் ஈழத்து தாய்மார் “தொடர் சுழற்சி முறைப் போராட்டம்” தொடங்கப்பட்டது. வீதிகளில் பந்தல் அமைத்து, பனி என்றும் வெயில் என்றும் பாராமல், தங்களின் பிள்ளைகளின் புகைப்படங்களைக் கைகளில் ஏந்தியபடி அவர்கள் அழுது அரற்றிய கண்ணீர் ஈழத்து மண்ணை நனைத்தது.

*போராட்டத்தின் சவால்களும் அரச ஒடுக்குமுறைகளும்*

ஈழத்து தாய்மாரின் போராட்டம் என்பது வெறும் அமைதிப் போராட்டம் மட்டுமல்ல; அது ஒரு பாரிய அரச ஒடுக்குமுறைக்கு எதிரான வீரம் செறிந்த போராட்டமுமாகும். இந்தப் போராட்டத்தை முடக்குவதற்கு சிங்கள அரசாங்கமும் அதன் புலனாய்வுப் பிரிவினரும் பல்வேறு வழிகளில் முற்பட்டனர்:

1. **அச்சுறுத்தல்களும் பின்தொடரல்களும்:** போராட்டத்தில் ஈடுபடும் தாய்மாரின் வீடுகளுக்குச் சென்று சிறீலங்காப் புலனாய்வாளர் அச்சுறுத்துவது, நள்ளிரவில் விசாரணை என்ற பெயரில் தொல்லை தருவது போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்தன.

2. **நீதிமன்றத் தடைகள்:** நினைவேந்தல்களையும் போராட்டங்களையும் நடத்தவிடாமல் தடுப்பதற்காக, பொலிசார் மூலம் நீதிமன்றத் தடை உத்தரவுகள் பெறப்பட்டன.

3. **உளவியல் ரீதியான பாதிப்புகள்:** “உங்கள் பிள்ளைகள் வெளிநாட்டில் சொகுசாக வாழ்கிறார்கள்” என்ற அபாண்டமான பொய்ப் பரப்புரைகளை அரசு தரப்பு மேற்கொண்டு, தாய்மாரின் மன உறுதியைக் குலைக்க முயன்றது.

இந்த அத்தனை சவால்களையும் தாண்டி, “எங்கள் பிள்ளைகள் எங்களுக்கு வேண்டும், அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வேண்டும்” என்ற ஒற்றைக் கோரிக்கையில் தாய்மார் உறுதியாக நின்றனர்.

**இழப்புகளின் மேல் இழப்புகள்: நீதிக்காக மடிந்த தாய்மார்**

இந்தப் போராட்டத்தின் மிக உருக்கமான பகுதி என்னவென்றால், நீதிக்காக வீதியில் போராடி, தங்கள் பிள்ளைகளின் முகம் பார்க்காமலேயே நூற்றுக்கும் மேற்பட்ட தாய்மார் மற்றும் தந்தைமார் மரணமடைந்துவிட்டனர் என்பதுதான்.

“என் பிள்ளை உயிரோடுதான் இருக்கிறான், அவன் ஒருநாள் வரு வான்” என்று சொல்லிக்கொண்டே, கையில் அவனது புகைப்படத்தை அணைத்தபடி உயிர்நீத்த எத்தனையோ தாய்மாரின் மரணம் ஈழத்தின் ஆகப்பெரிய சாபக்கேடாகும்.

வயது முதிர்வு, முறையான மருத்துவ வசதியின்மை, தொடர் மன உளைச்சல், மற்றும் வீதிகளில் தங்கிப் போராடுவதால் ஏற்படும் உடல்நலக் குறைவு போன்ற காரணங்களால் இந்தத் தாய்மார் மடிந்து போகின்றனர். ஒவ்வொரு தாயின் மரணத்தின் போதும், அங்கு நீதி மேலும் ஒரு படி புதைக்கப்படுகிறது என்பதே கசப்பான உண்மை.

*உள்நாட்டுப் பொறிமுறைகளின் தோல்வி*

சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களில் இருந்து தப்பிப்பதற்காக, காணாமல் போனோர் விவகாரத்தைக் கையாளுவதற்குப் பல்வேறு உள்நாட்டுப் பொறிமுறைகளை உருவாக்கியது.

- கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC)
- பரணகம ஆணைக்குழு
- காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் (OMP - Office on Missing Persons)

ஆனால், இந்த அமைப்புகள் அனைத்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதை விட, குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்கும், சர்வதேச விசாரணையைத் தாமதப்படுத்துவதற்குமே பயன்பட்டன.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் (OMP) என்பது ஒரு கண்துடைப்பு நாடகம் என்றும், அதன் மீது தங்களுக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை என்றும் தாய்மார் அதனைப் புறக்கணித்தனர். இழப்பீட்டுத் தொகையை வழங்கி, தங்களின் நீதிக்கான குரலை விலைபேச அரசு முயல்வதாகத் தாய்மார் குற்றம் சாட்டுகின்றனர். “எங்களுக்கு மரணச் சான்றிதழும் பணமும் வேண்டாம், எங்கள் பிள்ளைகளே வேண்டும்” என்ற அவர்களின் முழக்கம் அரசாங்கத்தின் பொறிமுறைகளைத் தவிடுபொடியாக்கியது.

*சர்வதேச சமூகத்தின் மௌனமும் பொறுப்பும்*

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் (UNHRC) ஒவ்வொரு ஆண்டும் சிறீலங்காவுக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்போதும், ஈழத்துத் தாய்மாரின் கண்ணீர்க் கதைகள் அங்கே எதிரொலிக்கின்றன. சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International), மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) போன்ற சர்வதேச அமைப்புகள் இந்த விவகாரத்தை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றன.

இருப்பினும், புவிசார் அரசியல் காரணங்களினாலும், சர்வதேச நாடுகளின் சுயநலப் போக்கினாலும், சிறீலங்காவுக்கு எதிரான உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) சிறீலங்கா பாரப்படுத்தப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கை இன்னமும் பரிசீலனையிலேயே உள்ளது. சர்வதேச சமூகத்தின் இந்த மெத்தனப் போக்கு, ஈழத்துத் தாய்மாருக்கு உலக நீதி பரிபாலனத்தின் மீதான நம்பிக்கையைக் குறைப்பதாக உள்ளது.

*போராட்டத்தின் சமூக மற்றும் அரசியல் தாக்கம்*

இந்தக் காணாமல்போனோர் போராட்டம் என்பது வெறும் கண்ணீர் வணக்கம் அல்ல; அது ஈழத் தமிழரின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் ஒரு புதிய வடிவமாகும்.

- **பெண் தலைமைத்துவத்தின் எழுச்சி:** யுத்தத்தினால் ஆண்கள் பெருமளவில் அழிக்கப்பட்ட நிலையில், ஈழத்துச் சமூகத்தை முன்னோக்கி நகர்த்தும் மற்றும் அரசியல் உரிமைக்காகக் குரல்கொடுக்கும் தலைமைத்துவத்தைத் தாய்மார் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- **மறதிக்கு எதிரான நினைவு கூர்தல்:** ஈழத்தில் நடந்த இனப்படுகொலையையும் அநீதிகளையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் ஒரு கருவியாக இந்தப் போராட்டம் திகழ்கிறது.
- **புலம்பெயர் தமிழரின் இணைப்பு:** தாயகத்தில் நடக்கும் இந்தப் போராட்டங்கள், உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழ் மக்களை ஒன்றிணைத்து, சர்வதேச அரங்கில் சிறீலங்கா அரசுக்கு எதிரான அழுத்தங்களைத் தொடர்ந்து பேண உதவுகிறது.

*முடிவுரை*

ஈழத்து தாய்மாரின் கண்ணீர் என்பது வெறும் சோகத்தின் வெளிப்பாடு மட்டுமல்ல; அது அநீதிக்கு எதிரான ஒரு பெரும் ஆயுதம். அதிகார பலமும், இராணுவ அடக்குமுறையும் ஒரு தாயின் பாசப் போராட்டத்திற்கு முன்னால் தோற்றுத்தான் போக வேண்டும் என்பதை இந்தத் தாய்மார் உலகிற்கு உணர்த்தியுள்ளனர்.

முட்கம்பிகளையும், துப்பாக்கி முனைகளையும் கடந்து வீதிகளில் ஒளிரும் அந்தத் தாய்மாரின் கண்கள், உலக மனசாட்சியிடம் ஒரு கேள்வியைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கின்றன. “காணாமல் ஆக்கப்பட்ட எனது பிள்ளைகள் எங்கே?” என்ற அந்த வினாவிற்கு முறையான பதில் கிடைக்கும் வரையும், ஈழத்து மண்ணில் உண்மையான நீதியும் அமைதியும் மலரப் போவதில்லை. அநீதி இழைத்தவர்கள் தண்டிக்கப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டோரின் உண்மை நிலை கண்டறியப்படும் வரை, ஈழத்துத் தாய்மார்களின் கண்ணீரும் போராட்டமும் ஓயாத அலைகளைப் போலத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

# அபாஸ் அராக்சி: பெரும் போரின் மத்தியில் ஈரானிய இராஜதந்திரத்தின் அமைதிமுகம்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

13.07.2026

உலக அரசியலில் சில மனிதர்கள் தங்கள் நாட்டின் இராணுவ வலிமையால் அல்ல, தங்கள் அறிவாலும், பொறுமையாலும், பேச்சுவார்த்தைத் திறமையாலும் வரலாற்றில் இடம்பிடிக்கின் றனர். போர்கள் வெடிக்கும் காலங்களிலும், உலக வல்லரசுகள் மோதிக்கொள்ளும் தருணங்களிலும், சிலர் ஆயுதங்களை ஏந்துகின்றனர் சிலர் வார்த்தைகளை ஆயுதங்களாக மாற்று கின்றனர். ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் அபாஸ் அராக்சி (Abbas Araghchi) இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்.

இன்று உலக அரசியல் அரங்கில் ஈரானின் முகமாகத் திகழும் அராக்சி, ஒரு சாதாரண அரசியல்வாதி அல்ல. பல தசாப்தங்க ளாக இராஜதந்திரத் துறையில் அனுபவம் பெற்றவர். அணுசக்தி ஒப்பந்த பேச்சுவார்த்தைகள், பொருளாதாரத் தடைகள், மத்திய கிழக்கின் போர் நெருக்கடிகள், அமெரிக்காவுடனான உறவுகள், ஐரோப்பிய நாடுகளுடனான உரையாடல்கள் என உலக அரசிய லின் மிகவும் சிக்கலான மேடைகளில் தொடர்ந்து செயல்பட்டு வருபவர்.



**இன்று உலக அரசியல் அரங்கில் ஈரானின் முகமாகத் திகழும் அராக்சி, ஒரு சாதாரண அரசியல்வாதி அல்ல. ஈரானின் அரசியல், இறையாண்மை மற்றும் உலக அரங்கில் ஒரு இராஜதந்திரியின் பங்கை அவர் அமைதியாக எப்போதும் செயல்பட்டு வருகிறார். மத்திய கிழக்கில் பெரும் போரின் மத்தியில் ஈரானிய இராஜ–தந்திரத்தின் அமைதி முகமாக அபாஸ் அராக்சி தெளிவாக வெளிப்படுகின்றார்.**

## இரு கூர் வாள்களுக்கு நடுவே ஒரு இராஜதந்திரி

ஈரானின் வெளியுறவுக் கொள்கையை முன்னெடுத்துச் செல் வது உலகிலேயே மிகவும் கடினமான பொறுப்புகளில் ஒன் றாகும். ஒரு பக்கம் இஸ்லாமியப் புரட்சியின் கொள்கைகளைப் பாதுகாக்க வேண்டிய உள்நாட்டு அரசியல் அழுத்தம், மறு பக்கம் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகள், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், இரா ணுவ அழுத்தங்கள்.

இந்த இரண்டு அழுத்தங்களுக்கும் இடையில் சமநிலையைப் பேண வேண்டிய பொறுப்பு அராக்சியின் தோள்களில் உள்ளது. அவர் எடுத்துச் செல்லும் ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு அறிக்கையும், ஒவ்வொரு வெளிநாட்டு பயணமும் உலக ஊட கங்களால் ஆய்வு செய்யப்படுகிறது.

அவரது பணி வெறும் பேச்சுவார்த்தை நடத்துவது அல்ல. உலகம் முழுவதும் ஈரானின் அரசியல் நிலைப்பாட்டை விளக் குவது, கூட்டாளி நாடுகளுடன் உறவை வலுப்படுத்துவது, எதிரி களுடன்கூட உரையாடலுக்கான வாயில்களை திறந்து வைப் பது ஆகிய அனைத்தும் அவரது பொறுப்புகளாகும்.

## அமைதியே அவரது அடையாளம்

அபாஸ் அராக்சியை நேரில் பார்த்தவர்களும், அவரது உரை–களை கவனித்தவர்களும் முதலில் குறிப்பிடுவது அவரது அமைதியான அணுகுமுறையையே. அவர் சத்தமாகப் பேசு வதில்லை. எதிராளியை அவமதிப்பதில்லை. உணர்ச்சிவசப் படுவதில்லை. கடுமையான கேள்விகள் எழுப்பப்பட்டாலும் முக பாவனை பெரிதாக மாறுவதில்லை. அரசியல் மேடையில் இது ஒரு தனித்துவமான குணமாகக் கருதப்படுகிறது.

பல சர்வதேச ஆய்வாளர்கள் அவரை “Poker Face Diplomat” என்று வர்ணித்துள்ளனர். காரணம், பேச்சுவார்த்தைகளின் போது அவரது உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் இருப்பது. எதிர் தரப்பினர் அவரது அடுத்த கட்ட நடவடிக்கையை எளிதில் கணிக்க முடியாத நிலையை அவர் உருவாக்குகிறார்.

இந்த மனநிலை திடீரென உருவானதல்ல. பல ஆண்டுகள் நீண்ட இராஜதந்திர அனுபவமும், அரசியல் உளவியலைப் புரிந்துகொண்ட ஆழ்ந்த பயிற்சியும் இதற்குக் காரணமாகக் கருதப்படுகிறது.

## கல்வியும் அரசியல் சிந்தனையும்

அராக்சி வெறும் நிர்வாக அதிகாரி அல்ல. சர்வதேச உறவுகள், வெளியுறவுக் கொள்கை மற்றும் அரசியல் கோட்பாடுகள் குறித்து ஆழமாகக் கற்றவர். அவரது கல்விப் பின்னணி அவ ருக்கு உலக அரசியலை வெறும் மோதல்களின் தொகுப்பாக அல்லாமல், நலன்கள், அதிகார சமநிலை, சர்வதேச சட்டம் மற்றும் வரலாற்று அனுபவங்களின் தொடர்ச்சியாகப் பார்க்கும் திறனை வழங்கியுள்ளது.

அதனால் தான் அவர் பலமுறை, இராணுவ வெற்றி என்பது நிரந்தர வெற்றியல்ல; அரசியல் தீர்வுகளே நீண்டகால நிலைத் தன்மையை உருவாக்கும் என்று வலியுறுத்தியுள்ளார்.

போரின் மத்தியில் தொடர்ந்த பயணங்கள் அவரது வெற்றியின் வரலாறாக இருக்கிறது. இஸ்ரேல்–ஈரான் பதற்றம் அதிகரித்த காலகட்டத்தில், தனது உயிருக்கு ஆபத்து இருப்பது வெளிப் படையாகத் தெரிந்திருந்தும் அராக்சி உலக நாடுகளுக்கான பயணங்களை நிறுத்தவில்லை. மாஸ்கோ, பெய்ஜிங், தோஹா, ஜெனீவா, நியூயோர்க் உள்ளிட்ட பல இடங்களில் அவர் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றார்.

ஒரு நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் வெளிநாட்டுப் பய ணம் மேற்கொள்வது சாதாரண நிகழ்வாகத் தோன்றலாம். ஆனால் ஏவுகணைத் தாக்குதல்கள், உளவுத்துறை அச்சுறுத் தல்கள், படுகொலை அபாயங்கள் நிலவும் சூழலில் அவ்வாறு பயணம் செய்வது வேறுபட்ட துணிச்சலைக் கோருகிறது. அந் தத் துணிச்சலின் பின்னணியில் தனிப்பட்ட வீரத்தைவிட, தனது நாட்டின் நலனுக்கான பொறுப்புணர்வே அதிகமாக இருந்ததாக அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.




## வார்த்தைகளின் அரசியல்

இன்றைய உலகில் சமூக ஊடகங்களும் இராஜதந்திரத்தின் ஒரு பகுதியாகிவிட்டன. அராக்சி வெளியிடும் அறிக்கைகள், அவரது எக்ஸ் (X) தளப் பதிவுகள், வெளிநாட்டு அமைச்சகத்தின் அதிகாரப்பூர்வ அறிக்கைகள் ஆகியவை அனைத்தும் மிகத் திட்டமிட்டு வடிவமைக்கப்படுகின்றன. அவற்றில் கோபத்தை விட கருத்து, மிரட்டலை விட உவமை, தாக்குதலை விட அர சியல் செய்தி ஆகியவையே அதிகமாகக் காணப்படுகின்றன.

நீங்கள் உடைத்தது ஒரு நறுமணப் பாட்டில் அல்ல என்ற அவரது உவமை உலகம் முழுவதும் பேசப்பட்டது. அந்த ஒரு வரி, வெறும் பொருளாதார சேதம் அல்லது கட்டட அழிவு பற் றியது அல்ல. ஒரு நாட்டின் கண்ணியத்தையும் மக்களின் மன வலிமையையும் தாக்குவதால் அதை உடைக்க முடியாது என்ற அரசியல் செய்தியை வெளிப்படுத்தியது.

அராக்சியின் இராஜதந்திரத் திறமைக்கு பாராட்டு கிடைப்பதைப் போலவே, அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் ஈரானின் அரசியல் நிலைப்பாடுகள் பல்வேறு விமர்சனங்களுக்கும் உள்ளா கின்றன.

மனித உரிமைகள், அரசியல் சுதந்திரம், அணுசக்தி திட்டம், பிராந்திய ஆயுதக் குழுக்களுடனான உறவுகள் போன்ற விவ காரங்களில் மேற்கத்திய நாடுகளும் மனித உரிமை அமைப் புகளும் தொடர்ந்து கேள்விகளை எழுப்புகின்றன.

எனவே அராக்சியைப் பற்றிய மதிப்பீடு இரண்டு அடுக்குகளில் இருக்க வேண்டும். ஒன்று அவரது தனிப்பட்ட இராஜதந்திரத் திறன் மற்றொன்று அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசின் கொள்கைகள். இவ்விரண்டையும் ஒன்றாகக் கலக்காமல் பார்ப் பதே சமநிலையான அரசியல் அணுகுமுறையாகும்.

## ஒரு இராஜதந்திரியின் வலிமை

இராணுவத் தளபதிகள் போரை நடத்தலாம். ஆனால் போரை முடிவுக்குக் கொண்டு வருவது பெரும்பாலும் இராஜதந்திரிகள் தான்.

அவர்கள் கையொப்பமிடும் ஒப்பந்தங்கள் எல்லைகளை மாற றக்கூடும். அவர்கள் பேசும் ஒரு சொல் போரைத் தவிர்க்கக் கூடும்.

அவர்கள் அமைதியாக அமர்ந்து நடத்தும் பேச்சுவார்த்தைகள் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றக்கூடும். இந்த உண்மையை அபாஸ் அராக்சியின் அரசியல் வாழ்க்கை மீண்டும் நினைவூட்டுகிறது.

அபாஸ் அராக்சியின் வாழ்க்கை, ஒரு நாட்டிற்கு சேவை செய் வது என்பது போர்க்களத்தில் ஆயுதம் ஏந்துவதால் மட்டுமே அள விடப்படுவதில்லை என்பதை உணர்த்துகிறது. சிலர் எல்லை யில் நின்று நாட்டைக் காக்கிறார்கள் சிலர் உலக அரங்கில் நின்று நாட்டின் குரலைக் காக்கிறார்கள்.

போர், பொருளாதாரத் தடைகள், அரசியல் அழுத்தங்கள், சர்வ தேச விமர்சனங்கள் என எண்ணற்ற சவால்களின் மத்தியில் ஈரானின் வெளியுறவுக் கொள்கையை முன்னெடுத்து வரும் அராக்சி, நவீன உலகில் இராஜதந்திரத்தின் சக்தியை எடுத்துக் காட்டும் முக்கியமான நபர்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

ஒரு நாட்டின் வலிமை அதன் ஆயுதங்களில் மட்டும் இல்லை; அதை உலகிற்கு விளக்கிச் சொல்லும் அறிவார்ந்த குரல்களிலும் இருக்கிறது. அந்தக் குரலாகத் திகழும் அபாஸ் அராக்சி, போரின் மத்தியில் கூட உரையாடலுக்கான கதவுகளை திறந்துவைக்க முயலும் இராஜதந்திரியின் அடையாளமாக உலக அரசியல் வரலாற்றில் நினைவுகூரப்படுவார்.



# பாடாதே

04.07.2026

கடந்த வாரம் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஒரு நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் தேனிசை செல்லப்பாவின் "பச்சை வயலே" என்ற பாடலைப் பாடிய பாடகர் பின்னர் விசாரிக்கப்பட்டிருக்கிறார். அந்தப் பாடலில் வரும் "தமிழீழம்" என்ற வார்த்தையை மேடையில் பகிரங்கமாக உச்சரித்தது காரணமா?

இது நடந்து கிட்டத்தட்ட ஒரு கிழமைக்குப் பின், வவுனியாவில், பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள நரசிம்மர் ஆலயத்தில் ஓர் இசை நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சி தொடங்க முன்பு ஒரு போலீஸ்காரர் எழுதப்பட்ட ஓர் ஆவணத்தை மேடையில் ஏறி வாசித்தார். அதில் அந்த நிகழ்ச்சியில் என்னென்ன செய்யக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. அந்த அறிவுறுத்தல்களில் ஒன்று அங்கு நடக்கவிருக்கும் இசை நிகழ்ச்சியில் பயங் கரவாதத்தை ஆதரிக்கும் பாடல்களை பாடக்கூடாது என்று இருந்தது.

இது நடந்த சில நாட்களின் பின் யாழ்ப்பாணத்தில், கைதடி பகு தியில் கைதடி வடக்கு கயிற்றசிற்றி கந்தசாமி கோவில் 11ஆவது நாள் விழாவிற்காக ஓர் இசை நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தியாவில் இருந்து வருகை தந்த "சரிகம" பாடகர்களும் உள்ளூர் பாடகர்களும் இணைந்து நடாத்திய ஓர் இசைநிகழ்ச்சி அது. அந்த நிகழ்ச்சிக்காக அனுமதி கேட்டுச் சென்ற ஏற்பாட் டாளர்களிடம், அங்கு பாடப்பட இருக்கும் பாடல்கள் தொடர்பான விபரங்களைத் தருமாறு போலீசார் கேட்டிருக்கிறார்கள். என் னென்ன பாடல்கள் பாடப்படும் என்று அவர்கள் வழங்கிய பட் டியலில் இருந்து ஒரு தொகுதி பாடல்கள் அகற்றப்பட்டிருக் கின்றன. அவற்றைப் பாடக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அகற்றப்பட்ட பாடல்களில் ஒன்று "விடைகொடு எங்கள் நாடே" என்ற பாடல். "கன்னத்தில் முத்தமிட்டால்" திரைப்படத்தில் வரும் ஒரு பாடல். அதாவது தமிழ்த் திரைப்பட பாடல்களில் சிலவற்றுக்கும் தடை என்று பொருள்.

இதன்பின் மற்றொரு சம்பவம், அதுவும் வவுனியாவில், கிடாச்சூரி கோவிலில் நடந்தது. அங்கே இசை நிகழ்ச்சிக்கு முன்னதாக ஒரு போலீஸ்காரர் மேடையில் ஏறி அறிவுறுத்தல்களை வாசித்திருக்கிறார். நிகழ்ச்சிக்கு போலீசார் வழங்கிய கால எல்லையை தாண்டி நிகழ்ச்சி தொடர்ந்தபோது, அதற்கு மீண்டும் போலீஸிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது, அப்பொழுது மீண்டும் ஒரு போலீஸ்காரர் மேடையில் ஏறி அறிவுறுத்தல்களை வாசிக்க முற்பட்டிருக்கிறார். அந்த நிகழ்ச்சியின் அறிவிப்பாளராக இருந்த ஊடகச் செயற்பாட்டாளரும் ஊடக ஆசிரியருமான, இராஜேஸ்வரன் அதைத் தானே அறிவிப்பதாக கூறியிருக்கிறார்.


இசை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும்போது அதாவது ஸ்பீக்கர் கட்டும்போது அதற்கு போலீசாரிடம் அனுமதிபெற வேண்டும். அண்மை மாதங்களாக இந்த நடைமுறை இறுக்கமானதாக மாற்றப்பட்டிருக்கிறது. போலீசாரிடம் அனுமதி கேட்டாலும் அவர்கள் கடைசி நேரத்தில்தான் அனுமதி தருகிறார்களாம். அப்படித் தந்த பின்னரும் நேரக் கட்டுப்பாடு விதிக்கிறார்கள். அண்மை வாரங்களாக மேடைகளில் ஏறி அறிவுறுத்தல்களையும் வழங்குகிறார்கள்.

ஏற்கனவே தீபச்செல்வனின் நூலுக்கு தடை. அதன் பின் உரும்பிராயில் நடந்த ஓர் இசைநிகழ்ச்சியில் சாந்தனின் மகன் ஒரு பாடலைப் பாடும்போது, அதனை போலீசார் இடையில் நிறுத்தினார்கள். அவ்வாறான பாடல்களை பாடக்கூடாது என்றும் அறிவுறுத்தினார்கள். அதன்பின் யாழ்ப்பாணம் நாவற்குழி பிரதேசத்தில் ஒரு கோவிலில் தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றை மகிமைப்படுத்தும் பாடல்களை பாடியதாக கூறி, கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு ராப் பாடகர் கைது செய்யப்பட்டார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மேற்கண்டவைகளை தொகுத்துப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? அரசாங்கம் எழுத்துக்கும் பாடல்களுக்கும் பயப்படுகிறதா?

2009ஐ உடனெடுத்து வந்த ஆண்டுகளில் நினைவு நாட்களை பெருமெடுப்பில் திட்டமிட்டு அனுஷ்டிக்க முடியவில்லை. 2015இல் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தின் பின்னர்தான் நினைவு நாட்களை ஒப்பீட்டளவில் வெளிப்படையாக அனுஷ்டிக்கக் கூடியதாக இருந்தது. அந்த ஆட்சி மாற்றத்தின் விளைவாக வந்த நிலைமாறு கால நீதிக்கான ஐநா தீர்மானத்தின்படி தமிழ் மக்களுக்கு நினைவுகூரும் உரிமை உண்டு. எனினும் நாட்டில் தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றை வெளிப்படையாகப் போற்றும் பாடல்களை பாடுவதற்கு அல்லது அதன் சின்னங்களை கொடிகளை பயன்படுத்துவதற்கு பொதுவாக தடை காணப்பட்டது. அதாவது நிலைமாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில் நிலைமாறு கால நீதியை ஸ்தாபிப்பதற்கு ஐ.நா.முயற்சித்தது என்று பொருள்.

அவ்வாறு சில பாடல்களை பாடியதற்காக விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்கள் உண்டு. அந்தப் பாடல்களை நாதஸ்வரத்தில் இசைத்ததற்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டவர்களும் உண்டு. வடமராட்சி நாகர்கோவிலில் ஒரு திருவிழாவில் அவ்வாறு போர்க்கால பாடல்களை நாதஸ்வரத்தில் வாசித்தவர் கொழும்புக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அதனால் நினைவு நாட்களின் போது தடைக்குள் வரக்கூடியவை என்று கருதப்பட்ட பாடல்களை தவிர்த்து ஏனைய பாடல்கள் ஆங்காங்கே இசைக்கப்பட்டன.



குறிப்பாக, அதன் பின்னர் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் வேட்பாளர் ஆகிய அங்கஜன் இராமநாதன் தனது பிரச்சாரத் தேவைகளுக்காக ஒரு தொகுதி பாடல்களை உருவாக்கினார். வன்னியில் போர்க்காலப் பாடல்களைப் பாடிய இசைக் கலைஞர்களை வைத்து அவர் தயாரித்த பாடல்களுக்கு அரசாங்கத்திடமும் புலனாய்வுத்துறையிடமும் அனுமதி பெறப்பட்டதாக ஒரு தகவல் உண்டு. அந்தப் பாடல்கள் 2009க்கு முற்பட்ட காலத்தை மறைமுகமாகப் போற்றுபவை. அத்தேர்தலில் அங்கஜனுக்கு யாழ்ப்பாணத்திலேயே அதிகூடிய வாக்குகள் கிடைத்தன.

அதை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு, கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட வேட்பாளர் சிலர் தாங்களும் அவ்வாறான பாடல்களை தயாரித்தார்கள். அந்தப் பாடல்களும் 2009க்கு முற்பட்ட காலத்தை ஏதோ ஒரு விதத்தில் போற்றுபவைதான். அதாவது தேர்தல் பிரச்சார தேவைகளுக்கு அவ்வாறான பாடல்களை பயன்படுத்தும் ஒரு போக்கை தொடக்கி வைத்ததே தென்னிலங்கை மைய கட்சிகள்தான். வாக்கு வேட்டைக்கு அப்படிப்பட்ட பாடல்கள், கருப்பொருட்கள் தேவைப்பட்டன. தமிழ்ச்சூழலில் அதுபோன்ற பாடல்களைப் பாடத் தேவையான இசைச்சூழலை ஊக்குவித்த காரணிகளில் அதுவும் ஒன்று.

2015க்குப்பின் நினைவு கூர்வதற்கான வெளி ஒப்பீட்டளவில் அதிகரித்தது. அதேசமயம் தமிழகத்திலிருந்து கலைஞர்கள் ஈழத்துக்கு வருவதும் இங்கு இசை நிகழ்ச்சிகளை நடத்துவதும் படிப்படியாக அதிகரித்தது.

குறிப்பாக, பலாலிக்கும் தமிழகத்துக்கும் இடையிலான வான் வழி போக்குவரத்து பாதை திறக்கப்பட்ட பின் இந்தியாவில் இருந்து பாடகர்களையும் இசைக்குழுக்களையும் காசுகொடுத்து அழைக்கும் நிலைமை படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தது.

இது ஒரு புதிய போக்கு அல்ல. ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரே இது காணப்பட்டது. காசு புரளும் பெருங்கோவில்கள் தமது திருவிழாக்களின்போது தமிழகத்தில் இருந்து இசைக் கலைஞர்களை அழைத்துக் கொண்டு வருவார்கள். தமிழகத்திலிருந்து சின்னமேளக் கச்சேரிகளும் வந்து போவதுண்டு. கடந்த நூற்றாண்டுகளிலும் இது காணப்பட்டது.

2009க்குப் பின் மீண்டும் பாடகர்களையும் இசைக் குழுக்களையும் கலைஞர்களையும் அழைக்கும் போக்கு மெல்லமெல்லத் தலையெடுத்தது. அதிகம் காசுபுரளும் கோவில்கள், அதிகம் காசுபுரளும் உபய காரர்கள், குறிப்பாக, புலம்பெயர்ந்த தமிழ் நிதியைத் திரட்டக்கூடிய உபயகாரர்கள் பெருங்காசை கொட்டி தமிழகத்திலிருந்து பாடகர்களையும் இசைக் குழுக்களையும் ஈழத்துக்கு கொண்டு வந்தார்கள்.

அதேசமயம் "சரிகமப" போன்ற தமிழக தொலைக்காட்சி தொடர்களில் ஈழத்துப் பாடகர்கள் பாடிகள் பாடத் தொடங்கினார்கள் வெற்றியும் பெற்றார்கள். இதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக சரிகமப மேடைகளில் புகழ்பெற்ற பாடகர்களை இசை நிகழ்ச்சிகளுக்கு அழைக்கும் ஒரு போக்கு மேலெழுந்தது. இந்தப் பாடகர்களுக்கும் பாடகிகளுக்கும் இசைக்குழுக்களுக்கும் கொடுக்கப்படும் காசு ஒப்பீட்டளவில் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட திரைத்துறை "செலிபரேட்டிகளுக்கு" கொடுக்கும் காசை விட குறைவானது. கிட்டத்தட்ட ஒரு பாடகருக்கு இலங்கைக் காசில் 4 இலட்சத்துக்கும் குறையாமல் தேவைப்படும். இந்த மேடைகளில் சரிகமப நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற ஈழத்துப் பாடகிகளும் தமிழகப் பாடகர்களோடு இணைந்து பாடினார்கள்.

சரிகமப மேடைகளில் ஈழத்துப் பாடகர்கள் ஜொலிக்க தொடங்கிய அதே காலகட்டத்தில் ரப் பாடகரான வாகீஸனும் தமிழக தொலைக்காட்சி தொடர் ஒன்றில் பிரபல்யமானார். யாழ்ப்பாணத்து தமிழில் அவர் கதைத்தார். அவருடைய ரப் பாடல்களும் யாழ்ப்பாணத்து தமிழை யாழ்ப்பாணத் தின் உச்சரிப் போடு மொழிந்தன. வாகீசன் அணியின் "காக்கும் வடிவேல்" பாடல் "வைரல்" ஆகியது. அந்த பாடகர் அணிக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் வரவேற்பு அதிகமாக கிடைத்தது. தாய கத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் அவருடைய இசை நிகழ்ச்சிகளுக்கு இலட்சக்கணக்கில் காசு திரள்கிறது. சரிகமப பாடகர்களும் வாகீசனின் குழுவும் இசை நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பவர்களுக்கு உற்சாகத்தையும் உத்வேகத் தையும் கொடுத்தனர்.

இந்த இசை நிகழ்ச்சிகளில் தாயக பாடகர்கள் போர்க்காலப் பாடல்கள் சிலவற்றையும் பாடத் தொடங்கினார்கள். மேற்படி நிகழ்ச்சிகளும் மேடைகளும் பெருமளவுக்கு வணிக மேடைகள் தான். இலாப நோக்கமுடையவைதான். அவை வெளிப்படையான அரசியல் மேடைகள் அல்ல அரசியல் நிகழ்ச் சிகளும் அல்ல. வணிக மேடைகள். ஆலய மேடைகள். எனவே அந்த வணிக மறைப்புக்குள் தாயக பாடல்கள் மெல்ல மெல்ல தலை நீட்டின. பின்னர் வணிக மேடைகள் அல்லாத மேடை களிலும் குறிப்பாக போராளிகள் நலன்புரி அமைப்பின் மேடைகள், வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50ஆவது நினைவு நாள்... போன்ற மேடைகளிலும் போர்க் காலப் பாடல்கள் பாடப்படும் நிலைமை படிப்படியாக அதிகரித்து வந்த ஒரு சூழலில், அரசாங்கம் பாடல்களைக் கண்டு விழிப் படைந்தது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நினைவு நாட்களை அனேக மாகத் தடுக்கவில்லை. சில உதிரியான சம்பவங்களைத்தவிர பெரும்போக்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நினைவு கூர்தலை கண்டும் காணாமல் விட்டது எனலாம். இப்படிப்பட்ட ஒரு பின்னணிக்குள், முன்பு நினைவு நாட்களின் போது பகிரங்கமாக ஸ்பீக்கரில் ஒலி பெருக்குவதற்கு பயந்த பாடல்கள் சிலவற்றை ஆங்காங்கே கேட்கக்கூடியதாக இருந்தது. எனினும் இப்பொழுது அரசாங்கம் இந்த விடயத்தை கண்டும் காணாமல் விடுவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறதா?

இந்த அரசாங்கம் தென்னிலங்கையில் நடந்த தன்னெழுச்சிப் போராட்டங்களின் விளைவு. தென்னிலங்கையில் நடந்த தன்னெழுச்சிப் போராட்டங்களின் விசேஷமான, ரசனைக்குரிய பகுதி அங்கே காணப்பட்ட கலைஞர்களின் கலை வெளிப்பாடுகள்தான். அது கலைப்பெறுமதிமிக்க ஒரு போராட்டம். ஒரே சமயத்தில் ஜனரஞ்சகமானவைகளாகவும் படைப்புத்திறன் மிக்கவைகளாகவும் அக்கலைஞர்களின் வெளிப்பாடுகள் காணப்பட்டன. தென்னிலங்கையில் நடந்த மக்கள் எழுச்சிகளின் பிரதானமான ஒருபகுதி அதன் கலையாக்கம். அங்கே ஆடலும் பாடலும் போராட்டத்தின் பகுதிகளாக காணப்பட்டன. மக்களைக் கவர்ந்திழுக்கும் பகுதிகளாகக் காணப்பட்டன.

அந்தப் போராட்டத்தின் கனிகளை "ஹைஜாக்" பண்ணிய ஜேவிபிக்கு இது நன்கு தெரியும். ஒரு போராட்ட இயக்கமாக ஜேவிபிக்கு தனிப்பட்ட முறையில் இசையின் பெறுமதி விளங்கும். இசை எப்படி மக்களை ஒன்று திரட்டும் என்பது ஜேவிபிக்கு நன்கு விளங்கும். இந்த விளக்கம்தான் இப்பொழுது பாடல்களுக்குப் போடப்படும் தடையா? அல்லது தென்னிலங்கையில் நடக்கும் கைது நடவடிக்கைகளால் கொதிப்படைந்திருக்கும் இனவாதிகளைச் சமாளிக்க அவர்களுக்கு இது தேவையா?

நன்றி: நிலாந்தன்

# நேட்டோ உச்சி மாநாடு – துருக்கி 2026:
# மேற்குலகப் பாதுகாப்பும் அதிகாரச் சமநிலை மாற்றமும்!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

09.07.2026




டொனால்ட் டிரம்ப் தனது முதல் ஆட்சிக் காலத்தில் நேட்டோவை பலமுறை கடுமையாக விமர்சித்தவர். அமெரிக்கா மட்டுமே அதிக பாதுகாப்புச் செலவை ஏற்கிறது. ஐரோப்பிய நாடுகள் அதனால் பயனடைகின்றன என்ற குற்றச்சாட்டை அவர் தொடர்ந்து முன்வைத்தார். இதனால் நேட்டோவின் எதிர்காலம் குறித்து பல சந்தேகங்கள் எழுந்தன.

### டிரம்பின் மாறிய அணுகுமுறை

2026 ஆம் ஆண்டின் நேட்டோ (NATO) உச்சி மாநாடு துரக்கியின் அங்காரா (Ankara) நகரில் நடைபெற்றது. இந்த மாநாடு வழக்கமான கூட்டணிப் பாதுகாப்புக் கூட்டமாக மட்டும் அமையவில்லை. உலக அரசியலில் உருவாகி வரும் புதிய அதிகாரச் சமநிலைகள், உக்ரைன்-ரஷ்யா போர், மத்திய கிழக்கில் ஈரான் தொடர்பான பதற்றம், மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் புதிய வெளிநாட்டுக் கொள்கை ஆகிய அனைத்தும் இந்த மாநாட்டை உலகின் மிக முக்கியமான பாதுகாப்பு நிகழ்வாக அமைந்தன. ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்கா மீண்டும் நேட்டோவுடன் உறவை வலுப்படுத்தத் தயாராக இருப்பதாக இந்த மாநாடு சுட்டிக்காட்டியது. அதேவேளை, ஐரோப்பிய நாடுகள் தங்களது பாதுகாப்புப் பொறுப்பை அதிகமாக ஏற்க வேண்டிய கட்டாயமும் வலியுறுத்தப்பட்டது.

ஆனால் 2026 மாநாட்டில் டிரம்பின் அணுகுமுறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் காணப்பட்டது. மாநாட்டின் நிறைவில் அவர், கூட்டணிக்குள் இப்போது மிகுந்த ஒற்றுமை உருவாகியுள்ளது என்றும், உறுப்பினர் நாடுகளிடமிருந்து அன்பும் ஒத்துழைப்பும் கிடைத்ததாகவும் தெரிவித்தார். இருப்பினும் இந்த மாற்றம் முழுமையான கொள்கை மாற்றமாக அல்ல; அமெரிக்காவின் பொருளாதார மற்றும் பாதுகாப்பு நலன்களை முன்னிலைப் படுத்தும் “America First” அணுகுமுறையின் புதிய வடிவமாகவே பல ஆய்வாளர்கள் இதைப் பார்க்கின்றனர்.

இந்த மாநாட்டின் முக்கிய அம்சங்களில் ஒன்று, உறுப்பினர் நாடுகள் பாதுகாப்பிற்கான முதலீட்டை கணிசமாக உயர்த்த வேண்டும் என்ற அமெரிக்காவின் வலியுறுத்தலாகும்.

> **உக்ரைன் போர், ஈரான் நெருக்கடி மத்தியில் நடைபெற்றுள்ள நேட்டோ உச்சி மாநாடு துருக்கியில் நடைபெற்றது. இந்த மாநாடு வழக்கமான கூட்டணிப் பாதுகாப்புக் கூட்டமாக மட்டும் அமையவில்லை. உலக அரசியலில் உருவாகி வரும் புதிய அதிகாரச் சமநிலைகள், உக்ரைன்-ரஷ்யா போர், மத்திய கிழக்கில் ஈரான் தொடர்பான பதற்றம், மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் புதிய வெளிநாட்டுக் கொள்கை ஆகிய அனைத்தும் இந்த மாநாட்டை உலகின் மிக முக்கியமான பாதுகாப்பு நிகழ்வாக அமைந்தன.**

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகள், சீனாவின் வளர்ந்து வரும் இராணுவ சக்தி, இணையத் தாக்குதல்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் ஏவுகணைத் தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற காரணங்களால் பழைய பாதுகாப்புக் கொள்கைகள் போதுமானவை அல்ல என்பது கூட்டணியின் கருத்தாக இருந்தது.

இதன் விளைவாக, ஐரோப்பிய நாடுகளும் கனடாவும் நூற்றுக் கணக்கான பில்லியன் டொலர் அளவிலான கூடுதல் பாதுகாப்பு முதலீடுகளை அறிவித்தன. இது நேட்டோ வரலாற்றிலேயே மிகப்பெரிய பாதுகாப்பு முதலீட்டு உறுதிமொழிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

### உக்ரைன் – ஈரான் நெருக்கடி

நேட்டோ மாநாட்டின் மிக முக்கியமான அரசியல் செய்தி உக்ரைனுக்கான ஆதரவாகும். ரஷ்யாவுடனான போர் தொடரும் நிலையில், உக்ரைனின் வான்வழிப் பாதுகாப்பை வலுப்படுத்துவது அவசியம் என உறுப்பினர் நாடுகள் வலியுறுத்தின. இதன் ஒரு பகுதியாக, அமெரிக்காவின் புகழ்பெற்ற பாட்ரியட் (Patriot) ஏவுகணை எதிர்ப்பு பாதுகாப்பு அமைப்புகளை உக்ரைன் தனது நாட்டிலேயே உற்பத்தி செய்ய அனுமதிக்கும் உரிமத்தை வழங்குவதாக டிரம்ப் அறிவித்தார்.

இது சாதாரண ஆயுத உதவி அல்ல. தொழில்நுட்ப பரிமாற்றத்தின் மூலம் உக்ரைனின் பாதுகாப்புத் தொழில்துறையை நீண்டகாலத்திற்கு வலுப்படுத்தும் முக்கிய நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது. மேலும், ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு பல பில்லியன் யூரோ மதிப்பிலான இராணுவ மற்றும் நிதி உதவிகளை தொடர்ந்து வழங்க உறுதியளித்தன. இதன் மூலம், அமெரிக்காவின் நேரடி செலவு குறைந்தாலும், மேற்கத்திய கூட்டணியின் ஆதரவு தொடரும் என்ற செய்தி ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்டது.

இந்த மாநாட்டை ஆக்கிரமித்த மற்றொரு முக்கிய விடயம் ஈரான் தொடர்பான பதற்றமாகும். அமெரிக்கா ஈரானின் அணு மற்றும் இராணுவ இலக்குகள் மீது தாக்குதல் நடத்திய பின்னர், மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்திருந்தது. இந்த சூழ்நிலையில் டிரம்ப், ஈரானுடன் இருந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவடைந்ததாக அறிவித்தார்.

### துருக்கியுடன் உறவின் புதிய கட்டம்

நேட்டோ பாரம்பரியமாக ஐரோப்பிய பாதுகாப்பை மையமாகக் கொண்ட கூட்டணியாக இருந்தாலும், மத்திய கிழக்கின் பாதுகாப்பு பிரச்சினைகளும் இப்போது அதன் கவனத்திற்கு வந்துள்ளன. எதிர்காலத்தில் அந்தப் பிராந்தியத்தில் நேட்டோவின்



பங்கு அதிகரிக்கலாம் என்ற சாத்தியத்தையும் மாநாட்டில் சில தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதேவேளை மாநாட்டின் மற்றொரு முக்கிய அம்சம் துருக்கி - அமெரிக்க உறவாகும். கடந்த சில ஆண்டுகளில் F-35 போர் விமானத் திட்டம் உள்ளிட்ட பல பிரச்சினைகளால் இரு நாடுகளின் உறவு பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த மாநாட்டில் துருக்கி மீதான சில தடைகளை தளர்த்தவும், இராணுவ ஒத்துழைப்பை மீண்டும் விரிவுபடுத்தவும் அமெரிக்கா தயாராக இருப்பதாக டிரம்ப் குறிப்பிட்டார். இது கருங்கடல், மத்திய கிழக்கு மற்றும் காக்கசஸ் பகுதிகளில் துருக்கியின் மூலோபாய முக்கியத்துவத்தை அமெரிக்கா மீண்டும் உணர்ந்திருப்பதை வெளிப்படுத்துகிறது.

அத்துடன் மாநாட்டின் மிக முக்கியமான அரசியல் அறிக்கையாக நேட்டோ ஒப்பந்தத்தின் அங்க கொள்கை 5 (Article 5) மீதான உறுதிப்பாடு அமைந்தது. ஒரு உறுப்பினர் நாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதல், அனைத்து உறுப்பினர் நாடுகளின் மீதான தாக்குதலாகக் கருதப்படும் என்ற இந்தக் கொள்கை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. கடந்த காலங்களில் டிரம்ப் இந்தக் கொள்கையைப் பற்றிய சந்தேகங்களை எழுப்பியிருந்தாலும், இம்முறை அவர் கூட்டணியின் ஒற்றுமையை வலியுறுத்தியிருப்பது ஐரோப்பிய நாடுகளுக்கு நம்பிக்கையளித்தது.

### ஐரோப்பாவின் புதிய பொறுப்பு

இந்த மாநாடு வெளிப்படுத்திய முக்கியமான உண்மை என்னவென்றால், இனி ஐரோப்பாவின் பாதுகாப்பை முழுமையாக அமெரிக்கா மட்டுமே ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவுக்கு வருகிறது. அமெரிக்கா தொடர்ந்து பாதுகாப்பு வழங்கும் என்றாலும், ஐரோப்பிய நாடுகள் தங்களது இராணுவத் திறன், ஆயுத உற்பத்தி, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் பாதுகாப்பு முதலீட்டை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

இதன் மூலம் நேட்டோ ஒரு அமெரிக்க மைய கூட்டணியிலிருந்து, பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் கூட்டணியாக மாறும் அறிகுறிகள் தென்படுகின்றன. இந்த மாநாடு உலக அரசியலுக்கு பல முக்கியச் செய்திகளை வழங்கியுள்ளது. முதலாவது, ரஷ்யாவுக்கு எதிரான மேற்கத்திய ஒற்றுமை இன்னும் நீடிக்கிறது. இரண்டாவது, உக்ரைன் இன்னும் மேற்கத்திய பாதுகாப்பு அமைப்பின் முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறது.

மூன்றாவது, ஈரான் மற்றும் மத்திய கிழக்கு இனி நேட்டோவின் பாதுகாப்புக் கணக்கீட்டிலும் இடம்பிடித்துள்ளன. நான்காவது, அமெரிக்கா தனது உலகத் தலைமையைத் தொடர விரும்பினாலும், அதன் செலவுகளை கூட்டாளிகள் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது.

2026 நேட்டோ உச்சி மாநாடு ஒரு வழக்கமான இராணுவ மாநாடு அல்ல. இது மேற்கத்திய பாதுகாப்புக் கட்டமைப்பு புதிய யுகத்திற்குள் நுழைந்திருப்பதை அறிவித்த அரசியல் நிகழ்வாக அமைந்தது. டிரம்பின் தலைமையில் அமெரிக்கா, நேட்டோவை விட்டு விலகாமல், அதனை தனது நலன்களுக்கு ஏற்றவாறு மாற்ற முயல்கிறது. அதே நேரத்தில் ஐரோப்பா தன்னிறைவு கொண்ட பாதுகாப்புத் திறனை உருவாக்கும் பாதையில் நகர்கிறது.

உக்ரைன் போர், ஈரான் நெருக்கடி, பாதுகாப்புச் செலவு உயர்வு, தொழில்நுட்ப ஆயுதப் போட்டி மற்றும் கூட்டணியின் உள்கட்டமைப்பு மாற்றங்கள் ஆகிய அனைத்தும் இந்த மாநாட்டின் மூலம் புதிய திசையைப் பெற்றுள்ளன. எனவே, 2026 அங்காரா நேட்டோ உச்சி மாநாடு உலக பாதுகாப்பு அரசியலின் அடுத்த கட்டத்தை வரையறுத்த முக்கிய வரலாற்றுச் சம்பவமாக நினைவுகூரப்படும்.

RECOGNISE LIBERATION TIGERS OF
THAMIL EELAM
AS A LIBERATION ORGANISATION




**லெப். செல்லக்கிளி** - புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான இவர் புகழ்பெற்ற திருநெல்வேலித் தாக்குதலில் வீரச்சாவை அனைத்துக்கொண்டவர்.

**லெப். சீலன்** - ஆரம்பகாலந்தொட்டு இயக்க வளர்சிக்காக தலைவருக்கு உறுதுணையாக இருந்த சீலன் புலிகளின் தாக்குதற் படையணியின் முதலாவது தளபதியாவார். மீசாலையில் சிங்களப் படையினரின் முற்றுகையில் காயப்பட்டு தப்பமுடியாத நிலையில் தன்னைச் சுட்டுவிட்டு ஆயுதத்தோடு தப்பும்படி சக தோழனுக்கு கட்டளையிட்டு புலிகளின் வீர மரபு ஒன்றிற்கு வித்திட்டு வீரச்சாவடைந்தார்.

**ஆனந்த்** - விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினரான ஆனந்த் மீசாலையில் சிங்களப்படையினரின் முற்றுகையில் காயப்பட்டு தப்பமுடியாத நிலையில் மூத்த தளபதி சீலனின் வழியில் தன்னையும் சுட்டுவிட்டு ஆயுதத்தோடு தப்புப்படி சக தோழனுக்கு கட்டனையிட்டு புலிகளின் வீர மரபினை பின்பற்றி வீரச்சாவடைந்தார்.

**விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும், உறுதியையும் அழித்து விட சிங்கள இராணுவத்தால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும், உன்னத இலட்சியப் பற்றும் எங்களுக்கு உண்டு.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# சிறீலங்காச் சிறைச்சாலைப் படுகொலைகள்: மறைக்கப்பட்ட இரத்த வரலாற்றுத் தொடர்ச்சி!

நவீனன்

07.07.2026


தங்கதுரை குட்டிமணி ஜெகன்

ஈழத் தமிழ் மண்ணில் எங்கும் பிணத்திரள்! எங்கும் பிணநெடி!

தங்கதுரை - குட்டிமணி - ஜெகன் உட்பட

37 பேர் படுகொலை!

சிறைக்குள் சிங்களவர்வெறியாட்டம்!

சிறைச்சாலை என்பது ஒரு நாட்டின் சட்ட ஆட்சியின் அடையாளமாக இருக்க வேண்டிய இடமாகும். குற்றம் சாட்டப்பட்டவர்களாக இருந்தாலும், தண்டனை பெற்றவர்களாக இருந்தாலும், மனித உரிமைகளும் உயிர் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டிய இடமே சிறைச்சாலை. ஆனால் இலங்கையின் வரலாற்றில் சில சிறைச்சாலைகள் நீதியின் அடையாளங்களாக அல்லாமல், அரசியல் பழிவாங்கல்கள், இனவாத வன்முறைகள், கைதிகளுக்கிடையிலான மோதல்கள் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளின் தோல்விகளின் சாட்சிகளாக மாறியுள்ளன.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ள அண்மைய வன்முறைச் சம்பவமும் இந்த நீண்டகால வரலாற்றின் மற்றொரு அத்தியாயமாகவே பார்க்கப்படுகிறது. கைதிகளுக்கிடையிலான மோதலில் முப்பது பேர் உயிரிழந்ததாகவும், சிறை பாதுகாவலர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அத்துடன் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தின் உடனடி காரணம் பாதாள உலகக் குழுக்களுக்கிடையிலான மோதல், போதைப்பொருள் வியாபார முரண்பாடு அல்லது உள்கட்டமைப்பு பிரச்சினைகள் என கூறப்பட்டாலும், இலங்கையின் சிறைச்சாலை வரலாற்றை ஆராய்ந்தால் இதுபோன்ற வன்முறைகள் தனிப்பட்ட சம்பவங்கள் அல்ல என்பது தெளிவாகிறது.

## நீர்கொழும்பு சிறைச்சாலை: ஒரு வரலாற்றுச் சுமை

நீர்கொழும்பு சிறைச்சாலை அமைந்துள்ள பகுதி காலனித்துவ வரலாற்றுடன் தொடர்புடையது. டச்சு ஆட்சிக்கால கட்டிட அமைப்புகளுக்குள் அமைந்துள்ள இந்த சிறைச்சாலை, நாட்டின் முக்கியமான தடுப்பு நிலையங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் அருகில் இருப்பதால், குடிவரவு சட்ட மீறல்கள், சட்டவிரோத பயண முயற்சிகள், போலி ஆவணங்கள், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்படுபவர்கள் பெருமளவில் இங்கு அடைக்கப்பட்டுள்ளனர்.



ஒரு காலகட்டத்தில் வெளிநாடுகளுக்கு செல்ல முயன்ற பல தமிழர்கள், குறிப்பாக போர் கால மற்றும் போருக்குப் பிந்தைய சூழ லில், முறையான ஆவணங்கள் இல்லாத காரணத்தால் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். நீதிமன்ற விசாரணைக்காக காத்திருந்த பலருக்கு இந்த சிறைச்சாலை ஒரு இடைக்கால தடுப்பு முகாமாக இருந்தது.

ஆனால் காலப்போக்கில் அதிகமான கைதிகளை குறைந்த வசதிகளுடன் அடைத்து வைக்கும் நிலை உருவானது. சிறைக் கூடத்தை விட பல மடங்கு அதிகமான கைதிகள் அடைக்கப்படுவது, நிர்வாக குறைபாடுகள், போதைப்பொருள் வலையமைப்புகளின் செல்வாக்கு போன்றவை சிறைச்சாலை வன்முறைகளுக்கான சூழலை உருவாக்கின.

## வெலிக்கடை வரலாற்றின் இருண்ட பக்கம்

இலங்கைச் சிறைச்சாலை வரலாற்றில் மிக மோசமான அத்தியாயங்களில் ஒன்றாக வெலிக்கடைச் சிறைச்சாலை படுகொலைகள் குறிப்பிடப்படுகின்றன.

1983 ஜூலை இன வன்முறைகளின் பின்னணியில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இலங்கை இன வரலாற்றில் அழியாத கறையாக உள்ளது.

1983 ஜூலை 25 மற்றும் 27 ஆகிய நாட்களில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் இருந்த தமிழ் கைதிகள் மீது சிங்கள கைதிகளின் குழுக்கள் தாக்குதல் நடத்தின. பாதுகாப்பு அமைப்புகள் உரிய முறையில் தலையிடவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன.

இந்த கொடூர தாக்குதல்களில் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டனர். உயிரிழந்தவர்களில் தமிழ் விடுதலை இயக்கங்களுடன் தொடர்புடைய அரசியல் கைதிகளே இருந்தனர். இந்த சம்பவம் ஒரு சாதாரண சிறை மோதல் அல்ல; இனவாத அரசியல் சூழல் சிறைச்சாலைச் சுவர்களுக்குள் எவ்வாறு பிரதிபலித்தது என்பதற்கான முக்கிய சாட்சியாக அது பார்க்கப்படுகிறது.

1987 ஆம் ஆண்டிலும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக மீண்டும் தாக்குதல் நடத்த முயற்சி இடம்பெற்றதாக முன்னாள் கைதிகளும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பதிவு செய்துள்ளனர். சிறைச்சாலை சுவர்கள் உடைக்கப்பட்டு கைதிகள் மீது தாக்குதல் நடத்தும் அபாயம் ஏற்பட்ட நிலையில், பாதுகாப்புப் படையினர் தலையிட்டு தமிழ் கைதிகளை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றியதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவம் 1983 படுகொலையின் பின்னரும் சிறைச்சாலை அமைப்பில் இன அடிப்படையிலான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்ந்திருந்ததை வெளிப்படுத்தியது.

## 2012 வெலிக்கடை கலவரம்

2012 நவம்பர் 9 ஆம் தேதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் மீண்டும் ஒரு பெரிய கலவரம் ஏற்பட்டது. சட்டவிரோத ஆயுதங்களை தேடும் சிறப்பு நடவடிக்கையின் போது கைதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே ஏற்பட்ட பதற்றம் வன்முறையாக மாறியது.

இந்த சம்பவத்தில் 27 கைதிகள் உயிரிழந்தனர் என்றும், 40 பேர் காயமடைந்தனர் என்றும் அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சம்பவத்திற்குப் பின்னர் விசாரணைக் குழு அமைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அதன் முழுமையான அறிக்கை மற்றும் பரிந்துரைகள் பொதுமக்களுக்கு வெளிப்படையாக தெரியவில்லை என்ற விமர்சனங்கள் எழுந்தன.

இலங்கையின் பல பாதுகாப்பு சம்பவங்களைப் போலவே, சிறைச்சாலை வன்முறைகள் தொடர்பான விசாரணைகளும் பெரும்பாலும் வெளிப்படைத்தன்மை இல்லாமல் முடிவடைவ



தாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

## மகசின் சிறை – தமிழர்களின் கொலைக்களம்

வெலிக்கடை சம்பவங்களுக்குப் பின்னர் தமிழ் அரசியல் கைதிகளையும் ஜேவிபி அரசியல் கைதிகளையும் தனியாக வைத்திருக்க மகசின் சிறைச்சாலை பயன்படுத்தப்பட்டது. இங்கு இன மற்றும் அரசியல் பின்னணிகள் வேறுபட்ட கைதிகள் ஒரே சிறை அமைப்புக்குள் வாழ வேண்டிய சூழல் இருந்தது.

1988 டிசம்பர் மாதம் ஜேவிபி அரசியல் கைதிகள் தங்களது சிறைப் பகுதியை வெடிகுண்டு மூலம் உடைத்து தப்பிச் சென்ற சம்பவம் குறிப்பிடத்தக்கது. அப்போது அருகில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளும் வெளியேற அழைக்கப்பட்டதாகவும், ஆனால் அவர்கள் வெளியேறவில்லை என்றும் முன்னாள் கைதிகள் கூறியுள்ளனர்.

இது அந்தக் காலகட்ட அரசியல் கைதிகளின் வேறுபட்ட நிலைப்பாடுகளையும், சிறைச்சாலைகளுக்குள் நிலவிய பதற்றமான சூழலையும் காட்டுகிறது.

## போகம்பரையில் மலையக தமிழர் சிறை

கண்டி போகம்பரை சிறைச்சாலையும் இலங்கையின் அரசியல் கைதிகள் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ளது. 1987 காலப் பகுதியில் மலையகத் தமிழ் அரசியல் கைதிகள் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் அபாயம் ஏற்பட்டபோது, அவர்களை பாதுகாப்பான முறையில் மகசின் சிறைச்சாலைக்கு மாற்றியதன் மூலம் ஒரு பெரிய மோதல் தவிர்க்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இது சிறைச்சாலைகளில் கைதிகளின் பாதுகாப்பு என்பது நிர்வாக பிரச்சினை மட்டுமல்ல் அரசியல் மற்றும் இன உறவுகளுடனும் தொடர்புடையது என்பதை காட்டுகிறது. சிறீலங்காச் சிறைகளில் தொடரும் பிரச்சினைகள் பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது.

இலங்கையின் சிறைச்சாலை வன்முறைகளை ஆய்வு செய்தால் சில பொதுவான காரணங்கள் மீண்டும் மீண்டும் தோன்றுகின்றன.

## பிந்துனுவேவா தடுப்பு முகாம் படுகொலை



இலங்கை மத்திய மாகாணத்தின் பண்டாரவளை அருகிலுள்ள பிந்துனுவேவா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல், நாட்டின் சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்பு குறித்த கடுமையான கேள்விகளை எழுப்பியது. பிந்துனுவேவா தடுப்பு முகாமில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அப்பாவி தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

2000 ஆம் ஆண்டு அக்டோபர் 25 அன்று, பிந்துனுவேவா கிராமத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும் நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் ஆயுதங்களுடன் தடுப்பு முகாமுக்குள் நுழைந்து கைதிகள் மீது தாக்குதல் நடத்தினர். கற்கள், பொல்லுகள், கத்திகள் உள்ளிட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பலர் கடுமையாகக் காயமடைந்தனர். 27 தமிழ் கைதிகள் உயிரிழந்தனர் பலர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் ஒரு தனிப்பட்ட வன்முறைச் சம்பவமாக மட்டுமல்லாமல், இலங்கையின் நீண்டகால இனமோதலின் பின்னணியில் சிறுபான்மை கைதிகளின் பாதுகாப்பு, சட்டத்தின் ஆட்சி மற்றும் அரச நிறுவனங்களின் பொறுப்பு ஆகியவற்றைச் சுற்றிய விவாதங்களையும் உருவாக்கியது.

சிறைப் படுகொலைகளுக்கை முக்கிய காரணமாக சிறைக் கொள்ளளவை மீறும் கைதிகள் எண்ணிக்கை, போதிய கண்காணிப்பு இல்லாமை, ஊழல் மற்றும் சட்டவிரோத வலையமைப்புகள், அரசியல் கைதிகளின் பாதுகாப்பின்மை, இன மற்றும் அரசியல் பதற்றங்களின் தாக்கம், வெளிப்படையான விசாரணைகள் இல்லாமை ஆகிய பல்வேறு நிலமைகளால் சிறைகளில் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன.

ஆயினும் அரசால் சிறைச்சாலை கலவரங்கள் இடம்பெறும் ஒவ்வொரு முறையும் உடனடி காரணங்கள் மட்டும் பேசப்படுகின்றன. ஆனால் அதன் பின்னால் உள்ள கட்டமைப்பு குறைபாடுகள் குறித்து போதுமான கவனம் செலுத்தப்படுவதில்லை.

நீர்கொழும்புச் சிறைச்சாலை மரணங்கள் இலங்கைக்கு புதிய சம்பவம் அல்ல. அது பல தசாப்தங்களாக தொடரும் ஒரு ஆழமான பிரச்சினையின் புதிய வெளிப்பாடாகும். வெலிக்கடை 1983 படுகொலைகள், 1987 தாக்குதல் முயற்சிகள், 2012 கலவரம், மகசின் மற்றும் போகம்பரை சிறைச்சாலை சம்பவங்கள் என இலங்கையின் சிறைச்சாலை வரலாறு பல இருண்ட பக்கங்களை கொண்டுள்ளது.

ஒரு ஜனநாயக நாட்டின் வலிமை அதன் சிறைச்சாலைகளில் கூட மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கிறது என்பதிலேயே அளவிடப்படுகிறது. கைதிகள் குற்றவாளிகளாக இருந்தாலும் அவர்கள் உயிரிழக்க வேண்டியவர்கள் அல்ல. சட்டத்தின் பாதுகாப்புக்குள் இருக்க வேண்டிய இடமே சிறைச்சாலை. ஆனால் இலங்கையின் அனுபவம் காட்டுவது என்னவென்றால், சிறைச்சாலைச் சுவர்களுக்குள் நடந்த பல மரணங்கள் இன்னும் முழுமையான உண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்காக காத்திருக்கின்றன என்பதே.






## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# ஏவுகணைப் போரின் புதிய யுகம்:
# உக்ரேன் – ஈரான் மேற்குலகிற்கு கூறும் எச்சரிக்கை!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

07.07.2026



**உக்ரேன் , ஈரான் போர் அனுபவங்கள் உலகிற்கு சொல்லும் மிகப்பெரிய பாடம் இதுவாகும். ஒரு நாட்டின் வலிமை அதன் ஆயுதங்களின் எண்ணிக்கையில் மட்டும் இல்லை; அவற்றை தொடர்ந்து உருவாக்கும் திறனிலும், எதிரியின் தாக்குதலை எதிர்கொள்ளும் பொறுமையிலும் உள்ளது. எதிர்காலப் போர்கள் வெறும் நிலப்பரப்பு கைப்பற்றும் போர்களாக இருக்காது. அவை ஏவுகணைகள், ட்ரோன்கள், செயற்கைக்கோள்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்ப ஆதிக்கத்திற்கான போட்டிகளாக இருக்கும்.**

21ஆம் நூற்றாண்டின் போர் முறைமைகள் மிக வேகமாக மாறி வருகின்றன. கடந்த காலங்களில் ஒரு நாட்டின் இராணுவ வலிமை அதன் தரைப்படை எண்ணிக்கை, விமானப்படை ஆதிக்கம் மற்றும் கடற்படை திறன் ஆகியவற்றால் பெரும் பாலும் மதிப்பிடப்பட்டது. ஆனால் இன்றைய உலகில் ஒரு நாட் டின் உண்மையான மூலோபாய வலிமையை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக நீண்ட தூர ஏவுகணைத் திறன் மாறியுள்ளது.

ரஷ்யா-உக்ரேன் போரும், மத்திய கிழக்கில் ஏற்பட்ட தொடர்ச்சி யான பதற்றங்களும், நவீன போரில் ஏவுகணைகளின் முக்கி யத்துவத்தை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளன. எதிரியின் முக் கிய நகரங்கள், இராணுவத் தளங்கள், எரிசக்தி கட்டமைப்புகள் மற்றும் தகவல் தொடர்பு மையங்களை தொலைவில் இருந்த படியே தாக்கும் திறன், ஏவுகணைகளை ஒரு புதிய தலைமுறை ஆயுதமாக மாற்றியுள்ளது.

குறிப்பாக ரஷ்யாவின் இஸ்கந்தர், கின்சால் (Iskander missile system, Kinzhal missile) போன்ற ஏவுகணைகள், நவீன போர்க் களத்தில் மிக முக்கியமான தாக்குதல் கருவிகளாகக் கருதப் படுகின்றன. இவை மிக அதிக வேகத்தில் பயணித்து, எதிரியின் பாதுகாப்பு அமைப்புகளுக்கு மிகக் குறைந்த நேரத்தையே வழங்குகின்றன. இத்தகைய ஏவுகணைகள் நூற்றுக்கணக் கான கிலோகிராம் எடையுள்ள வெடிபொருட்களை சுமந்து செல்லக்கூடியவை. அவற்றின் தாக்குதல் ஒரு தனிப்பட்ட இரா ணுவ இலக்கை அழிப்பதோடு மட்டும் நிற்காது; ஒரு நாட்டின் பொருளாதார மற்றும் உளவியல் கட்டமைப்பையும் பாதிக்கும் திறன் கொண்டது.

ஒரு தலைநகரின் மீது ஒரே இரவில் பல பாலிஸ்டிக் ஏவு கணைகள் வீழும்போது ஏற்படும் தாக்கத்தை வெறும் வெடிப் புகளின் எண்ணிக்கையால் அளவிட முடியாது. மின்சார வலை யமைப்பு, குடிநீர் விநியோகம், போக்குவரத்து அமைப்புகள், அரசு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு ஆகிய அனைத்தும் பாதிக்கப்படலாம். இதனால் ஏவுகணைகள் ஒரு நாட்டின் இராணுவத்தை மட்டுமல்ல, அதன் சமூக அமைப்பை யும் சோதிக்கும் ஆயுதங்களாக மாறியுள்ளன.

## உக்ரேன் வான் பாதுகாப்பு பலவீனம்:

ரஷ்யா-உக்ரேன் போர், நவீன வான் பாதுகாப்பு அமைப் புகளின் முக்கியத்துவத்தையும் அவற்றின் வரம்புகளையும் வெளிப்படுத்தியுள்ளது. உக்ரேன் மேற்கத்திய நாடுகளிட மிருந்து பட்ரியோட் (Patriot missile system) போன்ற அதிநவீன பாதுகாப்பு அமைப்புகளைப் பெற்றுள்ளது. இவை உலகின் மிக முன்னேற்றமான வான் பாதுகாப்பு தொழில்நுட்பங்களில் ஒன் றாக கருதப்படுகின்றன. இருப்பினும், எந்தவொரு பாதுகாப்பு அமைப்புக்கும் எல்லைகள் உள்ளன.

ஒரு நாட்டின் முழு வான்வெளியையும் நூறு சதவீதம் பாது காப்பது நடைமுறையில் மிகவும் கடினமானது. அதற்கு மிகப் பெரிய எண்ணிக்கையிலான ரேடார் அமைப்புகள், இடை மறிப்பு ஏவுகணைகள், பயிற்சி பெற்ற இராணுவப் பணியா ளர்கள் மற்றும் தொடர்ச்சியான நிதி ஆதரவு தேவைப்படுகிறது. இங்கே நவீன போரின் ஒரு முக்கியமான முரண்பாடு வெளிப் படுகிறது. ஒரு தாக்குதல் ஏவுகணையை தயாரிப்பதற்கான செலவு சில நேரங்களில் அதைத் தடுக்க வேண்டிய பாதுகாப்பு ஏவுகணையை விட குறைவாக இருக்கலாம். எதிரி குறைந்த செலவில் பல ஏவுகணைகளை ஏவும்போது, பாதுகாப்பு தரப்பு அதிக விலை கொண்ட இடைமறிப்பு ஏவுகணைகளை பயன் படுத்த வேண்டிய சூழல் உருவாகிறது. இதுவே மேற்கத்திய நாடுகளின் ஆயுதக் கையிருப்பில் அழுத்தத்தை ஏற்படுத் தியுள்ளது.

## ஆயுதக் கையிருப்பு குறைவு

நவீன போர் என்பது தொழில் நுட்பத்தின் போட்டி மட்டுமல்ல, உற்பத்தித் திறனின் போட்டியும் ஆகும். அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் பல ஆண்டுகளாக உலகின் பல பகுதி களில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. உக் ரேனுக்கு வழங்கப்பட்ட ஆயுத உதவிகள், மத்திய கிழக்கு பாது காப்பு நடவடிக்கைகள் மற்றும் தங்களது சொந்த இராணுவத் தேவைகள் ஆகியவை மேற்கத்திய ஆயுத கையிருப்பில் அழுத் தத்தை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக வான் பாதுகாப்பு ஏவுகணைகள் மிக முக்கியமான வளங்களாக உள்ளன. ஒரு பெரிய அளவிலான ஏவுகணைத் தாக்குதலை எதிர்கொள்ள நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக் கணக்கான இடைமறிப்பு ஏவுகணைகள் தேவைப்படலாம். ஆனால் அவற்றை உடனடியாக உற்பத்தி செய்வது எளி தானதல்ல. ஆயுத உற்பத்தி தொழிற்சாலைகளை விரிவுபடுத் துவது, மூலப் பொருட்களைப் பெறுவது, தொழில்நுட்ப நிபு ணர்களை உருவாக்குவது போன்றவை நீண்டகால செயல் முறைகள்.

இதனால் மேற்குலகம் ஒரு முக்கியமான பாடத்தை கற்றுக் கொள்கிறது, அதாவது ஒரு போரை ஆதரிப்பதற்கு ஆயு தங்களை வைத்திருப்பது மட்டும் போதாது; அவற்றை தொடர்ந்து உற்பத்தி செய்யும் தொழில்துறை திறனும் அவசியம்.

## ஈரானின் ஏவுகணை மூலோபாயம்

மத்திய கிழக்கில் ஈரான் நீண்ட காலமாக ஏவுகணை தொழில் நுட்பத்தை தனது பாதுகாப்பு கொள்கையின் மையமாக வைத் துள்ளது. பாரம்பரிய இராணுவ வலிமையில் அமெரிக்கா போன்ற நாடுகளுடன் நேரடியாக போட்டியிட முடியாத சூழலில், ஈரான் குறைந்த செலவில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களில் முதலீடு செய்தது. நீண்ட தூர ஏவுகணைகள், ட்ரோன்கள் மற்றும் கடல் வழித் தடங்களை கட்டுப்படுத்தும் திறன் ஆகியவை அதன் முக்கியமான மூலோபாய கருவிகளாக மாறின.

இதன் பின்னணியில் உள்ள சிந்தனை தெளிவானது. பெரிய சக்தியை சம அளவில் எதிர்கொள்ள முடியாத நாடுகள், எதிரி யின் பலவீனமான பகுதிகளை குறிவைக்கும் மாற்று ஆயு தங்களை உருவாக்குகின்றன. ஈரானின் ஏவுகணை திறன், அதன் எதிரிகளுக்கு ஒரு தடுப்பு சக்தியாக செயல்படுகிறது. குறிப்பாக உலக எரிசக்தி விநியோகத்தில் முக்கிய பங்கு வகிக் கும் ஹோர்முஷ் நீரிணை தொடர்பான அச்சுறுத்தல்கள், மத்திய கிழக்கில் எந்தவொரு பெரிய மோதலும் உலக பொருளா தாரத்தை பாதிக்கக்கூடியது என்பதை நினைவூட்டுகின்றன.

சில இராணுவ ஆய்வாளர்கள், தற்போதைய ஆயுதக் கை யிருப்பு நிலை மற்றும் பல்வேறு உலகளாவிய சவால்கள் கார ணமாக மேற்கத்திய நாடுகள் எதிர்காலத்தில் பெரிய அளவி லான மோதல்களில் ஈடுபடுவதற்கு அதிகமாக சிந்திக்க வேண் டிய நிலை உருவாகும் எனக் கருதுகின்றனர். ஆனால் ஒரு நாட்டின் வெளிநாட்டு கொள்கை ஆயுதக் கையிருப்பால் மட்டும் தீர்மானிக்கப்படாது. தேசிய நலன், அரசியல் அழுத்தம், கூட் டணி உறவுகள் மற்றும் எதிரியின் நடவடிக்கைகள் போன்ற பல காரணிகள் முடிவுகளை நிர்ணயிக்கின்றன.

இருப்பினும், சமீபத்திய இரு போர்கள் ஒரு உண்மையை வெளிப்படுத்தியுள்ளன. நவீன போரில் வெற்றி பெற தொழில் நுட்பம் மட்டும் போதாது; உற்பத்தி திறன், பொருளாதார வலிமை மற்றும் நீண்டகால போராட்டத் திறனும் அவசியம் என்பதை வலியுறுத்தி உள்ளது.

## புதிய உலக இராணுவ சமநிலை

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலக சக்திகள் பெரும் பாலும் அணு ஆயுதங்கள், விமானப்படை மற்றும் கடற்படை ஆதிக்கத்தை மையமாகக் கொண்டிருந்தன. ஆனால் இன்று ஏவுகணைகள், ட்ரோன்கள், செயற்கைக்கோள் கண்காணிப்பு மற்றும் சைபர் போர் ஆகியவை புதிய இராணுவ சமநிலையை உருவாக்குகின்றன. சிறிய நாடுகளும் குறைந்த செலவில் உருவாக்கப்படும் தொழில்நுட்ப ஆயுதங்களின் மூலம் பெரிய சக்திகளுக்கு சவால் விடுக்க முடிகிறது. இது உலக பாதுகாப்பு அமைப்பில் ஒரு முக்கியமான மாற்றமாகும்.

உக்ரேன், ஈரான் போர் அனுபவங்கள் உலகிற்கு சொல்லும் மிகப்பெரிய பாடம் இதுவாகும். ஒரு நாட்டின் வலிமை அதன் ஆயுதங்களின் எண்ணிக்கையில் மட்டும் இல்லை; அவற்றை தொடர்ந்து உருவாக்கும் திறனிலும், எதிரியின் தாக்குதலை எதிர்கொள்ளும் பொறுமையிலும் உள்ளது. எதிர்காலப் போர்கள் வெறும் நிலப்பரப்பு கைப்பற்றும் போர்களாக இருக்- காது. அவை ஏவுகணைகள், ட்ரோன்கள், செயற்கைக் கோள்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்ப ஆதிக்கத்திற்கான போட்டிகளாக இருக்கும்.

உலக அரசியல் இன்று ஒரு புதிய கட்டத்தை நோக்கி நகர்கிறது. ஏவுகணைகள் வெறும் தாக்குதல் ஆயுதங்கள் அல்ல; அவை நாடுகளின் அரசியல் செல்வாக்கையும், மூலோபாயத் தடுப்பு சக்தியையும் நிர்ணயிக்கும் கருவிகளாக மாறிவிட்டன. போரின் இயல்பு மாறிவிட்டது. இனி வெற்றி பெறுவது அதிகமான வீரர்- களைக் கொண்ட நாடு அல்; நீண்டகாலமாக போராடவும், உற்பத்தி செய்யவும், தன்னைப் பாதுகாக்கவும் கூடிய நாடாகும்.





# வானில் உக்ரைன் ஆதிக்கம்: நிலத்தில் ரஷ்யா முன்னேற்றம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா-

05.07.2026

உக்ரைன்-ரஷ்யா போர் இன்று வெறும் இரு நாடுகளுக்கிடையிலான இராணுவ மோதலாக மட்டும் இல்லை. அது உலக சக்திச் சமநிலையை மறுவரையறை செய்யும் புவிசார் அரசியல் போட்டியாக மாறியுள்ளது. 2022 ஆம் ஆண்டு ரஷ்யாவின் முழுமையான படையெடுப்புடன் தொடங்கிய இந்தப் போர், நான்கு ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் முடிவுக்கான தெளிவான அறிகுறிகளை வெளிப்படுத்தவில்லை. மாறாக, இது நீண்டகால தேய்மானப் போராக (War of Attrition) மாறியுள்ளது. இதில் யார் விரைவாக வெற்றி பெறுகிறார்கள் என்பது முக்கியமல்ல யார் அதிக காலம் பொருளாதார, இராணுவ மற்றும் அரசியல் அழுத்தங்களைத் தாங்குகிறார்கள் என்பதே முடிவை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக உருவெடுத்துள்ளது.

சமீபத்திய மாதங்களில் போரின் களநிலவரம் ஒரு புதிய போக்கை வெளிப்படுத்துகிறது. வான்வழித் தாக்குதல்கள், ட்ரோன் தொழில்நுட்பம் மற்றும் நீண்ட தூர ஏவுகணைப் பயன்பாட்டில் உக்ரைன் குறிப்பிடத்தக்க திறனை வெளிப்படுத்தி வருகிறது. அதேநேரத்தில், நிலப்பரப்பில் ரஷ்யா மெதுவாகவும் தொடர்ந்து முன்னேறி வருகிறது. இந்த இரட்டை நிலையே இன்று போரின் முக்கிய முரண்பாடாக மாறியுள்ளது.

டொனெஸ்க் மாகாணத்தில் அமைந்துள்ள கோஸ்தன்தீவ்கா மற்றும் அதைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வளையங்கள் இந்தப் போரின் முக்கிய மையங்களில் ஒன்றாக உள்ளன. 2014 ஆம் ஆண்டு டொன்பாஸ் மோதல்கள் ஆரம்பித்த பின்னர், உக்ரைன் இந்தப் பகுதியை பல அடுக்குகள் கொண்ட பாதுகாப்புக் கோட்டையாக மாற்றியது. பதுங்குக் குழிகள், சுரங்க வெடிகள், நகர்ப்புற பாதுகாப்பு அமைப்புகள், பீரங்கி நிலைகள் மற்றும் பல ஆண்டுகள் கட்டமைக்கப்பட்ட பாதுகாப்பு வலையமைப்புகள் காரணமாக, இந்தப் பகுதியை உடைப்பது ரஷ்யாவுக்கு மிகவும் கடினமானதாக இருந்தது. எனினும், அண்மைக்காலங்களில் ரஷ்யா தனது தாக்குதல் முறையை மாற்றியுள்ளது. பெரிய கவசப்படை தாக்குதல்களுக்கு பதிலாக, சிறிய தாக்குதல் குழுக்கள், தொடர்ச்சியான ட்ரோன் கண்காணிப்பு, துல்லியமான பீரங்கித் தாக்குதல்கள் மற்றும் அதிகமான மனிதவளத்தைப் பயன்படுத்தி, உக்ரைனின் பாதுகாப்பு வரிகளை மெதுவாகச் சிதைத்து வருகிறது. சில பகுதிகளில் முன்னேற்றம் ஏற்பட்டதாக ரஷ்யா கூறுகிறது உக்ரைன் அவற்றில் சிலவற்றை மறுக்கிறது. இருப்பினும், போர்க்களத்தில் ரஷ்யா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருவது மறுக்க முடியாத உண்மையாகும்.

## வானில் உக்ரைன் ஆதிக்கம்:

மறுபுறம், வான்வழிப் போரில் உக்ரைன் தனது திறனை உலகிற்கு நிரூபித்து வருகிறது. மேற்கத்திய நாடுகள் வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகள், மேம்பட்ட ட்ரோன்கள் மற்றும் நவீன இலக்கு கண்டறிதல் தொழில் நுட்பங்களின் உதவியுடன், ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், ஆயுதக் கிடங்குகள், விமானத் தளங்கள் மற்றும் இராணுவத் தளவாட மையங்கள் மீது பல தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.



இத்தாக்குதல்கள் ரஷ்யாவின் இராணுவ விநியோகச் சங்கிலிக்கு அழுத்தத்தை ஏற்படுத்தினாலும், அவை உடனடியாக போர்க்களத்தில் நிலப்பரப்பை மீட்கும் வெற்றியாக மாறவில்லை. இதுவே நவீன போரின் உண்மையை வெளிப்படுத்துகிறது. வானில் தொழில்நுட்ப முன்னிலை பெற்றிருப்பது மட்டுமே போதுமானதல்ல. அரசியல் ரீதியாக வெற்றியை நிர்ணயிப்பது, இறுதியில் எந்த தரப்பு நிலப்பரப்பை கட்டுப்படுத்துகிறது என்பதில்தான் உள்ளது.

ரஷ்யாவின் தற்போதைய போர் உத்தி தெளிவானது. விரைவான வெற்றியைத் தேடுவதற்குப் பதிலாக, உக்ரைனின் மனிதவளம், ஆயுதக் களஞ்சியம் மற்றும் பொருளாதாரத்தை மெதுவாகத் தேய்க்கும் நீண்டகால அணுகுமுறையை அது பின்பற்றுகிறது. இதற்காக மிகப்பெரிய இராணுவ உற்பத்தி, தொடர்ந்து நடைபெறும் ஆள்சேர்ப்பு மற்றும் பாதுகாப்புத் தொழிற்துறையின் விரிவாக்கம் ஆகியவற்றை மாஸ்கோ முன்னெடுத்து வருகிறது.

மேற்கத்திய பொருளாதாரத் தடைகள் ரஷ்யாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இருப்பினும், அந்தப் பாதிப்பு கிரெம்ளின் எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருக்கும் என்ற மேற்கத்திய கணிப்புகள் முழுமையாக நிறைவேறவில்லை. சீனா, இந்தியா, துருக்கி உள்ளிட்ட நாடுகளுடனான வர்த்தக உறவுகள், குறிப்பாக தள்ளுபடி விலையில் எண்ணெய் ஏற்றுமதி, ரஷ்யாவுக்கு தொடர்ந்து வருமானத்தை வழங்கி வருகின்றன. அதேசமயம், பாதுகாப்புத் துறைக்கு முன்னுரிமை அளித்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்திருப்பதும், நீண்ட காலப் போரைத் தாங்கும் திறனை அதிகரித்துள்ளது.

## ஐரோப்பிய இராணுவ உதவி:

இதற்கு மாறாக, உக்ரைனின் இராணுவ சக்தி பெரும்பாலும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் இராணுவ உதவியைச் சார்ந்துள்ளது. நிதி உதவிகள், வான் பாதுகாப்பு அமைப்புகள், பீரங்கிக் குண்டுகள், ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் ஆகியவற்றின் தொடர்ச்சியான விநியோகம் இல்லையெனில், உக்ரைனின் பாதுகாப்புத் திறன் குறையக்கூடும். எனவே, கீவின் இராணுவ வெற்றிகள் போர்க்களத்தில் மட்டுமல்ல, மேற் கத்திய நாடுகளின் அரசியல் ஆதரவைத் தொடர்ந்து தக்கவைத் துக்கொள்ளும் தகவல் போரின் ஒரு பகுதியாகவும் விளங் குகின்றன.

இந்தப் போர் நேட்டோவின் எதிர்காலத்தையும் மாற்றியுள்ளது. ஒருகாலத்தில் உள்நாட்டு கருத்து வேறுபாடுகளால் பலவீனமடைந்ததாகக் கருதப்பட்ட நேட்டோ, இன்று மீண்டும் ஒருங்கிணைந்த பாதுகாப்புக் கூட்டணியாக உருவெடுத்துள்ளது. வட ஐரோப்பாவில் புதிய உறுப்பினர்கள் இணைந்துள்ளதுடன், கிழக்கு ஐரோப்பாவில் நிரந்தர இராணுவப் பிரசன்னமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவின் நடவடிக்கைகள் நேட்டோவைப் பலவீனப்படுத்தவில்லை மாறாக, அதன் ஒற்றுமையை வலுப்படுத்தியுள்ளன என்பதே பல ஆய்வாளர்களின் மதிப்பீடு.

**சமீபத்திய மாதங்களில் உக்ரேன் போரின் களநிலவரம் ஒரு புதிய போக்கை வெளிப்படுத்துகிறது. வான்வழித் தாக்குதல்கள், ட்ரோன் தொழில்நுட்பம் மற்றும் நீண்ட தூர ஏவுகணைப் பயன்பாட்டில் உக்ரைன் குறிப்பிடத் தக்க திறனை வெளிப்படுத்தி வருகிறது. அதேநேரத்தில், நிலப்பரப்பில் ரஷ்யா மெதுவாகவும் தொடர்ந்து முன்னேறி வருகிறது. இந்த இரட்டை நிலையே இன்று போரின் முக்கிய முரண்பாடாக மாறியுள்ளது.**

அதேவேளை, அமெரிக்காவின் உள்நாட்டு அரசியல் இந்தப் போரின் எதிர்காலத்தில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அமெரிக்க நிர்வாகத்தில் ஏற்படும் மாற்றங்கள், உக்ரைனுக்கான நிதி மற்றும் ஆயுத உதவிகளின் அளவை மாற்றக்கூடும். ஐரோப்பிய நாடுகளும் தங்களது பாதுகாப்புச் செலவுகளை அதிகரித்து வருகின்றன. இதனால், ஐரோப்பா தன்னுடைய பாதுகாப்புப் பொறுப்பை அமெரிக்காவிலிருந்து படிப்படியாகப் பகிர்ந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

அதேவேளை சீனாவின் நிலைப்பாடும் குறிப்பிடத்தக்கது. சீனா நேரடியாக போரில் ஈடுபடவில்லை என்றாலும், ரஷ்யாவுடன் பொருளாதார உறவுகளைத் தொடர்வதன் மூலம் மாஸ்கோவுக்கு மறைமுக ஆதரவாக உள்ளது என்ற குற்றச்சாட்டுகள் மேற்கத்திய நாடுகளிடமிருந்து எழுகின்றன. அதேநேரத்தில், உலகளாவிய வர்த்தக நிலைத்தன்மையையும் மேற்கத்திய சந்தைகளுடனான உறவுகளையும் இழக்காமல் இருப்பதில் பெய்ஜிங் கவனமாக செயல்படுகிறது. எனவே, சீனா இந்தப் போரில் சமநிலையான அணுகுமுறையைப் பின்பற்ற முயல்கிறது.

இந்தப் போர் உலகளாவிய ஆற்றல் சந்தைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்ய எண்ணெய் மற்றும் எரிவாயுவின் மீது ஐரோப்பா கொண்டிருந்த சார்பைக் குறைக்க முயற்சித்ததன் விளைவாக, திரவ இயற்கை எரிவாயு (LNG) சந்தை விரிவடைந்தது. மத்திய கிழக்கு, அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகள் புதிய ஆற்றல் வழங்குநர்களாக முக்கியத்துவம் பெற்றன. இதேநேரத்தில், ரஷ்யா தனது ஏற்றுமதி சந்தைகளை ஆசியாவை நோக்கி மாற்றியது. இதனால் உலக ஆற்றல் வர்த்தக வரைபடமே மறுசீரமைக்கப்பட்டு வருகிறது.

## போரின் மனிதாபிமான விளைவு:

போரின் மனிதாபிமான விளைவுகளும் மிகப்பெரியவை. இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். பல நகரங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன. உக்ரைனின் மறுசீரமைப்புக்கு பல நூறு பில்லியன் டொலர்கள்





தேவைப்படும் என்று சர்வதேச அமைப்புகள் மதிப்பிடுகின்றன. ரஷ்யாவும் மனிதவள இழப்புகள், பொருளாதாரச் செலவுகள் மற்றும் நீடித்த சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்கிறது.

இத்தகைய சூழலில், அமைதிப் பேச்சுவார்த்தை குறித்து மீண்டும் உலக கவனம் திரும்பியுள்ளது. இருப்பினும், இரு தரப்பினரின் அடிப்படை அரசியல் நிலைப்பாடுகள் இன்னும் மிகவும் விலகியே உள்ளன. ரஷ்யா தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கான அரசியல் அங்கீகாரத்தை விரும்புகிறது. உக்ரைன் தனது சர்வதேச அங்கீகாரம் பெற்ற எல்லைகளை மீட்டெடுப்பதே இலக்கு என்று தொடர்ந்து வலியுறுத்துகிறது. இந்த இரண்டு நிலைப்பாடுகளுக்கிடையிலான இடைவெளி குறையாத வரை, விரைவான அமைதி ஏற்படுவது சாத்தியமற்றதாகத் தெரிகிறது.

எனினும், வரலாறு ஒரு முக்கியமான பாடத்தை கற்பிக்கிறது. பெரும்பாலான நீண்டகாலப் போர்கள் முழுமையான இராணுவ வெற்றியால் அல்ல, அரசியல் சமரசங்களால் முடிவடைந்துள்ளன. போர்க்களத்தில் இரு தரப்பும் தங்களது முழு இலக்குகளை அடைய முடியாது என்பதை உணரும்போதுதான் பேச்சுவார்த்தைகளுக்கு உண்மையான வாய்ப்பு உருவாகிறது. உக்ரைன் போரும் அந்த நிலையைக் நோக்கி மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கலாம் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இறுதியாக, இந்தப் போர் ஒரு முக்கியமான உண்மையை உலகிற்கு மீண்டும் நினைவூட்டுகிறது. நவீன போரில் ட்ரோன்கள், செயற்கை நுண்ணறிவு, செயற்கைக்கோள் தகவல் மற்றும் துல்லியமான ஏவுகணைகள் போரின் வடிவத்தை மாற்றியிருந்தாலும், அரசியல் முடிவுகளை நிர்ணயிப்பது இன்னும் நிலப்பரப்பின் கட்டுப்பாடும், பொருளாதார சகிப்புத்தன்மையும், சர்வதேச கூட்டணிகளின் நிலைத்தன்மையும்தான்.

வானில் உக்ரைன் தொடர்ந்து தாக்கும் திறனை வெளிப்படுத்துகிறது. நிலத்தில் ரஷ்யா மெதுவாக முன்னேற முயல்கிறது. இந்த இரு போக்குகளும் ஒன்றாகவே நீடித்தால், போரின் அடுத்த கட்டம் பேச்சுவார்த்தை மேசையில் தீர்மானிக்கப்படும் வாய்ப்பு அதிகரிக்கும். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை எப்போது தொடங்கும், எந்த நிபந்தனைகளில் நடைபெறும், யார் அதிக அரசியல் பலத்துடன் அதில் அமர்வார்கள் என்பதுதான் உலக அரசியலின் மிக முக்கியமான கேள்வியாக உள்ளது.

அமைதி என்பது வெறும் துப்பாக்கிச் சூடு நிறுத்தப்படுவதல்ல. அது பாதுகாப்பு, இறையாண்மை, பிராந்திய நிலைத்தன்மை மற்றும் நீடித்த அரசியல் சமரசத்தின் மீது கட்டமைக்கப்பட வேண்டும். அந்த இலக்கை அடையும் வரை, உக்ரைன் போர் உலக புவிசார் அரசியலின் மையச் சவாலாகவே தொடரும்.

## கனத்த நினைவு சுமந்து 43 ஆண்டுகள்

# யூலைப் படுகொலை



தங்கத்துரை குட்டிமணி ஜெகன்

வெலிக்கடைச் சிறையில் இனவெறியின் கோரத் தாக்குதலுக்கு
நெஞ்சுகொடுத்து, மண்ணில் வீரவிதையாகிவிட்ட தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன்,
நடேசதாசன், தேவன், சிவபாதம் மாஸ்ரர், சிறீகுமார் ஆகிய மாவீரருக்கு
**வீரவணக்கம்**

## கறுப்பு யூலையின் ஆண்டுகள் நீண்டன...

தாரது கொதிக்கும் தட்டினில் தமிழனைக்...
கோர வெறியுடன் கொன்றது சிங்களம்!
பாரதிர்ந்திட கத்திய மங்கையைச்
சோரவே செய்தனர் சிங்களக் காடையர்!
மண்ணினைப் பார்ப்பேன் மறையுமுன் என்றவன்
கண்ணினைக் கழற்றிக் காலால் மிதித்தனர்!
என்னத்தைச் செய்வோம் என்ற தமிழினம்
கன்னத்தில் கைவைத்துக் காத்துக் கிடந்தது!
கறுப்பு யூலையின் ஆண்டுகள் நீண்டன!
வீர விதையொன்று இம்மண்ணில் நீண்டுளர்ந்தது!
கோரவெறியினைக் கொண்ட சிங்ளம் நின்று
திகைத்தது!
வெறுப்புடன் பார்த்த தமிழனைச் சிங்களம்
வெறித்துப் பார்த்தது,

“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்” சங்கத்தமிழ்



# யுத்தம் பருகிய தமிழீழம்

சிதைந்து கிடக்கும்
செம்மண் வீதிகளில்,
இன்னமும் காயாத
குருதியின் ஈரம்.
வடுக்கள் சுமந்த
பனைமரத்து உச்சிகளில்,
கூடிழந்து தவிக்கும்
குருவிகளின் ராகம்.
நெருப்பு மழையில்
நனைந்த தெருக்கள்,
சாம்பல் மேடாய்
சரிந்த கனவுகள்.
பிள்ளையைத் தேடும்
தாயின் கதறல்,
இன்னமும் ஓயவில்லை
அந்தக் கடற்கரை அலறல்.
முள்வேலிப் பின்னால்
முடங்கிய கவிதைகள்,
கண்ணீரில் கரையும்
தமிழீழத்து இரவுகள்.
இழந்தவை கோடி,
இறந்தவை ஈழ நாகரிகம்,
ஆனாலும்...
அணையாமல் எரிகிறது
மீண்டெழும் நம்பிக்கை சுடர்!

குறிப்பு: துயரங்களின் சாம்பலில் இருந்தும், புதியதோர் விடியலை நோக்கி ஈழத் தமிழ் நெஞ்சங்கள் என்றும் வீறுகொண்டு எழும் என்ற நம்பிக்கையோடு இக்கவிதை சமர்ப்பணம். – சு.லோஜிதன் –

# ஜெர்மனி டிரம்பின் கோரிக்கையை நிராகரித்தது!

# நேட்டோவில் உருவாகும் புதிய அதிகார சமநிலை

ஐங்கரன் விக்கினேஸ்வரா

04.07.2026

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உருவான மேற்கத்திய பாதுகாப்புக் கட்டமைப்பில் மிக முக்கியமான தூணாக விளங்குவது வட அத்திலாந்திய ஒப்பந்த அமைப்பான நேட்டோ (NATO) ஆகும். ஏறத்தாழ ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக அமெரிக்கா தலைமையிலான இந்தக் கூட்டணி, சோவியத் ஒன்றியத்தைத் தடுப்பதிலிருந்து தொடங்கி, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், பால்கன் மோதல்கள், ஆப்கானிஸ்தான் போர், இன்று ரஷ்யா–உக்ரைன் போர் வரை உலக அரசியலில் முக்கிய பங்கு வகித்துள்ளது.

ஆனால், சமீபத்திய அரசியல் முன்னேற்றங்கள் நேட்டோவின் எதிர்காலம் குறித்து புதிய கேள்விகளை எழுப்பியுள்ளன. குறிப்பாக, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் “America First” கொள்கை மீண்டும் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையின் மையமாக மாறியுள்ள நிலையில், நேட்டோ அமெரிக்காவின் அரசியல் மற்றும் பாதுகாப்பு நலன்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமா, அல்லது அனைத்து உறுப்பினர்களின் சம உரிமை மற்றும் கூட்டு பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட சுயாதீன கூட்டணியாகத் தொடர வேண்டுமா என்ற விவாதம் தீவிரமடைந்துள்ளது.

இந்தப் பின்னணியில் ஜெர்மனி எடுத்துள்ள நிலைப்பாடு, வெறும் இரு நாடுகளுக்கிடையேயான கருத்து வேறுபாடு அல்ல. அது மேற்கத்திய உலகின் எதிர்கால அதிகாரச் சமநிலை, ஐரோப்பிய பாதுகாப்பு, அமெரிக்காவின் உலகத் தலைமையுரிமை மற்றும் நேட்டோவின் அடிப்படை அடையாளம் ஆகியவற்றைத் தொடும் ஒரு வரலாற்றுப் பரிமாணம் கொண்ட அரசியல் விவாதமாக மாறியுள்ளது.

### நேட்டோ அமெரிக்காவின் இராணுவமா?

நேட்டோ ஒரு நாட்டின் இராணுவமா, அல்லது கூட்டு பாதுகாப்பு அமைப்பா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. 1949 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் விரிவாக்கத்தைத் தடுக்க அமெரிக்கா, கனடா மற்றும் மேற்கத்திய ஐரோப்பிய நாடுகள் இணைந்து நேட்டோவை உருவாக்கின. அதன் மையக் கொள்கையின்படி, ஒரு உறுப்பினர் நாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதல், அனைத்து உறுப்பினர்களின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாகக் கருதப்படும்.

இதுவே நேட்டோவை உலகின் மிகவும் வலிமையான கூட்டு பாதுகாப்பு அமைப்பாக மாற்றியது. இருப்பினும், அதன் இராணுவ வலிமையின் பெரும்பகுதியை அமெரிக்கா வழங்குவதால், பலர் நேட்டோவை அமெரிக்காவின் நீட்சியாகக் கருதும் நிலையும் உருவானது. ஆனால் சட்டரீதியாகவும் அமைப்புரீதியாகவும் நேட்டோ எந்த ஒரு நாட்டின் கட்டுப்பாட்டிலும் இயங்குவதில்லை. ஒவ்வொரு உறுப்பினருக்கும் சம வாக்குரிமை உண்டு. முக்கிய முடிவுகள் ஒருமித்த ஒப்புதலின் அடிப்படையில்தான் எடுக்கப்படுகின்றன. இதுவே ஜெர்மனி உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தும் அடிப்படைக் கொள்கையாகும்.

### டிரம்ப் –America First

டொனால்ட் டிரம்ப் தனது முதல் ஆட்சிக் காலத்திலிருந்தே நேட்டோ குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வந்தார். அவரது முக்கிய வாதம் ஒன்றே – அமெரிக்கா தனது கூட்டாளிகளின் பாதுகாப்பிற்காக அளவுக்கு மீறிய செலவினை மேற்கொள்கிறது. அவரது பார்வையில், பல ஐரோப்பிய நாடுகள் தங்களது பாதுகாப்புச் செலவுகளை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 2 சதவீதம் என்ற நேட்டோ இலக்கை எட்டாமல் இருந்தபோதிலும், அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தரவாதத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தன.

இதனால் அவர் தொடர்ந்து மூன்று முக்கியமான விடயங்களை முன்வைத்தார். முதலாவது, ஐரோப்பிய நாடுகள் தங்களது பாதுகாப்புச் செலவுகளை அதிகரிக்க வேண்டும். இரண்டாவது, அமெரிக்கா இனிமேல் உலகின் “பாதுகாப்பு காவலர்” ஆக இருக்க முடியாது. மூன்றாவது, அமெரிக்கா அதிக சுமையை ஏற்றுக்கொள்ளும் நிலையில், நேட்டோ அமெரிக்காவின் மூலோபாய முன்னுரிமைகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டும். இந்த அணுகுமுறையே ஐரோப்பிய தலைநகரங்களில் கவலையை ஏற்படுத்தியது.

ஆயினும் ஜெர்மனியின் பார்வையில், இந்தக் கருத்து நேட்டோவின் அரசியல் அடையாளத்தையே மாற்றும் முயற்சியாகக் கருதப்படுகிறது. ஜெர்மனி வலியுறுத்துவது மிகவும் தெளிவானது. நேட்டோ என்பது அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையை செயல்படுத்தும் கருவி அல்ல; அது அனைத்து உறுப்பினர்களின் சம உரிமையைக் கொண்ட கூட்டு பாதுகாப்பு அமைப்பாகவே தொடர வேண்டும்.

இதற்குப் பின்னால் வரலாற்று அனுபவமும் உள்ளது. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, ஒரே நாட்டின் ஆதிக்கம் ஐரோப்பாவிற்கு எவ்வளவு ஆபத்தானது என்பதை ஜெர்மனி நன்கு



உலக அரசியல் இனி ஒரே வல்லரசின் ஆதிக்கத்தில் இயங்கும் அமைப்பாக இல்லாமல், பல மையங்களைக் கொண்ட அதிகாரச் சமநிலையை நோக்கி நகர்கிறது. அந்த மாற்றத்தின் மையத்தில் நேட்டோவும், அமெரிக்கா–ஜெர்மனி உறவும், ஐரோப்பிய பாதுகாப்புத் தன்னாட்சியும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. நேட்டோ அமெரிக்காவுக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. அதேவேளை ஜெர்மனி டிரம்பின் கோரிக்கையை நிராகரித்தமை, மாறிவரும் மேற்கத்திய கூட்டணியின் அரசியல் சூழலை வெளிப்படுத்துகிறது.

உணர்ந்தது. அதனால் பல்தரப்பு ஒத்துழைப்பு, சர்வதேச சட்டம் மற்றும் கூட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றையே அதன் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையாகக் கொண்டு வந்துள்ளது.

எனவே, நேட்டோ எந்த ஒரு நாட்டின் அரசியல் விருப்பத்திற்கு உட்பட்ட அமைப்பாக மாறக் கூடாது என்பதில் ஜெர்மனி உறுதியுடன் உள்ளது. 2022 ஆம் ஆண்டு தொடங்கிய ரஷ்யா–உக்ரைன் போர் ஐரோப்பிய பாதுகாப்புச் சூழலை முற்றிலும் மாற்றியது. இந்தப் போர் தொடங்கிய போது, அமெரிக்காவின் இராணுவ உதவி, உளவுத்துறை ஒத்துழைப்பு மற்றும் ஆயுத ஆதரவு இல்லாமல் ஐரோப்பா பாதுகாப்பை உறுதிப்படுத்துவது கடினம் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனால், போர் நீடித்தபோது புதிய கேள்விகள் எழுந்தன.








### ரஷ்யா – உக்ரைன் போர் ஏற்படுத்திய புதிய சிந்தனை:

அமெரிக்காவில் அரசியல் மாற்றம் ஏற்பட்டால் என்ன ஆகும்? எதிர்கால அதிபர் உக்ரைனுக்கான ஆதரவை குறைத்தால் என்ன? அமெரிக்கா தனது கவனத்தை இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கு மாற்றினால் ஐரோப்பாவின் பாதுகாப்பை யார் உறுதி செய்வார்கள்? இந்தக் கேள்விகளுக்கான பதிலாகவே “European Strategic Autonomy” அல்லது “ஐரோப்பிய மூலோபாய சுயாட்சி” என்ற கருத்து வலுப்பெற்றது.

அதாவது, அமெரிக்காவுடன் கூட்டணியைத் தொடர்ந்தாலும், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத் தொழில்துறையில் ஐரோப்பா தன்னிறைவை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் வேகமடைந்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு பல தசாப்தங்களாக மிகக் குறைந்த இராணுவ முதலீட்டுடன் இருந்த



ஜெர்மனி, தற்போது தனது பாதுகாப்புக் கொள்கையில் வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்புச் செலவுகள் பல பில்லியன் யூரோக்களால் உயர்த்தப்பட்டுள்ளன. நவீன போர் விமானங்கள், ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள், டாங்கிகள் மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு கட்டமைப்புகளில் பெரும் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனுடன், ஜெர்மனியின் பாதுகாப்புத் தொழில்துறையும் விரிவாக்கப்பட்டு, ஐரோப்பிய பாதுகாப்பு உற்பத்தியில் முன்னணி பங்கு வகிக்கும் நோக்கமும் உருவாகியுள்ளது. இது அமெரிக்காவுக்கு எதிரான நடவடிக்கை அல்ல. மாறாக, அமெரிக்காவை மட்டுமே சார்ந்திருக்கும் பாதுகாப்பு மாதிரியில் இருந்து ஐரோப்பா வெளியேற முயல்கிறது என்பதற்கான அறிகுறியாகும்.

இன்றைய உலக அரசியல் முன்னுரிமைகள் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் ஒன்றாக இல்லை. அமெரிக்காவின் முக்கிய கவனம் சீனாவின் எழுச்சி, இந்தோ-பசிபிக் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு போட்டி மற்றும் உலக தொழில்நுட்ப மேலாதிக்கம் ஆகியவற்றில் உள்ளது.

ஆனால் ஐரோப்பாவின் உடனடி சவால்கள் ரஷ்யா, உக்ரைன், எரிசக்தி பாதுகாப்பு, குடியேற்றம் மற்றும் பொருளாதார மந்த நிலை ஆகியவையாக உள்ளன. இதனால் இரு தரப்பினரின் பாதுகாப்பு முன்னுரிமைகளில் இயல்பான வேறுபாடு உருவாகியுள்ளது.

### ஐரோப்பாவின் இரட்டைத் தூண்கள்:

பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியே ஐரோப்பிய தன்னாட்சியின் இரட்டைத் தூண்களாக விளங்குகின்றன. பிரான்ஸ் அதிபர் எம்மானுவேல் மக்ரோன் பல ஆண்டுகளாக ஐரோப்பிய பாதுகாப்புத் தன்னாட்சியை வலியுறுத்தி வருகிறார். அவரது பார்வையில், அமெரிக்காவுடன் கூட்டுறவு அவசியம். ஆனால் ஐரோப்பாவின் பாதுகாப்பு முழுமையாக வாஷிங்டனின் அரசியல் முடிவுகளைச் சார்ந்திருக்கக் கூடாது.

இப்போது ஜெர்மனியும் இதே பாதையில் நகரத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்பு நிதி, கூட்டு ஆயுத உற்பத்தி, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப முதலீடுகள் போன்ற திட்டங்கள் வேகமடைந்துள்ளன.

மாஸ்கோவின் பார்வையில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகள் அதிகரிப்பது, மேற்கத்திய ஒற்றுமையை பலவீனப்படுத்தும் வாய்ப்பாகக் கருதப்படுகிறது.

அதனால், தகவல் போர், இணையத் தாக்குதல்கள், அரசியல் பிரச்சாரங்கள் மற்றும் ஐரோப்பிய அரசியலில் பிளவுகளை அதிகரிக்கும் முயற்சிகள் தொடரக்கூடும் என்று பல பாதுகாப்பு ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

ஆனாலும் இன்றைய சூழலில் முக்கிய விடயம் நேட்டோ சிதைந்துவிடுமா என்பதல்ல. மாறாக, அது எவ்வாறு மறுவடிவம் பெறும் என்பதே முக்கியமான கேள்வியாக உள்ளது.

எதிர்கால நேட்டோவில் யார் தலைமை வகிப்பார்கள்? பாதுகாப்புச் செலவுகளை எவ்வாறு பகிர்ந்துகொள்வார்கள்? ஐரோப்பிய நாடுகள் அதிக பொறுப்பை ஏற்குமா? அமெரிக்கா தனது உலகளாவிய பாதுகாப்பு பங்கினை எவ்வாறு மறுவரையறை செய்யும் என்ற இந்தக் கேள்விகளுக்கான பதில்களே அடுத்த சில ஆண்டுகளில் மேற்கத்திய பாதுகாப்புக் கட்டமைப்பின் வடிவத்தை தீர்மானிக்கும்.


ஜெர்மனி டிரம்பின் கோரிக்கையை நிராகரித்திருப்பது, ஒரு இராஜதந்திர கருத்து வேறுபாடு மட்டுமல்ல. அது அமெரிக்காவின் உலகத் தலைமையுரிமை, ஐரோப்பாவின் மூலோபாய சுயாட்சி மற்றும் நேட்டோவின் அடிப்படை நோக்கம் ஆகியவற்றைச் சுற்றி நடைபெறும் ஆழமான அரசியல் மறுசீரமைப்பின் வெளிப்பாடாகும்.

அமெரிக்கா தனது பாதுகாப்புச் சுமையை குறைக்க விரும்புகிறது; அதேவேளை ஐரோப்பா தனது பாதுகாப்புப் பொறுப்பை அதிகரிக்க முயல்கிறது. ஆனால், அந்தப் புதிய சமநிலை எவ்வாறு உருவாகும் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

21ஆம் நூற்றாண்டின் உலக அரசியல் இனி ஒரே வல்லரசின் ஆதிக்கத்தில் இயங்கும் அமைப்பாக இல்லாமல், பல மையங்களைக் கொண்ட அதிகாரச் சமநிலையை நோக்கி நகர்கிறது. அந்த மாற்றத்தின் மையத்தில் நேட்டோவும், அமெரிக்கா – ஜெர்மனி உறவும், ஐரோப்பிய பாதுகாப்புத் தன்னாட்சியும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. எனவே, ஜெர்மனி டிரம்பின் கோரிக்கையை நிராகரித்த சம்பவம், ஒரு செய்தித் தலைப்பைத் தாண்டி, மேற்கத்திய உலகின் எதிர்கால அரசியல் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பை மறுவரையறை செய்யும் வரலாற்றுச் சந்திப்பாகவே பார்க்கப்பட வேண்டும்.

# கறுப்பு யூலை 1983

சிங்கள ஒளிப்பட வல்லுநர் சந்திரகுப்த அமரசிங்க,
இந்த தமிழ் இளைஞன் கொல்லப்படுவதற்குச் சற்றுமுன் எடுத்த ஒளிப்படம்.
நிர்வாணமாக்கப்பட்ட இளைஞனைச் சுற்றி சிரித்து நடனமாடும் சிங்களவர்கள்.



இடம்:
பொரளை பேருந்து தரிப்பிடம்.






# ஆஸியில் சிறார் சமூக ஊடகத் தடை: மீறும் சமூக வலைத் தளங்களுக்கு பெரும் அபராதம்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

02.07.2026

**அவுஸ்திரேலியாவின் 16 வயதிற்குட்பட்டோருக்கான சமூக ஊடகத் தடை நடவடிக்கையை உலகின் பல நாடுகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் சில நாடுகள் குழந்தைகளுக்கான வயது வரம்பு, பெற்றோர் கட்டுப்பாடு, வயது சரிபார்ப்பு தொழில்நுட்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய புதிய சட்டங்களை ஆய்வு செய்து வருகின்றன. அவுஸ்திரேலியாவின் இந்த சட்டங்கள் வெற்றிகரமாக அமைந்தால், உலகின் பல நாடுகளிலும் இதேபோன்ற சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வாய்ப்புள்ளது.**

**16 வயதிற்குட்பட்டோருக்கான சமூக ஊடகத் தடையை மேலும் கடுமையாக்கும் வகையில் அவுஸ்திரேலியா அரசு புதிய சட்டத்தை அமல்படுத்தியுள்ளது. சமூக வலைத் தளங்களின் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு 99 மில்லியன் டொலர் வரை அபராதம் விதிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

டிஜிட்டல் உலகம் மனித வாழ்க்கையின் அன்றாட அங்கமாக மாறியுள்ள நிலையில், சமூக ஊடகங்கள் குழந்தைகள் மற்றும் இளம் தலைமுறையினரின் வாழ்விலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும், நண்பர்களுடன் தொடர்புகளை வளர்ப்பதற்கும், படைப்பாற்றலை வெளிப்படுத்துவதற்கும் சமூக ஊடகங்கள் உதவுகின்றன என்றாலும், அவற்றின் மறுபக்கத்தில் மனநலப் பாதிப்புகள், இணையத் துன்புறுத்தல், பாலியல் சுரண்டல், வன்முறை மற்றும் தவறான தகவல்களின் பரவல் போன்ற கடுமையான அபாயங்களும் அதிகரித்து வருகின்றன.

இந்தப் பின்னணியில், உலகிலேயே முதன்முறையாக 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு சட்டரீதியான கட்டுப்பாட்டை விதித்த நாடாக அவுஸ்திரேலியா உருவெடுத்தது. தற்போது அந்தச் சட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில், அதைச் சரிவர அமல்படுத்தத் தவறும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு விதிக்கப்படும் அதிகபட்ச அபராதத்தை இரட்டிப்பாக்கி 99 மில்லியன் அவுஸ்திரேலிய டொலராக உயர்த்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இது குழந்தைகளின் இணையப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் எடுக்கப்பட்ட மிகவும் கடுமையான நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

## ஏன் கடுமையான நடவடிக்கை?

2025 டிசம்பரில் அமலுக்கு வந்த 16 வயதிற்குட்பட்டோருக்கான சமூக ஊடகத் தடை, உலகளவில் பெரும் கவனத்தை ஈர்த்தது. குழந்தைகளின் மனநலத்தைப் பாதுகாக்கும் முன்னோடியான முயற்சி என்று பலரும் பாராட்டினர். ஆனால் நடைமுறையில் இந்தச் சட்டம் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெறவில்லை.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் மதிப்பீட்டின்படி, ஏராளமான சிறார்களின் சமூக ஊடகக் கணக்குகள் நீக்கப்பட்டிருந்தாலும், பலர் போலியான பிறந்த தேதிகளைப் பயன்படுத்தியும், மாற்றுக் கணக்குகளை உருவாக்கியும், VPN போன்ற தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தியும் தொடர்ந்து சமூக ஊடகங்களில் செயல்பட்டு வருகின்றனர். இதனால், சட்டத்தை அறிவிப்பது மட்டுமே போதாது. அதனை நடைமுறையில் அமல்படுத்தும் பொறுப்பை தொழில்நுட்ப நிறுவனங்கள் தீவிரமாக ஏற்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை அரசு எடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசு, உலகின் மிகப்பெரிய சமூக ஊடக நிறுவனங்கள் வயது சரிபார்ப்பு தொடர்பாக போதுமான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறது. பல நிறுவனங்கள் முக்கியமாக வயது என்ன என்று கேட்கும் எளிய நடைமுறையை மட்டுமே பின்பற்றுகின்றன. இதனால், குழந்தைகள் பொய்யான பிறந்த திகதியை பதிவு செய்வதன் மூலம் எளிதாக கணக்குகளைத் திறக்க முடிகிறது.

இதனை மாற்றுவதற்காக, வயது உறுதிப்படுத்தும் நவீன தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான சரிபார்ப்பு முறைகள் மற்றும் மூன்றாம் தரப்பு அடையாள உறுதிப்படுத்தும் அமைப்புகளைப் பயன்படுத்துமாறு அரசு வலியுறுத்துகிறது. நிறுவனங்கள் எங்களால் முடிந்ததைச் செய்தோம் என்று கூறுவது மட்டும் போதாது. அவர்கள் உண்மையில் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாகும்.

## அபராதம் 99 மில்லியன் டொலர்

முன்னர் இந்தச் சட்டத்தை மீறும் நிறுவனங்களுக்கு விதிக்கப்படும் அதிகபட்ச அபராதம் சுமார் 49.5 மில்லியன் அவுஸ்திரேலிய டொலராக இருந்தது. தற்போது அது இரட்டிப்பாக்கப்பட்டு 99 மில்லியன் டொலராக உயர்த்தப்பட உள்ளது.

இந்த அபராத உயர்வின் நோக்கம் வெறும் தண்டனை அல்ல. குழந்தைகளின் பாதுகாப்பை வணிக இலாபத்தை விட மேலாகக் கருத வேண்டும் என்ற தெளிவான செய்தியை உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அனுப்புவதே இதன் முக்கிய நோக்கமாகும். பெரும் வருமானம் ஈட்டும் நிறுவனங்களுக்கு சிறிய அபராதங்கள் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்பதால், அவர்களின் செயல்பாட்டில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் அளவிற்கு கடுமையான அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது.

அதேவேளை eSafety ஆணையரின் அதிகாரங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. புதிய சட்டத்தின் கீழ் இணையப் பாதுகாப்பை கண்காணிக்கும் eSafety Commissioner அலுவலகத்திற்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது. இதன்படி, சமூக ஊடக நிறுவனங்களிடமிருந்து ஆவணங்களை கோருவது, வயது சரிபார்ப்பு நடைமுறைகள் தொடர்பான ஆதாரங்களைப் பெறுவது, மூன்றாம் தரப்பு நிறுவனங்களின் தகவல்களை ஆய்வு செய்வது, நிறுவனங்கள் உண்மையில் சட்டத்தைப் பின்பற்றுகின்றனவா என்பதை விசாரிப்பது போன்ற அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. இந்த அதிகாரங்கள், சட்டத்தை நடைமுறையில் செயல்படுத்துவதற்கான முக்கிய கருவியாக அமையும் என்று அரசு நம்புகிறது.

ஆனாலும் புதிய சட்டம் அமலுக்கு வந்த பிறகும், பெரும்பாலான இளம் இளைஞர்கள் தொடர்ந்து சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

16 வயதிற்குட்பட்டோரில் 80 சதவீதத்திற்கும் அதிகமானோர் இன்னும் சமூக ஊடகங்களில் செயலில் உள்ளனர். குறிப்பாக 13 முதல் 15 வயதுக்குட்பட்டோரிடம் சட்டத்தின் தாக்கம் மிகவும் குறைவாகவே உள்ளது. அதேவேளை, 8 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் சமூக ஊடகப் பயன்பாட்டில் ஓரளவு குறைவு ஏற்பட்டுள்ளதாக சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இது, சட்டம் மட்டும் போதுமானதல்ல; தொழில்நுட்ப நிறுவனங்கள், பெற்றோர், பள்ளிகள் மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டிய அவசியத்தை வெளிப்படுத்துகிறது.

சமூக ஊடகங்கள் முழுமையாக தீமையானவை என்று கூற முடியாது. கல்வி, தகவல் பரிமாற்றம், திறமைகளை வெளிப்படுத்துதல், உலகளாவிய தொடர்புகள் ஆகியவற்றில் அவை முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் குழந்தைகளின் வளர்ச்சிக் கட்டத்தில் கட்டுப்பாடற்ற சமூக ஊடகப் பயன்பாடு பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இணையத் துன்புறுத்தல், மன அழுத்தம், கவலை, மனச்சோர்வு, உடல் தோற்றம் குறித்த தாழ்வு மனப்பான்மை, தூக்கமின்மை, இணைய அடிமைத்தனம், வன்முறை மற்றும் பாலியல் சார்ந்த தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களின் தாக்கம் ஆகியவை அதிகரித்து வருவதாக மருத்துவ மற்றும் உளவியல் ஆய்வுகள் எச்சரிக்கின்றன. இதனால்தான் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாக அரசுகள் அதிக அக்கறை செலுத்துகின்றன.

## அரசியல் – சமூக எதிர்வினைகள்

அவுஸ்திரேலிய பிரதமர் இந்தச் சட்டம் உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். குழந்தைகளின் மனநலம் மற்றும் பாதுகாப்பு அரசின் மிக முக்கிய பொறுப்புகளில் ஒன்றாகும் என்றும், தொழில்நுட்ப நிறுவனங்கள் சமூகப் பொறுப்பை ஏற்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மறுபுறம், எதிர்க்கட்சியினர் அபராதத்தை உயர்த்துவது, தற்போதைய சட்டம் முழுமையாக வெற்றி பெறவில்லை என்பதை அரசே ஒப்புக்கொள்வதாக விமர்சிக்கின்றனர். இருப்பினும், குழந்தைகளின் பாதுகாப்பு என்ற அடிப்படை நோக்கத்திற்கு பெரும்பாலான அரசியல் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

அவுஸ்திரேலியாவின் இந்த நடவடிக்கையை உலகின் பல நாடுகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் சில நாடுகள் குழந்தைகளுக்கான வயது வரம்பு, பெற்றோர் கட்டுப்பாடு, வயது சரிபார்ப்பு தொழில்நுட்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய புதிய சட்டங்களை ஆய்வு செய்து வருகின்றன. அவுஸ்திரேலியாவின் அனுபவம் வெற்றிகரமாக அமைந்தால், உலகின் பல நாடுகளிலும் இதே போன்ற சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வாய்ப்புள்ளது.

இந்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துவது எளிதான காரியம் அல்ல. VPN, போலி அடையாளங்கள், செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்படும் ஆவணங்கள் போன்ற தொழில்நுட்பங்கள் சட்ட அமலாக்கத்திற்கு புதிய சவால்களை உருவாக்குகின்றன. அதேநேரத்தில், வயது சரிபார்ப்பிற்காக அதிகளவில் தனிப்பட்ட தகவல்களை சேகரிப்பது தனியுரிமை தொடர்பான கவலைகளையும் எழுப்புகிறது. எனவே, குழந்தைகளின் பாதுகாப்புக்கும் தனியுரிமை உரிமைக்கும் இடையே சரியான சமநிலையை ஏற்படுத்துவது அரசுகளின் மிகப்பெரிய சவாலாக இருக்கும்.

16 வயதிற்குட்பட்டோருக்கான சமூக ஊடகத் தடையை மேலும் வலுப்படுத்தும் அவுஸ்திரேலியாவின் புதிய நடவடிக்கை, உலகளவில் இணையப் பாதுகாப்பு குறித்த விவாதத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு 99 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் வரை அபராதம் விதிக்கும் முடிவு, குழந்தைகளின் பாதுகாப்பு என்பது இனி விருப்பத் தேர்வல்ல; அது சட்டப்பூர்வமான பொறுப்பு என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

எனினும், இந்த முயற்சியின் வெற்றி அபராதங்களிலோ சட்டங்களிலோ மட்டும் தங்கியிருக்காது. பெற்றோர், ஆசிரியர்கள், சமூக அமைப்புகள், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் அரசுகள் இணைந்து குழந்தைகளுக்கு பாதுகாப்பான, பொறுப்பான டிஜிட்டல் சூழலை உருவாக்கும்போதுதான் இந்த முயற்சி தனது உண்மையான இலக்கை அடையும். டிஜிட்டல் உலகம் நாளுக்கு நாள் விரிவடைந்து வரும் இந்தக் காலகட்டத்தில், குழந்தைகளின் எதிர்காலத்தை பாதுகாக்கும் பொறுப்பு அனைவருக்கும் பொதுவானதாகும்.









# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல
அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள்
செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு
நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை
பெருகச் செய்யும். அது உங்கள் வணிக
முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது
உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.vanikam.ca
thamilarvanikam@gmail.com

# ஈழத்தேச விடுதலை அரசியலில் என்றும் மறவாத யூலை மாதம்!

**- பா. அரியநேத்திரன் -**

05.07.2026



ஈழத்தமிழினத்தின் சுதந்திரத்தை மீளவும் உறுதிசெய்து சுய நிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கான விடுதலை அரசியல் செயல்பாடுகள் 1948 பெப்ரவரி 04இல் பிரித்தானியர் கள் தமிழர்களுடைய உரிமையை பறித்து இலங்கை இனவாதி களிடம் கையளிக்கப்பட்ட நாள் தொடக்கம் இன்று வரையும் 78 ஆண்டுகளாக. அறவழியில் அகிம்சை வழிப்போராட்டம், ஆயுத வழிப்போராட்டம், இராஜதந்திர வழிப்போராட்டம் எல்லாம் நடத் தப்பட்டன, நடந்துகொண்டும் உள்ளன.

இந்த செயல்பாடுகளில் வருடத்தில் உள்ள ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை 12, மாதங்களும் ஈழத்தமிழர்களின் தியாகம், சோகம், துரோகம், வீரம், இழப்பு, சாதனை, வேதனை என்ற பட்டியல்கள் எல்லா மாதங்களிலும் உண்டு. அதில் யூலை மாதம் ஈழத்தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாத பல முக்கிய மான சம்பவங்கள் நடந்த மாதமாகும்.

1957 யூலை 26 அன்று பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப் பந்தம், அப்போதைய இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் இலங்கை வரலாற்றில் தமிழ் தலைவர் ஒருவர் சிங்களத்தலைவருடன் எழுத்து மூல மாக செய்த முதலாவது ஒப்பந்தம் யூலை மாதமாகும்.

1960 யூலை 20இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தான் இலங்கை தமிழ் அரசுக்கட்சி 16 தொகுதிகளில் 16 அதிகப் படியான பாராளுமன்ற உறுப்பினர்கள் முதல் முதலாக பெற்றது.

1975 யூலை 27 இல் விடுதலைப்புலிகளின் தலைவரால் முதன் முதலாக துரோகிகள் அழிப்பு என்ற வேட்டு யாழ் மாநகர மேயர் அல்பிரட் துரையப்பா இலக்கு வைக்கப்பட்டு சுட்டுக்கொல்லப் பட்டார்.

1977 யூலை 21 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில்தான் 1976 மே 14 இல் தந்தை செல்வா நிறைவேற்றிய வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு ஆணை கிடைத்தது. அதில் வடகிழக்கில் 18 தொகுதிகளில் இருந்து 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரி வாகியதுடன் தமிழர் விடுதலை கூட்டணிக்கு எதிர்கட்சி பதவி யும் கிடைத்தது. 1978 யூலை 20இல் விடுதலைப்புலிகளின் பெயரை குறிப்பிட்டு இலங்கை பாராளுமன்றத்தில் "புலிகள் தடைச்சட்டம்" நிறைவேற்றப்பட்டது.

1979 யூலை 19இல் பயங்கரவாத தடைச்சட்டம் அன்று மதிய போசன இடைவெளியின் பின்னர் பி.ப.01, மணிக்கு மட்டக் களப்பு மாவட்டம் கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக வும், நீதி அமைச்சராகவும் இருந்த கே.டபிள்யூ தேவநாயகம் அவர்களால் அந்த சட்டம் பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்டு அதே இரவு 10.45, மணி வரை விவாதம் இடம்பெற்று இரவோடு இர வாக பயங்கரவாதச்சட்டம் நிறை வேற்றப்பட்டது.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களான மைத்ரிபால சேனாநாயக்க, அனுர பண்டாரநாயக்க உள்ளிட்ட அக்கட்சியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இச்சட்டமூலத் திற்கு தமது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

மதவாச்சி தொகுதி சிறீலங்கா சுதந்திர கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சேனநாயக்கா இந்த சட்டத்தை எதிர்த்து உரையாற்றினார். இச்சட்டம் நாட்டில் ஒரு 'இராணுவ இராஜ்யத்தை' (Military State) உருவாக்கும் என்று கடுமையாக எச்சரித்ததுடன் "பிடிவாரண்ட்" இன்றி வீடுகளுக்குள் நுழைதல், தனிப்பட்ட ஆவணங்களைப் பறிமுதல் செய்தல், அச்சு ஊட கங்களுக்குத் தணிக்கை விதித்தல் மற்றும் காலவரையற்ற தடுத்து வைப்பு போன்ற ஜனநாயக விரோத மற்றும் ஆபத்தான விதிகள் இச்சட்டத்தில் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டி தனது ஆழ்ந்த எதிர்ப்பைப் பதிவு செய்து உடனே இந்த சட்டம் நீக்க வேண்டும் இது கொடிய சட்டம் என பேசியதுடன் எதிர்த்தும் வாக்களித்தார்.

அவர் அன்று கூறிய இராணுவ இராஜ்யம் இன்றுவரை தொடர் கிறது என்பதுதான் உண்மை.

ஆனால் பிரதான எதிர்கட்சியாக இருந்த தமிழர் விடுதலை கூட்டணி எதிர்கட்சி தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கம் சட்டம் தொடர்பாக எதிர்த்து பேசிவிட்டு வாக்கெடுப்பு நேரம் 18 பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த சட்டத்தை எதிர்த்து வாக் களிக்கவில்லை வாக்கெடுப்பில் பங்கேற்காமல் விலகியிருந் தனர் என்ற வரலாற்றுத்துரோகம் தமிழர் விடுதலை கூட்ட ணிக்கு உண்டு. தமிழர் விடுதலை கூட்டணி விட்ட முதலாவது துரோகமாக இது அப்போது விமர்சிக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டம் 1979 ஆம் ஆண்டு 48ஆம் இலக்க சட்டம், இலங்கையில் தற்காலிக ஏற்பாட்டு சட்டமாக கொண்டு வரப்பட்டது. அப்போது மூன்று மாதங்களுக்கு மட்டுமே இந்த சட்டம் என கூறப்பட்டது. ஆனால் 1982 இல் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டத்தின் (1982 இன் 10 ஆம் இலக்க திருத்தச் சட்டம்) மூலம் முழுமையாகத் திருத்தப் பட்டு ஒரு நிரந்தர சட்டமாக மாற்றப்பட்டது. நிரந்தர சட்டமாக்கப்பட்டு இன்றுவரை அமுலில் இருக்கின்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய கட்சிகள், மனிதநேய அமைப்புகள் உட்பட சர்வதேசமும் இந்த சட்டத்தை எதிர்க் கின்ற போதும் பயங்கரவாத தடைச்சட்டம் இன்னும் நீக்கப் படவில்லை 47 வருடங்களாக இந்த கொடிய சட்டம் இன்று வரை உள்ளது.

இந்த சட்டமானது அன்று பயங்கரவாத தடைச் சட்டத்தை தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு எதிராக மட்டுமே தெற்கின் சிங்கள, பௌத்த அரசியல்வாதிகள் பயன்படுத்திய நிலையில் தற்போது அந்த சட்டத்தின் கீழேயே பலரும் கைது செய்யப்படும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

இந்த சட்டம் ஐக்கிய தேசிய கட்சியில் இலங்கை பிரதமராக இருந்த ஜே.ஆர் ஜெயவர்தனா அரசில் நீதி அமைச்சராக இருந்த மட்டக்களப்பு மாவட்ட கல்குடாத்தொகுதி பாராளுமன்ற உறுப் பினர் கே.டபிள்யூ தேவநாயகத்தை கொண்டு 1979 யூலை 19 இல் நிறைவேற்றினார், பயங்கரவாத தடைச்சட்டம் நிறைவேற் றிய கே. டபிள்யூ. தேவநாயகத்தின் நீதி அமைச்சர் பதவி சரியாக 07 மாதத்தில் 1980 பெப்ரவரி 19இல் பறிக்கப்பட்டு அவருக்கு உள்ளூராட்சி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது ஜே.ஆர். ஜெய வர்தனவின் தந்திரம் பயங்கர வாதத்தடைச்சட்டம் நிறைவேற்று வதற்காக மட்டுமே ஒரு தமிழன் தேவைப்பட்டது அதுவும் வட கிழக்கு தமிழனாக அமைச்சராக மட்டக்களப்பு மாவட்ட கல்குடா தொகுதி தேவநாயகத்துக்கு நீதி அமைச்சர் பதவி கொடுக்கப் பட்டது என்பதே உண்மை. இது அப்போது தற்காலிக சட்டமாக கூறப்பட்டாலும் பின்னர் 1981இல் நிரந்தர சட்டமாக்கப்பட்டது.

தமிழரை கொண்டு தமிழரை அழிப்பதற்காகவே ஜே.ஆர். இந்த சட்டத்தை நிறைவேற்றினார். ஆனால் 2019 இற்கு பின்னர் தற் போது தென்பகுதி சிங்கள மக்கள், சிங்கள அரசியல் வாதிக ளுக்கு எதிராகவும் இந்த சட்டம் பிரயோகிக்கும் போதுதான் இந்த சட்டத்தின் கொடுமையை அவர்கள் விளங்கிக் கொண்டனர்.

2012இல் இருந்து 2026 தற்போது வரை உள்ளாட்டு மனித உரிமை அமைப்புகள் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் எல்லாம் இந்த சட்டத்தை நீக்குமாறு தொடர் அழுத்தம் கொடுத் தும் இதுவரை ஜனாதிபதிகளாக இருந்த மகிந்தராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டபாய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க எவருமே வாயால் நீக்குவ தாக கூறியும் செயலில் இதுவரை இல்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தை தமிழர் ஒருவரே தயாரித்ததாக கருத்தும் உள்ளது, பயங்கரவாத தடைச் சட்டத்தை நாடாளுமன் றில் சமர்ப்பித்தவரும் தமிழர்தான் என கூறப்பட்டபோதும் அதனை சிலர் மறுப்பதும் உண்டு, பயங்கரவாத தடைச்சட் டத்தை நாடாளுமன்றில் சமர்பிக்கும் போது அதனை எதிர்த்து வாக்களிக்காமல் விலகி இருந்த எதிர்கட்சி தலைவரும் தமிழர் தான், அந்த சட்டத்தால் அதி கூடியவர்களாக பாதிக்கப்பட்டதும் தமிழர்கள்தான் என்ற வரலாற்று உண்மைகளும் உண்டு.

1983 யூலை 23இல் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் திரு நெல்வேலியில் நடத்திய இராணுவ வாகனம் மீதான தாக்குதல். இதில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அந்த சட லங்களை கொழும்பு கனத்தை மயானத்திற்கு கொண்டு சென்று கொழும்பில் இனப்படுகொலைக்கு தூபம் இட்டார் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்தன. ஜே.ஆர். தலைமையிலான ஐக்கியதேசிய கட்சி அரசால் திட்ட மிட்டு தமிழினப்படுகொலை ஏற்படுத் தப்பட்டது. "கறுப்பு யூலை" என்று அழைக்கப்படும் 1983 யூலை 23 தொடக்கம் 1983 யூலை 30 வரை 07 நாட்களாக கொழும்பு உட்பட தென்பகுதி யில் சிங்கள இராணுவமும், சிங்களக்குண்டர்களும் இணைந்து நடத்திய தமிழினப்படு கொலைகளாகும். இதில் ஏறக்குறைய மூவாயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டனர்.

ஏறத்தாழ 8,000 தமிழர்கள் வீடுகளும், 5,000 தமிழர்களின் வணிக நிறுவனங்களும் அழிக்கப்பட்டன இக்கலவரத்தின் போது ஏற்பட்ட மொத்தப் பொருளாதாரச் செலவு 300 மில்லியன் என அப்போது மதிப்பிடப்பட்டது. பன்னாட்டு நீதித்துறை வல்லு நர்கள் ஆணையம் என்ற அரச சார்பற்ற அமைப்பு 1983 டிசம் பரில் வெளியிட்ட அறிக்கையில் இது ஒரு இனப்படுகொலை என்று விவரித்தது. சர்வதேச நிறுவனம் இனப்படுகொலை என முதன் முதலாக வெளியிட்ட அறிக்கையாக இதனை கொள் ளலாம்.

1983 யூலை 25 மற்றும் யூலை 27 ஆகிய இரு தினங்களில் முக்கிய இனப்படுகொலைகளாக வெலிக்கடை சிறைச்சாலை யில் தமிழ் அரசியல் கைதிகளான தங்கத் துரை, குட்டிமணி, ஜெகன் உட்பட 53, தமிழ் கைதிகள் இனப் படுகொலை செய்யப் பட்டனர். இந்த மாதம் 2026 யூலை 23 கறுப்பு யூலைக்கு 43 ஆண்டுகள் நினைவாகும்.

1985 யூலை 22,23, இரு தினங்கள் பூட்டான் தலை நகரில் இலங்கை அரசு தமிழர் தரப்பு தமிழர் விடுதலை கூட்டணி, தமிழீழ விடுதலைப்புலிகள், ரெலோ, புளட், ஈபிஆர்எல்எவ், ஈரோஸ், ஆகிய இயக்கங்கள் ஒன்றாக இணைந்து பேச்சு வார்த்தை நடைபெற்றது.

1987 யூலை 05ஆம் திகதி விடுதலைப்புலிகளின் முதலாவது கரும்புலித்தாக்குதல் யாழ்ப்பாணம் நெல்லியடி இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகும். தாக்குதல் நடத்தியவர் யாழ்ப்பாணம், துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ் ஹாட்லிக் கல்லூரியில் கல்விகற்ற வசந்தன் என்ற இயற் பெயரைக்கொண்ட மில்லர் எனப்படும் கரும்புலி மாவீரர். 2026 யூலை 05 இன்று 39ஆவது ஆண்டு நினைவாகும்.

மில்லர் உயிர் நீத்த தினமே கரும்புலி நாளாக விடுதலைப்புலிக ளால் பிரகடனப்படுத்தப்பட்டது.

1987 யூலை 05இற்கு பின்னர் 2009 மே 18 வரை நூற்றுக் கணக்கான கரும்புலிகள் வீரச்சாவை தழுவினர் என்பது வர லாறு. 1989 யூலை 13இல் எதிர்கட்சிதலைவராகவும் தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவராகவும் இருந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் இருவரும் கொழும்பில் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

1987 யூலை 29 இலங்கை இந்திய உடன்படிக்கை - இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி மற்றும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தன ஆகியோர் கைச்சாத்திட்டனர். 1987 யூலை 30 இந்தியப்படை ஈழமண்ணில் வருகை (முற்றுகை) 2001 யூலை 24இல் கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான கரும் புலித்தாக்குதல் இடம்பெற்றதும் இந்த யூலை மாதம் என்பது குறிப்பிடத்தக்கது. ஏறக்குறைய 12 மறக்கமுடியாத விடயங்கள் ஈழத் தேச விடுதலை அரசியலில் இந்த யூலை மாதமே அரங் கேறியுள்ளது என்பது வரலாறாகும்.

# ஜெலென்ஸ்கிக்கு சவாலாக வலெரிஜலுஸ்னி: உக்ரேனில் உருவாகும் புதிய இராணுவத் தலைமை!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா–

03.07.2026

உக்ரைன்-ரஷ்யா போர் ஐந்தாவது ஆண்டை நோக்கி நகரும் நிலையில், போர்க்களத்தில் மட்டுமல்லாமல் அரசியல் அரங்கிலும் புதிய மாற்றங்களுக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. உலகின் கவனத்தை ஈர்த்த இந்தப் போர், இனி வெறும் இராணுவ மோதலாக மட்டும் இல்லாமல், அதிகாரம், ஜனநாயகம், தேசியத் தலைமை, மேற்கத்திய கூட்டணிகளின் எதிர்காலம் மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பு அமைப்பின் மறுசீரமைப்பு ஆகியவற்றை நிர்ணயிக்கும் ஒரு பரந்த அரசியல் செயல்முறையாக மாறியுள்ளது.



இந்தச் சூழலில், உக்ரைனின் முன்னாள் ஆயுதப்படைகளின் தலைமைத் தளபதியும் தற்போது ஐக்கிய இராச்சியத்திற்கான உக்ரைன் தூதருமான வலெரி ஜலுஸ்னி (Valerii Zaluzhnyi) எதிர்கால ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பதாக வெளியாகியுள்ள தகவல்கள் புதிய அரசியல் விவாதத்தை உருவாக்கியுள்ளன. அவர் இதுவரை அதிகாரப்பூர்வமாக தனது வேட்புமனுவை அறிவிக்கவில்லை. இருப்பினும், கருத்துக் கணிப்புகளில் தொடர்ந்து உயர்ந்த பொதுமக்கள் ஆதரவைப் பெற்றுவருவது, அவரை உக்ரைனின் எதிர்கால அரசியல் தலைவர்களில் ஒருவராகப் பார்க்கும் நிலையை உருவாக்கியுள்ளது.

இது ஜெலென்ஸ்கி மற்றும் ஜலுஸ்னி ஆகிய இரு நபர்களுக்கிடையிலான போட்டி மட்டுமல்ல. இது போரை யார் சிறப்பாக வழிநடத்தினர் என்பதற்கான மதிப்பீடும் அல்ல. மாறாக, போருக்குப் பிந்தைய உக்ரைனை யார் கட்டியெழுப்பப் போகிறார்கள் என்ற மிகப் பெரிய அரசியல் கேள்வியின் தொடக்கமாக இதைப் பார்க்க வேண்டும்.

### போர் ஆரம்பத்தில் இரட்டைத் தலைமை:


உக்ரேன் மீது 2022 பிப்ரவரி 24 அன்று ரஷ்யா முழுமையான படையெடுப்பை ஆரம்பித்தபோது, மேற்கத்திய இராணுவ ஆய்வாளர்களின் பெரும்பாலானோர் கீவ் சில நாட்களிலேயே வீழ்ந்துவிடும் எனக் கணித்தனர். ஆனால் அந்த கணிப்புகள் அனைத்தும் தவறின.



இந்த எதிர்பாராத வெற்றியின் பின்னணியில் இரண்டு முக்கியமான தலைமைச் சின்னங்கள் உருவாயின. ஒன்று அரசியல் ரீதியாக நாட்டை விட்டு வெளியேற மறுத்து, எனக்கு பயணம் வேண்டாம் ஆயுதங்கள்தான் வேண்டும் என்ற உறுதியான செய்தியின் மூலம் உலகின் ஆதரவைப் பெற்ற ஜனாதிபதி விலோடிமிர் ஜெலென்ஸ்கி. மற்றொன்று போர்க்களத்தில் ரஷ்ய முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்திய தலைமைத் தளபதி வலெரி ஜலுஸ்னி.

ஜெலென்ஸ்கி உலக அரங்கில் உக்ரைனின் அரசியல் முகமாக மாறியபோது, ஜலுஸ்னி உக்ரைனின் இராணுவ எதிர்ப்பின் முகமாக உருவெடுத்தார். இந்த இரட்டைத் தலைமையே போரின் ஆரம்ப வெற்றிகளுக்கு முக்கிய காரணமாகக் கருதப்பட்டது.

ஜலுஸ்னியின் புகழ் வெறும் இராணுவ பதவியால் உருவானதல்ல. அவரது தலைமையின் கீழ் உக்ரைன் படைகள் ரஷ்யாவின் ஆரம்பகட்டத் திட்டங்களை முறியடித்தன. கீவின் பாதுகாப்பு, கார்கிவ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எதிர்தாக்குதல்கள் மற்றும் கெர்சோன் பகுதியை மீட்டெடுத்த நடவடிக்கைகள் ஆகியவை அவரை மக்கள் மத்தியில் மிகுந்த மதிப்புக்குரியவராக மாற்றின.



அவரது தலைமையின் மற்றொரு சிறப்பம்சம், சோவியத் கால இராணுவக் கட்டுப்பாட்டு முறையிலிருந்து விலகி, மேற்கத்திய கட்டளைத் தத்துவங்களைப் பயன்படுத்தியதுதான். கீழ்மட்டத் தளபதிகளுக்கு முடிவெடுக்கும் சுதந்திரம் வழங்கிய முறை, வேகமான நடவடிக்கைகளுக்கும் அதிக செயல்திறனுக்கும் வழிவகுத்தது. இதன் விளைவாக, ஜலுஸ்னி ஒரு இராணுவ அதிகாரி மட்டுமல்ல; தேசிய தன்னம்பிக்கையின் சின்னமாக உருவானார்.

### ஜெலென்ஸ்கி - ஜலுஸ்னி உறவில் விரிசல்:

போரின் முதல் ஆண்டில் இருவரும் ஒரே அணியாகக் கருதப்பட்டனர். ஆனால் 2023 ஆம் ஆண்டிலிருந்து சூழல் மாறத் தொடங்கியது. உக்ரைனின் எதிர்தாக்குதல் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியளிக்கவில்லை. ரஷ்யா பலப்படுத்திய பாதுகாப்புக் கோட்டுகள், கண்ணிவெடிகள், ட்ரோன் போர் மற்றும் நீண்டகால தேய்மானப் போர் (War of Attrition) ஆகியவை உக்ரைனின் முன்னேற்றத்தைத் தடுத்தன.

இந்த சூழலில் ஜலுஸ்னி, போர் முட்டுக்கட்டையை (stalemate) எட்டியுள்ளதாக ஒரு கட்டுரையில் குறிப்பிட்டது அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த மதிப்பீடு உக்ரைன் அரசின் அதிகாரப்பூர்வ அரசியல் தகவல் பரிமாற்றத்துடன் முழுமையாக ஒத்துப்போகவில்லை என்ற விமர்சனங்களும் எழுந்தன. பின்னர், 2024 ஆம் ஆண்டு அவர் தலைமைத் தளபதி பதவியில் இருந்து மாற்றப்பட்டார். இது அதிகாரப்பூர்வமாக இராணுவ மறுசீரமைப்பாக விளக்கப்பட்டாலும், அரசியல் மற்றும் இராணுவத் தலைமைகளுக்கிடையிலான கருத்து வேறுபாடுகள் முக்கிய காரணமாக இருந்திருக்கலாம் என்று பல ஆய்வாளர்கள் கருதினர்.

### தூதரா – எதிர்கால அரசியல் தலைவரா?

ஜலுஸ்னியை ஐக்கிய இராச்சியத்திற்கான தூதராக நியமித்தது பலவிதமான விளக்கங்களை உருவாக்கியது. ஒரு தரப்பு, இது அவருடைய சர்வதேச அனுபவத்தை விரிவுபடுத்தும் முயற்சி என்று கருதுகிறது. மற்றொரு தரப்பு, உள்நாட்டு அரசியலில் அவருடைய செல்வாக்கை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இதைப் பார்க்கிறது.

ஆனால் வரலாறு வேறொன்றைக் கூறுகிறது. பல நாடுகளில் தூதரகப் பதவிகள் எதிர்கால தேசியத் தலைவர்களுக்கான அரசியல் பயிற்சிக் கட்டமாக இருந்துள்ளன. சர்வதேச உறவுகள், பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் கூட்டணிகள் குறித்து நேரடி அனுபவம் பெறும் வாய்ப்பை இத்தகைய பதவிகள் வழங்குகின்றன.

சமீபத்திய கருத்துக் கணிப்புகள், ஜலுஸ்னி மீது மக்களின் நம்பிக்கை மிகவும் உயர்வாக இருப்பதைக் காட்டுகின்றன. அதேவேளை, ஜெலென்ஸ்கியும் இன்னும் குறிப்பிடத்தக்க ஆதரவைத் தக்க வைத்திருக்கிறார். இங்கு கவனிக்க வேண்டியது, இது தேர்தல் முடிவு அல்ல; நம்பிக்கை அளவீடு மட்டுமே. போரின் போது மக்கள் இராணுவத் தலைவர்களை அதிகமாக நம்புவது உலக அரசியலில் புதிய நிகழ்வு அல்ல.

ஆனால் தேர்தல் காலத்தில் பொருளாதாரம், சமூக நலன், மறுசீரமைப்பு, ஊழல் எதிர்ப்பு, வெளிநாட்டு முதலீடு போன்ற பல புதிய அம்சங்கள் வாக்காளர்களின் முடிவை மாற்றக்கூடும். அதனால் கருத்துக் கணிப்புகளை நேரடியாக தேர்தல் வெற்றியுடன் இணைத்துப் பார்ப்பது சரியான அணுகுமுறை அல்ல.

**போர் நிகழும் உக்ரைன் அரசியலில் புதிய திருப்பமா என்ற சந்தேகம் எழுகிறது. ஜெலென்ஸ்கிக்கு சவாலாக உருவாகும் புதிய தலைவராக வலெரி ஜலுஸ்னி பற்றிய தகவல்கள் வெளி-யாகியுள்ளன. போர்க் களத்திலிருந்து அரசியல் அரங்கம் வரை ஒரு ஆழமான விரிசலை கொண்ட இருவரின் தலைமை பதவிக்கான போட்டி தற்போது விறுவிறுப்பாக நடந்து வருகிறது.**

### தேர்தல் ஏன் நடைபெறவில்லை?

உக்ரைனில் தற்போது போர் நிலை (Martial Law) அமலில் உள்ளது. அந்நாட்டின் சட்டங்களின்படி போர் நிலை அமலில் இருக்கும் வரை ஜனாதிபதி அல்லது நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்த முடியாது. இதற்குக் காரணம் அரசியல் மட்டுமல்ல; நடைமுறையும் ஆகும். மில்லியன் கணக்கான உக்ரைனியர்கள் வெளிநாடுகளில் அகதிகளாக உள்ளனர்.

இலட்சக்கணக்கான வீரர்கள் போர்முனையில் உள்ளனர். ரஷ்ய ஆக்கிரமிப்பில் இருக்கும் பகுதிகளில் தேர்தலை நடத்த இயலாது. தேர்தல் உள்கட்டமைப்புகள் மீதான ஏவுகணைத் தாக்குதல்களும் மிகப் பெரிய பாதுகாப்புச் சவாலாக இருக்கும். எனவே தேர்தல் தாமதம் ஜனநாயக மறுப்பு என்று மட்டும் கூற முடியாது; அது போரின் யதார்த்தத்துடன் தொடர்புடையது.

வொலோடிமிர் ஜெலென்ஸ்கி இன்னும் சர்வதேச அரங்கில் உக்ரைனின் முக்கிய அரசியல் முகமாக உள்ளார். அதேவேளை, வலெரி ஜலுஸ்னி போர்க்களத்தில் உருவான நம்பிக்கையின் அடையாளமாக வளர்ந்துள்ளார். இந்த இரு தலைவர்களும் உக்ரைனின் சமகால வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றவர்கள். எனினும், தற்போதைய சூழலில் ஜலுஸ்னி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்ற தகவல்கள் அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். தேர்தல் எப்போது நடைபெறும் என்பதும் இன்னும் தெளிவாகவில்லை. போர் நிலை நீடிக்கும் வரை தேர்தல் நடத்தப்படுவதற்கான சட்ட மற்றும் நடைமுறை தடைகள் தொடர்கின்றன.

ஆனால் ஒரு விஷயம் தெளிவாகிறது. உக்ரைனின் அடுத்த தேர்தல் வெறும் ஆட்சிமாற்றத்தைத் தீர்மானிக்காது. அது போருக்குப் பிந்தைய தேசிய மறுசீரமைப்பு, ஐரோப்பிய பாதுகாப்பு அமைப்பின் எதிர்காலம், ரஷ்யாவுடனான நீண்டகால உறவுகள், மேற்கத்திய கூட்டணிகளின் நிலைத்தன்மை மற்றும் உலக ஒழுங்கின் அடுத்த கட்டத்தைப் பாதிக்கக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியல் நிகழ்வாக அமையும். எனவே, ஜெலென்ஸ்கி மற்றும் ஜலுஸ்னி குறித்த விவாதம் தனிநபர்களைப் பற்றியது அல்ல. அது போரிலிருந்து அமைதிக்குச் செல்லும் ஒரு நாட்டின் அரசியல் பரிணாமம் குறித்த உலகளாவிய விவாதத்தின் ஒரு பகுதியாகும்.

# அல்பேர்ட்டா பிரிவினை – சர்வஜன வாக்கெடுப்பு: கனடா கூட்டாச்சி ஒற்றுமைக்கான பலப்பரீட்சை!

- ஜங்கரன் விக்கினேஸ்வரா -

07.07.2026

உலகின் மிகப்பெரிய நிலப் பரப்பளவைக் கொண்ட நாடுகளில் ஒன்றான கனடா, கூட்டாட்சி (Federal) ஆட்சி முறையின் வெற்றிகரமான மாதிரியாக நீண்ட காலமாகக் கருதப்பட்டு வருகிறது. பத்து மாகாணங்களும் மூன்று பிரதேசங்களும் இணைந்து இயங்கும் இந்த நாடு, மாகாணங்களுக்கு கணிசமான தன்னாட்சி அதிகாரங்களை வழங்கியிருந்தாலும், மத்திய அரசுக்கும் மாகாண அரசுகளுக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வு, இயற்கை வளங்களின் கட்டுப்பாடு, வரி வசூல், சுற்றுச்சூழல் கொள்கைகள் மற்றும் பொருளாதார முன்னுரிமைகள் போன்ற பல்வேறு விடயங்களில் அடிக்கடி கருத்து முரண்பாடுகள் எழுகின்றன.




இந்தப் பின்னணியில், கனடாவின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு வளங்களால் செழித்து விளங்கும் அல்பேர்ட்டா (Alberta) மாகாணம், கனடாவின் கூட்டாட்சிக்குள் தொடர வேண்டுமா அல்லது பிரிவினைக்கான சட்ட நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கும் வகையில் 2026 அக்டோபர் 19 அன்று சர்வஜன வாக்கெடுப்பை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இந்த வாக்கெடுப்பு, அல்பேர்ட்டாவின் அரசியல் எதிர்காலத்தை மட்டுமல்லாமல், கனடாவின் கூட்டாட்சி அமைப்பின் நிலைத்தன்மையையும் சோதிக்கும் முக்கிய அரசியல் நிகழ்வாகக் கருதப்படுகிறது.

## அல்பேர்ட்டா: பொருளாதார இதயம்

அல்பேர்ட்டா கனடாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள வளமான மாகாணமாகும். உலகின் மிகப்பெரிய எண்ணெய் மணல் (Oil Sands) களஞ்சியங்களில் ஒன்றை இந்த மாகாணம் கொண்டுள்ளது. எண்ணெய், இயற்கை எரிவாயு, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் பெட்ரோவேதியியல் தொழில்கள் ஆகியவை அல்பேர்ட்டாவின் பொருளாதாரத்தின் முதன்மைத் தூண்களாக உள்ளன.

கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் (GDP), ஏற்றுமதிக்கும், அரசின் வருவாய்க்கும் அல்பேர்ட்டா மிகப்பெரிய பங்களிப்பை வழங்கி வருகிறது. இருப்பினும், இந்த பொருளாதார வலிமைக்கு ஏற்ப அரசியல் செல்வாக்கோ அல்லது மத்திய அரசின் கொள்கைகளில் போதுமான பிரதிநிதித்துவமோ கிடைப்பதில்லை என்ற உணர்வு அல்பேர்ட்டா மக்களிடையே நீண்ட காலமாக நிலவி வருகிறது. நாங்கள் நாட்டின் பொருளாதாரத்தைத் தாங்குகிறோம் ஆனால் எங்கள் நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்ற மனநிலை அங்கு வலுவடைந்துள்ளது.

பிரிவினை எண்ணத்தின் வரலாற்றுப் பின்னணி நீண்ட காலமாக இருக்கிறது. அல்பேர்ட்டாவில் பிரிவினை சிந்தனை சமீபத்தில் உருவான ஒன்றல்ல. 1980களில் அப்போதைய பிரதமர் பியர் ட்ரூடோவின் தேசிய எரிசக்தித் திட்டம் (National Energy Program) அல்பேர்ட்டாவில் கடுமையான எதிர்ப்பை உருவாக்கியது. எண்ணெய் உற்பத்தியில் மத்திய அரசு அதிக கட்டுப்பாட்டை விதிப்பதாகவும், அல்பேர்ட்டாவின் வளங்கள் தேசிய அரசியலுக்காக பயன்படுத்தப்படுகின்றன என்றும் அப்போது பலர் குற்றம்சாட்டினர்.

அதன் பின்னரும், கார்பன் வெளியேற்றக் கட்டுப்பாடுகள், காலநிலை மாற்றக் கொள்கைகள், குழாய் (Pipeline) திட்டங்களின் தாமதங்கள், எண்ணெய் ஏற்றுமதிக்கான சுற்றுச்சூழல் விதிமுறைகள் ஆகியவை அல்பேர்ட்டாவில் மத்திய அரசுக்கு எதிரான அதிருப்தியை மேலும் அதிகரித்தன. குறிப்பாக எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறையில் வாழ்வாதாரம் கொண்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள், மத்திய அரசின் கொள்கைகள் தங்களது பொருளாதார வளர்ச்சியை பாதிக்கின்றன என்று கருதுகின்றனர்.




## 2026–இல் ஏன் வாக்கெடுப்பு?

அல்பேர்ட்டா அரசின் தலைமையில், மக்களிடையே அதிகரித்து வந்த அரசியல் அழுத்தங்களின் பின்னணியில் இந்த சர்வஜன வாக்கெடுப்பு அறிவிக்கப்பட்டது. வாக்குச் சீட்டில் இடம்பெறவுள்ள கேள்வி எளிமையானதாக இருந்தாலும், அதன் அரசியல் விளைவுகள் மிகவும் ஆழமானவை.

அல்பேர்ட்டா கனடாவில் தொடர வேண்டுமா அல்லது கனடாவிலிருந்து பிரிவதற்கான சட்ட நடவடிக்கைகளை அதிகாரப்பூர்வமாகத் தொடங்க வேண்டுமா என்பதே இந்த வாக்கெடுப்பின் முக்கிய நோக்கமாகும்.

இந்த வாக்கெடுப்பு வெற்றி பெற்றால் அல்பேர்ட்டா உடனடியாக தனிநாடாக மாறாது. மாறாக, மத்திய அரசுடன் பிரிவினை தொடர்பான அரசியலமைப்புச் சட்டப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கான அரசியல் அங்கீகாரமாக மட்டுமே அது கருதப்படும்.

## மத்திய அரசுடன் அல்பேர்ட்டாவின் முரண் – பாடுகள்

தற்போது பொது வாக்கெடுப்பு கோரும் அல்பேர்ட்டாவின் பிரிவினை உணர்வுக்கு பல காரணிகள் உள்ளன. முதலாவதாக, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஏற்றுமதிக்கு விதிக்கப்படும் சுற்றுச்சூழல் கட்டுப்பாடுகள். அல்பேர்ட்டாவின் பொருளாதாரத்தைப் பாதுகாக்க வேண்டிய நேரத்தில், மத்திய அரசு காலநிலை மாற்றக் கொள்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது என்று பலர் குற்றம் சாட்டுகின்றனர்.







இரண்டாவதாக, மாகாணங்களுக்கிடையேயான நிதி மறுவிநியோக (Equalization Payments) முறையை அல்பேர்ட்டா மக்கள் நீண்ட காலமாக விமர்சித்து வருகின்றனர். அதிக வருவாயை மத்திய அரசுக்கு வழங்கும் அல்பேர்ட்டாவிற்கு, அதற்கேற்ற நிதி நன்மைகள் திரும்ப கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது.

மூன்றாவதாக, கிழக்கு கனடாவில் மக்கள் தொகை அதிகமாக இருப்பதால், தேசிய அரசியலில் அல்பேர்ட்டாவின் குரல் போதுமான அளவு பிரதிபலிப்பதில்லை என்ற அரசியல் அதிருப்தியும் நிலவுகிறது.

## பிரிவினையையும் எதிர்ப்பும்:

பிரிவினையை ஆதரிப்பவர்கள், அல்பேர்ட்டா தனிநாடாக இருந்தால் பொருளாதார ரீதியாக வலுவாக வளர முடியும் என்று வாதிடுகின்றனர். இயற்கை வளங்களின் முழுமையான கட்டுப்பாடு மாகாணத்திற்கே கிடைக்கும் மத்திய அரசின் சுற்றுச்சூழல் கட்டுப்பாடுகள் குறையும் வருவாயை முழுமையாக தங்களது கல்வி, சுகாதாரம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்குப் பயன்படுத்த முடியும்.

சுயாதீன வரி மற்றும் குடியேற்றக் கொள்கைகளை உருவாக்க முடியும் மேலும் சர்வதேச முதலீடுகளை நேரடியாக ஈர்க்கும் வாய்ப்பும் அதிகரிக்கும் என அவர்கள் நம்புகின்றனர். அவர்களின் பார்வையில், அல்பேர்ட்டா பொருளாதார வளமும், இயற்கை வளங்களும், தொழில்துறை அடித்தளமும் கொண்டதால், ஒரு தனிநாடாக இயங்கக்கூடிய திறன் பெற்றுள்ளது.

அதேவேளை எதிர்ப்பாளர்களின் பார்வையும் வலுவாக இருக்கிறது. பிரிவினையை எதிர்ப்பவர்கள் இது மிகுந்த ஆபத்தான அரசியல் முயற்சி என்று எச்சரிக்கின்றனர். கனடாவிலிருந்து பிரிவது என்பது வெறும் அரசியல் கோஷமல்ல; அது மிகச் சிக்கலான அரசியலமைப்புச் சட்ட மற்றும் பொருளாதார செயல் முறையாகும்.

பிரிவினை ஏற்பட்டால் கனேடிய குடியுரிமை, கனேடிய டாலரின் பயன்பாடு, சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்கள், அமெரிக்காவுடனான எல்லை நிர்வாகம், தேசியக் கடன் பகிர்வு, பாதுகாப்பு அமைப்புகள், ஓய்வூதியத் திட்டங்கள், சுகாதார சேவைகள்

www.sangathamil.com

போன்ற எண்ணற்ற கேள்விகளுக்கு புதிய தீர்வுகள் தேவைப்படும். மேலும், கனடாவை விட்டு பிரியும் புதிய நாட்டிற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைப்பது தானாக நடைபெறாது; பல நாடுகளின் அரசியல் நிலைப்பாடுகளும் அதனைப் பாதிக்கக் கூடும்.

## சட்டரீதியான சவால்கள்:

கனடாவின் அரசியலமைப்பின்படி, ஒரு மாகாணம் ஒருதலைப்பட்சமாக பிரிந்து செல்ல முடியாது. 1998ஆம் ஆண்டு கனடா உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும், அதன் பின்னர் இயற்றப்பட்ட Clarity Act சட்டமும், தெளிவான கேள்விக்கும் தெளிவான பெரும்பான்மைக்கும் பிறகே மத்திய அரசும் சம்பந்தப்பட்ட மாகாணமும் அரசியலமைப்புச் சட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றன.

அந்தப் பேச்சுவார்த்தைகளில் எல்லைகள், தேசியக் கடன், இராணுவச் சொத்துகள், குடியுரிமை, பூர்வகுடி ஒப்பந்தங்கள், இயற்கை வளங்கள், அரசுச் சொத்துகள் போன்ற பல்வேறு சிக்கலான விடயங்கள் பேசப்பட வேண்டும். எனவே, வாக்கெடுப்பு வெற்றி பெற்றாலும் உடனடியாக சுதந்திரம் கிடைக்கும் என்ற எண்ணம் நடைமுறைக்கு சாத்தியமற்றதாகும்.

அல்பேர்ட்டா வாக்கெடுப்பு வெறும் ஒரு மாகாணத்தின் அரசியல் முடிவாக மட்டுமே பார்க்கப்பட முடியாது. இது கனடாவின் கூட்டாட்சி அமைப்பு எவ்வளவு நெகிழ்வானது, மாகாணங்களின் கோரிக்கைகளை எவ்வாறு கையாள்கிறது, தேசிய ஒற்றுமையை எவ்வாறு பாதுகாக்கிறது என்பதற்கான ஒரு முக்கிய சோதனையாகும்.

இந்த வாக்கெடுப்பு பிரிவினைக்கு ஆதரவாக முடிந்தால், முன்னர் பிரிவினை குறித்து விவாதித்த கியூபெக் போன்ற மாகாணங்களிலும் புதிய அரசியல் விவாதங்களை உருவாக்கக்கூடும். அதே நேரத்தில், மத்திய அரசு மாகாணங்களுடன் அதிகாரப் பகிர்வு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு குறித்து புதிய அணுகுமுறைகளை உருவாக்க வேண்டிய அவசியத்தையும் இது ஏற்படுத்தலாம்.

## பூர்வகுடி மக்களின் நிலைப்பாடு

இந்த விவகாரத்தில் மிகவும் முக்கியமான தரப்பாக அல்பேர்ட்டாவின் பூர்வகுடி மக்களான First Nations சமூகங்கள் விளங்குகின்றன. அவர்கள், தங்களது நில உரிமைகள் மற்றும் ஒப்பந்த உரிமைகள் கனடா அரசுடனான வரலாற்று உடன்படிக்கைகளின் அடிப்படையில் அமைந்தவை என்பதால், தங்களது சம்மதமின்றி எந்தப் பிரிவினை முயற்சியும் சட்டபூர்வமாக இருக்க முடியாது என்று வலியுறுத்துகின்றனர்.

பல பூர்வகுடி தலைவர்கள், தங்களது உரிமைகளைப் பாதுகாக்க நீதிமன்றத்தை நாடியுள்ளனர். இதனால், அல்பேர்ட்டா பிரிவினை என்பது மாகாணம்-மத்திய அரசு இடையேயான அரசியல் முரண்பாடு மட்டுமல்ல; அது பூர்வகுடி மக்களின் அரசியலமைப்புச் சட்ட உரிமைகளையும் நேரடியாகத் தொடும் விவகாரமாக மாறியுள்ளது.

அல்பேர்ட்டா சர்வஜன வாக்கெடுப்பு, கனடாவின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு திருப்புமுனையாகப் பார்க்கப்படுகிறது. இது வெறும் பிரிய வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வியைத் தாண்டி, கூட்டாட்சி அமைப்பின் செயல்திறன், இயற்கை வளங்களின் உரிமை, பொருளாதார நீதி, ஜனநாயகத்தின் வலிமை மற்றும் பூர்வகுடி மக்களின் உரிமைகள் ஆகியவற்றை ஒரே நேரத்தில் சோதிக்கும் அரசியல் நிகழ்வாக உருவெடுத்துள்ளது.

வாக்கெடுப்பின் இறுதி முடிவு எதுவாக இருந்தாலும், அல்பேர்ட்டா-கனடா உறவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவையை அது தெளிவாக வெளிப்படுத்துகிறது. அதேவேளை, ஜனநாயக நாடுகளில் கருத்து வேறுபாடுகளுக்கு ஆயுதம் அல்ல, வாக்குச் சீட்டே தீர்வாக அமைய வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையை உலகிற்கு மீண்டும் நினைவூட்டும் ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாகவும் இந்த சர்வஜன வாக்கெடுப்பு வரலாற்றில் இடம்பெறும்.




**அல்பேர்ட்டா சர்வஜன வாக்கெடுப்பு, கனடாவின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு திருப்புமுனையாகப் பார்க்கப்படுகிறது. இது வெறும் பிரிய வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வியைத் தாண்டி, கூட்டாட்சி அமைப்பின் செயல்திறன், இயற்கை வளங்களின் உரிமை, பொருளாதார நீதி, ஜனநாயகத்தின் வலிமை மற்றும் பூர்வகுடி மக்களின் உரிமைகள் ஆகியவற்றை ஒரே நேரத்தில் சோதிக்கும் அரசியல் நிகழ்வாக உருவெடுத்துள்ளது.**



# அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகள் அனைவரும் அமெரிக்கர்களா?

# பிறப்பு குடியுரிமையை மறுக்கும் டிரம்ப் அரசு

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

01.07.2026

அமெரிக்கா உலகின் மிகப் பெரிய குடியேற்ற நாடாகக் கருதப்படுகிறது. நூற்றாண்டுகளாக உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து கோடிக் கணக்கான மக்கள் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் அரசியல் சுதந்திரத்தை நாடி அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்துள்ளனர். இந்தக் குடியேற்ற வரலாற்றோடு நெருக்கமாக இணைந்திருக்கும் முக்கியமான அரசியலமைப்புச் சட்டக் கொள்கைகளில் ஒன்று தான் பிறப்புரிமைக் குடியுரிமை (Birth Right Citizenship).

## அமெரிக்க பிறப்பு குடியுரிமை




அமெரிக்க மண்ணில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் அமெரிக்கக் குடிமகனே என்ற கொள்கை 150 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க அரசியலமைப்பின் அடிப்படைச் சட்டப் பாதுகாப்பாக இருந்து வருகிறது. ஆனால் சமீப ஆண்டுகளில், குறிப்பாக சட்டவிரோத குடியேற்றம், எல்லைப் பாதுகாப்பு மற்றும் தேசிய அடையாளம் தொடர்பான அரசியல் விவாதங்கள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, இந்தக் கொள்கை மீண்டும் தேசிய அரசியலின் மையப் பொருளாக மாறியுள்ளது.

இந்த விவாதம் வெறும் குடியேற்றச் சட்டம் குறித்ததல்ல. இது அமெரிக்க அரசியலமைப்பின் அதிகாரம், நீதித்துறையின் பங்கு, கூட்டாட்சி அரசின் வரம்புகள், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தின் அடிப்படை மதிப்புகள் ஆகியவற்றைத் தொடும் ஆழமான அரசியல்-சட்டக் கேள்வியாகும்.

பிறப்புரிமைக் குடியுரிமை என்பது, அமெரிக்காவின் நிலப்பரப்பில் பிறக்கும் குழந்தை, பிறந்த கணத்திலேயே அமெரிக்கக் குடிமகனாக அங்கீகரிக்கப்படுவதை குறிக்கிறது. இதற்காக குழந்தையின் பெற்றோர் அமெரிக்கக் குடிமக்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

பெற்றோர் நிரந்தர குடியிருப்பாளர்களாக இருந்தாலும், வேலை அல்லது மாணவர் விசாவில் இருந்தாலும், அகதி அந்தஸ்தில் இருந்தாலும் அல்லது சட்டபூர்வ ஆவணங்கள் இன்றி அமெரிக்காவில் வாழ்ந்தாலும், பொதுவாக அந்தக் குழந்தை அமெரிக்கக் குடிமகனாகக் கருதப்படுகிறார்.

இந்தக் கொள்கை Jus Soli (Right of the Soil) எனப்படும் சட்டக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதற்கு மாறாக, பல நாடுகள் Jus Sanguinis (Right of Blood) என்ற கோட்பாட்டைப் பின்பற்றுகின்றன. அதாவது, குழந்தையின் குடியுரிமை அவர் பிறந்த நாட்டால; அல்ல, பெற்றோரின் குடியுரிமையால் தீர்மானிக்கப்படுகிறது.

## 14வது அரசியலமைப்புத் திருத்தம்

பிறப்புரிமைக் குடியுரிமைக்கான சட்ட அடித்தளம் அமெரிக்க இந்தத் திருத்தத்தில், அமெரிக்காவில் பிறந்த அல்லது குடியுரிமை பெற்ற அனைவரும், அமெரிக்காவின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்களாக இருந்தால், அவர்கள் அமெரிக்காவினதும் அவர்கள் வசிக்கும் மாநிலத்தினதும் குடிமக்கள் ஆவர் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒரு வாக்கியம் அமெரிக்கக் குடியுரிமைச் சட்டத்தின் மிக முக்கியமான தூணாகக் கருதப்படுகிறது. உள்நாட்டுப் போரிலிருந்து உருவான சட்டம் இது என்று கூறப்படுகிறது. 14வது திருத்தத்தைப் புரிந்துகொள்ள, அமெரிக்க உள்நாட்டுப் போரின் வரலாற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். 1861 முதல் 1865 வரை நடைபெற்ற உள்நாட்டுப் போர், அடிமைத்தனத்தை ஒழித்தாலும், விடுதலை பெற்ற ஆப்பிரிக்க வம்சாவளியினரின் சட்ட உரிமைகள் உறுதிசெய்யப்படவில்லை. பல மாநிலங்கள் அவர்களை முழுமையான குடிமக்களாக ஏற்க மறுத்தன.

இந்த அநீதியை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகவே 14வது திருத்தம் உருவாக்கப்பட்டது. இதன் மூன்று முக்கிய நோக்கங்கள், அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றவர்களுக்கு முழுமையான குடியுரிமை வழங்குதல். அனைத்து குடிமக்களுக்கும் சமமான சட்டப் பாதுகாப்பை உறுதி செய்தல். மாநில அரசுகள் இன அடிப்படையில் குடியுரிமையை மறுப்பதைத் தடுப்பது என்பனவாகும்.







எனவே, பிறப்புரிமைக் குடியுரிமை என்பது ஆரம்பத்தில் குடியேற்றக் கொள்கைக்காக அல்ல; இன அடிப்படையிலான பாகுபாட்டை ஒழிக்க உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்பாகும்.

## பெற்றோரின் சட்ட அந்தஸ்து

1898 ஆம் ஆண்டு United States v. Wong Kim Ark வழக்கு பிறப்புரிமைக் குடியுரிமையின் சட்ட அடித்தளத்தை மேலும் வலுப்படுத்தியது. இதுவே அரசியலமைப்பை விளக்கிய வரலாற்றுத் தீர்ப்பு என்று கூறப்படுகிறது. சீனக் குடியேற்ற பெற்றோருக்கு அமெரிக்காவில் பிறந்த வாங்க் கிம் ஆர்க், சீனப் பயணத்திலிருந்து திரும்பியபோது அமெரிக்க அதிகாரிகள் அவரை குடிமகனாக ஏற்க மறுத்தனர். அப்போது இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தை அடைந்தது. அப்போது நீதிமன்றம், அமெரிக்காவில் பிறந்தவர் என்பதாலேயே அவர் அமெரிக்கக் குடிமகன் என்று தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பு இன்று வரை அமெரிக்கக் குடியுரிமைச் சட்டத்தின் முக்கியமான முன்னுதாரணமாக உள்ளது.

பிறப்புரிமைக் குடியுரிமையின் அடிப்படை நோக்கம், குழந்தையின் உரிமையை பெற்றோரின் சட்ட நிலைக்கு இணைத்துப் பார்க்கக் கூடாது என்பதாகும். அதனால், சுற்றுலா விசாவில் வந்த குடும்பம், மாணவர் விசாவில் இருக்கும் தம்பதியினர், வேலை விசா பெற்ற தொழிலாளர்கள், நிரந்தர குடியிருப்பாளர்கள், ஆவணங்கள் இல்லாத குடியேற்றக் குடும்பங்கள், என அனைவருக்கும் அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகள் பொதுவாக குடியுரிமை பெறுகின்றனர். இதுவே இன்று அரசியல் விவாதத்தின் மையமாகவும் உள்ளது.

ஆனாலும் விதிவிலக்காக அனைவருக்கும் இந்த உரிமை பொருந்தாது. முக்கியமான விதிவிலக்கு வெளிநாட்டு தூதர்களின் குழந்தைகள். சர்வதேச சட்டத்தின் கீழ் தூதரக அதிகாரிகள் அமெரிக்காவின் முழுமையான சட்ட அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாகக் கருதப்படுவதில்லை. எனவே, அவர்களுக்கு அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகள் தானாகவே அமெரிக்கக் குடியுரிமை பெறுவதில்லை.

## குடியேற்ற அரசியல்– குடியுரிமை

21ஆம் நூற்றாண்டில் குடியேற்றம் அமெரிக்கத் தேர்தல்களில் மிகப்பெரிய அரசியல் விவகாரமாக மாறியுள்ளது. குறிப்பாக தெற்கு எல்லை வழியாக நடைபெறும் சட்டவிரோத குடியேற்றம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் எல்லைப் பாதுகாப்பு தொடர்பான விவாதங்கள் அதிகரித்துள்ளன.

இதன் பின்னணியில் சில அரசியல் தலைவர்கள் பிறப்புரிமைக் குடியுரிமை தற்போதைய சூழலில் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். அவர்களின் வாதம், இந்தக் கொள்கை சட்டவிரோத குடியேற்றத்தை ஊக்குவிக்கிறது. குழந்தையின் குடியுரிமையைப் பயன்படுத்தி குடும்பங்கள் பின்னர் குடியேற்ற நன்மைகளைப் பெற முயல்கின்றன. இது அமெரிக்க குடியேற்றக் கட்டுப்பாட்டை பலவீனப்படுத்துகிறது.

ஆனால் இதற்கு எதிராக மனித உரிமை அமைப்புகள், அரசியலமைப்பு நிபுணர்கள் மற்றும் குடியேற்ற ஆதரவாளர்கள் வலுவான எதிர்ப்பை முன்வைக்கின்றனர். அவர்களின் கருத்துப்படி, குழந்தையின் உரிமையை பெற்றோரின் செயல்களுடன் இணைப்பது நியாயமல்ல. அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்ட உரிமையை நிர்வாக உத்தரவால் மாற்ற முடியாது. இது அமெரிக்காவின் சமத்துவக் கொள்கைக்கு எதிரானது.

## உச்ச நீதிமன்ற சட்டச் சிக்கல்

சமீப ஆண்டுகளில் பிறப்புரிமைக் குடியுரிமை தொடர்பாக பல வழக்குகள் நீதிமன்றங்களை அடைந்துள்ளன. அண்மையில் உச்ச நீதிமன்றம் வழங்கிய முக்கிய தீர்ப்புகளில் ஒன்று, கூட்டாட்சி கீழ்நிலை நீதிமன்றங்கள் நாடு முழுவதும் அமல்படும் வகையில் தற்காலிகத் தடையுத்தரவுகளை (Nation Wide Injunctions) எவ்வளவு பரவலாக வழங்கலாம் என்பதைக் குறித்தது. இந்தத் தீர்ப்பு, 14வது திருத்தத்தில் உள்ள பிறப்புரிமைக் குடியுரிமையை நேரடியாக ரத்து செய்யவில்லை. மாறாக, அந்த உரிமையைச் சவாலிடும் நிர்வாக நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எந்த நடைமுறையில் நீதிமன்றங்களால் பரிசீலிக்கப்பட வேண்டும் என்பது குறித்த சட்டக் கேள்விகளை முன்வைத்தது.

இதனால், அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளின் குடியுரிமை குறித்து அரசியலமைப்பில் உள்ள அடிப்படை நிலைமை மாற்றமின்றி தொடர்கிறது. வெளிநாடுகளில் பிறக்கும் அமெரிக்கர்களின் குழந்தைகள் பற்றிய விவாதமும் இந்த நேரத்திலே முக்கிய பேசு பொருளாக உள்ளது.

அமெரிக்காவுக்கு வெளியே பிறந்த குழந்தைகளுக்கும் சில சூழ்நிலைகளில் அமெரிக்கக் குடியுரிமை கிடைக்கலாம். அதற்கான நிபந்தனைகள், பெற்றோரில் ஒருவர் அல்லது இருவரும் அமெரிக்கக் குடிமக்களாக இருக்க வேண்டும். அவர்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுக்கு அமெரிக்காவில் வசித்திருக்க வேண்டும். குடியுரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிற நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். அதாவது, பிறந்த இடம் மட்டுமல்ல, சில சந்தர்ப்பங்களில் பெற்றோரின் குடியுரிமையும் முக்கிய பங்காற்றுகிறது.

## உலக நாடுகளின் அணுகுமுறை

அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகள் முழுமையான பிறப்புரிமைக் குடியுரிமையை ஏற்றுக்கொள்கின்றன. ஆனால் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் பெற்றோரின் குடியுரிமை அல்லது நிரந்தர குடியிருப்பு அந்தஸ்தை முக்கிய அடிப்படையாகக் கொண்டு குடியுரிமை வழங்குகின்றன. இதனால், உலகளவில் ஒரே மாதிரியான குடியுரிமை முறை இல்லை என்பது தெளிவாகிறது.

பிறப்புரிமைக் குடியுரிமை என்பது அமெரிக்க அரசியலமைப்பின் ஒரு சட்டப் பிரிவு மட்டுமல்ல; அது அந்த நாட்டின் வரலாறு, சமத்துவம், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தின் ஆழமான அடையாளமாகும். 14வது திருத்தம் உருவாக்கப்பட்ட காலத்தில் அதன் நோக்கம் இன அடிப்படையிலான அநீதியை ஒழிப்பதாக இருந்தாலும், இன்று அது குடியேற்றம், தேசிய பாதுகாப்பு, அரசியலமைப்பு அதிகாரம் மற்றும் நீதித்துறையின் பங்கு ஆகியவற்றைச் சுற்றியுள்ள மிகப் பெரிய அரசியல் விவாதமாக வளர்ந்துள்ளது.

எதிர்காலத்தில் இந்த விவகாரம் தொடர்ந்து நீதிமன்றங்களிலும் அரசியல் மேடைகளிலும் விவாதிக்கப்படும் என்பது உறுதி. இருப்பினும், அரசியலமைப்பின் 14வது திருத்தம் மாற்றப்படாத வரை, அமெரிக்க மண்ணில் பிறக்கும் பெரும்பாலான குழந்தைகள் அமெரிக்கக் குடிமக்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். அதனால், பிறப்புரிமைக் குடியுரிமை என்பது ஒரு சட்டக் கொள்கை மட்டுமல்ல; அமெரிக்க ஜனநாயகத்தின் நீண்டகால அரசியலமைப்புச் சிந்தனையையும், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையையும் பிரதிபலிக்கும் ஒரு முக்கியமான அடையாளமாகத் தொடர்கிறது.

**அமெரிக்க அரசியலமைப்பின் பிறப்புரிமைக் குடியுரிமையை [Birthright Citizenship] மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அதிபர் டிரம்ப் வலியுறுத்தி வருகிறார். குறிப்பாக, சட்ட விரோதமாக நாட்டில் வசிக்கும் பெற்றோர் அல்லது தற்காலிக விசாவில் உள்ள பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு தானாக அமெரிக்கக் குடியுரிமை வழங்கும் நடைமுறையை கட்டுப்படுத்த வேண்டும் என்பதே அவரது கொள்கையின் மையமாக இருக்கிறது.**

# கரும்புலிகள் நாளை ஆரம்பித்து வைத்து தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த செய்தி!

05.07.1993

எனது அன்புக்குரியவர்களே!

கரும்புலிகள் நாளாகிய இன்றைய தினத்தில் கரும்புலி வீரர்களாகிய உங்கள் மத்தியில் கரும்புலிகள் பற்றி பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய தினத்தில் முழு இலங்கைத்தீவையும் அதிர வைத்த ஓர் சம்பவம் நிகழ்ந்தது. எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர் ஓர் ஒப்பற்ற சாதனையை நிலைநாட்டினான். எமது வீரவரலாற்றில் என்றுமே நிகழாத ஓர் அதிசயம் ஒன்று அன்று நிகழ்ந்தது. எதிரியின் அசைக்க முடியாத கோட்டையாகத் திகழ்ந்த ஓர் இராணுவ முகாமை இந்த இளம் புலிவீரன் தனித்த ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்தான். ஒரு பெரிய படையணியாலும் செய்ய முடியாத பாரிய இராணுவ சாதனையை தனி மனிதனாகச் சென்று இவன் சாதித்து முடித்தான்.



எரிமலையை சுமந்து சென்று எதிரியின் பாசறைக்குள் வெடிக்கவைத்தான். இந்தப் பூகம்பமான தாக்குதல் நிகழ்வு அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையையே மாற்றியமைத்தது. எதிரியின் சைனியங்கள் நிலைகுலைந்து பின்வாங்கின. ஒரு பெரிய படையெடுப்பின் பேரழிவிலிருந்து யாழ்ப்பாணம் தப்பிக் கொண்டது. தனிமனிதனாக எமது போராளி ஒருவன் தன்னை அழித்து தனது தேசத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றினான்.

முதன் முதலாக, எமது போராட்ட வரலாறு தியாகத்தின் அதியுன்னதமான ஒரு அற்புதத்தைப் பதிவு செய்துகொண்டது. அன்றிலிருந்து எமது போராட்ட மரபில் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்பட்டது. என்றுமில்லாத வகையில் ஓர் புதிய போர் வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கப்டன் மில்லருடன் கரும்புலி வீரர்களின் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத எண்ணிப்பார்க்க முடியாத தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

கரும்புலிவீரர்களின் தோற்றமும், தற்கொடைப் படையாக அவர்களின் வளர்ச்சியும் எழுச்சியும் மிக நுட்பமான அவர்களின் போர்ச் சாதனைகளும் எமது போராட்டத்தின் ஒரு வரலாற்று தேவையாகவே எழுந்தது.

நாம் இன அழிவை எதிர்கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்குக் குரல் கொடுக்கவோ உலகில் எவரும் இல்லை. நாம் தனித்து நிக்கிறோம். எமது சொந்தக் கால்களில் நிலைத்து நிற்கிறோம். பலம் வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக்கட்ட உறுதிபூண்டு நிற்கிறார்கள். முழு உலகமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டு கொடுத்து வருகிறது.

இந்த இக்கட்டாண ஆபத்தான சூழ்நிலையில் நிர்கதியாக நிக்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில் நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரியோகித்து ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்த வேண்டும். இந்தத் தேவையை, நிர்பந்தத்தை நாம் அசட்டை செய்து விட முடியாது. அல்லாத பட்சத்தில் நாம் இனவாரியாக அழிந்து போவதை தவிர்க்க முடியாது.

பலவீனமான எமது மக்களின் பலம் வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்பு கவசங்கள். எமது போராட்ட பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறியும் நெருப்புமனிதர்கள்.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள். அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும், பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் அழமான மக்கள் நேயம் படைத்தவர்கள். இந்த உலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் எல்லாவற்றுக்கும் மேலாக தன்னையே காதலிக்கிறான். தனது உயிரையே நேசிக்கிறான். உயிர் வாழ வேண்டும் என்று துடிக்கிறான். மனிதன் உயிரை நேசிப்பதால் உயிர் வாழ விரும்புவதால் உயிர் அற்று போகும் சாவு என்ற இல்லாமை நிலைக்கு பயப்படுகிறான். இது மனித இயல்பு. இயற்கையின் நியதி.

ஆனால் ஒரு கரும்புலிவீரன் தன்னைவிட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்த குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்தக் குறிக்கோள் அவனது சுயத்திற்க்கும் அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது. மற்றவர்கள் இன்புற்று இருக்கவேண்டும் என்பதற்காகத் தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள் தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தை தழுவிக்கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்து கொள்ளவேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும் அச்சங்களிலிருந்தும் தன்னை விடுதலை செய்து கொள்பவன் தான் உண்மையில் விடுதலைவீரன் என்ற தகமையைப் பெற முடியும். மனமானது பயங்களிலிருந்து விடுதலை பெறும்போது தான் வீரம் தோன்றுகிறது. துணிவு பிறக்கிறது.

இந்த மனவியல் உண்மையை நான் ஆரம்பத்தில் இருந்து எமது போராளிகளுக்கு எடுத்துரைத்து வருகிறேன். பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன். உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கு எல்லாம் முலமானது மரணபயம். இந்த மரணபயத்தை கொன்றுவிடுபவன் தான் தன்னை வென்று விடுகிறான். அவன்தான் தனது மனச் சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான். கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்து விடுகிறது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பாத்து காத்திருப்பார்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் அந்த இறுதி கணத்திலும் தம் இலக்கை அழிக்கும் நோக்கிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பர். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

கரும்புலி என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிபாட்டிற்குமே நாம் குறிப்பிடுகிறோம்.இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத ஊடகமான இரகசியமான தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே "கரும்புலி" என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிவமாக அமையப் பெற்றிருக்கிறது.



இந்த இரகசியத்தன்மை கரும்புலி வெற்றிக்கு மூலாதரமானது. ஆளுக்கும் பெயருக்கும் அப்பால், அந்த தனிமனித தத்துவத்துக்கு அப்பால், செயற்பாடே இங்கு முதன்மை பெறுகின்றது. மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தை சூழற்றுகிறது. பல கரும்புலிவீரர்கள் இன்று பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்கிய போதும் அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப் புகழ் பெற்றுவாழும்.

முகத்தை மறைத்து, பெயரையும் புகழையும் வெறுத்து இலட்சிய மூச்சாக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்துவிட்ட இந்த சரித்திர நாயகர்களை நான் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று மனித விடிவை நோக்கி நகரும் உந்து சக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த விடுதலையின் தாகத்தை தீர்க்க எதையும் செய்வதற்க்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்களை அரவணைத்து விடையளிக்கும் போது இனம் புரியாத உணர்வுகளால் என் ஆன்மா நடுங்கும். ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வழித்து நிற்கும் எமது தேச மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு கிடைக்கும் என்ற அசையாத நம்பிக்கையில் அந்த தியாகப் பயணத்தை தொடர்ந்தார்கள். அந்த புனிதர்களை எண்ணும் பொழுதெல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும். கரும்புலி வீரர்கள் பற்றி இன்று உலகமெல்லாம் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தை கண்டு மலைத்துப் போய் நிக்கிறது.

பூகம்ப அதிர்வாக குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே. அன்றோரு காலம் அமைதி வழியில் உரிமை கேட்டு ஆர்பரித்த தமிழினத்தை அடக்குமுறையாளனின் இரும்புக்கரங்கள் நசுக்கி விட்டன. இன்று நீதிகேட்டு நெருப்பாக எரியும் தமிழரின் ஆவேச எழுச்சியை எந்தச் சக்திகளாலும் நசுக்கிவிடமுடியாது.

"இது கரும்புலிகளின் சகாப்தம்" இடியும் மின்னலுமாக விடுதலைப் புலிகள் போர்க்கோலம் கொண்டுவிட்ட காலம். இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும் சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

கரும்புலிகளின் புனித தினமாகிய இன்றைய நாளில் வரைபடாத சித்திரங்களாகவும் எழுதப்படாத சரித்திரங்களாகவும் எமது வாழ்வுக்காக தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்தி பூசிப்போமாக.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்.
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

# கரும்புலி கப்டன் மில்லர்


(வல்லிபுரம் வசந்தன், கரவெட்டி - யாழ்ப்பாணம், பிறப்பு: 01.01.1966)



## கரும்புலி மில்லர் – நீ...
## காலனும் கலங்கிய காவியம்
## காலத்தால் அழியாத ஓவியம்!

05.07.1987 அன்று யாழ். வடமராச்சிக் கோட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறீலங்கா படைத்தளம் மீதான கரும்புலித் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.







# அமெரிக்க சுதந்திரத்தின் 250-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி மற்றும் மக்களுக்கும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கப் (TGTE) பிரதமரின் செய்தி

04.07. 2026

**ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி அவர்களுக்கும், அமெரிக்க மக்களுக்கும்,**

ஒரு தேசத்தை உருவாக்கியது மட்டுமல்லாமல், மனிதகுலத்தின் அறம் சார்ந்த மற்றும் அரசியல் ரீதியான சிந்தனைப் பார்வையையே மாற்றியமைத்த “சுதந்திரப் பிரகடனத்தின்” 250-வது ஆண்டு நிறைவு எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பாகவும் உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்களின் சார்பாகவும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1776-ஆம் ஆண்டு ஜூலை 4-ஆம் நாளன்று, பதின்மூன்று குடியேற்றங்கள் எந்தவொரு பேரரசையும் விட வலிமையான ஒரு கருத்தை அறிவிக்கத் துணிந்தன. அரசாங்கங்கள் “ஆளப்படுபவர்களின் ஒப்புதலில் இருந்தே தங்கள் நியாயமான அதிகாரங்களைப் பெறுகின்றன” என்றும், “எந்தவொரு அரசாங்க வடிவமும் இந்த நோக்கங்களைச் சிதைப்பதாக மாறும்போது, அதை மாற்றியமைக்கவோ அல்லது ஒழிக்கவோ மக்களுக்கு உரிமை உண்டு” என்றும் அவை அறிவித்தன. அந்த வார்த்தைகள் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பிறப்பை மட்டும் அறிவிக்கவில்லை; அவை ஒரு புதிய அரசியல் யுகத்தின் பிறப்பையும் அறிவித்தன.

அமெரிக்க சுதந்திரப் பிரகடனமானது, அரசர்கள் தெய்வீக உரிமையால் ஆட்சி செய்கிறார்கள் மற்றும் பேரரசுகள் நித்தியமானவை என்ற மாயையைத் தகர்த்தெறிந்தது. அதற்குப் பதிலாக, சுதந்திரம் என்பது சாதாரண ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரியது என்றும், ஆட்சியதிகாரத்தின் நியாயத்தன்மை மக்களின் விருப்பத்திலிருந்தே பிறக்கிறது என்றும், ஒவ்வொரு தேசத்திற்கும் தனது சொந்த விதியைத் தீர்மானிக்கும் உரிமை உண்டு என்றும் அது பிரகடனப்படுத்தியது.

“அனைத்து மனிதர்களும் சமமாகப் படைக்கப்பட்டுள்ளனர்” என்றும், “படைப்பாளியால் அவர்களுக்குப் பறிக்க முடியாத சில உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன” என்றும் - அவற்றில் “வாழ்வு, சுதந்திரம் மற்றும் மகிழ்ச்சியைத் தேடுதல்” ஆகியவை அடங்கும் - அது முன்வைத்த அழியாத கருத்து, மனித மாண்பு குறித்து எழுதப்பட்ட மிகச்சிறந்த உறுதிமொழிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்த லட்சியங்களை நனவாக்குவதற்கான பயணம் நீண்டதாகவும், அமெரிக்காவிற்குள்ளேயே கூட இன்னும் முழுமையடையாததாகவும் இருந்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு - கண்டங்கள் மற்றும் தலைமுறைகள் கடந்து -ஊக்கமளிக்கும் ஒரு அறம் சார்ந்த வழிகாட்டி நெறியை இந்தப் பிரகடனம் நிறுவியது.

பிலடெல்பியாவில் தோன்றிய அந்த லட்சியங்கள் பிரெஞ்சுப் புரட்சியின்போது எதிரொலித்தன் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா முழுவதும் காலனித்துவ எதிர்ப்பு இயக்கங்களுக்கு ஊக்கமளித்தன் அடிமைத்தனம் மற்றும் இனப் பாகுபாட்டிற்கு எதிரான போராட்டங்களை வலுப்படுத்தின் மேலும் இறுதியாக, சுயநிர்ணய உரிமை மற்றும் 1948-இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட “மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தில்” பொதிந்துள்ள மனித உரிமைகளை வடிவமைக்க உதவின. மதம், இனம், இனக்குழு, மொழி அல்லது கொள்கை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு மனிதனும் சமமான மாண்பைக் கொண்டுள்ளான் என்ற நம்பிக்கை, நாகரிகத்தின் மிகச்சிறந்த சாதனைகளில் ஒன்றாக மாறியுள்ளது. இன்று, இனப்படுகொலை, போர், சர்வாதிகாரம், சகிப்புத்தன்மையின்மை, இனச் சுத்திகரிப்பு, அதிகரித்து வரும் சமத்துவமின்மை மற்றும் ஜனநாயக விழுமியங்களின் ஆபத்தான சரிவு ஆகியவற்றை உலகம் எதிர்கொண்டிருக்கும் சூழலில், 1776-ஆம் ஆண்டின் செய்தி முன்னெப்போதையும் விட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கிறது. அமெரிக்கப் புரட்சியை வெறும் வரலாற்று நிகழ்வாக மட்டும் மனிதகுலம் கொண்டாடுவதோடு நின்றுவிடாமல், அதன் உணர்வை மீண்டும் கண்டறிய வேண்டியதும் அவசியமாகும்.

அரசாங்கங்கள் தங்கள் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே இருக்கின்றனவே தவிர, அவர்களை ஆதிக்கம் செலுத்துவதற்காக அல்ல; சுதந்திரம் அச்சத்தை விட வலிமையானது; நீதி பலத்தை விட நீடித்தது; மேலும், ஜனநாயகம் அதன் குறைகள் இருந்தபோதிலும், கொடுங்கோன்மைக்கு எதிரான மனிதகுலத்தின் மாபெரும் பாதுகாப்பாகத் திகழ்கிறது என்று நம்பும் தலைவர்களும் குடிமக்களும் இந்த உலகிற்கு மீண்டும் தேவைப்படுகிறார்கள்.

தமிழீழ மக்கள் இந்தக் கொள்கைகளின் ஆழ்ந்த முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்கிறார்கள், ஏனெனில் எங்களின் போராட்டமும் அமெரிக்காவின் ஸ்தாபனத்திற்கு உத்வேகம் அளித்த அதே உலகளாவிய கொள்கைகளில் வேரூன்றியுள்ளது.

இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்க தேசபக்தர்கள் “பிரதிநிதித்துவம் இல்லாமல் வரி விதிப்பு இல்லை; என்ற முழக்கத்துடன் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்தனர். அவர்கள் ஒப்புதல் இல்லாத ஆட்சியை நிராகரித்து, தன்னாட்சிக்கான தங்களின் பிரிக்க முடியாத உரிமையை நிலைநாட்டினர்.

இன்று, தமிழ் மக்கள் தங்களின் உள்ளார்ந்த சுயநிர்ணய உரிமையை நனவாக்குவதற்காகத் தங்களின் அமைதியான போராட்டத்தைத் தொடர்கின்றனர். எங்களின் நோக்கம் வெற்றி கொள்வதோ அல்லது சிறப்புரிமை பெறுவதோ அல்ல, மாறாக அமெரிக்காவின் ஸ்தாபகர்களுக்கு உத்வேகம் அளித்த அதே ஜனநாயகக் கொள்கையே ஆகும்: அதாவது, ஒவ்வொரு மக்களுக்கும் தங்களின் சொந்த அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கவும், ஆளப்படுபவர்களின் சுதந்திரமாக வெளிப்படுத்தப்பட்ட விருப்பத்திலிருந்து தங்கள் அதிகாரத்தைப் பெறும் நிறுவனங்களின் கீழ் கண்ணியம், சமத்துவம் மற்றும் பாதுகாப்புடன் வாழவும் உரிமை உண்டு.

எனவே, இந்த மகத்தான ஆண்டுவிழாவை நாம் ஐக்கிய அமெரிக்காவின் நண்பர்களாக மட்டுமல்லாமல், சுதந்திரத்தின் நீடித்த வாக்குறுதியில் நம்பிக்கை கொண்ட சக விசுவாசிகளாகவும் கொண்டாடுகிறோம்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல், மனிதகுலத்திற்கு முதன்முதலில் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த இலட்சியங்களுக்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பைப் புதுப்பிக்கட்டும். உங்கள் தேசத் தந்தையர்களின் ஞானம், துணிவு மற்றும் தார்மீகக் கற்பனைத்திறன் ஆகியவை வருங்கால சந்ததியினருக்குத் தொடர்ந்து உத்வேகம் அளிக்கட்டும். மேலும், சுதந்திரப் பிரகடனத்தில் பொறிக்கப்பட்டுள்ள கோட்பாடுகள், அடக்குமுறையின் மீது சுதந்திரமும், தப்பெண்ணத்தின் மீது நீதியும், வன்முறையின் மீது உரையாடலும், கொடுங்கோன்மையின் மீது ஜனநாயகமும் வெல்லும் ஓர் உலகத்தை நோக்கிய பாதையை ஒளிரச் செய்யட்டும்.

அமெரிக்காவின் முதல் இருநூற்று ஐம்பது ஆண்டுகளை நாம் போற்றும் இவ்வேளையில், பிலடெல்பியாவில் பிரகடனப்படுத்தப்பட்ட காலத்தால் அழியாத இலட்சியங்கள் ஒரு தேசத்திற்கு மட்டும் சொந்தமானவை அல்ல, மாறாக முழு மனிதகுலத்திற்கும் சொந்தமானவை என்ற நமது நம்பிக்கையையும் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

இந்த அசாதாரணமான ஆண்டுவிழாவில் ஐக்கிய அமெரிக்காவிற்கு வாழ்த்துகள்.

உங்கள் வரலாற்றின் அடுத்த அத்தியாயம், உலகம் முழுவதும் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனித மாண்பு ஆகியவற்றின் நோக்கத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லட்டும்.

மரியாதையுடனும் அன்பான வாழ்த்துகளுடனும்,
விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

**A Message from the Prime Minister of the Transnational Government of Tamil Eelam (TGTE) to the President and the People of the United States of America on the 250th Anniversary of American Independence**

4 July 2026

**To the President of the United States of America, and to the Great American People,**

On behalf of the Transnational Government of Tamil Eelam and the Tamil people across the world, I extend our warmest congratulations on the historic occasion of the **250th anniversary of the Declaration of Independence** - a document that not only gave birth to a nation but transformed the moral and political imagination of humanity.

On the Fourth of July in 1776, thirteen colonies dared to proclaim an idea more powerful than any empire. They declared that governments derive “their just powers from the consent of the governed,” and that “whenever any Form of Government becomes destructive of these ends, it is the Right of the People to alter or to abolish it.” Those words did not merely announce the birth of the United States. They announced the birth of a new political age.

The American Declaration of Independence shattered the illusion that kings ruled by divine right and that empires were eternal. It proclaimed instead that liberty belongs to ordinary men and women, that legitimacy springs from the will of the people, and that every nation has the right to determine its own destiny.

Its immortal assertion that **“all men are created equal”** and are **“endowed by their Creator with certain unalienable Rights,”** among them “Life, Liberty and the pursuit of Happiness,” remains one of the greatest affirmations of human dignity ever written. Although the journey toward realizing these ideals has been long and unfinished-even within America itself-the Declaration established a moral compass that has inspired oppressed peoples across continents and generations.

The ideals born in Philadelphia echoed through the French Revolution, inspired anti-colonial movements across Asia, Africa and Latin America, strengthened struggles against slavery and racial discrimination, and ultimately helped shape the right to self-determination and the Human Rights embodied in the **Universal Declaration of Human Rights** adopted in 1948. The belief that every human being possesses equal dignity irrespective of religion, race, ethnicity, language or creed has become one of civilization’s greatest achievements.

Today, as the world confronts genocide, war, authoritarianism, intolerance, ethnic cleansing, widening inequality and an alarming erosion of democratic values, the message of 1776 is more relevant than ever. Humanity does not merely celebrate the American Revolution as history; it needs to rediscover its spirit.The world once again needs leaders and citizens who believe that governments exist to servetheir people, not dominate them; that freedom is stronger than fear; that justice is more enduring than force; and that democracy, despite its imperfections, remains humanity’s greatest safeguard against tyranny.

The People of Tamil Eelam understand the profound significance of these ideals because our own struggle is rooted in the same universal principles that inspired America’s founding. Two hundred and fifty years ago, American patriots challenged British colonial rule under the rallying cry of **“No taxation without representation.”** They rejected governance without consent and asserted their inalienable right to self-government. Today, the Tamil People continue their own peaceful struggle for the realization of their inherent right to self-determination. Our aspiration is neither conquest nor privilege, but the same democratic principle that animated America's founders: that every people has the right to determine its own political future and to live with dignity, equality and security under institutions that derive their authority from the freely expressed will of the governed.

We therefore celebrate this remarkable anniversary not simply as friends of the United States, but as fellow believers in the enduring promise of freedom.

May this historic milestone renew America’s commitment to the ideals that first made it a beacon of hope for humanity. May the wisdom, courage and moral imagination of your Founding Fathers continue to inspire future generations. And may the principles enshrined in the Declaration of Independence illuminate a path toward a world where liberty triumphs over oppression, justice over prejudice, dialogue over violence, and democracy over tyranny.

As we honour America’s first two hundred and fifty years, we also reaffirm our faith that the timeless ideals proclaimed in Philadelphia belong not to one nation alone, but to all humanity. Congratulations to the United States of America on this extraordinary anniversary.

May the next chapter of your history continue to advance the cause of freedom, democracy and human dignity throughout the world. With profound respect and warmest wishes,

Visuvanathan Rudrakumaran
Prime Minister
Transnational Government of Tamil Eelam (TGTE)

# சமகால வாழ்வின் தரிசனங்கள்: ஐங்கரன் விக்கினேஸ்வராவின் எழுத்துழியம்!





-எழுத்தாளர் தாமரைச் செல்வி-

01.07.2026

அரசியல் என்பது படித்தவர் முதல் பாமரர் வரை அனைவர் வாழ்விலும் ஊடுருவி நிற்பது. அதன் விளைவுகள் மனிதர் வாழ்வை அசைத்துப் பார்க்கும் சக்தி கொண்டவை.

அவற்றை எழுத்தில் கொண்டு வருவது என்பது இச்சமுதாயத்துக்கு ஒரு படைப்பாளி செய்யும் மகத்தான பணியாகும். இவற்றை ஆவணப் படுத்துவதும் காலத்தின் தேவையாகும். சமகாலத்தில் நடப்பவைகளின் பதிவுகள் எதிர்காலச் சந்ததியினருக்கு பெறுமதி வாய்ந்த ஆவணங்களாக கை மாற்றப்படுகிறது. அது சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை என்று எந்த வடிவமாகவும் இருக்கலாம். கட்டுரை என்றாலும் அதற்கும் ஒரு இலக்கிய வடிவம் உண்டு.

திரு. ஐங்கரன் அவர்கள் ஒரு சமுதாயப் பணியை அமைதியான முறையில் பொறுப்போடு செய்து வருகிறார். காலையில் வரும் பத்திரிகைகளில் ஏதாவது ஒன்றில் ஐங்கரனின் கட்டுரைகள் பிரசுரமாகி இருக்கும். இப்படி தொடர்ச்சியாக எழுத எப்படி இவருக்கு நேரம் கிடைக்கிறது என்று யோசிக்கத் தோன்றும்.

திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்களின் மூன்று நூல்கள் சமீபத்தில் வெளியாகியிருக்கின்றன. “இலங்கை இதழியலில் சிவகுருநாதன்”, “பாலஸ்தீனம் எரியும் தேசம்”, “ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்” ஆகிய நூல்களே அவை. அவுஸ்திரேலியாவின் பல மாநிலங்களிலும் இந்நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப் பட்டிருக்கின்றன. இந்நூல்களின் பேசு பொருள் பலரின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றன.

இலங்கை இதழியல் துறையில் தவிர்க்கமுடியாத ஆளுமையாக இருந்தவர் திரு. சிவகுருநாதன் அவர்கள். அவரைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள “இலங்கை இதழியலில் சிவகுருநாதன்” எனும் நூல் நமக்கு உதவுகிறது. ஒரு நாட்டின் தேசியப் பத்திரிகையில் ஆசிரிய பீடத்தில் சுமார் நாற்பது வருட காலம் பணியாற்றியமை என்பது சாதனைக்குரியது. இலங்கை தமிழ் இலக்கியத்தின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் தினகரன் மூலம் பெரும் பங்காற்றியவர் இவர். அவருக்கான கௌரவத்தை ஐங்கரனின் இத்தொகுப்பு வழங்கியிருக்கிறது எனலாம்.

மற்ற இரு நூல்களும் அரசியல் சார்ந்தவை. எம்மோடும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டவை. பல்லாயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் எரிந்து கொண்டிருக்கும் தேசங்களில் நடைபெறும் நிகழ்வுகள் நாம் ஈழத்தில் அனுபவித்த துயரங்களையும் தொட்டுச் செல்வதை வலியோடு எம்மால் உணர முடிகிறது.

அவருக்குள் இருக்கும் சமூக நேசிப்பும் அதனது எழுத்து இந்த சமூகத்துக்கான பதிவாக இருக்க வேண்டும் என்ற உந்துதலும் தான் அவரது அயராத முயற்சிக்குக் காரணமாக இருக்க வேண்டும் என்ற புரிதலும் எமக்கு ஏற்படுகிறது.

தொடர்ச்சியான இவரது எழுத்துக்கு இவரது மாணவப் பருவத்திலேயே பிள்ளையார் சுழி போடப்பட்டுவிட்டது. சிறு வயதிலிருந்தே தனக்குள் இருக்கும் எழுத்துத் திறமையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்.

1990 ஆம் ஆண்டு இவருக்கு எத்தனை வயது இருக்கும்? அந்த வயதிலேயே சிறுவர் இலக்கியம் பற்றிய நாற்பது தொடர் கட்டுரைகளை தினகரன் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இளம் வயதிலேயே சிறுவர் பத்திரிகைகள், இலக்கிய நூல்கள், ஈழத்து சிறுவர் இலக்கியம் பற்றிய ஆய்வையும் மேற் கொண்டவர்.

இதுவரை இவர் பன்னிரண்டு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார். அணையாத அறிவாலயம், விடியலின் கானம், இன்னும் இருட்டினில், உறக்கம் தேடும் உலகிற்காய், வெண்பனிச் சுவடுகள், காற்றோடு பேசுதல், அக்கினிப் பிரவேசம், உள்மன யாத்திரை போன்ற புதுக் கவிதைத் தொகுதிகளையும் உனக்குள்ளேயே உள்ளிருப்பு, இழப்புக்களை இழப்போம், கல்லறைக்குள் கதிரவன் ஆகிய ஹைக்கூ கவிதைத் தொகுதிகளையும் படைத்துள்ளார். இவரின் நூல்களின் தலைப்புக்களே வித்தியாசமானவையாகவும் நயம் மிகுந்தவையாகவும் இருப்பதைக் காணலாம்.

இவை தவிர அடுத்தவர்கள் பற்றிய தொகுப்புக்களையும் முன்நின்று வெளியீடு செய்திருக்கிறார். வடமராட்சி ஒபரேஷன் லிபரேஷன் படுகொலைகள் எம் மண்ணின் வரலாற்றில் பதியப்பட்ட துயர வரலாறு. உலகையே அதிர வைத்த படுகொலைகளின் களம் அது. அக்கொலைகளை நினைவு கூரும் வகையில் எட்டு இளம் கவிஞர்களின் “கல்லறை மேலான காற்று” எனும் கவிதைத் தொகுதியினை 1988ஆம் ஆண்டு தொகுத்தளித்தவரும் இவரே. அது தவிர ஈழப்போரின் வலியைச் சுமந்த அகிலன் திருச்செல்வத்தின் கவிதைகள் நூலைத் தொகுத்தவரும் இவரே. அகிலனின் முதலாவது ஆண்டு நினைவாக 1990 அல்ல ‘மரணம் வாழ்வின் முடிவல்ல’ என்ற கவிதைத் தொகுப்பும் வெளிவந்தது.

ஈழத்துப் பிரச்சனைகளை மட்டும் பேசாமல் சர்வதேச அரசியல் ஆய்வுக் கட்டுரைகளையும் இவர் எழுதி வருவது இவரது பரந்த பார்வையை நமக்கு அடையாளம் காட்டுகிறது. ஐங்கரன் எனும் பெயரில் மட்டுமின்றி சார்ள்ஸ், நவீனன் எனும் புனைபெயர்களிலும் எழுதும் இவரது எழுத்துக்கள் பலராலும் விரும்பி வாசிக்கப்படுகிறது.

ஈழ விடுதலை பற்றியும் அதன் அரசியல் பற்றியும் ஆழமான புரிதல் உள்ள இவர் உலக அரசியலையும் புரிந்து கொண்டு அவற்றை எழுத்தில் தருவது இவரது திறமைக்கு ஒரு சான்றாகிறது.

**சமகால சர்வதேச விவகாரங்களை அலசி ஆராய்ந்து எழுதும் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் அகவை நாளான ஜூலை 2 இல் ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் தாமரைச் செல்வி எழுதிய இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

எத்தனையோ வல்லரசு நாடுகளின் பிரச்சனைகளை மட்டுமன்றி உலக வரைபடத்தில் சிறு புள்ளிகளாகத் தோற்றம் தரும் மிகச் சிறிய நாடுகளின் பிரச்சனைகளையும் இவர் தன் எழுத்துக்களில் முன் நிறுத்துகிறார். எமக்கு அறிமுகமற்ற அந்த நாடுகளின் நிலைமைகளை இவரது கட்டுரைகள் மூலம் நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. அந்தக் கட்டுரைகளை எழுதும் முன் அந்தந்த நாடுகளைப் பற்றி அறிந்து கொள்ள இவர் எவ்வளவு மெனக்கெட்டிருக்க வேண்டும். எவ்வளவு நேரத்தைச் செலவழிக்க வேண்டும். அந்த தேடலே இவரது எழுத்துக்களை உண்மைத் தன்மைக்கு மிக நெருக்கமாக மாற்றுகிறது.

எளிமையான மொழிநடை இவருக்கு கை வந்திருக்கிறது. கனதியான விஷயங்களை எல்லாம் மிக இலகுவாக யாவரும் புரிந்து கொள்ளும்படி எழுத இவரால் முடிகிறது. ஈழத்துக் கவிஞன் தீபச்செல்வன் ஐங்கரனைப் பற்றி ஓரிடத்தில் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

“உலக அரசியலின் முகங்களை, ஆயுத அரசியலின் அர்த்தங்களை, ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை, சமகால உலக அரசியலில் பொதிந்துள்ள தந்திரங்களின் முகங்களை என இவர் அதனது எழுத்துக்களின் வழியாக தரும் செய்திகள் மிகவும் அதிர்வு தரக்கூடியன.”

உண்மைதான். அரசியலின் சூழ்ச்சி எல்லா தேசங்களிலும் நடந்திருக்கிறது. எல்லா மக்களையும் துயர் கொள்ள வைத்திருக்கிறது. ஈழ மண்ணிலும் நடந்திருக்கிறது. அவைகளை இவரது எழுத்துக்களில் பார்க்கும் போது அனுபவித்த வலி புதப்பிக்கப் படுகிறது. இதுவே இவரது எழுத்தின் பலம் எனலாம்.

சமகால நிகழ்வுகளை எழுத்துக்களாக பதிவு செய்வதாகட்டும் இந்த சமூகத்துக்கு தன்னாலான மனிதாபிமான சேவைகளைச் செய்வதாகட்டும் தன்னை ஒரு சமூக நேசிப்பாளராக அடையாளம் காட்டும் ஐங்கரன் பல பேருக்கு முன் மாதிரியாகத் திகழ்கிறார் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இவரை அசுரவேக எழுத்தாளர் என்று குறிப்பிடுவதிலும் தவறு ஏதும் இல்லை. யந்திரமயமான இன்றைய வாழ்வுக்குள் நேரத்தை தேடி எடுப்பது என்பது எத்தனை சிரமம். அப்படி எடுக்கும் நேரத்துக்குள் இப்படி தொடர்ச்சியாக எழுதுவதற்கு எவ்வளவு உழைப்பைக் கொட்ட வேண்டியிருக்கும். அதை மிகுந்த முன்னெடுப்பு பாராட்டுதற் குரியது.




அவரது எழுத்துக்கள் இன்றைய காலத்தின் வெட்டுமுகம். இன்றைய வாழ்வின் ஆவணங்கள். எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கப் போகின்ற சமகால வாழ்வின் தரிசனங்கள். இவரது எழுத்து எம் சமூகத்திற்கானது. அதை அவர் தொடர்ந்தும் செய்ய வேண்டும்.



# ஈழத்தமிழர்களின் பொது வாக்கெடுப்பு: சுயநிர்ணய உரிமையைச் சிதைக்கும் அபாயமா?

நவீனன்

01.07.2026

ஒரு மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் பொது வாக்கெடுப்பு என்பது மிக உயர்ந்த ஜனநாயக கருவிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மக்கள் தங்கள் விருப்பத்தை நேரடியாக வெளிப்படுத்தும் வாய்ப்பாக அது அமைகிறது. ஆனால், ஒரு பொதுவாக்கெடுப்பின் வடிவமைப்பும் அதன் கேள்விகளும் அதன் முடிவுகளைப் போலவே முக்கியமானவை. குறிப்பாக, நீண்டகால தேசிய இனப்பிரச்சினை, அரசியல் அடக்குமுறை, போர் மற்றும் மனித உரிமை மீறல்களை அனுபவித்த ஒரு மக்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பான பொதுவாக்கெடுப்பில், அதன் கட்டமைப்பு மக்களின் உண்மையான விருப்பத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறதா என்பது மிக முக்கியமான விடயமாகும்.




தமிழர் தேசியக் கேள்வியைப் பொறுத்தவரை, தற்போதைய நிலை (Status Quo), கூட்டாட்சி (Federalism), சமஷ்டி அல்லது சுதந்திரம் (Independence) போன்ற பல்வேறு தெரிவுகளைக் கொண்ட பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கருத்து சில தரப்புகளில் முன்வைக்கப்படுகிறது. வெளிப்படையாகப் பார்த்தால் இது ஜனநாயக ரீதியாக விரிவான தெரிவுகளை வழங்குவது போல் தோன்றலாம். ஆனால், உண்மையில் இத்தகைய பல்தெரிவு பொதுவாக்கெடுப்பு தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை பலவீனப்படுத்தும் அபாயத்தையும், அவர்களின் அரசியல் ஆணையை சிதைக்கும் ஆபத்தையும் கொண்டுள்ளது என்ற வாதம் பல அரசியல் ஆய்வாளர்களாலும் முன்வைக்கப்படுகிறது.

தமிழர் தேசியப் பிரச்சினை என்பது வெறும் நிர்வாக அதிகாரப் பகிர்வு தொடர்பான விவாதமல்ல. இது ஒரு தனித்த தேசிய இனத்தின் அரசியல் இறைமை, தாயக உரிமை, தன்னாட்சி மற்றும் சுயநிர்ணய உரிமை தொடர்பான கேள்வியாகும். கடந்த ஏழு தசாப்தங்களாக தமிழர்கள் அமைதியான போராட்டங்களிலிருந்து ஆயுதப் போராட்டம் வரை பல்வேறு அரசியல் பாதைகளைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், ஒவ்வொரு கட்டத்திலும் அவர்கள் எதிர்கொண்டது நிறைவேற்றப்படாத அரசியல் வாக்குறுதிகள், கைவிடப்பட்ட ஒப்பந்தங்கள், நடைமுறைப் படுத்தப்படாத அதிகாரப் பகிர்வு திட்டங்கள் மற்றும் அரச ஆதரவுடன் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களாகும்.

## தமிழர் அரசியல் அனுபவம்

1957 ஆம் ஆண்டின் பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம், 1965 ஆம் ஆண்டின் டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தம், மாகாண சபை முறை, 13வது அரசியலமைப்பு திருத்தம், பல்வேறு அரசியலமைப்புச் சீர்திருத்த முயற்சிகள் என பல அரசியல் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அவற்றில் எதுவும் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாக அமையவில்லை. பெரும்பான்மை அரசியல் அழுத்தங்களின் காரணமாக அவை பல முறை கைவிடப்பட்டன அல்லது முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை.

இதனால், “அதிகாரப் பகிர்வு” என்ற அரசியல் அணுகுமுறையின் மீது தமிழர்களிடம் ஏற்பட்ட நம்பிக்கையின்மை ஒரு வரலாற்று அனுபவத்தின் விளைவாகும். எனவே, கடந்த காலத்தில் தோல்வியடைந்த அரசியல் விருப்பங்களை மீண்டும் ஒரு பொதுவாக்கெடுப்பின் தெரிவுகளாக முன்வைப்பது, ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட அரசியல் பாதைகளை மீண்டும் உயிர்ப்பிப்பதாகவே பலர் கருதுகின்றனர்.

பல்தெரிவு பொதுவாக்கெடுப்பின் மிகப்பெரிய ஆபத்து, தமிழ் மக்களின் வாக்குகளைப் பிளவுபடுத்துவதாகும். எடுத்துக்காட்டாக, சிலர் சுதந்திரத்திற்கு வாக்களிக்கலாம்; சிலர் கூட்டாட்சிக்கு ஆதரவு அளிக்கலாம்; சிலர் தற்போதைய அமைப்பில் சிறிய மாற்றங்களை விரும்பலாம். இதன் விளைவாக எந்த ஒரு தெரிவுக்கும் முழுமையான பெரும்பான்மை கிடைக்காமல் போகலாம்.

அத்தகைய சூழலில், தமிழர்களுக்குள் ஒருமித்த அரசியல் விருப்பமே இல்லை என்ற வாதம் முன்வைக்கப்படலாம். குறிப்பாக, தமிழர்கள் சுதந்திரத்தை விரும்பவில்லை அல்லது அவர்களுக்குள் கருத்து வேறுபாடு அதிகம் என்ற விளக்கத்தை இலங்கை அரசும், சில சர்வதேச தரப்புகளும் முன்வைக்கும் வாய்ப்பு உருவாகலாம். இதனால், உண்மையான தேசிய அரசியல் ஆணை பலவீனப்படுத்தப்படும் அபாயம் உள்ளது.

## சர்வதேச அங்கீகரித்துக்கான பாதை

சர்வதேச அரசியலில் பெரும்பாலும் தெளிவான அரசியல் ஆணைகளே கவனிக்கப்படுகின்றன. ஆனால் பல்தெரிவு பொதுவாக்கெடுப்பு குழப்பமான முடிவுகளை உருவாக்கினால், “மேலும் பேச்சுவார்த்தை தேவை”, “மேலும் அரசியல் ஆலொசனை அவசியம்” என்ற காரணங்களால் தீர்வு மீண்டும் தள்ளிப்போடப்படலாம்.

**தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, அவர்களின் வரலாற்று அனுபவம், சர்வதேச சட்டக் கோட்பாடுகள் மற்றும் தெளிவான ஜனநாயக ஆணை ஆகியவற்றை மையமாகக் கொண்டு எந்தவொரு பொது வாக்கெடுப்பு அனுகுமுறையும் வடிவமைக்கப்பட வேண்டும்**

இதன் மூலம், மோதலின் அடிப்படைக் காரணமான தமிழர்களின் அரசியல் இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமை பற்றிய கேள்வியைத் தவிர்த்து, மீண்டும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் அல்லது குறைந்த அளவிலான அதிகாரப் பகிர்வு போன்ற இடைக்கால அணுகுமுறைகள் முன்னிலைப்படுத்தப்படலாம். இது பிரச்சினையின் மூலக் காரணத்தைத் தீர்க்காமல் அதன் விளைவுகளை மட்டுமே நிர்வகிக்கும் அணுகுமுறையாக மாறும்.

கூட்டாட்சி அல்லது அதிகாரப் பகிர்வு போன்ற அரசியல் மாதிரிகள் கோட்பாட்டில் செயல்திறன் கொண்டதாக இருந்தாலும், அவை வெற்றி பெறுவதற்கு அரசியல் விருப்பமும் நம்பிக்கையும் அவசியம். இலங்கையின் அரசியல் வரலாறு இந்த இரண்டின் பற்றாக்குறையைத் தொடர்ந்து வெளிப்படுத்தியுள்ளது.

இதனால், ஏற்கனவே பல முறை தோல்வியடைந்த அரசியல் மாதிரிகளை மீண்டும் பொதுவாக்கெடுப்பின் தெரிவுகளாக மாற்றுவது, தமிழர்களின் வரலாற்று அனுபவத்தைப் புறக்கணிப்பதாகக் கருதப்படுகிறது. ஒரு மக்களின் அரசியல் முடிவு, கடந்த காலத்தின் தோல்விகளை மறந்து புதிய மாயையான எதிர்பார்ப்புகளின் மீது அமைந்திருக்கக் கூடாது என்பதே இந்த வாதத்தின் மையக் கருத்தாகும்.

## சுயநிர்ணய உரிமையின் அடிப்படை




சுயநிர்ணய உரிமை என்பது சர்வதேச சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை அரசியல் உரிமையாகும். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை தீர்மானங்கள் 1514 மற்றும் 2625 உள்ளிட்ட பல்வேறு சர்வதேச ஆவணங்கள், மக்கள் தங்களது அரசியல் நிலையைத் தாங்களே சுதந்திரமாகத் தீர்மானிக்கும் உரிமையை அங்கீகரிக்கின்றன.

இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில், ஒரு மக்களின் அரசியல் எதிர்காலம், வெளிப்புற அரசியல் வசதிகள் அல்லது சர்வதேச ஏற்றுக்கொள்ளுதலின் அடிப்படையில் அல்ல; அந்த மக்களின் ஜனநாயக விருப்பத்தின் அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது.

வரலாற்றில் பல முக்கிய பொதுவாக்கெடுப்புகள் ஒரே அடிப்படை கேள்வியை மக்களிடம் முன்வைத்துள்ளன. காரணம், மக்களின் விருப்பம் தெளிவாகவும் சந்தேகத்திற்கு இடமின்றியும் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதுதான்.

ஒரு மக்களின் அரசியல் விருப்பம் பல்வேறு தெரிவுகளாகப் பிரிக்கப்பட்டால், அதன் உண்மையான நோக்கம் மங்கலாகிவிடும். ஆனால், ஒரே அடிப்படை அரசியல் கேள்விக்கு ஆம் அல்லது இல்லை என்ற தெளிவான பதில் கிடைத்தால், அது உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் வலுவான ஜனநாயக ஆணையாகக் கருதப்படும்.

## தமிழர் ஒற்றுமையின் முக்கியத்துவம்

தமிழர் அரசியலில் ஒற்றுமை என்பது மிக முக்கியமானது என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. ஆனால், அந்த ஒற்றுமை வெறும் அமைப்புகளுக்கிடையிலான அரசியல் சமரசமாக மட்டுமே இருக்கக்கூடாது. அது ஒரு தெளிவான கொள்கை, பகிரப்பட்ட அரசியல் நோக்கம் மற்றும் மக்களின் ஜனநாயக விருப்பத்தை பிரதிபலிக்கும் அடிப்படையின் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும்.

ஒற்றுமை என்ற பெயரில் அரசியல் இலக்குகளை நீர்த்துப் போகச் செய்வது, குறுகிய காலத்தில் சமரசமாகத் தோன்றினாலும், நீண்டகாலத்தில் தேசிய அரசியல் ஆணையை பலவீனப்படுத்தும் அபாயத்தை ஏற்படுத்தலாம்.

தமிழர்களின் அரசியல் எதிர்காலம் குறித்த எந்தவொரு பொது வாக்கெடுப்பும், அவர்களின் கூட்டு அரசியல் விருப்பத்தை மிகத் தெளிவாகவும் உறுதியுடனும் வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும் என்பதே பல அரசியல் சிந்தனையாளர்களின் வலியுறுத்தலாகும். பல்வேறு தெரிவுகளைக் கொண்ட பொதுவாக்கெடுப்பு ஜனநாயக ரீதியாக விரிவானதாகத் தோன்றினாலும், அது தமிழ் மக்களின் வாக்குகளைப் பிளவுபடுத்தி, அவர்களின் அரசியல் ஆணையை பலவீனப்படுத்தி, நீண்டகாலமாக நிலவி வரும் தேசியப் பிரச்சினைக்கு மேலும் தாமதத்தை ஏற்படுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளது என்ற கவலை முன்வைக்கப்படுகிறது.

எனவே, தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, அவர்களின் வரலாற்று அனுபவம், சர்வதேச சட்டக் கோட்பாடுகள் மற்றும் தெளிவான ஜனநாயக ஆணை ஆகியவற்றை மையமாகக் கொண்டு எந்தவொரு பொதுவாக்கெடுப்பு அணுகுமுறையும் வடிவமைக்கப்பட வேண்டும். மக்களின் கூட்டு அரசியல் விருப்பம் சந்தேகத்திற்கு இடமின்றி வெளிப்படும் போது மட்டுமே அது உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் வலுவான அரசியல் மற்றும் சட்ட பூர்வமான ஆதாரமாக அமையும் என்பதே இந்த விவாதத்தின் மையச் செய்தியாகும்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்கிறது...
STRUCTURAL GENOCIDE AGAINST THAMILS CONTINUES IN SRILANKA

# BLACK JULY 1983

EELA THAMILS GENOCIDE

ஈழத்தமிழர் இன அழிப்பு

# கறுப்பு யூலை






**"What is happening in Sri Lanka, nothing other than Genocide"**
**Indra Gandhi**



Prime Minister of India
August 16, 1983

Activists and Independent monitors estimate the between 3000 to 5,638 Thamil People were killed within 10 days. Many pieces of Thamils history were lost, over 150,000 Thamils were forced out of their homes and mobs burned down more than 18,000 homes and 5,000 Thamil owned businesses, all of this was caused by Sinhala Mobs who were backed by the Sri Lankan Government.

செயல்பாட்டாளர்கள் மற்றும் சுயாதீன கண்காணிப்பாளர்கள் 10 நாட்களுக்குள் 3000 முதல் 5,638 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிட்டுள்ளனர். தமிழர்களின் வரலாற்றின் பல பகுதிகள் அழிக்கப்பட்டன. 150,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்கள் வீடுகளை விட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். மேலும், கும்பல்கள் 18,000 க்கும் மேற்பட்ட வீடுகளையும், தமிழர்களுக்குச் சொந்தமான 5,000 வணிகங்களையும் எரித்து சாம்பலாக்கின. இவை அனைத்தும் சிறீலங்கா அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்ற சிங்களக் கும்பல்களால் செய்யப்பட்டன.



**43 Years Remembering**
**the 1983 Holocaust of Thamils in Sri Lanka**
**1983 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த**
**தமிழ் இனப்படுகொலையின் 43ஆம் ஆண்டு நினைவு**

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"